பிரேம்சந்தின்
சிறந்த சிறுகதைகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1942
MADRAS

ஹிந்தியிலிருந்து
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மொழிபெயர்த்தது

'கலைமகள்' ஆசிரியர்
கி. வா. ஜகந்நாதன் அவர்கள்
முன்னுரை கொண்டது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்] [விலை ரூ. 2/4

என் நன்றி

பிரேம்சந்திரன் இந்தச் சிறந்த கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட எனக்கு அநுமதி கொடுத்தவரும், பல வகைகளில் எனக்கு உதவியவரும், தமிழிலக்கியத்தை ஹிந்தியில் பரப்ப எனக்கு உறுதுணையாக நிற்பவருமான பிரேம் சந்தின் மூத்த புதல்வர் ஸ்ரீ ஸ்ரீபத்ராய் அவர்களுக்கும்,

தங்கமான இந்தக் கதைகளை விமர்சித்து இவைகளின் முகப்பில் தமது முன்னுரையாம் ரத்தினத்தை இழைத்துத் தந்த என் உயிர் நண்பருக்கும்,

இந்தப் புத்தகத்தை இவ்வளவு அழகாக வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பெனி அதிபர் ஸ்ரீ குப்புஸ்வாமி ஐயரவர்களுக்கும்,

என் நன்றி உரித்தாகின்றது.

—கா. ஸ்ரீ. ஸ்ரீ.

பொருளடக்கம்

		பக்கம்
ஈத் பண்டிகை	...	1
நாயகர்வீட்டுக் கிணறு		24
வைகுண்டச் சல்லா	...	30
மண்டைக் கிறுக்கு	...	44
அன்னை	...	58
கடைசிச் சாக்கு	...	86
புல்லுக்காரி	...	97
இலவசப் புகழ்	...	117
மார்கழி இரவு	...	130
குற்றச்சாட்டு	...	140

கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ்,

சென்னை (19421015110)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1942
MADRAS
2226

முன்னுரை

உலக வாழ்க்கையின் விசித்திரங்களை எண்ணிப் பார்த்தால் அந்த எண்ணங்களுக்கு முடிவு ஏற்படுமா? உலகத்துக்கு முடிவும் உலக வாழ்க்கைக்கு இறுதியும் நேரும்போது ஒருகால் அந்த எண்ணங்களுக்கும் முடிவு ஏற்படலாம். ஆனால் அந்த விசித்திரங்களை எண்ணிப் பார்ப்பவர்கள் குறைவு. அவற்றில் ஒன்றி ஈடுபட்டுச் சுகதுக்கங்களை அநுபவிப்பதை நான் சொல்ல வரவில்லை. அவற்றுக்குப் புறம்பே நின்று மனித ஜாதியின் சரித்திரத்தை, மனிதர்களின் உள்ளத்து உணர்ச்சிகளின் எழுச்சி வீழ்ச்சிகளை, ஒன்றோடொன்று ஒன்றியும் பகைத்தும் உண்டாக்கும் விளைவுகளைப் பார்ப்பதற்கு வேதாந்தியும் கலைஞனுமே விழி படைத்தவர்கள். வேதாந்தி அவற்றைக் கண்டு உலக வுண்மையை உணர்ந்து நிவிருத்திமார்க்கத்தை நாடுகிறான். கலைஞனோ அவற்றைக் கண்டு அவற்றினிடையே உள்ள உண்மையையும் ரஸத்தையும் அறிந்து கலைப்பொருளாக மாற்றிக் கலா சிருஷ்டியிலே பிரவிருத்திக்கிறான். மரணத்தின் சோகத்திலே உலகம் அழுகிறது; அது கண்டு வேதாந்தி இறைவனைச் சரணடைகிறான்; கலைஞன் அந்த அழுகையைப் படம் பிடித்து ரஸமாக்கி மெருகிட்டு யாவரும் பார்த்து மகிழும்படி செய்கிறான்.

காவியம், ஓவியம் இரண்டும் இப்படி எழுந்த பிரவிருத்திகளேயாகும். காவியம் ஓவியத்திலும் மிக்க உயிர்த்தன்மை உள்ளது. அதனால் கலைஞர்களுக்குள் கவிஞன் சக்கரவர்த்தியாக விளங்குகிறான்.

கவிதை இலக்கிய சிருஷ்டியின் சிகரம். எல்லோரும் சிகரத்தை எட்ட முடியுமா? அதற்குக் கீழே பல படிகள் இருக்கின்றன. வானத்தைத் தொட்டு நிமிர்ந்து நிற்கும் சிகரத்துக்குப் பெருமை கூறும்போது, அம்மலையின் சாரலின் அழகை நாம் குறைவாக நினைப்பதில்லை. அருவியும் காடும் அணிந்து விளங்கும் சாரலிலே இயற்கையெழிலின் களி நடத்தைக் காண்கிறோம். அதேபோல, கவிதைச் சிகரத்தின் கீழே இலக்கிய சிருஷ்டியென்னும் பர்வதத்திலே எவ்வளவோ அழகிய சாரல்கள் உண்டு. கதை அவற்றில் ஒன்று.

சிறுகதைகளிலே காவிய ருசியைக் காட்டும் எழுத்தாளர்கள் உலக முழுதும் நிரம்பியிருக்கின்றனர். மனிதரின் மனோபாவத்தை வசீகரமான உருவத்தில் அமைத்துத் திரட்டிக்காட்டும் சிறந்த கதைகளைக் காவியத்துக்கு ஸமானமாகவே கொள்வதில் பிழை யில்லை. ரவீந்திரநாத டாகுர் எழுதிய சிறுகதைகளில் எத்தனை கவிதையழகோடு விளங்குகின்றன!

ரஸமாகவும் நிலைபெற்ற மதிப்புடையதாகவும் சிறுகதை இருக்க வேண்டுமானால், அது நித்தியமான உண்மைகளைச் சொல்லவேண்டும்; சாதாரண மனிதர்களால் வார்த்தைகளில் வெளியிட முடியாத பாவ பேதங்களைப் புலப்படுத்த வேண்டும்; படிக்கிறவர்களுக்கு ஆயாசந் தோற்றாத போக்கிலே அமைய வேண்டும். இவ்வளவுதான் அதன் இலக்கணம் என்று வரை யறுத்துச் சொல்வது பிழை. அழகுக்கு வரையறையே இல்லை; இலக்கிய அழகும் அத்தகையது தான்.

* * * *

பிரேம்சந்திரர் கதைகளுக்கு வருவோம். ஹிந்தி உலகில் அவர் ஒரு கதைச் சக்கரவர்த்தியென்று சொல்லிக் கொள்கி றார்கள். நூற்றுக் கணக்கான சிறுகதைகளையும் பல நவீனங் களையும் அவர் எழுதியிருக்கிறார். மற்றக் கதைகளைப்பற்றி ஆராயவேண்டிய அவசியம் இல்லை. இந்தப் புஸ்தகத்திலுள்ள பத்துக் கதைகளின் உருவத்திலே இலக்கிய அழகு எந்த எந்த மாதிரி வெளிப்படுகிற தென்பதைப் பார்த்தாலே போதுமானது.

ஏழைக் குடித்தனத்திலே வறுமையின் உஷ்ணத்திலே வாடிப் போன இளந்தளிராகிய ஹாமிதின் கதையாகிய **ஈத் பண்டிகை** இந்தத் தொகுதியில் உள்ள மூன்று சிறந்த கதைகளில் ஒன்று. மற்ற இரண்டு **அன்னை**யும், **புல்லுக்காரி**யுமாகும். மற்றப் பிள்ளைக ளெல்லாம் தமக்கு வேண்டிய தின்பண்டங்களையும் விளையாட்டுப் பொம்மைகளையும் வாங்கிக்கொண்டு பறவைகளைப்போலத் திரியும் போது அவன் மனத்தில் ஆசையும் அறிவும் போராடுகின்றன. தினந்தோறும் தன் பாட்டி படும் அவஸ்தையைப் பார்த்துப்பார்த்து முதிர்ந்திருக்கிறது அவன் அறிவு. ஆகவே அவன் தன் ஆசையை அடக்கிக் கொள்கிறான். அவனது தியாக புத்தியினால் ஒரு வீரம் பிறக்கிறது. தன் பாட்டிக்கு உபயோகப்படுமென்று ஒரு சிமிடாவை வாங்கினதை மற்றப் பையன்கள் பரிகசிக்கும்போது அவன் ஒரு வீரனைப்போலப் பேசுகிறான்; "என் வீரச் சிமிடா

நெருப்பிலும், நீரிலும், சூறைக் காற்றிலும், புயலிலும் எப்போதும் அசையாமல் நிற்கும்" என்கிறான்.

மற்றப் பையன்களுடைய உத்ஸாகம் அவனுடைய தியாகத்தின் முன்னர்க் கலகலத்து விட்டது. அவர்களுக்குத் தங்கள் பொம்மைகள் உபயோகமற்றனவாகப் படுகின்றன. ஹாமிதே அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டிய நிலை வந்துவிடுகிறது. அந்த முக்காலணுச் சிமிடாவை அவன் கொண்டுபோய்ப் பாட்டி கையில் ஈத் காணிக்கையாக அளிக்கிறான். 'குழந்தை ஹாமித் கிழ ஹாமித்தாக நடித்திருந்தானல்லவா? இப்போது கிழவி அமீனா குழந்தை அமீனா ஆனாள். அவள் அழத் தொடங்கினாள். சேலைத் தலைப்பை விரித்து ஹாமித்துக்கு ஆசீர்வாதங்கள் கொடுத்தவண்ணமாக இருந்தாள்.'

வறுமைக் கனலிலே பண்பட்ட இளைய உள்ளம் தியாகத்திற்குத் தயாராக இருக்கிறது. இந்தக் காட்சியை, "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப், பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்தன்னில்" தான் இப்போது நன்றாகப் பார்க்கலாம்.

*　*　*　*

பிரேம்சந்திரர் பெண்மை யுள்ளத்தின் அழகை மிக நன்றாக எடுத்துக் காட்டுகிறார். அன்னை தன் குழந்தையினிடத்தில் ஒன்றை எதிர்பார்ப்பதும், அவள் ஆசை நிறைவேறுமற் போகும் ஒவ்வொரு தடவையும் அவள் மீட்டும் மீட்டும் அதிக ஆவலை அடைவதும், கடைசியில் உள்ளம் உடைந்துபோய் மடிவதும் ஆகிய சோக நாடகத்தை **'அன்னை'**யில் பார்க்கிறோம். தன் மகன் தன் கணவனைப்போலவே தேச சேவை செய்ய வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்த கருணாவின் ஆசை நிறைவேறவில்லை. கடைசி நிமிஷம் வரையில் அவள் ஆசை மங்கிவிடாமல் கொஞ்சம் கொஞ்சம் ஒட்டிக்கொண் டிருக்கிறது. அவள் மகனோ உத்தியோகத்தில் மோகமடைந்து நிற்கிறான். அவள் உயிர் இனி இவ்வுலகில் எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லாமல் பறந்து போகிறது. 'அந்த இடிந்த உள்ளம் கணவனின் காதல் நினைவிலே இளைப்பாறிக்கொண்டிருந்தது. பிரகாசனின் கப்பல் ஐரோப்பாவுக்குச் சென்றுகொண்டிருந்தது!'

*　*　*　*

'புல்லுக்காரி' ஓர் அழகிய கதை; பெண்மையின் ஆண்மையையும், சாதுர்யத்தையும் சித்திரிக்கும் இனிய கதை. முலியா

ஒரு சக்கிலியப் பெண்; புல் விற்கிறவள். பணத்திமிரினாலும் ஜாதி இறுமாப்பினாலும் அவளைக் கிள்ளுக்கீரையாக நினைக்கிறான் சைன்சிங்க். அவள் தர்ப்பைப் புல்லைப்போல இருக்கிறாள். தன் கடமையின் போக்கிலே அவள் தலை வளைந்து கொடுக்கிறாள், தென்றலுக்குத் தாழும் தருப்பையைப்போல. ஆனால் அதனிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். புல்லுத்தானே என்று எதிரிட்டுத் தடவினால் கையைக் கிழித்துவிடும்; ரத்தம் வரும். சைன்சிங்க் இந்த உண்மையை உணர்கிறான். அவனுக்குப் புத்தி வருகிறது. முலியாவின் மனத்திண்மை மெழுகுக்குள் மறைந்த மாணிக்கம்போல இருக்கிறது. அவள் புல்லு விற்கும்போது செய்யும் மாயாஜாலங்களிலே முரட்டு ஆடவர் மயங்குகிறார்கள். அவள் புல்லுக்கட்டு வியாபாரமாகிய கயிற்றின்மேல் இப்படி நாடகம் ஆடுகிறாள். ஆனாலும் அவள் நிலை தவறுவதில்லை. சைன்சிங்க் அவள் இயல்பிலே மனத்தைப்பறிகொடுத்து அவளை அறியாமலே அவளுக்கு விடுதலை உண்டாக்குகிறான்; அவள் புருஷனுக்கு வேலைகொடுத்துச் சம்ரட்சிக்கிறான். 'நான் இப்பொ வெல்லாம் புல் விக்கப் போவதில்லெ' என்று அவள் விடுதலை பெற்ற சந்தோஷத்தில் சொல்லும்போது அவன் அவளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மகிழ்ச்சியை யடைகிறான். பெண்மையின் பெருமையே பெருமை!

* * * *

'நாயகர்வீட்டுக் கிணறு' சமூகச் சீர்திருத்தக் கதை. அதிலும் ஒரு பெண் தன் கணவனுக்காக விதிகளை மீறத் துணியும் துணிவு வருகிறது.

'வைகுண்டச் சல்லா' வில் வரும் தகப்பனும் மகனும் வறுமையினாலும் இழிந்த பழக்கத்தாலும் விலங்குகளானவர்கள். தன் சொந்த மனைவி இறந்து பிணமாய்க் கிடக்கும் நிலையில் கணவன் களியாட்டில் இருப்பதை மனிதத்தன்மை என்று எப்படிச் சொல்ல முடியும்?

'மண்டைக்கிறுக்கு' மனிதனது பேதைமையைக் காட்டிச் சிரிக்க வைக்கும் கதை. சில நாட்கள் சுகவாழ்வை இரவலாக அநுபவிக்கும் ஒருவன் முந்திய நிலையையும் கொள்கைகளையும் மறந்து 'மண்டைக்கிறுக்கு'டன் செய்யும் காரியங்கள் அமைதியான ஹாஸ்யச் சுவைக்குக் காரணமாகின்றன.

'கடைசிச் சாக்கு': பெண்கள் எதைப் பொறுத்தாலும் தம் கணவர் பிற பெண்களுடன் பழகுவதைப் பொறுக்கமாட்டார்க ளென்ற உண்மையை உரைக்கிறது.

'இலவசப் புகழ்' நித்திய வாழ்வில் நடைபெறும் ஒரு சாதா ரணமான நிகழ்ச்சி.

'மார்கழி இரவு' ஆண்களின் அசட்டையையும் பெண்ணின் அறிவையும் விளக்குவது. வருணனை மிக நன்ருக அமைந்த கதை. படிக்கும்போது மார்கழிக் குளிரை நாமே உணர்வதுபோ லிருக்கிறது.

குற்றச்சாட்டு: மிகவும் ரஸமான குணசித்திரம். ஒரு பெண் மணி தன்னுடைய அப்பாவிக் கணவனைப்பற்றி நம்மிடம் குறை கூறுகிருள். அவன் உலகமறியாதவன்; பிழைக்கத் தெரியாதவன்; ஏமாந்த சோணகிரி; பிறருக்கே உழைப்பவன்; குழந்தையோடு குழந்தையாயிருப்பவன்; அவள் கருத்துக்கு மாருன கருத்தை உடையவன். இவ்வளவு தூரம் அத்தியாயம் அத்தியாயமாக அளக்கும் அந்த மனைக்கிழத்தி, 'இவ்வளவு தோஷங்களெல்லாம் இருந்தும் இவரிடம் எனக்கு ஆழ்ந்த காதல். நான் மோகித்துப் போகும்படி இவரிடம் என்ன குணமிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னை இவருக்குச் சிஷ்யையாக்கும் ஏதோ ஒரு பொருள் இவரிடத்தில் இருக்கிறது. இவர் வழக்கமாக வருவ தற்குச் சற்று நேரங்கழித்து வந்தால் என் உயிர் துடிக் கிறது......எங்கள் இருவரின் பிரகிருதிகளிலும் சில யோக்கி யதாம்சங்களும், சில ஏற்பாடுகளும் உண்டாகி விட்டன; ஒரு யந்திரத்தின் கருவிகள் தேய்ந்து தேய்ந்து இணைந்து பொருந்தி விடுவதுபோல. இப்படிப் பொருந்திய பின்பு, ஒரு கருவிக்குப் பதிலாக மற்ருெரு கருவி - அது எவ்வளவுதான் அழகாகவும், புதிதாகவும், உறுதியாகவும் இருந்தாலும் பிரயோசனப்படுவ தில்லை' என்று சொல்கிருள். இதுதான் பாரத நாட்டுத் தாம்பத்திய வாழ்க்கையின் உண்மை. கவிஞர்கள் சொல்லும் காதலென்ற வஸ்துவுக்குப் புறம்பே, சீர்திருத்தக்காரர்களும் உணராத ஒரு சூக்ஷ்மமான நிலையில் அமைந்த இந்தப் பரஸ்பர ஒற்றுமை யியல்பைப் பாரத தேசத்தினரே அறிந்துகொள்ள முடியும்.

* * * *

நண்பர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யின் மொழிபெயர்ப்பைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது என் கடமை. இவர் ஹிந்தியை மிகுதியாகப் படித்தவர். தமிழில் எழுதிக் கைவந்தவர். பிரேம்சந்த் வட இந்தியாவில் உலவவிட்ட பாத்திரங்களை, இவர் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்தபோது பெயரை மாற்றவில்லையே தவிரப் பேச்சை மாற்றித் தமிழராகவே ஆக்கிவிட்டார். சம்பாஷணைகளில் தமிழ் நாட்டில், அதிலும் தம்முடைய சொந்த ஜில்லாவாகிய செங்கற்பட்டில் பேசும் பாஷையை உபயோகப்படுத்தித் தமிழுருவாக்கியிருக்கிறார். இல்லாவிட்டால், புல்லுக்காரி இலக்கண சுத்தமான பாஷையிலே பேசுவதைவிட இந்தக் கொச்சைத் தமிழிலே பேசும்போது நாம் கதை வாசிக்கிறோமென்ற நினைவை மறக்கமுடியாதல்லவா? இவர் கதைகளைத் தேர்ந்தெடுத்திருப்பதையும் பாராட்ட வேண்டும்.

அல்லயன்ஸ் கம்பெனியார் இந்தப் புஸ்தக வெளியீட்டால் நல்ல தமிழ்த்தொண்டு செய்தவர்களாகிறார்கள்.

இங்ஙனம்,

கி. வா. ஜகந்நாதன்

ஈத் பண்டிகை

1

ரம்ஜான் மாதத்து முழு முப்பது நாட்களுக்குப் பிறகு இன்று ஈத் வந்திருக்கிறது. எவ்வளவு மனோகரமான, எத்தனை அழகிய, வைகறை இது! மரங்களில் விசித்திர மான பசுமை தென்படுகிறது; வயல்களில் அற்புதச் சோபை; ஆகாயத்தில் அபூர்வமான செம்மை! இன்றைச் சூரியனைப் பார்! எவ்வளவு அன்பாகவும் தண்மை யாகவும் இருக்கிறான்! அவன் ஈத் பண்டிகைக்காக உலகத் துக்கு வாழ்த்துக் கூறுகிறான் போலும்! கிராமத் தில் என்ன தடபுடல், என்ன அமர்க்களம்! ஈத்-மண்டப*த் துக்குப் போக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒருவனுடைய சட்டைக்குப் பித்தான்கள் இல்லை. அவன் அயல் வீட்டிலிருந்து ஊசி நூல் வாங்கிவர ஓடுகிறான். மற்றொருவனுடைய செருப்புகள் 'பிகு'வாகி விட்டன; அவைகளுக்கு எண்ணெய் போடுவதற்காக அவன் வாணியன் வீட்டுக்கு ஓடுகிறான். சீக்கிரமே பசு மாடு களுக்குத் தவிடு வைத்து விடவேண்டும். ஈத் - மண்டபத்தி லிருந்து திரும்பும்போது நடுப்பகலாகிவிடும். ஆறு மைல்கள் கால் நடையாகப் போகவேண்டும்; நூற்றுக்கணக்கான நண்பர்களைக் கண்டு பேசுவது வேறு. நடுப்பகலுக்கு முன் திரும்பிவருதல் அசாத்தியம்.

---

*ஈத் பண்டிகையன்று மகம்மதியர்கள் ஒன்றுகூடி நமாஜ் படிக்கும் இடம்.

எல்லோரைக் காட்டிலும் பையன்கள் அதிக மகிழ்ச்சி யோடு இருக்கிறார்கள். சிலர் விரதம் வைத்துக்கொண்டிருக் கிறார்கள், அதுவும் நடுப்பகல் வரையில்தான். சிலர் அதுவும் இல்லை. ஆனால் ஈத் - மண்டபத்துக்குப் போகும் மகிழ்ச்சி பையன்களின் பங்கைச் சேர்ந்தது. விரதங்கள் பெரியவர் களும் கிழவர்களும் வைத்துக்கொள்வார்கள். ஈத் பண்டி கையோ பையன்களுக்காகவே தான். அவர்கள் தினமும் 'ஈத் - ஈத்' என்று உருப்போட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று அது வந்துவிட்டது. 'ஜனங்கள் இன்னும் ஏன் ஈத் - மண்டபத்துக்குப் புறப்படவில்லை?' என்பதே இப்போது அவர்களுக்கு அவசரம். வீட்டுக் கவலைகளைப் பற்றி அவர் களுக்கு என்ன வந்தது! பால் மிட்டாய் செய்வதற்கு வீட்டில் பாலும் சர்க்கரையும் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன? அதைப் பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை? இன்று அவர்கள் எப்படியும் பால் மிட்டாய் சாப்பிட்டே தீருவார்கள். அப்பா முகவாட்டத்துடன் நாட்டாண்மைக் காரரான காயம் அலியின் வீட்டுக்கு எதற்காகப் பறக்கிறார் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? நாட்டாண்மைக் காரர் இன்று முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டால், இந்த ஈத் எல்லாம் முகர்ரம் ஆகிவிடும் என்பதைத்தான் அவர்கள் கண்டார்களா?

அவர்களுடைய சட்டைப் பைகளிலோ குபேரனுடைய தனம் நிரம்பி யிருக்கிறது. பைகளிலிருந்து அடிக்கடி 'கஜானா'வை எடுத்து எண்ணுவதும், சந்தோஷத்துடன் மீண்டும் வைத்துக் கொள்வதுமே அவர்கள் வேலை. மஹ்மூத் எண்ணுகிறான்: "ஒன்று, இரண்டு, பத்து, பன்னிரண்டு!" அவனிடம் பன்னிரண்டு காலணாக்கள் இருக்கின்றன. மோஹஸினிடம் ஒன்று, இரண்டு, மூன்று, எட்டு, ஒன்பது, பதினைந்து காலணாக்கள் இருக்கின்றன. இந்த எண்ணி லாத பணத்துக்கு அவர்கள் எண்ணிலாத பொருள்கள் வாங்குவார்கள்: பொம்மைகள், மிட்டாய்கள், பிகுல், பந்து, இன்னும் என்னென்னவோ.

எல்லோரைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியோடு இருப் பவன் அந்த நாலைந்து வயதுள்ள, உடம்பு மெலிந்த, ஏழைச் சிறுவன் ஹாமித். போன வருஷம் அவன் தகப்பன் காலராவுக்கு இரையானான். தாயும் எக்காரணத்தினாலோ உடல் வெளுத்துக்கொண்டே வந்து ஒரு நாள் செத்துப்

போனள். அவளுக்கு என்ன வியாதி என்று யாருக்கும் தெரியாது. அவள் சொன்னாலும் கேட்பதற்கு ஆள் ஏது? மனத்தில் நிகழ்ந்ததனைத்தையும் அவள் மனத்துக் குள்ளேயே பொறுத்துக்கொண் டிருந்தாள்; பொறுக்க முடியாமல் போனபோது இவ்வுலகத்திலிருந்து விடை பெற்றுக்கொண்டாள். இப்போது ஹாமித் தன் கிழப் பாட்டி அமீனுவின் மடியில் தூங்குகிறுன்; முன்போலவே சந்தோஷமாக இருக்கிறுன். அவனுடைய அப்பா ரூபாய் சம்பாதிக்கப் போயிருக்கிறுர். நிறைய முடிச்சுக்கள் கட்டி எடுத்துக்கொண்டு வருவார். அம்மா அவனுக்காக மிகவும் நல்ல நல்ல பொருள்கள் கொண்டுவர அல்லாவின் வீட்டுக் குப் போயிருக்கிறுள். ஆகையால் ஹாமித் சந்தோஷமாய் இருக்கிறுன். ஆசை மிகப் பெரிய வஸ்து; அதிலும் குழந்தை களின் ஆசை! குழந்தைகளின் கற்பனை கடுகை மலை யாக்கிவிடுமே. ஹாமித்தின் கால்களில் செருப்பில்லை; தலையில் ஒரு பழைய தொப்பி; அதன் சரிகைக் கரை கறுத்துவிட்டது. ஆயினும் அவன் சந்தோஷமாக இருக் கிறுன். அப்பா பண முடிச்சுக்களும், அம்மா விலையுயர்ந்த பொருள்களும் எடுத்துக்கொண்டு வந்ததும், அவன் தன் மனக்குறைகளை யெல்லாம் தீர்த்துக்கொள்வான். அப் போது அவன் பார்ப்பான், மஹமூதும் மொஹஸினும், நூரேயும் ஸம்மீயும் எங்கிருந்து அவ்வளவு பணம் கொண்டு வரப் போகிறுர்கள் என்பதை.

அபாக்கியவதி அமீனு தன் அறையில் உட்கார்ந்து அழுதுகொண் டிருக்கிறுள். இன்று ஈத் பண்டிகை தினத் தில் அவள் வீட்டில் ஓர் அரிசி இல்லை! இன்று ஆபித் இருந் தால் ஈத் பண்டிகை இப்படியா வந்து போய்விடும்? இந்த அந்தகாரத்திலும் நிராசையிலும் அவள் மூழ்கிக்கொண் டிருக்கிறுள். இந்தப் பாழாய்ப்போன ஈத்தை யார் கூப் பிட்டது? இந்த வீட்டில் அதற்கு வேலை இல்லை. ஆனல், ஹாமித்? அவனுக்கு யார் செத்தாலென்ன, பிழைத்தால் என்ன? அவனது அகத்தில் ஒளியும், புறத்தே ஆசையும் உள்ளன. விபத்தானது தன் முழுச் சேனைப் படைகளை யும் திரட்டிக்கொண்டு வந்தாலும், ஹாமித்தின் ஆனந்தம் நிரம்பிய பார்வை அதைத் துவம்சம் செய்துவிடும்.

ஹாமித் உள்ளே சென்று பாட்டியிடம், "பாட்டி, நீ ஒன்றும் பயப்படாதே; நான் எல்லாருக்கும் முன்னல்

வந்துவிடுவேன். உனக்குப் பயமென்பதே வேண்டாம்” என்கிறான்.

அமீனாவின் மனம் கசங்கிக் கலங்குகிறது. கிராமத்துப் பையன்கள் தத்தம் தகப்பன்மாரோடு போகிறார்கள். ஹாமித்தின் தகப்பன் அமீனாவைத் தவிர வேறு யார்? அவனைத் தனியனாகக் கூட்டத்தில் எப்படிப் போகவிடுவது? அந்தக் கும்பலில் குழந்தை எங்கேயாவது தவறிவிட்டால்? அப்படியில்லை, அமீனா அவனை இவ்விதம் போகவிடமாட்டாள். சின்னஞ்சிறு உயிர்! ஆறு மைல் அவன் எப்படி நடப்பான்! கால் கொப்புளித்துப் போகாதா? செருப்புக் கூட இல்லையே. அவள் அவனை இடையிடையே சிறிது சிறிது தூரம் போனவுடன் இடுப்பில் எடுத்துக்கொள்வாள். ஆனால், இங்கே பால் மிட்டாய் சமைப்பது யார்? பணமிருந்தால் திரும்பி வந்தவுடனே சாமான்களெல்லாம் திரட்டிச் ‘சட்பட்’டென்று சமைத்துவிடலாம். இங்கே தான் சாமான்கள் திரட்டுவதற்கே மணிக்கணக்காகுமே? இரவலை நம்பித் தானே எல்லாம் நடக்கவேண்டும்? அன்று பஹீமனுக்குத் துணி தைத்துக் கொடுத்ததில் எட்டணாக் கிடைத்தது. அந்த எட்டணா நாணயத்தை அவள் தன் நாணயத்தைப் போல் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள், இதே ஈத் பண்டிகைக்காக. ஆனால், நாளைக்குப் பால்காரி தொல்லைப்படுத்தினால் அவள் என்ன செய்வாள்? ஹாமித்துக்கு வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் தினமும் அரையணாப் பாலாவது வேண்டுமே. பால்காரிக்குப் போக இப்போது இரண்டணாத் தான் மீதி. முக்காலணா ஹாமித்தின் ஜேபியிலும், ஒன்றே காலணா அமீனாவின் டப்பியிலும் இருக்கின்றன. இது தான் இருக்கும் ‘பிசாத்து’; பண்டிகையோ ஈத் பண்டிகை; அல்லாதான் கரை சேர்க்கவேண்டும். வண்ணாத்தி, அம்பட்டச்சி, தோட்டி மகள், வளையல்காரி—எல்லோரும் வருவார்கள். எல்லோருக்கும் பால் மிட்டாய் கொடுக்கவேண்டும்; கொஞ்சமாகக் கொடுத்தால் யார் கண்ணும் பொறுக்காது. யார் யார் முகத்தில்தான் விழிக்காமல் இருப்பது? ஏன் விழிக்காமல் இருக்க வேண்டும்? வருஷத்திற்கு ஒருதரம் வருகிறது பண்டிகை. க்ஷேமமாக வாழும் பக்ஷத்தில் அவர்களுடைய விதியும் இவளோடு கூடத்தானே பிணைக்கப்பட்டிருக்கிறது. குழந்தையை அல்லா சௌக்கியமாக வைக்கவேண்டும்; இன்னும் இருக்கும் நாட்களும் இப்படியே கழிந்துபோகும்

OFFICE OF THE R[illegible]STRAR OF BOOKS
15 DEC 1942

கிராமத்திலிருந்து கூட்டம் புறப்பட்டது. ஹாமித்தும் மற்றப் பையன்களுடன் போனுன். சில சமயங்களில் எல்லாப் பையன்களும் ஓடிச் சென்று கூட்டத்துக்கு வெகு தூரம் முன்னே நிற்பார்கள். ஒரு மரத்தின் கீழ் நின்று கொண்டு கூடவந்தவர்களை எதிர்பார்ப்பார்கள் : 'இவர்கள் ஏனே இவ்வளவு மெதுவாக நடக்கிருர்கள்?' ஹாமித்தின் கால்கள் இறக்கைகள் முளைத்துவிட்டன போல விர்-விர் ரென்று நடக்கின்றன. அவன் எப்போதாவது சலிப்பான என்ன! நகரத்தின் கீழ்க்கோடி வந்துவிட்டது. சாலையின் இருபுறமும் பணக்காரர்களின் தோட்டங்கள்; அவைகளைச் சுற்றி உறுதியான மதிள் சுவர்கள். மரங்களில் மாம்பழங் களும் பப்பிளிமாஸ் பழங்களும் தொங்குகின்றன. சில சமயங்களில் எவனுவது ஒரு பையன் மாம்பழத்தின் மீது குறி வைத்துக் கல் விட்டெறிகிருன். தோட்டக்காரன் உள்ளேயிருந்து திட்டிக்கொண்டே வெளியில் வருகிருன். பையன்கள் அங்கிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் நிற்கிருர் கள்; கலகல வென்று கைதட்டிச் சிரிக்கிருர்கள். தோட் டக்காரனை எப்படி 'மண்டு'வாக்கி விட்டார்கள், பாருங்கள்!

பெரிய பெரிய கட்டிடங்கள் வரலாயின. "இது கோர்ட்டு; இது காலேஜ்; இது கிளப்பு. இத்தனை பெரிய காலேஜில் எத்தனை பையன்கள் படிப்பார்கள்! எல்லோரும் பையன்களன்று, அப்பனே! பெரிய பெரிய மனிதர்கள்; நிஜமாக, அவர்களுக்குப் பெரிய பெரிய மீசைகள் முளைத் திருக்கின்றன. இவ்வளவு பெரியவர்களாகியும் இன்னமும் படித்துக்கொண்டே இருக்கிருர்கள். எதுவரையில் படிப் பார்களோ, இவ்வளவு படித்துவிட்டு என்ன செய்வார் களோ—யாருக்குத் தெரியும்? ஹாமித்தின் பள்ளிக்கூடத் தில் இரண்டு மூன்று பையன்கள் இருக்கிருர்கள், காலணுப் பெருதவர்கள்; தினமும் அடி வாங்குகிருர்கள்; வேலை என்ருலே பதுங்கிக் கொள்வார்கள். இந்த இடத்திலும் அந்த மாதிரியான பிள்ளைகளே இருப்பார்கள்; வேறென்ன? கிளப்பில் செப்பிடுவித்தை நடக்கிறதாம். அடே, நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: இங்கே பிணத்தின் மண்டையோடுகள் ஓடுமாம்! பெரிய பெரிய விளையாட்டுக் கள் நடக்கின்றனவாம்; ஆனல் உள்ளே யாரையும் விடுவ தில்லையாம்! இங்கே சாயங்காலத்தில் துரைகள் விளையாட வருகிருர்கள். பெரிய பெரிய மனிதர்கள் விளையாடுகிருர் கள், அப்பனே, மீசையும் தாடியும் முளைத்தவர்கள். துரை

சானிகள்கூட விளையாடுகிறார்களடா, நிஜமாக. எங்கள் அம்மாவிடம் அதைக் கொடுத்துவிட்டால் — அதன் பேரென்ன, 'பேட்' — அதைப் பிடிக்கக்கூட அவளால் முடியாது. அதைச் சுழற்றினவுடனே உருண்டு விழுவாள்."

"எங்க அம்மாவுக்குக் கை நடுங்கும்டா, அல்லா ஆணையா!" என்றான் மஹமூத்.

"போடா, மணங்குக் கணக்கா மாவரைக்கிறாங்க. இந்தச் சொத்தை 'பேட்'டைப் பிடிச்சிக்குனா கை நடுங்கும்! கொடங் கொடமா தண்ணி ரொப்புறாங்க, தினம். அஞ்சு கொடம் தண்ணி உங்க வூட்டு எருமை குடிச்சிட்டுப் போகும். எவளாவது ஒரு தொரைசானியை ஒரு கொடந் தண்ணி மொள்ளச் சொல்லு; கண்ணெல்லாம் இருண்டு போயி, அப்பவே மயக்கமா விழுந்துடுவா" என்றான் மொஹஸின்.

"ஆனா இவங்களாலே ஓட முடியாதுடா; அவுங்க மாதிரி தத்தித் தத்திக் குதிக்கவும் முடியாது."

"ஆமாம், குதிக்க முடியாது; ஆனா அன்னிக்கி எங்க வூட்டுப் பசு கட்டை அவுத்துக்கினு நாட்டார் வயல்லே போயிடுச்சு. எங்க அம்மா ஓடினாங்க பாரு; அவ்வளவு வேகமா என்னாலே ஓட முடியலேடா, நிசம்மா!"

அவர்கள் மேலே சென்றனர். மிட்டாய்க் கடைகள் ஆரம்பமாயின. அன்று மிட்டாய்கள் நன்கு அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்தன. "இவ்வளவு மிட்டாய்கள் யார் சாப்பிடுகிறார்கள்? பாரேன், ஒவ்வொரு கடையிலும் மணங்குக் கணக்காக இருக்குமே! இரவில் பிசாசுகள் வந்து மிட்டாய்கள் வாங்கிக்கொண்டு போகுமாம். அப்பா சொன்னார்: நடு ராத்திரிக்கு ஒரு மனிதன் ஒவ்வொரு கடைக்கும் போய், மீதியாயிருக்கும் மிட்டாய்களை யெல்லாம் நிறுக்கச் சொல்லி, நிஜமாகவே ரூபாய்கள் - வெள்ளிசாக இதே மாதிரியான ரூபாய்கள் - கொடுக்கிறானாம்."

ஹாமித்துக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. "இப்படிப்பட்ட ரூபாய்கள் பிசாசுகளுக்கு எங்கிருந்து கிடைக்கும்?" என்று கேட்டான்.

"பிசாசுகளுக்கு என்னடா ரூபாய்க்கா குறைச்சல்? எந்தக் கஜானாவில் போனாலும் எடுத்துக்கொண்டு வந்து

விடலாம். இரும்புக் கதவுகள்கூட அவைகளைத் தடுக்க முடியாது, ஐயனே! என்ன வென்று நினைக்கிறாய்? அவைகளிடம் ரத்தினங்கள், மாணிக்கங்கள் எல்லாம் இருக்கும். அவைகளுக்கு எவன்மேல் சந்தோஷமுண்டாகிறதோ, அவனுக்குக் கூடைக் கணக்காக ரத்தினங்கள் கொடுத்து விடும். அவை இப்போது பார்த்தால் இங்கே உட்கார்ந்திருக்கும்; ஐந்து நிமிஷங் கழித்துக் கல்கத்தா போய்ச் சேர்ந்து விடும்'' என்றான் மொஹஸின்.

"பிசாசுகள் ரொம்பப் பெரியனவாக இருக்குமோ?" என்று ஹமீத் மீண்டும் கேட்டான்.

"ஒவ்வொரு பிசாசும் ஆகாசம் அவ்வளவு இருக்கும், அப்பனே! பூமியில் நின்றால் அதன் தலை ஆகாயத்தில் இடிக்கும்; ஆனால் அது விரும்பினால் ஒரு செம்புக்குள்ளே கூடப் புகுந்துகொள்ளும்."

"ஜனங்கள் எப்படியடா அதைச் சந்தோஷப்படுத்துகிறார்கள்? யாராவது எனக்கு அந்த மந்திரத்தைச் சொன்னால் ஒரு பிசாசை நான் சந்தோஷப்படுத்தி வைத்துக் கொள்வேன்."

"எனக்கு அது தெரியாதப்பா. ஆனால் நாட்டாண்மைக்காரர் வசத்தில் நிறையப் பிசாசுகள் இருக்குதாம். ஏதாவது ஒரு பொருள் திருடு போய்விட்டால் அவர் அதைக் கண்டு பிடித்துத் திருடனின் பெயரைக்கூடச் சொல்லிவிடுவார். ஜுமேராதியின் கன்றுக்குட்டி அன்றைக்கு எங்கோ ஓடி விட்டது. மூன்று நாள் இங்கு மங்கும் திரிந்தலைந்தார்; எங்கும் கிடைக்கவில்லை. கடைசியில் வேறு வழியின்றி நாட்டாண்மைக்காரரிடம் போனார். அவர் 'பவுண்டி'ல் இருக்கிறது என்று சொன்னார்; அங்கேதான் இருந்தது. பிசாசுகள் வந்து அவருக்கு உலகத்துச் சமாசாரங்கள் முழுதையும் சொல்லிவிட்டுப் போகின்றன."

நாட்டாண்மைக்காரரிடம் ஏன் இவ்வளவு பணம் இருக்கிறது என்பதும், அவருக்கு ஊரில் இவ்வளவு மரியாதை ஏன் என்பதும் இப்போது எல்லோருக்கும் புரிந்துவிட்டன.

மேலே சென்றார்கள். "இது போலீஸ் லைன். இங்கே எல்லாக் கான்ஸ்டேபிள்களும் கவாயத்துப் பழகுகிறார்கள். 'ரைடார்ன்!' 'பை போ!' இரவில் அவர்கள் பாவம், ஊரைச் சுற்றிக் காவல் காக்காவிட்டால் திருடு போய்விடும்."

மொஹஸின் பிரதிவாதம் செய்யலானுன்: "இந்தக் கான்ஸ்டேபிள்கள்தான் காவல் காக்கிருர்களோ? உனக்கு ரொம்பத் தெரிந்தாற் போலத்தான்! அட ராமா, இவர்கள் தான் திருட வைக்கிருர்கள். நகரத்திலுள்ள அத்தனை திருடர்களும் கொள்ளைக்காரர்களும் இவர்களோடு சேர்ந்த வர்கள். இரவில் இவர்கள் திருடர்களைத் திருடச்சொல்லி விட்டுத் தாம் வேறெரு பேட்டையில் போய், 'விழித்துக் கொண்டிருங்கள்! விழித்துக் கொண்டிருங்கள்!' என்று கத்துவார்கள். அதனுல்தான் இவர்களுக்கு இத்தனை பணம் சேருகிறது. எங்கள் மாமா ஒரு டாணுவில் கான்ஸ்டேபிளா யிருக்கிருர். அவருக்கு இருபது ரூபாய் மாதச் சம்பளம்; ஆனுல் வீட்டுக்கு ஐம்பது ரூபாய் அனுப்புகிருர்; அல்லா ஆணையாக! ஒரு தடவை நான் அவரை, 'மாமா, நீங்கள் இத்தனை ரூபாய் எங்கிருந்து கொண்டுவருகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே, 'குழந்தாய், அல்லா கொடுக்கிருர்' என்ருர். பின்பு அவரே மறுபடியும், 'நாங்கள் இஷ்டப்பட்டால் ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான ரூபாய் கொள்ளை யடிக்கலாம். எங்கள் பெயர் கெடாமலிருப்பதற் காகவும், எங்கள் வேலை போகாமலிருப்பதற்காகவும் நாங் கள் இவ்வளவுதான் கொண்டுவருகிருேம்' என்ருர்.

"இவர்கள் திருடவைத்தால் இவர்களை யாரும் பிடிப்ப தில்லையா?" என்று ஹாமித் கேட்டான்.

மொஹஸின் அவனுடைய அறியாமைக்கு இரங்கி, "அடே பைத்தியமே, இவர்களை யார் பிடிப்பது? இவர்கள் தாமே பிடிப்பவர்களாயிற்றே! ஆனுல் அல்லா இவர்களுக் குச் சரியான தண்டனையும் கொடுக்கிருர். அநியாயச் சொத்து அநியாயமாகப் போகிறது. சிறிது நாட்களுக்கு முன்பு மாமாவின் வீட்டில் தீப் பிடித்துக்கொண்டது. இருந்த சொத்தெல்லாம் எரிந்துபோயிற்று. ஒரு பாத்திரம் பண்டமாவது மிச்சமில்லை. எத்தனையோ நாள் மரத்தின் கீழே தூங்கினுர்; அல்லா ஆணையாக, மரத்தின் கீழே! அப்புறம் எங்கிருந்தோ ஒரு நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வரவே, பாத்திரம் பண்டங்கள் வந்தன" என்ருன்.

ஹாமித் "நூறு ரூபாய் ஐம்பது ரூபாயைக் காட்டிலும் அதிகமாக இருக்காது?" என்று கேட்டான்.

"ஐம்பது எங்கே, நூறு எங்கே? ஐம்பது ஒரு பை

நிறைய இருக்கும். நூறு இரண்டு பைகளில்கூட அடங்காது.''

*   *   *

இனி வீடுகள் நெருக்கமா யிருந்தன. ஈத்-மண்டபம் போகிறவர்களின் கும்பல்கள் காணப்பட்டன. ஒருவரைவிட மற்றொருவர் அதிகப் பளபளப்பான உடைகள் அணிந்திருந்தனர். சிலர் 'ஜட்கா'விலும் சிலர் 'மோட்டார்காரி'லும் போகிறார்கள். எங்கும் அத்தரின் வாசனை 'கம்'மென்று வீசுகிறது. எல்லோர் மனத்திலும் உற்சாகம் பொங்குகிறது. கிராமத்தார்களின் இந்தச் சிறிய கூட்டம் தன் ஏழ்மையை மறந்து, சந்தோஷத்திலும் தைரியத்திலும் மூழ்கியதாய்ச் சென்றுகொண் டிருந்தது. குழந்தைகளுக்கு நகரத்துப் பொருள்கள் யாவும் அற்புதங்களா யிருந்தன. எந்த வஸ்துவைப் பார்த்தாலும், அவர்கள் அப்படியே உற்று நோக்கிய வண்ணமே இருந்துவிடுவார்கள். பின்னுலிருந்து அடிக்கடி 'ஹார்ன்'-சத்தம் போட்டால் கூட அவர்கள் நகருவதில்லை. ஹாமித் மோட்டாரின்கீழ் அகப்பட்டுக் கொள்ள இருந்தவன், எப்படியோ தப்பினான்.

திடீரென்று ஈத்-மண்டபம் தென்பட்டது. மேலே புளிய மரங்களின் அடர்ந்த நிழல். கீழே நல்ல உறுதியான மேடை. அதன்மீது ஜமக்காளம் விரித்திருக்கிறது. உபவாசிகளின் வரிசைகள் ஒன்றன்பின்னால் ஒன்றாகக் கண்ணுக்கு எட்டாத தூரம் வரையில், மேடையின் கீழே ஜமக்காளம் இல்லாத இடத்தில் கூட, சென்றுகொண்டேயிருக்கின்றன. புதிதாக வருபவர்கள் பின்னாலுள்ள வரிசையில் நிற்கிறார்கள். முன்னே இடம் இல்லை. இங்கே யாரும் பணத்தையும் மரியாதையையும் பார்ப்பதில்லை. இஸ்லாமின் நோக்கத்தில் யாவரும் சமமானவர்கள். இந்தக் கிராமத்தார்களும் கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு பின் வரிசையில் நின்றார்கள். எவ்வளவு அழகிய ஒழுங்கு! எவ்வளவு அழகிய ஏற்பாடு! லட்சக் கணக்கான தலைகள் ஒரேயடியாக வணங்கிக் குனிகின்றன; பின்பு எல்லோரும் ஒரேயடியாக நிற்கிறார்கள்; ஒரே சமயத்தில் குனிகிறார்கள்; ஒரேசமயத்தில் மண்டியிட்டு உட்காருகிறார்கள். லட்சக் கணக்கான மின்சார விளக்குகள் ஒரேயடியாக எரிவதும், ஒரே சமயத்தில் அணைவதும், இதுவே கிரமமாக நடப்பதுபோல, இந்தச் சடங்கு பல தடவைகள் நடக்கிறது. எத்தனை அபூர்வமான காட்சி இது! சகோதரத்தன்மையின் ஒரு

நூல் இந்த ஸமஸ்தமான ஆத்மாக்களேயும் ஒரே மாலேயாகக் கோத்துக்கொண் டிருக்கிறதோ என்று தோற்றுகிறது. இந்தத் தெய்விகக் காட்சியில் நிகழும் சடங்குகளேயும், இதன் விஸ்தாரத்தையும், முடிவிலாத்தன்மையையும் கண்டு, நம் ஹிருதயத்தில் சிரத்தையும், கர்வமும், ஆத்மானந்தமும் நிரம்பிப் பொங்குகின்றன.

2

நமாஜ் முடிந்துவிட்டது. ஜனங்கள் ஒருவரையொருவர் அணேத்துக்கொள்ளுகிருர்கள். பின்பு மிட்டாய்க்கடைகளும் பொம்மைக் கடைகளும் சூறையாடப் படுகின்றன! கிராமத்தினரின் இந்தக் கூட்டம் இவ்விஷயத்தில் பாலகர்களேக் காட்டிலும் குறைந்த உற்சாகங் கொண்டதாக இல்லே. இதோ பார், ஊஞ்சல்! காலணுக் கொடுத்துவிட்டு ஏறிக்கொண்டால், ஒரு சமயம் ஆகாயத்தில் பறப்பதுபோலவும், மற்றொரு சமயம் தரையில் மோதி விழுவது போலவும் தோற்றும். இதோ ரங்க ராட்டினம்! மர யானேகளும், குதிரைகளும், ஒட்டைகளும் கம்பிகளில் தொங்குகின்றன! காலணுக் கொடுத்து ஒன்றில் உட்கார்ந்தால் இருபத்தைந்து சுற்றுக்களின் ஆனந்தத்தை அநுபவிக்கலாம். மஹமூதும் மொஹஸினும், நூரேயும் ஸம்மீயும் இந்தக் குதிரைகளின் மீதும் ஒட்டைகளின் மீதும் உட்காருகிருர்கள். ஹாமித் தொலேயில் நின்றுகொண் டிருக்கிருன். அவனிடம் முக்காலணுத்தானே இருக்கிறது. தன் பொக்கிஷத்தின் மூன்றிலோர் அம்சத்தை அவன் இந்தச் சற்று நேரச் சுற்றுதலுக்காகச் செலவழிக்க மாட்டான்.

எல்லோரும் ரங்கராட்டினத்திலிருந்து இறங்குகிருர்கள். இனி அவர்கள் பொம்மைகள் வாங்கப்போகிருர்கள். இந்தப் புறம் வரிசையாகக் கடைகள். வித விதமான பொம்மைகள் இருக்கின்றன - சிப்பாய், இடைச்சி, ராஜா, வக்கீல், மசகத்தில் (தோல் பையில்) தண்ணீர் கொண்டு வரும் மசகக்காரன், வண்ணுத்தி, துறவி - இப்படி எத்தனேயோ பொம்மைகள். பேஷ்! அவை எவ்வளவு அழகாய் இருக்கின்றன! இதோ பேசப் போகின்றன! மஹமூத் சிப்பாயை வாங்கிக் கொள்கிருன். காக்கிச் சட்டையும் சிவப்புப் பாகையும் அணிந்த சிப்பாய். இப்போதுதான் 'கவாயத்து'ப் பழகிவிட்டு வருபவன்போல்,

அவன் தோளில் துப்பாக்கியை வைத்துக்கொண்டிருக்கிறான். மொஹஸினுக்கு மசகக்காரன்மேல் ஆசை விழுந்தது. அவன் இடுப்பு வளைந்திருக்கிறது; மேலே மசகத்தை வைத்துக்கொண்டு அதன் வாயை ஒரு கையால் பிடித்துக் கொண்டிருக்கிறான். எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான்! ஒருவேளை ஏதோ பாட்டுப் பாடுகிறான் போலிருக்கிறது. இதோ, மசகத்திலிருந்து தண்ணீரைக் கொட்டப் போகிறான். நூரேக்கு வக்கீல்மீது பிரேமை. அவர் முகத்தில் என்ன வித்வத்து பிரகாசிக்கிறது! கறுப்பு அங்கி; அதன் கீழ் வெண்மையான நீண்ட கோட்டு; கோட்டின் முன் பையில் தொங்கும் கடியாரத்தின் பொன் சங்கிலி; ஒரு கையில் பெரிய சட்டப் புத்தகம். இப்போதுதான் 'கோர்ட்டி'லிருந்து குறுக்குக் கேள்விகள் கேட்டுவிட்டோ, அல்லது பிரதிவாதம் செய்துவிட்டோ வருகிறார் போலிருக்கிறது. இவைகள் யாவும் அரையணாப் பொம்மைகள்.

ஹாமித்திடம் மொத்தம் முக்காலணாத்தான் இருக்கிறது. இத்தனை கிராக்கியான பொம்மைகளை அவன் எப்படி வாங்குவான்? பொம்மை கையிலிருந்து நழுவி விழுந்தால் சுக்கல் நூறாகிவிடும். கொஞ்சம் தண்ணீர் பட்டால் நிறமெல்லாம் அழிந்துவிடும். இப்படிப்பட்ட பொம்மைகளை வாங்கிக் கொண்டு அவன் என்ன செய்வது? அவைகள் எதற்கு உபயோகம்?

மொஹஸின், "என் மசகக்காரன் தினமும் தண்ணீர் நிரப்பிவிட்டுப் போவான், காலையும் மாலையும்" என்கிறான்.

மஹமூத் : என் சிப்பாய் வீட்டுக்குக் காவலாக இருப்பான். திருடன் வந்தால் உடனே துப்பாக்கியால் 'பைர்' செய்துவிடுவான்.

நூரே : என் வக்கீல் 'கேஸு'களுக்காக நன்றாய்ச் சண்ட மாருதமாகப் பேசுவார்.

ஸம்மீ : என் வண்ணாத்தி தினந்தோறும் துணிகளை வெளுத்து வருவாள்.

"மண் பொம்மைகள்தானே! விழுந்தால் சுக்கல் சுக்கலாகி விடும்!" என்று ஹாமித் பொம்மைகளைப் பழிக்கிறான்; ஆனால் ஆவல் நிரம்பிய கண்களோடு அவைகளைப் பார்க்கிறான்; சிறிது நேரத்துக்கு அவைகளைத் தன் கையில்

எடுத்துக்கொள்ள விரும்புகிறான். அவன் கைகள் அநாயாசமாக மேலெழும்புகின்றன. ஆனால் பையன்கள் அத்தனை தியாகிகளல்லர்; அதிலும் இப்போதுதான் வாங்கிய புதிய ஜோரில். ஹாமித் ஆவலுடனே நின்றுவிடுகிறான்.

பொம்மைகளுக்குப் பின்பு மிட்டாய்கள் வருகின்றன. ஒருவன் 'ஜிலேபி' வாங்கினான்; மற்றொருவன் 'குலாப் ஜாமூன்' வாங்கினான்; இன்னொருவன் 'ஹல்வா' வாங்கினான். எல்லோரும் ஆனந்தமாகச் சாப்பிடுகிறார்கள். ஹாமித் அவர்களுடைய சமூகத்தினின்றும் வேறுபட்டவனாக இருக்கிறான். தரித்திரப் பையனிடம் முக்காலணா இருக்கிறதே; ஏதாவது வாங்கி ஏன் சாப்பிடக்கூடாது? அவன் ஆசை நிரம்பிய கண்களோடு எல்லோரையும் பார்க்கிறான்.

"அடே ஹாமித், இந்தாடா 'லட்டு'! எவ்வளவு வாசனையாக இருக்கிறதடா!" என்கிறான் மொஹஸின்.

ஹாமித்துக்கு இது கடுமையான விநோதமாக இருக்குமோ என்று சந்தேகம். மொஹஸின் அவ்வளவு தாராள மனமுடையவன் அல்லன். அதை அறிந்திருந்தும் ஹாமித் அவனிடம் போகிறான். மொஹஸின் தொன்னையிலிருந்து லட்டுத் துணுக்கு ஒன்றை எடுத்து ஹாமித்தினிடம் நீட்டுகிறான். ஹாமித் கையை விரிக்கிறான். மொஹஸின் லட்டை வாயில் போட்டுக் கொள்ளுகிறான். மஹமூதும், நூரேயும், ஸம்மீயும் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். ஹாமித் ஏமாற்றத்தினால் வெட்கமடைகிறான்.

"அடே, இந்தத் தடவை அல்லா ஆணையாகக் கட்டாயம் கொடுக்கிறேன், ஹாமித். இந்தா, வாங்கிப்போ" என்கிறான் மொஹஸின்.

"நீயே வைத்துக்கொள். என்னிடம் பணமில்லையா?"

"முக்காலணாத்தானேடா இருக்கிறது? முக்காலணாவில் என்ன என்ன வாங்குவாய்?" என்கிறான் ஸம்மீ.

மஹமூத், "நான் 'குலாப் ஜாமூன்' கொடுக்கிறேன், வாடா ஹாமித்! மொஹஸின் பெரிய துஷ்டன்!" என்கிறான்.

"மிட்டாய் சாப்பிடுவது ரொம்ப நல்ல பழக்கமோ? புஸ்தகங்களில் அவைகளின் தீமைகளைப்பற்றி எவ்வளவு எழுதியிருக்கிறது?"

மொஹஸின், “ஆனல், ‘அகப்பட்டால் சாப்பிடலாம்’ என்றுதான் உன் மனத்தில் நினைத்துக்கொண்டிருப்பாய். ஏன், உன் பணத்தை எடுப்பதுதானே?” என்கிருன்.

அப்போது மஹமூத், “எனக்குத் தெரியுமடா இவனுடைய தந்திரம்! நம்முடைய பணமெல்லாம் செல வழிந்த பிறகு, இவன் நம்மை அழவைத்து அழவைத்துச் சாப்பிடுவான்” என்று கூறுகிருன்.

மிட்டாய்க் கடைகளைத் தாண்டியதும் சில கடைகளில் இரும்புச் சாமான்களும், சிலவற்றில் பல ‘கில்ட்டு’ நகை களும் இருந்தன. இங்கே பையன்களின் மனத்தைக் கவரக்கூடிய பொருள் ஒன்றுமில்லை. அவர்கள் எல்லோ ரும் அந்தக் கடைகளைத் தாண்டிச் சென்ருர்கள். ஹாமித் இரும்புக்கடையண்டை நின்ருன். அங்கே சில ‘சிம்டா’க்கள் (இடுக்கிகள்) இருந்தன. பாட்டியிடம் ‘சிம்டா’ இல்லை என்ற ஞாபகம் அவனுக்கு வந்தது.

‘தவா’விலிருந்து ரொட்டிகளை எடுக்கும்போது அவள் கை வெந்து போகிறது. அவன் ‘சிம்டா’ வாங்கிக் கொண்டு போய்ப் பாட்டியிடம் கொடுத்தால், அவள் எவ்வளவு சந்தோஷப் படுவாள்! அப்புறம் அவள் விரலில் எப்போதும் சுடாது. வீட்டில் அது ஓர் உபயோக மான பொருளாய் இருக்கும். பொம்மைகளால் என்ன பிரயோஜனம்? வீணுகப் பணம் தொலைகிறது. சற்று நேரத்துக்குத்தான் மகிழ்ச்சி உண்டாகிறது. அதற்குப் பின்பு பொம்மைகளை யாரும் கண்ணெடுத்துப் பார்ப்ப தில்லை. ஒன்று, அவை வீடு போவதற்குள் உடைந்து கரியாய்ப் போகும்; அல்லது, வீடு சென்றதும், மண்டபத் துக்கு வராத சிறு குழந்தைகள் அவைகளைப் பிடிவாதம் பிடித்து வாங்கி உடைத்துப்போடும். ‘சிம்டா’ எவ்வளவு உபயோகமான பொருள்! ரொட்டிகளைத் ‘தவா’விலிருந்து எடுக்கலாம்; அடுப்பில் ரொட்டியைச் சுடலாம். யாராவது நெருப்புக் கேட்க வந்தால், சட்டென்று அடுப்பிலிருந்து தணல் எடுத்துக் கொடுக்கலாம். பாட்டிக்குப் பாவம், கடைத்தெருவுக்குப் போக ஓய்வு ஏது? அவளுக்கு இவ்வளவு பணந்தான் எங்கிருந்து கிடைக்கப் போகிறது? தினமும் கையைச் சுட்டுக்கொள்ளுகிருள்.

ஹாமித்தின் கூட்டாளிகள் முன்னே போய்விட்டனர்.

தண்ணீர்ப் பந்தலில் எல்லோரும் 'ஷர்பத்' குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹாமித் தன் மனத்துக்குள், 'பார், எல்லோரும் எவ்வளவு பேராசைக்காரர்கள்! இவ்வளவு மிட்டாய்கள் வாங்கினார்கள் ; எனக்கு எவனும் ஒன்றுகூடக் கொடுக்கவில்லை. போதாக்குறைக்கு, "என்னோடு விளையாடு. எனக்காக இந்த வேலையைச் செய்'' என்கிறார்கள். இனி, எவனாவது என்னை ஏதாவது வேலை செய்யச் சொல்லட்டும், அப்போது கேட்கிறேன். சாப்பிடட்டுமே மிட்டாய்கள் ; தானாக வாய் அழுகும் ; சொறி சிரங்குகள் உண்டாகும் ; நாக்குத் தானாகச் சிறு திண்டிகள் தின்பதில் சபலம் கொள்ளும். அப்போது இவர்கள் வீட்டிலிருந்து பணம் திருடி அடி வாங்குவார்கள். புஸ்தகத்தில் பொய்யாகவா எழுதி யிருக்கிறது? நான் திண்டிப் பித்தன் ஆகமாட்டேன். பாட்டி 'சிம்டா'வைப் பார்த்தவுடனே ஓடிவந்து, என் கையி லிருந்து அதை வாங்கிக்கொண்டு, "என் குழந்தை பாட்டிக் காகச் 'சிம்டா' வாங்கிவந்திருக்கிறான் !'' என்பாள். ஆயிரக் கணக்கான ஆசீர்வாதங்கள் தருவாள். பின்பு அதை அக்கம்பக்கத்தில் உள்ள ஸ்திரீகளுக்குக் காட்டுவாள். "ஹாமித் 'சிம்டா' வாங்கிவந்திருக்கிறான். எவ்வளவு நல்ல பையன்!'' என்று ஊர் முழுதும் பேச்சாக இருக்கும். இவர்களுடைய பொம்மைகளுக்காக யார் இவர்களுக்கு ஆசி கூறுவார்கள்? பெரியோர்களின் ஆசிகள் நேரே அல்லாவின் தர்பாருக்குப் போய்ச் சேர்ந்து உடனே கவனிக்கப்படுகின்றன. என்னிடம் பணம் இல்லை. அதனால் தானே மொஹஸினும் மஹமூதும் என்னை இப்படி ஏசுகிறார்கள்? நானும் இவர்களை ஏசுவேன். இவர்கள் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடட்டும் ; மிட்டாய் கள் சாப்பிடட்டும். எனக்குப் பொம்மைவிளையாட்டு வேண் டாம். ஒருத்தனுடைய ஏச்சை நான் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்? நான் ஏழைதான் ; ஆனால் எவனிடமும் ஏதும் பிச்சை கேட்கப் போகவில்லையே? கடைசியில் அப்பா என்றைக்காவது ஒரு நாள் வருவார். அம்மாவும் வருவாள். அப்போது, "எவ்வளவு பொம்மைகள் வேண்டும்?'' என்று இவர்களைக் கேட்பேன். ஒவ்வொருவனுக்கும் கூடைக் கணக்காகப் பொம்மைகள் கொடுத்து, "நண்பர்களிடம் இந்த விதமாகப் பழக வேண்டும்'' என்பதைக் காட்டுவேன். காலணுவுக்கு லட்டு வாங்கிவிட்டு, என்னை அழவைத்துக்கொண்டே சாப்பிடுகிறானே, இது

நட்பு அல்ல. ஹாமித் 'சிம்டா' வாங்கினன் என்று எல்லோரும் நகைப்பார்கள். நகைக்கட்டுமே; எனக்கு என்ன மோசம்?'' என்று எண்ணமிடலானன்.

"இந்தச் 'சிம்டா' என்ன விலை?'' என்று அவன் கடைக்காரனைக் கேட்டான்.

கடைக்காரன் அவனைப் பார்த்தான்; அருகில் ஒருவரும் இல்லாதது கண்டு, "அது உனக்கு உதவும்படியான பொருள் இல்லை, அப்பா!'' என்ருன்.

"விற்பதற்கு வைத்திருக்கிருயா, இல்லையா?''

"விற்பதற்கு இல்லாமல் வேறு என்ன? இங்கே கொழுத்துப் போயா சுமந்து வந்திருக்கிரும்?''

"அப்படியானல் சொல்வதுதானே, என்ன விலை?''

"ஒன்றரையணு ஆகும்.''

ஹாமித்தின் தைரியம் போய்விட்டது.

"சரியான விலை சொல்ல மாட்டாயா?'' என்ருன்.

"சரியான விலை ஒன்றேகாலணு; வேண்டுமானல் வாங்கு; இல்லாவிட்டால் நட.''

ஹாமித் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "முக்கால் அணுவுக்குக் கொடுப்பாயா?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டுவிட்டுக் கடைக்காரனின் திட்டுக்கள் காதில் விழாமலிருப்பதற்காக அவன் மேலே நடந்தான்.

ஆனல் கடைக்காரன் திட்டவில்லை. அவனைக் கூப்பிட்டுச் 'சிம்டா'வைக் கொடுத்துவிட்டான். ஹாமித் அதைத் துப்பாக்கிபோல் தோள்மேல் வைத்துக்கொண்டு, பெருமையுடன் ஜோராக நடந்து, கூட்டாளிகளிடம் வந்தான்.

மொஹஸின் நகைத்துக் கொண்டே, "இந்தச் 'சிம்டா'வை எதற்காகடா வாங்கிவந்தாய், பைத்தியம்! இதை என்ன செய்வாய்?'' என்ருன்.

ஹாமித் 'சிம்டா'வைத் தரையில் ஓங்கி அடித்து, "சற்று உன் மசகக்காரனைத் தரையில் எறிடா பார்க்கலாம்! அந்தப் பயலின் எலும்பெல்லாம் நொறுங்கிப் போகும்!'' என்ருன்.

"அப்படியானால் இந்த நொள்ளைச் 'சிம்டா'கூட ஒரு பொம்மையோ?" என்று மஹமூத் கேட்டான்.

"பொம்மை இல்லாமல் என்ன? இதோ தோள்மேல் வைத்துக்கொண்டேன்; துப்பாக்கி யாகிவிட்டது. கையில் எடுத்துக்கொண்டேன்; பக்கீர்களின் 'சிம்டா' ஆயிற்று. இஷ்டப்பட்டால் நான் இதைக் 'கஞ்ஜீரா'வாக உபயோகிக்க முடியும். 'சிம்டா'வால் ஓர் அறை அறைந்தால் உங்கள் பொம்மைகளெல்லாம் உயிரை விட்டுவிடும். உங்கள் பொம்மைகள் என்னதான் பலங்கொண்டமட்டும் தாக்கினாலும் என் 'சிம்டா'வை அசைக்க முடியாது. என்னுடைய வீரச் சிங்கம் — இந்தச் 'சிம்டா'!"

ஸம்மீ ஒரு கீச்சிடும் பொம்மை வாங்கி யிருந்தான். அவன் மனம் மாறியவனாய், "அடே, இந்தக் கீச்சுப் பொம்மைக்கு அதை மாற்றிக்கொள்ளடா. இரண்டணாடா இதன் விலை" என்றான்.

ஹாமித் கீச்சிடும் பொம்மையை அசட்டையோடு பார்த்துவிட்டு, "என் 'சிம்டா' வேண்டுமானால் உன் கீச்சுப் பொம்மையின் வயிற்றைக் கிழித்துவிடும்! அதில் என்னடா இருக்கிறது? ஒரு ரப்பர் தோலில் துவாரமுள்ள ஓர் இரும்பு வளையத்தைப் பதித்துவிட்டால் அது 'கீச் - கீச்' என்று கத்துகிறது. கொஞ்சம் தண்ணீர் பட்டால் அதன் ஆயுசு முடிந்து போகும். என் வீரச் 'சிம்டா' நெருப்பிலும், நீரிலும், சூறைக் காற்றிலும், புயலிலும் எப்போதும் அசையாமல் நிற்கும்" என்றான்.

'சிம்டா' எல்லோரையும் மயக்கிவிட்டது; ஆனால் இப்போது எவனிடம் பணம் இருக்கிறது! மேலும், சந்தையை விட்டு வெகு தூரம் வந்தாயிற்று. மணி எப்போதோ ஒன்பது அடித்துவிட்டது. வெயில் தீவிரமாகிக்கொண்டே இருக்கிறது. வீடு போய்ச்சேர அவசரம். தகப்பன்மாரிடம் போய்ப் பிடிவாதம் பிடித்தால்கூடச் 'சிம்டா' கிடைக்காது. ஹாமித் பெரிய தந்திரசாலி. இதற்காகத்தான் துஷ்டப்பயல், பணத்தைச் செலவழிக்காமல் வைத்திருந்தான்.

இப்போது பையன்களிடையே இரண்டு கட்சிகள் தோன்றின. மொஹஸினும் மஹமூதும், ஸம்மீயும் நூரேயும் ஒரு கட்சி; ஹாமித் தனியனாக மற்றொரு கட்சி.

இரண்டு கட்சிகளுக்கும் 'சாஸ்திரார்த்தம்' - வாக்குவாதம் - நடக்கிறது. ஸம்மீ 'பிரஷ்டனு'கிவிட்டான்; வேறு கட்சியில் போய்ச் சேர்ந்துகொண்டான். ஆனல் மொஹஸினும் மஹமூதும் நூரேயுங்கூட - ஹாமித்தைக் காட்டிலும் ஓரிரண்டு வயது பெரியவர்களாக இருந்தும் - அவனுடைய தாக்குதல்களைக் கண்டு நடுங்குகிருர்கள். அவனிடத்தில் நியாயத்தின் பலமும் நீதியின் சக்தியும் உள்ளன. ஒருபுறத்தில் மண்; மறுபுறத்தில் இரும்பு; அது இந்தச் சமயத்தில் தன்னை எஃகு என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. அது வெல்ல முடியாதது; உயிருக்கே ஆபத்தானது.

"ஒரு சிங்கம் வந்துவிட்டால் மசகக்கார ஆசாமியின் குண்டி கலங்கும். சிப்பாய் மியான் மண் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டுக் கம்பி நீட்டுவான். வக்கீல் துரை தம் பாட்டனுக்கு அழுதுகொண்டு, அங்கியில் முகத்தை மறைத்துக்கொண்டு, தரையில் நீட்டிவிடுவார்! ஆனல், இந்தச் 'சிம்டா' - இந்த வீரன் - இந்த 'ருஸ்தமே - ஹிந்த்' - ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சிங்கத்தின் கழுத்தில் உட்கார்ந்துகொண்டு, அதன் கண்களைப் பிடுங்கிவிடுவான்."

மொஹஸின் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையிலுள்ள பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டி, "அது சரி; 'சிம்டா'வால் தண்ணீர் நிரப்ப முடியாதே!" என்ருன்.

ஹாமித் 'சிம்டா'வை நேரே நிற்கவைத்துக்கொண்டு, "இந்தச் 'சிம்டா' மசகக்காரனை ஒரு மிரட்டு மிரட்டினல், அவன் ஓடிவந்து அதன் வீட்டு வாசலில் தண்ணீர் கொணர்ந்து தெளிக்க ஆரம்பிப்பான்" என்ருன்.

மொஹஸின் தோற்றுப்போனன்; ஆனல் மஹமூத் அவன் உதவிக்குச் சென்ருன். "இந்தப் பயல் பிடிபட்டால் கோர்ட்டில் சங்கிலியும் கையுமாகப் பிணிக்கப்பட்டு அலைவான். அப்போது வக்கீலின் கால்களில்தானே வந்து விழுவான்?" என்ருன்.

இந்த வலிவான தர்க்கத்துக்குப் பதில் சொல்ல ஹாமித்தால் முடியவில்லை. "யாரடா வருவான் நம்மைப் பிடிக்க?" என்ருன்.

நூரே இறுமாப்புடன், "இந்தச் சிப்பாய்டா, துப்பாக்கிக்காரன்!" என்றான்.

ஹாமித் அவனுக்கு அழகு காட்டிக்கொண்டே, "இந்தச் சொத்தைப் பேர்வழியா பாவம், நம்முடைய 'பகாதுர் ருஸ்தமே-ஹிந்தை'ப் பிடிக்கப் போகிறான்! சரி, கொண்டாடா அவனை; இப்போதே கொஞ்சம் குஸ்தி போடச் சொல்லிப் பார்க்கலாம். இவனுடைய உருவத்தைக் கண்டதும் அவன் தூரத்திலிருந்தே ஓட்டம் பிடிப்பான்! அவன் எங்கிருந்தடா பாவம், இவனைப் பிடிக்கப் போகிறான்!" என்றான்.

மொஹஸின் ஒரு புதிய மின்னல் தாக்குதலைக் கண்டு பிடித்தான். "உன் 'சிம்டா'வின் முகம் தினந்தோறும் தீயில் வேகும்!" என்றான்.

ஹாமித் பதில் சொல்லாமல் 'திரு-திரு' வென்று விழிப்பான் என்று அவன் நினைத்திருந்தான்; ஆனால் அப்படி நடக்கவில்லை. ஹாமித் உடனே, "நெருப்பில் வீரர்கள்தான் குதிப்பார்கள், ஐயா! உங்களுடைய இந்த வக்கீலும், சிப்பாயும், மசகக்காரனும் ஆட்டுப் புழுக்கைகள் மாதிரி வீட்டுக்குள்தான் விழுந்து கிடப்பார்கள்! நெருப்பில் குதிக்கும் வேலையை இந்த 'ருஸ்தமே-ஹிந்த்'தான் செய்ய முடியும்!" என்று 'பட்'டென்று பதில் சொன்னான்.

மஹமூத் ஒரு வெடி குண்டை வீசினான்: "வக்கீல் துரை நாற்காலி மேஜைகள் போட்டுக்கொண்டு உட்காருவார். உன் 'சிம்டா' சமையலறையில் தரையில்தானே விழுந்து கிடக்கும்?"

இந்தத் தர்க்கம் ஸம்மீயையும் நூரேயையுங்கூட ஜீவனுள்ளவர்களாக்கிவிட்டது. எவ்வளவு சரியான பேச்சுப் பேசினான் பயல்! 'சிம்டா' சமையலறையில் விழுந்து கிடக்காமல் வேறு என்ன செய்யமுடியும்?

ஹாமித்துக்கு ஒன்றும் பொருத்தமான பதில் சொல்லத் தோன்றவில்லை; ஆகவே அவன் போக்கிரித்தனம் செய்ய ஆரம்பித்தான். "என் 'சிம்டா' சமையலறையில் கிடக்காது, அண்ணே! வக்கீல் துரை நாற்காலியில் உட்காரும்போது, இது போய் அவரைத் தரையில் தள்ளி, அவருடைய சட்டத்தை அவர் வயிற்றுக்குள் திணித்துவிட்டு வரும்" என்றான்.

பேச்சு அப்படி யொன்றும் ரஸமாக அமையவில்லை. அசல் திட்டும் வசவுமே. ஆனால் சட்டத்தை வயிற்றுக்குள் திணிக்கும் பேச்சு பெரிய வேலைத்தனம் செய்தது. ஒரு தம்படிக் காற்றாடி ஒரு பெரிய அரையணுக் காற்றாடியைக் கிழித்துவிட்டதோ என்று சொல்லும்படியாக, அந்த மூன்று மகா சூரர்களும் 'பே - பே' என்று விழித்தார்கள்; அவ்வளவு வேலைத்தனம் செய்தது அந்தப் பேச்சு! சட்டம் வாயிலிருந்து வெளிவரும் பொருள். அதை வயிற்றுக்குள் திணிப்பதென்பது பொருத்தமற்ற பேச்சாயினும், அதில் ஒரு புதுமை இருக்கிறது. ஹாமித் போரில் வென்று விட்டான். அவனுடைய 'சிம்டா', 'ருஸ்தமே - ஹிந்த்'தான். இனி இதில் மொஹஸின், மஹமூத், நூரே, ஸம்மீ - யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது.

வெற்றி பெற்றவனுக்குத் தோற்றவர்களிடமிருந்து என்ன மரியாதை கிடைக்கவேண்டியது இயல்போ, அது ஹாமித்துக்கும் கிடைத்தது. மற்றவர்கள் மும்மூன்று நாலு நாலு அணுக்கள் செலவழித்தும், உபயோகமுள்ள பொருளாக ஒன்றும் வாங்க முடியவில்லை. ஹாமித் முக்காலணுவிலேயே ஜமாய்த்துவிட்டான். உண்மைதானே, பொம்மைகளை எப்படி நம்ப முடியும்? அவை உடைந்து தான் போகும். ஹாமித்தின் 'சிம்டா'வோ இப்படியே இருக்கும் வருஷக்கணக்காக!

உடன்படிக்கையைப்பற்றிய நிபந்தனைகள் யோசிக்கப் படலாயின. "சற்று உன் 'சிம்டா'வைக் கொடு; நாங்களும் பார்க்கிறோம். நீ என் மசகக்காரனை எடுத்துப் பார்" என்றான் மொஹஸின்.

மஹமூதும் நூரேயுங்கூடத் தங்கள் தங்கள் பொம்மை களை முன்னே நீட்டினார்கள்.

ஹாமித்துக்கும் இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள் வதில் ஒன்றும் தடை இருக்கவில்லை. 'சிம்டா' முறையே எல்லோர் கையிலும் சென்றது. அவர்களுடைய பொம்மைகள் முறையே ஹாமித்தின் கைக்கு வந்தன. எவ்வளவு அழகான பொம்மைகள்!

ஹாமித் தோற்றவர்களின் கண்ணீரைத் துடைத்தான்: "நான் சும்மா அழக்கிளப்பினேனடா உங்களை; நிஜமாக! இந்த இரும்புச் 'சிம்டா'வா இந்தப் பொம்மைகளுக்கு ஈடு

ஜோடாகும்? 'இதோ பேசப்போகிறது, இதோ பேசப் போகிறது!' என்று சொல்லலாம்போல இருக்கிறது இந்தப் பொம்மை ஒவ்வொன்றும்'' என்றான்.

ஆனால் மொஹஸினின் கட்சிக்கு இந்தச் சமாதானம் திருப்தியை அளிக்கவில்லை. 'சிம்டா'வின் முத்திரை நன்றாக அவர்கள் மனத்தில் அழுந்திவிட்டது. ஒட்டிய தபால் பில்லை இனித் தண்ணீரால் பெயராது.

''இந்தப் பொம்மைகளுக்காக நம்மை யாரும் புகழப் போவதில்லை'' என்றான் மொஹஸின்.

''ஏனடா புகழைக் கட்டிக்கொண்டு அழுகிறாய்? இதற்காக அடி கிடைக்காமல் இருந்தால் போதாதா? 'சந்தையில் இந்த மண் பொம்மைதானா உனக்குக் கிடைத்தது?' என்று அம்மா கட்டாயம் கேட்பாள்'' என்றான் மஹமூத்.

'சிம்டா'வைப் பார்த்துத் தன் பாட்டி எவ்வளவு சந்தோஷப்படுவாளோ, அவ்வளவு சந்தோஷம் பொம்மைகளைப் பார்த்து யாருடைய அம்மாவும் அடையமாட்டாள் என்பதை ஹாமித் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. எல்லாக் காரியங்களையும் அவன் முக்காலணாவுக்குள் முடித்துக் கொள்ள வேண்டியிருந்தது; அந்தப் பணத்தை இவ்விதம் உபயோகித்ததற்காக அவன் அடியோடு வருந்தவே வேண்டியதில்லை. மேலும், இந்தச் 'சிம்டா'வோ இப்போது 'ருஸ்தமே-ஹிந்தா'கவும், எல்லாப் பொம்மைகளுக்கும் 'பாதுஷா'வாகவும் விளங்குகிறது.

வழியில் மஹமூதுக்குப் பசி எடுத்தது. அவன் தந்தை வாழைப் பழங்கள் தின்னக் கொடுத்தார். மஹமூத் ஹாமித்தை மாத்திரம் தன் பங்காளியாக்கிக்கொண்டான். அவனுடைய இதர நண்பர்கள் வாயைப் பிளந்துகொண்டு நின்றனர். இது அந்தச் 'சிம்டா'வின் மகிமை.

3

பதினொரு மணிக்கு ஊர் முழுதும் அல்லோல கல்லோலப்பட்டது. ஈத்-மண்டபத்துக்குப் போனவர்கள் திரும்பிவந்தாயிற்று. மொஹஸினின் தங்கை ஓட்டமாக ஓடிவந்து அவன் கையிலிருந்து மசகக்காரனைப் பிடுங்கிக்

கொண்டாள். அவள் ஆனந்தத்தால் ஒரு குதி குதித்த போது மசகக்காரன் கீழே விழுந்து பரலோகம் சென்றான். அதற்காக அண்ணனுக்கும் தங்கைக்கும் அடிதடிச் சண்டை நடந்தது. இருவரும் விக்கி விக்கி அழுதார்கள். அவர்களின் தாய் அந்தக் கூச்சலைக் கேட்டுக் கோபங் கொண்டு, இரண்டு பேருக்கும் போதாக்குறைக்கு இரண் டிரண்டு அறைகள் கொடுத்தாள்.

நூரே மியானுடைய வக்கீலின் முடிவு அவருடைய பிரதிஷ்டைக்குத் தகுந்தபடி இதைக் காட்டிலும் அதிக கௌரவமாக நிகழ்ந்தது. வக்கீல் தரையிலோ அல்லது பிரையிலோ உட்காரமாட்டார். அவருடைய மரியாதையைக் கவனிக்கவேண்டு மல்லவா? சுவரில் இரண்டு நீண்ட ஆணிகள் அடித்து, அவைகளின்மேல் ஒரு மரப்பலகை வைக்கப்பட்டது. அதன்மேல் ஒரு காகித ஜமக்காளம் விரிக்கப்பட்டது. வக்கீல் துரை போஜராஜனைப்போல இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். நூரே அவருக்குப் பங்கா போடலானான். கோர்ட்டுகளில் வெட்டிவேர்த் தட்டிகளும், மின்சார விசிறிகளும் இருக்கும். இங்கே சாதாரண விசிறியாவது வேண்டாமா? தர்க்கவாதத்தின் உஷ்ணம் மூளைக்கு ஏறிவிடுமோ இல்லையோ? பனையோலை விசிறி வந்தது. நூரே விசிற ஆரம்பித்தான். விசிறியின் காற்றினாலோ அல்லது விசிறி பட்டதனாலோ,-எதனாலோ தெரியவில்லை-வக்கீல் சாகேப் ஸ்வர்க்க லோகத்திலிருந்து மர்த்திய லோகத்தில் வந்து குதித்தார். அவருடைய காயம் மாயமாக மண்ணிலே கலந்தது! பின்பு பெரிய ஒப்பாரி பாடிச் சோகம் கொண்டாடப்பட்டது; வக்கீலின் அஸ்திகள் குப்பையில் கொண்டு போடப்பட்டன.

இனி, மஹமூதின் சிப்பாயைப் பார்க்கலாம். அவன் வந்தவுடனே 'சட்'டென்று கிராமத்தைக் காவல் காக்கும் 'சார்ஜ்' வாங்கிக்கொண்டான்; ஆனால் போலீஸ் சிப்பாய் என்ன சாதாரண ஆசாமியா, தன் கால்களால் நடக்க? அவன் பல்லக்கில் போவான். ஒரு கூடை வந்தது; அதில் சில கிழிந்த, பழைய, சிவப்பு நிறக் கந்தைகள் போடப் பட்டன. அதில் சிப்பாய்த் துரை சுகமாகப் படுத்துக் கொண்டான். மஹமூத் அந்தக் கூடையைத் தூக்கிக் கொண்டு, வாசலில் உலாவ ஆரம்பித்தான். அவனுடைய இரண்டு தம்பிகளும் சிப்பாயின் சார்பாக, "தூங்குபவர்

களே, விழித்துக்கொள்ளுங்கள்!" என்று கூவிக்கொண்டே போனார்கள். ஆனால், இரவு இருள் மூண்டதாகத்தானே இருக்கவேண்டும்! மஹமூதின் கால் தடுக்கி, அவன் கையினின்றும் கூடை நழுவி விழுகிறது. சிப்பாய் மியான் தன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தரைமேல் நிற்கிறான். அவனுடைய ஒரு காலில் 'ஒச்சம்' வந்துவிட்டது. மஹமூதுக்குத் தான் ஒரு நல்ல டாக்டர் என்பது இன்று தான் தெரிந்தது. ஒடிந்த காலை ஒரு நொடியில் கூட்ட வைக்கும்படியான பச்சிலை ஒன்று அவனுக்குக் கிடைத் திருக்கிறது. கள்ளிப்பால்தான் வேண்டும். கள்ளிப்பால் வருகிறது; காலும் ஒட்டவைக்கப்படுகிறது. ஆனால், சிப்பாயை நிற்க வைத்தவுடனே, கால் விடை வாங்கிக் கொள்கிறது. 'ஆபரேஷன்' பயன்படாமல் போகவே, இன்னொரு காலும் ஒடிக்கப்படுகிறது. இப்போது அவன் வேறொன்றும் இல்லாவிட்டாலும், ஓரிடத்தில் சுகமாக உட்கார முடியும் அல்லவா? ஒற்றைக் காலால் அவன் நடக்கவும் முடியாது; உட்காரவும் முடியாதே! இப்போது அந்தச் சிப்பாய் சந்நியாசி யாகிவிட்டான். தன் இடத்தில் உட்கார்ந்தபடியே 'பாரா'க் கொடுக்கிறான். சில சமயங் களில் அவன் தெய்வமாகி விடுகிறான். அவன் தலையில் 'ஜாலரு'டன் இருந்த பாகையைச் சுரண்டியாயிற்று. இப்போது அவனுக்கு எந்த வேஷம் வேண்டுமானாலும் போட முடியும். சில சமயங்களில் ஏதாவது பக்ஷணம் நறுக்க வேண்டுமானால், குழவியின் வேலையும் அவனிட மிருந்தே வாங்கப்படுகிறது.

இனி, ஹாமித் மியானின் செய்தியைக் கேட்கலாம். அமீனா அவன் குரலைக் கேட்டவுடனே ஓடிவந்து அவனை மடியில் எடுத்துக்கொண்டு அன்பு காட்டினாள். உடனே அவன் கையில் 'சிம்டா'வைக் கண்டு திடுக்கிட்டாள்.

"இந்தச் 'சிம்டா' எங்கடா இருந்தது?" என்று கேட்டாள்.

"நான் வாங்கினேன் விலை கொடுத்து."

"என்ன விலை?"

"முக்காலணாக் கொடுத்தேன்."

அமீனா வயிற்றில் அடித்துக் கொண்டாள். என்ன முட்டாள் பையன்! நடுப்பகலாகியும் ஒன்றும் சாப்பிட

வில்லை. கொண்டுவந்தான் இந்தச் 'சிம்டா'வை! "ஏனடா, உனக்குக் கடைத்தெரு முழுதிலும் வேறொன்றும் கிடைக்க வில்லையா? போயும் போயும் இந்த இரும்புச் 'சிம்டா'வை வாங்கிக்கொண்டு வந்தாயே?" என்று வினவினாள்.

ஹாமித் ஏதோ குற்றம் செய்தவன்போல, "ரொட்டி சுடும்போது உன் விரல் சுடுகிறதே, பாட்டீ! அதற்காகத் தான் நான் இதை வாங்கிவந்தேன்" என்றான்.

கிழவியின் சினம் உடனே அன்பாக மாறியது. எத்தகைய அன்பு? தன் மனக்குறைகளையெல்லாம் சொற் களில் கொட்டிவிடும் சாதுரியமான அன்பு அல்ல. இது ஊமையான அன்பு; மிகவும் கெட்டியானது; ரஸமும் சுவையும் நிரம்பியது. 'இந்தக் குழந்தையினிடத்தில் எவ்வளவு தியாகமும், எவ்வளவு நல்லெண்ணமும், எவ்வளவு விவேகமும் இருக்கின்றன! மற்றப் பையன்கள் பொம்மை வாங்குவதையும், மிட்டாய்கள் சாப்பிடுவதையும் கண்டு இவன் மனம் எவ்வளவு ஆவலுடன் தவித்திருக்கும்! இவ்வளவு பொறுமை இவனுக்கு எப்படி வந்தது? அங்கேயும் இவனுக்குத் தன் கிழப் பாட்டியின் நினைவு மாறவில்லை.' இதை நினைத்ததும், அமீனாவின் நெஞ்சம் குழைந்தது.

மேலும், இப்போது ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. ஹாமித்தின் அந்தச் 'சிம்டா'வைக் காட்டிலும் விசித்திரமானது இது. குழந்தை ஹாமித் கிழ ஹாமித்தாக நடித்திருந்தானல்லவா? இப்போது கிழவி அமீனா குழந்தை அமீனா ஆனாள். அவள் அழத் தொடங்கினாள். சேலைத் தலைப்பை விரித்து ஹாமித்துக்கு ஆசீர்வாதங்கள் கொடுத்த வண்ணமாக இருந்தாள்; அவள் கண்களினின்றும் கண்ணீரின் பெரிய பெரிய துளிகள் 'டப் - டப்'பென்று விழுந்த வண்ணமாக இருந்தன. இதன் ரகசியம் ஹாமித் துக்கு என்ன தெரியும்!

நாயகர்வீட்டுக் கிணறு

1

ஜோகூ 'லோட்டா'வை வாயில் வைத்துக்கொண்டவுடனே தண்ணீரிலிருந்து கொடிய துர்நாற்றம் வீசியது. கங்கியிடம், "இது என்னத் தண்ணிடீ? 'கப்பு' அடிக்குது, குடிக்கவே முடியலே. நெஞ்சு ஒலந்துபோவுது, நீ ஏதோ அழுகத் தண்ணியைக் கொண்ணாந்து வெச்சிருக்கே!" என்றான்.

கங்கி ஒவ்வொரு நாளும் மாலையில் தண்ணீர் நிரப்பி வைத்துக்கொள்வது வழக்கம். கிணறு வெகு தொலையில் இருந்தது. நேற்று அவள் தண்ணீர் கொணர்ந்தபொழுது அதில் துர்நாற்றம் அடியோடு இல்லை; இன்று அதில் 'கப்பு' எங்கிருந்து வந்தது? 'லோட்டா'வை மூக்கண்டை வைத்துக் கொண்டபோது உண்மையாகவே துர்நாற்றம் அடித்தது. நிச்சயமாக ஏதாவது பிராணி கிணற்றில் விழுந்து செத்துப்போயிருக்கும். ஆனால், இப்போது வேறு தண்ணீர் எங்கிருந்து கொண்டுவருவது?

நாயகர்வீட்டுக் கிணற்றண்டை யாரும் போகவிட மாட்டார்களே? தூரத்திலிருந்தே ஜனங்கள் மிரட்டுவார்கள். செட்டியாரின் கிணறு கிராமத்துக்கு அக்கோடியில் இருக்கிறது; ஆனால், அங்கேயும் தண்ணீர் மொள்ள விடுபவர் யார்? நான்காவது கிணறு கிராமத்திலேயே இல்லை.

ஜோகூ பல நாட்களாகக் காயலாயிருக்கிறான். சற்று நேரம் வரையில் அவன் தாகத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தான்; பின்பு, "இனிமே தாகம் பொறுக்கவே முடியாது. கொண்டா, மூக்கைப் பிடிச்சிக்குனு கொஞ்சந் தண்ணி குடிச்சுடறேன்" என்றான்.

கங்கி தண்ணீர் கொடுக்கவில்லை. கெட்ட தண்ணீரைக் குடிப்பதால் நோய் அதிகரிக்கும் என்பது அவளுக்குத் தெரியும்; ஆனால் தண்ணீரைக் கொதிக்க வைத்தால்

அதன் தீமை போய்விடு மென்பதை அவள் அறியாள். "இந்தத் தண்ணியெ என்னமா குடிப்பே? எந்த ஜந்து செத்துப்போச்சோ, யார் கண்டாங்க? கிணத்துலேந்து வேறெ தண்ணி கொண்டார்றேன்" என்றாள்.

ஜோகூ அவளை வியப்புடன் நோக்கி, "வேறெ தண்ணி எங்காந்து கொண்டு வருவே?" என்றான்.

"நாயகர் கிணறும் செட்டியார் கிணறுந்தான் இருக்குதுங்களே! ஒரு 'லோட்டா'த் தண்ணி கொண்டார விடமாட்டாங்களா?

"கையெக் காலெ ஒடிச்சிக்கினு வருவே; வேறெ ஒண்ணும் நடவாது. சும்மா குந்திக்கினு இரு. பாப்பாரத் தெய்வங்க ஆசிர்வாதங்குடுக்குங்க; நாயகர் தடியாலெ அடிப்பாரு; செட்டியார் ஒண்ணுக்கு அஞ்சா வாங்கிக்குவாரு. ஏழைகள் கஸ்டம் எவுங்களுக்குத் தெரியுது? நம்ப செத்துப்போனுக்கூட எவனும் வாசல்லெ வந்து எட்டிப் பாக்க மாட்டான்; தோள் போடறத்தைப் பத்தியோ பேச்சே வேணும். இப்படிப்பட்டவங்களா கிணத்துலேந்து தண்ணி மொள்ள விடுவாங்க?"

இந்தச் சொற்களில் கசப்பான உண்மை இருந்தது. கங்கி என்ன பதில் சொல்வாள்? ஆனல் அவள் அந்தத் துர்நாற்றத் தண்ணீரைக் குடிக்கக் கொடுக்கவில்லை.

2

இரவு ஒன்பது மணி. களைத்திருந்த தொழிலாளர்கள் யாவரும் தூங்கிப் போயினர். நாயகர்வீட்டு வாசலில் கவலையற்ற ஏழெட்டுக் காலாடிகள் கூடியிருந்தார்கள். போர்க்களத்திலே வீரம் காட்டும் வழக்கந்தான் இப்போது போய்விட்டதே; அதற்குச் சந்தர்ப்பமும் இல்லை. சட்டம் பேசுவதிலே அவர்கள் தம் வீரத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். நாயகரவர்கள் எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக ஒரு முக்கியமான 'கேஸி'ல் இன்ஸ்பெக்டருக்கு லஞ்சம் கொடுத்துத் தப்பித்துக்கொண்டார், எவ்வளவு புத்திசாலித்தனமாக அவர் ஒரு 'கேஸு'க்கு மிகவும் தேவையாயிருந்த ஒரு நகலை வாங்கிக்கொண்டு வந்தார் - இவை சம்பந்தமாகத்தான் பேச்சுக்கள். "கச்சேரி

குமாஸ்தா, முனிசீப் எல்லோரும், 'அந்த நகல் கிடைக்காது' என்றார்கள். ஒருவன் ஐம்பது ரூபாய் கேட்டான்; இன்னொருவன் நூறு கேட்டான். ஆனால் இவர் காலணாக் காசு கொடுக்காமல் நகலை அடித்துக்கொண்டு வந்து விட்டார். எதற்கும் வேலை செய்யும் முறை தெரிய வேண்டும்."

இதே சமயத்தில் கங்கி கிணற்றிலிருந்து நீர் எடுக்கப் போய்ச் சேர்ந்தாள்.

விளக்கின் மங்கலான வெளிச்சம் கிணற்றின்மேல் விழுந்துகொண்டிருந்தது. கங்கி மேடையின் மறைவில் உட்கார்ந்து சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கிணற்றுத் தண்ணீரை ஊர் முழுதும் குடிக்கிறது. யாருக்கும் தடை கிடையாது; இந்த அபாக்கியசாலிகள் மட்டுமே நீர் மொள்ளக்கூடாது.

கங்கியின் மனம் வழக்கமான கட்டுப்பாடுகளுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் எதிராகப் புரட்சி செய்து அவைகளைத் தாக்கியது. 'நாம் ஏன் தாழ்ந்தவர்கள்? இவர்கள் எப்படி உயர்ந்தவர்கள்? இவர்கள் கழுத்தில் பூணூல் போட்டுக் கொள்ளுகிறார்களே, அதனாலா? இங்கே இருப்பவர்கள் எல்லோரும், - ஒருத்தனைவிட ஒருத்தன் யமகாதகனான போக்கிரி! இவர்கள் திருடுவார்கள்; மோசடிகள் செய்வார் கள்; பொய் வழக்குகள் தொடருவார்கள். இப்போதுதானே அன்றைக்கு இந்த நாயகன், இடையனிடமிருந்து ஓர் ஆட்டைத் திருடிவந்து, பின்பு கொஞ்ச நாளைக்கெல்லாம் கொன்று தின்றுவிட்டான். இந்தப் பண்டிதப் பார்ப்பா னின் வீட்டிலேயே வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் சூதாட்டம் நடக்கிறது. இந்தச் செட்டியாரே நெய்யில் எண்ணெயைக் கலந்து 'அசல் நெய்' என்று விற்கிறார். நன்றாக வேலை வாங்கிக்கொண்டு கூலி கொடுக்க அழுகிறார். இவர்கள் நம்மைக் காட்டிலும் எந்த விஷயத்தில் உயர்ந்தவர்கள்? ஆமாம்; வாய்ப்பேச்சில் உயர்ந்தவர்கள். "நாங்கள் உயர்ந்தவர்கள்! நாங்கள் உயர்ந்தவர்கள்!" என்று நாம் இவர்களைப்போல் தெருத்தெருவாகக் கூச்சல் போடுவ தில்லை. எப்போதாவது நான் ஊரெல்லைக்குள் வந்தால் இவர்கள் ரஸமாகக் கண்ணடிப்பதைப் பார்க்கவேண்டுமே! அப்போது இவர்கள் தவிக்கிற தவிப்புச் சொல்லத் தரமில்லை. ஆனால், "நாங்கள் உயர்ந்தவர்கள்!" என்று

கர்வம் பேசிக் கொள்வதில் மட்டும் குறைவில்லை!' என்று அவள் நினைக்கலானாள்.

கிணற்றருகே யாரோ வரும் சப்தம் கேட்டது. கங்கியின் மார்பு பக்-பக்கென்று அடித்துக்கொண்டது. பார்த்துவிட்டால் அனர்த்தமாய் விடுமே! ஓர் உதைகூடக் கீழே தரையில் விழாது; எல்லாம் அவள் உடலில்தான் விழும்! அவள் குடத்தையும் கயிற்றையும் எடுத்துக்கொண்டு, குனிந்தவண்ணம், ஒரு மரத்தின் இருண்ட நிழலில் போய் நின்றாள். 'இவர்கள் எப்போதுதான், யாரிடந்தான் இரக்கம் காட்டுகிறார்கள்? பாவம், அந்த மஹங்குவை இவர்கள் அடித்த அடி,-மாதக் கணக்காக அவன் ரத்தத்தைத் துப்பிக்கொண்டிருந்தான். அவன் வெறுமே தண்டத்துக்கு வேலை செய்ய ஒப்பவில்லை என்பதற்காகத் தானே இவ்வளவும்? இப்படியெல்லாம் இருக்க, இவர்கள் உயர்ந்தவர்களாம்!'

கிணற்றண்டை நீர் எடுத்துப்போக இரண்டு பெண்கள் வந்திருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்:

"இவர் சாப்பிட உட்கார்ந்தார். அதற்குள், 'புதிதாகத் தண்ணீர் கொண்டு வா' என்று உத்தரவு போட்டுவிட்டார். குடம் வாங்கக் கையில் காசு இல்லை."

"நாம் சுகமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டாலே இந்த 'ஆம்பிளை'களுக்கு வயிறு எரிகிறது!"

"இல்லாமலென்ன? தானே குடத்தை எடுத்துவந்து, தண்ணீர் நிரப்பிக்கொண்டு போனால் என்ன முழுகிப் போய்விடும்? அதெல்லாம் இல்லை; உட்கார்ந்தபடியே, 'புதிதாகத் தண்ணீர் கொண்டு வா' என்று உத்தரவு போட்டுவிட்டார். நாம் இவர்களுக்கு வேலைக்காரிகள் போலிருக்கிறது!"

"வேலைக்காரி இல்லாமல் உன்னை நீ யாரென்று நினைத்துக்கொண் டிருக்கிறாய்? உனக்குச் சாப்பாடும் துணியும் கிடைக்கவில்லையா? போதாக்குறைக்குச் சண்டை போட்டு வருஷத்தில் ஏழெட்டு ரூபாய் செலவுக்கு வாங்கிக் கொள்ளுகிறாய். வேலைக்காரிகள் வேறு எப்படி இருப்பார்கள்?"

"என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே, பெரியக்கா!

ஒரு க்ஷணநேரம் இளைப்பாறுவதற்கு மனம் தவித்துத் தவித்துப் புண்ணுகிறதே ஒழிய ஓய்வே கிடைப்பதில்லை. இவ்வளவு வேலை வேறு எவன் வீட்டிலாவது செய்தால், இதைவிட இன்னும் எவ்வளவோ சுகமாக இருப்பேன். அதோடு அவனும் நன்றியுள்ளவனுக இருப்பான். இங்கே வேலை செய்து செய்து செத்துப் போனுல்கூட ஏனென்று கேட்பாரில்லை !''

இரு பெண்களும் தண்ணீர் நிரப்பிக்கொண்டு போனதும், கங்கி மரநிழலிலிருந்து கிணற்று மேடையண்டை வந்தாள். காலாடிகள் புறப்பட்டுப் போய் விட்டார்கள். நாயகரும் வாசற்கதவைச் சாத்திவிட்டு உள்ளே முற்றத்தில் படுத்துக்கொள்ளப் போனுர். கங்கி, 'அப்பாடா!' என்று ஓர் இன்பப் பெருமூச்சு விட்டாள். ஏதோ ஒரு விதமாக வழி பிறந்தது. அமுதத்தைத் திருடுவதற்காக ஏதோ ஒரு காலத்தில் ஒரு ராஜகுமாரன் போனுனுமே, ஒருகால் அவன்கூட இவ்வளவு ஜாக்கிரதையாகவும், விஷயங்களை நன்கு தெரிந்துகொண்டும், போயிருக்கமாட்டான். கங்கி சந்தடி செய்யாமல் கிணற்று மேடைமீது ஏறினுள். வெற்றியின் இவ்வித அநுபவம் அவளுக்கு இதற்கு முன்பு என்றும் உண்டானதில்லை.

அவள், கயிற்றுச் சுறுக்கைக் குடத்தில் போட்டாள். இரவில் எதிரியின் கோட்டையில் கன்னம் வைக்கும் போர் வீரன்போல, வலப்பக்கமும் இடப்பக்கமும் ஜாக்கிரதையாகப் பார்த்தாள். இந்தச் சமயம் பிடிபட்டால் பின்பு அவளுக்கு மன்னிப்புக்கோ சலுகைக்கோ எள்ளளவும் ஆசை இல்லை. கடைசியில் தெய்வங்களை ஸ்மரித்துக் கொண்டு, தன் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டாள்; குடத்தைக் கிணற்றில் விட்டாள்.

குடம் தண்ணீரில் மூழ்கியது, மிகவும் மெதுவாக. கொஞ்சங்கூடச் சப்தமே உண்டாகவில்லை. கங்கி விசையாக மூன்று நான்கு கையளவு இழுத்தாள். குடம் கிணற்றின் வாய்வரைக்கும் வந்துவிட்டது. பெரிய பலசாலியான 'பயில்வான்'கூட அத்தனை வேகமாக அதை இழுத்திருக்க முடியாது.

குடத்தைப் பிடித்துத் திரணைமீது வைப்பதற்காக, கங்கி குனிந்தாள். அதற்குள் திடீரென்று நாயகர்வீட்டு

வாசற் கதவு திறந்தது. சிங்கத்தின் திறந்த வாய்கூட அதைவிட அதிகப் பயங்கரமாக இராது.

கங்கியின் கையிலிருந்து கயிறு நழுவியது. கயிற்றோடு கூடவே குடமும் 'தம்'மென்று கிணற்றில் விழுந்தது. சில நிமிஷங்கள்வரையில் தண்ணீர் கலங்கும் சப்தம் கேட்டது.

நாயகர், "யார் அது? யார் அது?" என்று கூவிக் கொண்டே கிணற்றை நோக்கி வந்துகொண்டிருந்தார். கங்கி மேடையிலிருந்து குதித்து ஓடிக்கொண்டிருந்தாள்.

அவள் வீடு சேர்ந்தவுடனே, ஜோகூ 'லோட்டா'வை வாயில் வைத்துக்கொண்டு, அந்த அழுக்குத் துர்நாற்ற நீரையே குடிப்பதைக் கண்டாள்!

வைகுண்டச் சல்லா

1

குடிசை வாசலில், சருகுக் குப்பையை எரித்துக் குளிர் காய்ந்துவிட்டு, தகப்பனும் பிள்ளையும் உட்கார்ந்திருந்தார்கள். புதியா உள்ளே, பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டிருந்தாள். கேட்போர் மனத்தைக் கலங்கச் செய்யும் கூக்குரலொன்று அவள் வாயிலிருந்து அடிக்கடி வெளிவரும். அதைக் கேட்டு அவர்கள் மனத்தில் துன்ப அலைகள் எழும். குளிர்காலத்து இரவு. பிரகிருதித் தாய் மோனத்தில் மூழ்கியிருந்தாள். கிராமம் அந்தகாரத்தில் மறைந்து போயிருந்தது.

"பொழைக்காது போல இருக்குதடா! பவலெல்லாம் ஓடி ஓடிக் களிஞ்சுது. சித்தெப் போயி பாருடா, மவனே!" என்றான் கீஸு.

மாதவன் எரிச்சலுடன், "சாவுறதுன்னா ஜல்தி செத்துப் போவுறதுதானே? நானு பாத்து என்ன செய்யப் போவறேன்?" என்றான்.

"ஈவு எரக்கமே இல்லெடா ஒனக்கு, தடியாப் பிள்ளே! வருசமெல்லாம் அவளோடெ கூடி 'ஜல்சா' பண்ணயே! எவ்வளோ நன்னி கெட்டவண்டா நீ!"

"போ அப்பேன்! அவ துடிக்கெறதும் கைகாலெ ஒதெச்சுக்கிறதும் என்னாலே பாக்கவே முடியலே!"

சக்கிலியர்களின் குடும்பம் அது. கிராமம் முழுவதிலும் அவர்களுக்குக் கெட்ட பெயர். கீஸு ஒரு நாளைக்கு வேலை செய்தால் மூன்று நாட்கள் இளைப்பாறுவான். மாதவனோ அரை மணி நேரம் வேலை செய்தால் ஒரு மணி நேரம் பீடி பிடிக்கப் போய்விடுவான்; அவ்வளவு சோம்பேறி. ஆகையால் அவர்களுக்கு எங்கும் வேலை கிடைப்பதில்லை. வீட்டில் ஒரு பிடி அரிசி இருந்தால், அவர்கள் அப்பனாணை, வேலை செய்யப் போகமாட்டார்கள். இரண்டு மூன்று தினங்கள் உபவாசம் இருந்த பிறகு, கீஸு மரமேறி விறகு வெட்டி வருவான். மாதவன் அதைக் கடைத்தெருவில் விற்று ஏதோ கிடைத்ததைக் கொண்டுபோடுவான்.

அந்தப் பணம் இருக்கும்வரையில் இருவரும் இங்குமங்கும் சுற்றித் திரிவார்கள். உபவாசம் இருக்கவேண்டிய நிலைமை வந்த பின்புதான் மீண்டும் விறகு வெட்டவோ அல்லது கூலிவேலை தேடவோ போவார்கள்.

கிராமத்தில் வேலைக்கு ஒன்றும் குறைவில்லை. அது குடியானவர்களின் கிராமம். உழைக்கிற ஆசாமியாய் இருந்தால் எத்தனையோ வேலைகள் கிடைக்கும். ஆனால், இவர்கள் இருவரும் சோம்பேறிகளாயிற்றே! இரண்டு பேரைக் கொண்டாவது ஒருத்தன் செய்யும் வேலையை வாங்கிக்கொண்டு திருப்தி பெறுவதைத் தவிர வேறு வழி இல்லாதபோதுதான், ஜனங்கள் இவர்களைக் கூப்பிடுவார்கள். சந்தோஷமாகவும் தைரியமாகவும் வாழ்வதற்கு, இவர்களிடம் அடக்கமும் ஒழுங்கும் இருந்திருக்கவேண்டும் என்பதுகூட அவசியமில்லை. இவர்கள் நல்லவர்களாக இருந்திருந்தால் போதும். ஆனால் என்ன செய்வது? இவர்கள் சுபாவமே அப்படி இருந்தது.

விசித்திரமாக இருந்தது இவர்களுடைய வாழ்க்கை! வீட்டில் நாலைந்து மண்சட்டிகளைத் தவிர வேறு சொத்து இல்லை. கிழிந்த கந்தைகளால் தமது மானத்தை மறைத்துக் கொண்டு எப்படியோ காலத்தை ஓட்டிவந்தார்கள். உலகத்துச் சிந்தைகளிலிருந்து விடுபட்டவர்கள்! கடன் சுமையால் அழுத்தப்பட்டவர்கள்! திட்டுவசவுகளைக் கேட்டுக் கொள்வார்கள்; அடி வாங்கிக்கொள்வார்கள்; ஆனால் அதற்காக இவர்களுக்கு ஒரு வருத்தமும் இல்லை. பணம் திரும்ப வசூலாகும் என்ற நம்பிக்கை அடியோடு இல்லாமலிருந்தும் ஜனங்கள் இவர்களுக்கு ஏதாவது கடன் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள்; அவ்வளவு ஏழைகள்! பட்டாணியும் உருளைக்கிழங்கும் அகப்படும் காலங்களில் பிறருடைய நிலங்களிலிருந்து பட்டாணியோ உருளைக்கிழங்குகளோ கொண்டுவந்து வறுத்தோ வேகவைத்தோ தின்பார்கள். அதுவும் இல்லாவிட்டால், இரவில் ஏழெட்டுக் கரும்புத் தடிகளைப் பிடுங்கிவந்து கடித்துத் தின்பார்கள்.

கீஸூ இந்த நிலையில்லாப் பிழைப்பையே வைத்துக் கொண்டு அறுபது வயதைக் கழித்துவிட்டான். மாதவனும் குல விளக்காய்த் தந்தையின் அடிச்சுவடுகளின் மீதே சென்றுகொண்டிருந்தான். இன்னும் கேட்டால், அவன் தந்தையின் பெயருக்கு அதிகக் கீர்த்தியை விளைவித்தான்.

இப்போது கூடச் சற்று நேரம் முன்பு இவர்கள் இருவரும், யார் நிலத்திலிருந்தோ உருளைக்கிழங்குகளைத் தோண்டி எடுத்துவந்து, செத்தை குப்பைகளைப் போட்டு எரித்து, அந்தத் தீயில் வேக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

கீஸுவின் மனைவி இறந்து போய்ப் பல வருஷங்களாயின. சென்ற வருஷத்தில்தான் மாதவனுக்கு விவாகம் நடந்தது. அவன் மனைவி வந்த அன்றைக்கே இந்தக் குடும்பம் ஓர் ஒழுங்குக்கு வந்தது. மாவரைத்தோ, புல் வெட்டி விற்றோ, அவள் தினம் ஒரு படி அரிசிக்கு ஏற்பாடு செய்து, இந்த வெட்கங் கெட்டவர்களின் வயிற்றுக் குழிகளைத் தூர்த்து வந்தாள். அவள் வந்தது முதல் இவர்கள் இருவரும் பின்னும் அதிகச் சோம்பேறிகளாகவும் சுகபுருஷர்களாகவும் ஆகிவிட்டனர். போதாக்குறைக்குக் கொஞ்சம் முறைக்கவும் ஆரம்பித்தார்கள். எவனாவது வேலை செய்யக் கூப்பிட்டால், இவர்கள் தயை தாக்ஷிண்யமின்றி இரண்டு மடங்கு கூலி கேட்பார்கள். அப்படிப் பட்ட மாதவன் மனைவிதான் இன்று பிரசவ வேதனையில் மடிந்துகொண்டிருக்கிறாள். இவர்களோ அவள் செத்துப் போனால் தாம் சுகமாகத் தூங்கலாமே என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கீஸு உருளைக் கிழங்குகளின் தோலை உரித்துக் கொண்டே, "போயி பாருடா பாவி, என்ன நெலெலெ இருக்கான்னு! ஏதாவது பேய் பிசாசு பிடிச்சுக்கினு இருக்குமாடா? இங்கே மந்திரவாதிகூடச் சொளையா ஒரு ரூபா கேப்பானேடா!" என்றான்.

தான் அறைக்குள் சென்றால், கிழங்குகளின் பெரும் பாகத்தை கீஸு விழுங்கி விடுவானென்று மாதவனுக்குப் பயம். "எனக்கு உள்ளே போவ பயமாயிருக்குது" என்றான்.

"என்னடா பயம், கம்மினாட்டி மவனே! நான்தான் குந்திக்கினு இருக்கேனே, இங்கெயே!"

"நீதான் போயி பாக்கறதுதானே?"

"ஒங்க ஆத்தா செத்தப்போ நானு மூணு நாள் அவளெ விட்டு அசையலே. என்னெப் பாத்தா இவளுக்கு வெக்கமா இராதா? ஏண்டா மவனே, எப்பவும் இவ மொகத்தைப் பாக்காதவன், இன்னக்கி இவ அம்மண ஒடலைப்

பாக்கறதாடா! அவளுக்குத் தன் சொரத்துகூட இரா தேடா? என்னெப் பாத்தா தாராளமா கைகாலெ ஒதிச்சுக் கக்கூட முடியாதே!"

"எனக்குத் தோண்றது: கொளந்தை-கிளந்தை பொறந் தூட்டா என்ன செய்யறது? சுக்கு, வெல்லம், எண்ணெ - ஒண்ணுமே இல்லேயே வூட்டுலெ!"

"எல்லாம் வந்து குதிக்கும்டா தானே. கடவுள் கொடுப்பாரு! இன்னிக்கிக் காலணு கொடாதவங்களே நாளெக்கி நம்மெக் கூப்பிட்டு ரூபாயா கொடுப்பாங்க. எனக்கு ஒம்புது புள்ளே பொறந்தது. வூட்டுலே எப்பொ வும் ஒண்ணும் இருந்ததில்லே. ஆனு கடவுள் எந்தப் படியோ கரையேத்திட்டாரு."

இராப் பகலாக உழைப்பவர்களின் நிலைமை இவர் களுடைய நிலைமையைக் காட்டிலும் அப்படி ஒன்றும் உயர்ந்ததாக இல்லாத ஒரு சமூகத்தில் - குடியானவர் களைக் காட்டிலும், அவர்களுடைய பலவீனங்களைக் கொண்டு லாபமடைவதை அறிந்தவர்கள் எவ்வளவோ அதிகப் பணக்காரர்களாக இருக்கும் ஒரு சமூகத்தில் - இவ்வித மனப்பான்மை உண்டாவது ஆச்சரியமல்ல. இன்னும் கேட்டால், கீஸா குடியானவர்களைவிட எவ் வளவோ அதிக யோசனையுள்ளவனுக இருந்தானென்றும், சிந்தனையில்லாத குடியானவர்களின் சமூகத்தில் சேர்ந்து கொள்வதற்குப் பதிலாக, அரட்டை யடிப்பவர்களின் வெறுக்கத்தக்க சமூகத்தில் கலந்து கொண்டானென்றும் நாம் சொல்வோம். ஆனல் ஒரு விஷயம்: அரட்டையடிப் பவர்களின் நியமங்களையும் நீதியையும் பரிபாலிக்கும் சக்தி அவனிடத்தில் இல்லை. ஆகையால்தான், அவனுடைய கூட்டத்தைச் சேர்ந்த பிறர், கிராமத்துக்குத் தலைவர்க ளாகவும் பெரிய மனிதர்களாகவும் இருக்க, அவன்மீது மட்டும் கிராமம் முழுதும் சொட்டைச் சொல் கூறிக் கொண்டேயிருந்தது. ஆயினும் அவனுக்கு ஓர் ஆறுதல் இருக்கத்தான் இருந்தது: அவன் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், குடியானவர்களைப் போல, அப்படி உயிர் போகும்படி உழைக்க வேண்டியிருப்பதில்லை அல்லவா?

அவனுடைய சூதுவாதற்ற தன்மையையும் அவாவற்ற தன்மையையுங் கொண்டு, பிறர் அநியாயமான லாபம் சம்பாதிக்க முடியாது அல்லவா?

இருவரும் உருளைக்கிழங்குகளைச் சுடச்சுட எடுத்துச் சாப்பிடலானார்கள். நேற்றிலிருந்து அவர்கள் ஒன்றும் தின்னவில்லை. அவைகளை ஆற வைக்குமளவு பொறுமை அவர்களிடம் இல்லை. பல தடவைகள் அவர்கள் நாக்குகள் கொதித்துப் போயின. தோலை உரித்ததும் உருளைக்கிழங்கின் வெளிப்பாகம் வெகு சூடுள்ளதாக இருக்கவில்லை. ஆனால் வாய்க்குள்ளே போட்டதும் அதன் உட்பாகம் நெஞ்சையும் நாக்கையும் எரித்தது. அந்த நெருப்பை வாயில் வைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் உள்ளே விழுங்கிவிடுவதே அதிக க்ஷேமகரமாக இருந்தது. அங்கே அதை ஆற வைப்பதற்கு வேண்டிய சாமான்கள் இருந்தன. ஆகையால் இருவரும் 'கப கப'வென்று விழுங்கலானார்கள். அவர்கள் இந்த முயற்சி செய்யும்போது கண்களிலிருந்து கண்ணீர்கூட வந்தது.

இருபது வருஷங்களுக்கு முன்பு நடந்த நாயகர்வீட்டுக் கல்யாணம் அப்போது கீஸுவின் ஞாபகத்துக்கு வந்தது. அந்த விருந்தில் அவனுக்கு உண்டான மனத் திருப்தி, அவன் தன் வாழ்க்கையில் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விஷயமாக இருந்தது. இன்னும் அது அவன் நினைவில் நேற்று நடந்தாற்போலப் புதிதாக இருந்தது. அவன் சொன்னான்: "அந்த விருந்தெ மறக்க முடியாதுடா! அதுக்கப்புறம் அந்த மாதிரி சாப்பாடு வயறு ரொம்பக் கெடெக்கவே இல்லெ. பொண் வூட்டுக் காரங்க சமத்தியா அல்லாருக்கும் பூரி சமச்சுப்போட்டாங்க, அல்லாருக்கும்! சின்னவங்க, பெரியவங்க அல்லாரும் பூரி துன்னுங்க; அசல் நெய்யிலெ செய்த பூரி! தொவையல், பச்சடி, மூணுவிதக் கறி, சாம்பார், தயிர், சட்டினி, மிட்டாய்; அந்த விருந்துலெ என்ன ருசி கெடச்சுதுன்னு ஒனக்கு எப்படிச் சொல்றது? எதாவது ஒரு தடங்கல் இருக்கும்! எது வேணுமோ வாங்கிச் சாப்பிடு! ஜனங்க என்னதான் துன்னுங்க, என்னதான் துன்னுங்க; ஒருத்தன்கூடத்

தண்ணியே குடிக்கலெ. சாப்பாடு போடறவங்க என்னுங்கிறே, சும்மா சுடச்சுடப் பூரி போட்டுக்கினே போவருங்க! வேண்டாம்'னு சொல்ரேம், கையாலெ தடுக்கரேம்; ஆனு அவுங்க போட்டுக்கினே போவருங்க! அல்லாரும் வாயெக் கையெ கழுவிக்கினுங்க; ஒடனே வெத்தலெ, பாக்கு - ஏலக்காயி கூட கெடெச்சுதடா! ஆனு எனக்கு வெத்தலெ பாக்கு வாங்க எங்கெ சொரணெ இருந்தது? என்னுலெ நிக்கவே முடியலே. சட்டுப் புட்டுனு போயி கம்பிளியெப் போத்துக்கினு படுத்தூண்டேன். அவ்வளோ தாராள மனசுடா அந்த நாயகருக்கு!''

மாதவன் இந்தப் பதார்த்தங்களின் சுவையை மனத்துக்குள்ளேயே நுகர்ந்த வண்ணம், "இப்பொ யாரு நமக்கு அந்த மாதிரி விருந்து போடரூங்க?'' என்ருன்.

"இப்பொ யாரு போடுவாங்க? அந்தக் காலமே வேறெடா! இப்பொத்தான் அல்லாரும் சிக்கனம் சிக்கனம் 'ங்ருங்களே! கலியாணங் கார்த்திலெ செலவழிக்கிற தில்லெ! சாவு கர்மாதிலெ செலவழிக்கிறதில்லெ. ஏளெங்க சொத்தைக் குவிச்சு குவிச்சு அவுங்க எங்கெ வெப்பாங்க, கேளுடா? பணந் தெரட்டறத்திலெ ஒண்ணுங் கொற வில்லெ. ஆனு செலவுலெ சிக்கனந்தான் செய்வாங்க அவுங்க!''

"நீ என்னு இருவது பூரிங்க துன்னிருப்பயா?''

"இருவதெ விட ஜாஸ்தி துன்னேண்டா!''

"நானுகண்டி இருந்தேன், அம்புது துன்னிருப்பேன்!''

"நானும் அம்புதுக்குக் கொறஞ்சு துன்னிருக்கமாட்டேண்டா. நல்லாக் கட்டெ குண்டா இருந்தேனே! நீ என்னுலெ பாதிகூட இல்லெயேடா!''

உருளெக்கிழங்குகளெ விழுங்கிவிட்டு இருவரும் தண்ணீர் குடித்தார்கள். பிறகு அங்கேயே, எரிந்த சருகுகளினருகே, தம் 'தோவத்தி'களெப் போர்த்திக்கொண்டு, கைகால்களெ மடக்கி வயிற்ரேடு சேர்த்து வைத்துக் கொண்டு சுருண்டு படுத்தனர். இரண்டு பெரிய பாம்புகள்

உடல்களைச் சுருட்டிக்கொண்டு படுத்திருப்பதுபோல இருந்தது அந்தக் காட்சி.

புதியா அப்போதும் வேதனை தாங்காமல் கத்திக் கொண்டிருந்தாள்.

2

காலையில் மாதவன் அறையில் சென்று பார்த்த போது அவன் மனைவியின் உடல் 'ஜில்'லென்றிருந்தது. அவள் முகத்தில் ஈக்கள் 'மொய்' யென்று மொய்த்துக் கொண்டிருந்தன. நிலைபிட்ட கண்கள் மேலே தொங்கின. உடல் முழுதும் புழுதிமயமாய் இருந்தது. குழந்தை அவள் வயிற்றில் இறந்துபோயிற்று.

மாதவன் கீஸுவிடம் ஒரே ஓட்டமாக ஓடிவந்தான். பின்பு இருவரும் உரக்க, "ஐயோ! ஐயோ!" என்று கூச்ச லிட்டு, மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழு தார்கள். அக்கம்பக்கத்தார்கள் அழுகையைக் கேட்டு ஓடி வந்து, இந்தத் துரதிருஷ்டசாலிகளுக்கு வழக்கப்படி ஆறுதல் கூறினார்கள்.

ஆனால் அதிகமாக அழவும், மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளவும் அது பொழுதல்ல. சல்லாவும் விறகும் வாங்கிவர ஏற்பாடு செய்யவேண்டி யிருந்தது. வீட்டிலோ, கழுகின் பொந்தில் மாமிசத்தைப்போல், பணம் என்பது பெயருக்குக்கூட இல்லை.

அப்பனும் மகனும் அழுதுகொண்டே கிராமத்து ஜமீந்தாரிடம் போனார்கள். அவருக்கு இவர்களைக் கண் டாலே கட்டோடு பிடிக்காது. எத்தனையோ தடவைகள் அவர் தம் கையால் இவர்களை அடித்திருக்கிறார்; திருடிய தற்காகவும், ஒப்புக்கொண்டபடி வேலை செய்ய வராததற் காகவும். "என்னடா கீஸு, ஏன் அழுகிறாய்? இப்போ தெல்லாம் நீ எங்கேயும் தென்படுவதில்லையே! இந்தக் கிராமத்தைவிட்டே போய்விடலாமென்று பார்க்கிறாயோ?" என்று கேட்டார்.

கீஸு தரையில் தலை சாய்த்து, கண்களில் நீர் மல்க, "பெரிய ஆபத்துலெ இருக்கேன், சாமீ! மாதவன்

பொண்சாதி ராவிக்கி எறந்துட்டா. ராவெல்லாம் தவிச்சிக்கினு இருந்தா, சாமீ! நாங்க ரெண்டு பேரும் அவ தலமாட்டுலெ குந்திக்கினு இருந்தோம். மருந்து மாயம் என்ன என்ன முடியுமோ செய்தோம். அவ பாவி எங்களெ ஏமாத்திக்கிட்டு போயிட்டா. இனிமே ஒரு கவளம் சோறு போடறவங்க இல்லெ, எசமானே! நாங்க முழுகிப் போயிட்டோம், சாமீ! வூடே சூனியமாப் போச்சுங்க. நாங்க ஒங்க அடிமை. இனிமெ ஒங்களெத் தவிர யாரு எங்களெக் கரை சேர்க்கப் போறுங்க? எங்க கையிலெ இருந்தத்தெ யெல்லாம் மருந்து மாயத்திலெ தீத்துப்புட்டோம். சாமி தயவு வெச்சாத்தான் அவ சவம் சுடுகாட்டுக்குப் போவும். ஒங்களெ வுட்டுட்டு எவன் வூட்டு வாசல்லெ போய் நிப்பேன், சாமீ!'' என்றான்.

ஜமீந்தார் இரக்கமுள்ளவர். ஆனால், கீஸாவிடம் இரக்கப்படுவது கறுப்புக் கம்பளத்துக்கு நிறங்கொடுப்பதுபோல. 'போடா இங்கிருந்து தூர! சமயத்தில் கூப்பிட்டால்கூட வரமாட்டாய். இன்று உனக்கு அக்கறையாக இருக்கவே இங்கு வந்து முகஸ்துதி செய்கிறாய். நன்றி கெட்ட நாய்; போக்கிரிக் கழுதை!' என்று சொல்லிவிடலாமென்று அவர் நினைத்தார். ஆனால் கோபிப்பதற்கும் தண்டிப்பதற்கும் அதுவா தருணம்? மனத்தில் வெறுத்துக்கொண்டே இரண்டு ரூபாயை வீசி எறிந்தார். ஆறுதலாக ஒரு சொல்கூட அவர் வாயிலிருந்து வெளிவரவில்லை. அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவர் தலையிலிருந்த பாரம் கழிந்துவிட்டது போலும்!

ஜமீந்தார் இரண்டு ரூபாய் கொடுத்தபோது, கிராமத்திலுள்ள ஸேட்களும் ஸாவ்கார்களும் எப்படி மறுக்கத் தைரியங் கொள்வார்கள்? கீஸாவுக்கு ஜமீந்தாரின் பெயரைத் தம்பட்டமடிக்கவும் நன்றாகத் தெரியும். சிலர் இரண்டணாக் கொடுத்தார்கள்; சிலர் நாலணாக் கொடுத்தார்கள். ஒரு மணி நேரத்துக்குள், கீஸாவிடம் ஐந்து ரூபாய்க்குக் கிட்டத்தட்ட, நல்ல தொகை சேர்ந்துவிட்டது. எங்கிருந்தோ நெல் கிடைத்தது. இன்னும் எங்கிருந்தோ விறகு வந்து சேர்ந்தது. நடுப் பகலுக்கு, கீஸாவும் மாதவனும் கடைத் தெருவிலிருந்து சல்லா வாங்கிவரக் கிளம்பினார்கள். இங்கே

குடிசை வாசலில், சிலர் மூங்கில் வெட்டிப் பாடை கட்ட லாயினர்.

கிராமத்திலிருந்த நவநீத ஹ்ருதயர்களான மங்கையர் வந்து வந்து பிணத்தைப் பார்த்துவிட்டு, அவளுடைய விதியை நினைந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்திவிட்டுப் போனார்கள்.

3

கடைத்தெருவுக்குச் சென்றதும் கீஸு, "ஏண்டா மாதவா, வெறகு அவளெக் கொளுத்தறத்துக்குப் போதும். அவ்வளவு கெடச்சுட்டுது. இல்லெயா?" என்றான்.

"ஆமாம். வெறகு சமத்தியா இருக்குது. இப்பொ சல்லாத்தான் வேணும்" என்றான் மாதவன்.

"சரிதாண்டா; எதாவது மலிவான சல்லாவாப் பாத்து வாங்கிக்கிலாம்!"

"ஆமாம், இல்லாதெ என்ன? சவத்தெத் தூக்கறத் துக்குள்ளே ராவாயிடும். ராவுலே சல்லாவெ எவன் பாக் கறான்?"

"இது என்ன கெட்ட வழக்கம்டா! உசிரோடெ இருக் கிறப்போ அவுளுக்கு ஒடலெ மூடிக்கொள்றத்துக்குக் கந்தெ ஆப்புடலெ. அவ செத்தப்போ புதுச் சல்லா வேணு மாம்!"

"சல்லாவும் சவத்தோடெ எரிஞ்சுதானெ போயிடு றது?"

"இல்லாமெ என்ன! அப்படியே நிக்குமா? இதே அஞ்சு ரூபா கணக்க முந்தியே கெடெச்சிருந்துச்சுன்னா எதாவது மருந்து மாயம் செலவளிச்சிருப்போம் டா!"

ஒருவருக்கொருவர் அவர்கள் மனத்திலிருந்த விஷ யத்தை அறிந்துகொண்டார்கள். கடைத் தெருவில் இங்கு மங்கும் சுற்றினார்கள். இந்தக் கடைக்கும் அந்தக் கடைக் குமாக அலைந்தார்கள். விதவிதமான பட்டுத் துணிகளையும் நூல் துணிகளையும் பார்த்தார்கள்; ஆனால் ஒன்றும் மனத்

துக்குப் பிடிக்கவில்லை. அதற்குள்ளே சாயங்கால மாகிவிட்டது. அப்போது இருவரும், எந்தத் தெய்விகத் தூண்டுதலினலோ, ஒரு கள்ளுக்கடைக்கு முன்னே வந்துநின்றனர். தமக்குள் முன்னமே ஏதோ ஏற்பாடு செய்திருந்தாற்போல உள்ளே நுழைந்தனர். அங்கே சற்று நேரம் வரையில் திகைத்து நின்ருர்கள்.

கீஸு கடைக்காரனின் எதிரே சென்று, “ஒரு மொந்தை நமக்கும் போடு, அண்ணே!” என்ருன்.

பிறகு கொஞ்சம் இறைச்சி வந்தது. பொறித்த மீன்கள் வந்தன. அப்புறம் இருவரும் தாழ்வாரத்தில் உட்கார்ந்து அமைதியாகக் குடிக்கலானர்கள்.

பல மொந்தைகளைக் ‘கப் கப்’ என்று காலி செய்த பிறகு இருவருக்கும் போதை ஏறியது.

“சல்லாப் போட்டா என்னடா கெடெக்கும்? கடசீலெ எரிஞ்சுதானேடா போவும்? பொண்சாதியோடெ கூடவா அது போவப் போவுது?” என்ருன் கீஸு.

மாதவன், தான் பாவமற்றவன் என்பதற்குத் தேவர்களை ஸாக்ஷியாக்குபவன்போல, ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு, “ஒலக வழக்கம் அப்பனே அது! இல்லாட்டி ஜனங்க எதுக்காகப் பாப்பாருங்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபா கொடுக்கருங்க? எவன் கண்டான்? பரலோகத்துலெ கெடெக்கிறதோ, இல்லேயோ!” என்ருன்.

“பெரிய ஆசாமிங்களண்டெ பணம் இருக்குது; அவுங்க நல்லாக் கரியாக்கட்டும்! நம்மாண்டெ கரியாக்க என்னடா இருக்குது?”

“ஆன ஜனங்களுக்கு என்ன அப்பனே பதில் சொல்லுவே? ஜனங்க கேக்க மாட்டாங்க, ‘சல்லா எங்கே’ன்னு?”

கீஸு நகைத்தான். “அடே, அவுங்களாண்டெ சொல்லேண்டா: ‘ரூபா மடியிலேந்து நழுவிப் போச்சுது’ன்னு. தேடினேம் தேடினேம் ஆப்புடலேன்னு போச்சுது. ஜனங்களுக்கு நம்பிக்கெ யென்னவோ வராது. ஆன மறுபடியும் அவுங்களே ரூபா கொடுப்பாங்க” என்ருன்.

மாதவனும் நகைத்தான், இந்த எதிர்பாராத அதிருஷ்டத்தை நினைந்து. "ரொம்ப நல்லவ பாவம்! சாவற போதுலெகூட நமக்கு நல்லாத் துன்னக் கொடுத்துட்டு சாவரு!" என்ருன்.

அரைப்புட்டிக்கு மேலே காலியாயிற்று. அதற்குள் கீஸு இருபது பூரிகளும், சட்னி, ஊறுகாய், ஈரல் மாமிசங்களும் வாங்கிவரச் சொன்னுன். கள்ளுக்கடைக்கு எதிரிலேயே பக்ஷணக்கடை இருந்தது. மாதவன் ஒரே பாய்ச்சலாக ஓடி, இரண்டு இலைகள் நிறைய எல்லாச் சாமான்களையும் வாங்கி வந்தான். வெள்ளிசாக ஒன்றரை ரூபாய் செலவழிந்து போயிற்று. ஏதோ கொஞ்சம் சில்லறைகளே மீதி இருந்தன.

காட்டில் சிங்கம் தன் வேட்டையை விழுங்குவதுபோல, இருவரும் வெகு ஜோராக உட்கார்ந்து பூரிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பொறுப்பைப்பற்றிய பயமில்லை. 'பெயர் கெட்டுப்போகுமே' என்ற கவலை இல்லை. இந்த உணர்ச்சிகளை அவர்கள் வெகு நாட்களுக்கு முன்பே ஜயித்துவிட்டிருந்தார்கள்.

கீஸு ஒரு வேதாந்தியைப் போன்ற பாவனையுடன், "நம்ப ஆத்துமா சந்தோஷப்படுச்சுன்னு அது அவளுக்குப் புண்ணியமில்லெ?" என்ருன்.

மாதவன் சிரத்தையோடு தலைகுனிந்து அதை ஆமோதித்தான்: "நிச்சியம் புண்ணியந்தான். பகவானே, நீ அந்தரியாமி. அவளெ வைகுண்டத்துக்கு இட்டுக்கினு போ. நாங்க ரெண்டு பேரும் மனப்பூர்வமா வாழ்த்தரோம். இன்னிக்கி எங்களுக்குக் கெடெச்ச சாப்பாடு ஆயுசு முழுதும் கெடெக்கிலே."

கணப்பொழுதில், மாதவனின் மனத்தில் ஒரு சந்தேகம் கிளம்பியது. "ஏன் அப்பேன், நாமும் என்னிக்காவது ஒரு நாள் அங்கே போகத்தானே வேணும்?" என்ருன்.

கீஸு இந்த நேர்மையான கேள்விக்கு ஒன்றும் பதிலே சொல்லவில்லை. பரலோக விஷயங்களை நினைத்துக்

கொண்டு இந்த ஆனந்தத்தில் தடை விளைவிக்க அவன் விரும்பவில்லை.

"'நீ ஏண்டா எனக்கு சல்லா போடலே?' ன்னு அங்கே அவ கேட்டா நீ என்ன சொல்லுவே?"

"சொல்லுவேன் ஒன் தலெயெ!"

"கட்டாயம் கேப்பா அவ!"

"அவளுக்கு சல்லா கெடெக்காதுன்னு நீ என்னத் தெக் கண்டெ? நீ என்னெக் கழுதேன்னு நினைச்சுட்டயா என்ன? அறுவது வருஷம் ஒலகத்திலே என்ன, களெ பிடுங்கிக்குன இருந்தேன்? அவளுக்கு சல்லா கெடெக்கும் டா; இதெவிட ரொம்ப நல்லதாக் கெடெக்கும்."

மாதவனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. "எவன் கொடுப்பான்? ரூபாயெத்தான் நீ ஏப்பம் வுட்டுட்டயே. அவ என்னெத்தான் கேப்பா. அவ நெத்திலே பொட்டு கானுதானே இட்டுட்டேன்?" என்றான்.

கிஸா கோபத்துடன், "நான் சொல்லாறேன்: அவளுக்கு சல்லா கெடெக்கும். நான் சொல்லறத்தைக் கேளு, மவனே!" என்றான்.

"எவன் கொடுப்பான்? சொல்லித் தொலையேன்!"

"இப்பொ கொடுத்தாங்களே அவுங்கதான் கொடுப் பாங்க. ஆனா இந்தத் தபா நம்ப கையிலே பணம் கொடுக்க மாட்டாங்க."

இருள் அதிகம் ஆக ஆக, நக்ஷத்திரங்கள் அதிக ஒளி யுடன் பிரகாசித்தன. கள்ளுக்கடையின் சோபையும் வளர்ந்துகொண்டே போயிற்று. ஒருவன் பாடிக்கொண்டி ருந்தான். மற்றொருவன் வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண் டிருந்தான். இன்னுமொருவன் தன் தோழனின் கழுத்தை அணைத்துக்கொண் டிருந்தான். எவனோ ஒருவன் தன் நண் பனின் வாயில் கள் மொந்தையைக் கொண்டுவைத்தான்.

இங்குள்ள சுற்றுவட்டத்தில் கிறுக்கு இருந்தது; காற் றில் போதை இருந்தது. எத்தனையோ பேருக்கு இங்கே வந்து உள்ளங்கையளவு கள் குடிப்பதற்குள் 'குஷி'

பிறந்துவிட்டது. கள்ளைக்காட்டிலும் அதிகமாக இங்கே வீசிய காற்று அவர்களைக் கிறுக்கியது. வாழ்க்கையின் உபத்திரவங்கள் அவர்களை இங்கே இழுத்து வந்தன. இங்கே அவர்கள், 'பிழைத்திருக்கிறோமா அல்லது இறந்து விட்டோமா?' என்பதையே சிறிது நேரத்துக்கு மறந்தி ருந்தார்கள். அவர்கள் பிழைக்கவும் முடியாத, சாகவும் முடியாத நிலையில் இருந்தார்கள்.

இந்த இரண்டு பேரும், அப்பனும் பிள்ளையும், இப் போது கூட ஆனந்தமாகக் கள்ளை உறிஞ்சுகிறார்கள். எல் லோருடைய பார்வைகளும் இவர்கள்மீதே நிலைத்திருக்கின் றன. இருவரும் என்ன பாக்கியம் செய்தவர்கள்! ஒரு முழுப்புட்டி, இருவருக்குமிடையே வைக்கப்பட்டிருக்கிறது!

மாதவன் வயிறு நிரம்பச் சாப்பிட்ட பின்பு, மீதி இருந்த பூரிகளை இலையில் வைத்து, இவர்களைப் பசியோடு பார்த்துக்கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத் தான். அவன், 'தானம் கொடுக்கும்' கௌரவத்தையும், ஆனந்தத்தையும், உல்லாஸத்தையும் தன் வாழ்க்கையில் முதல் தடவையாக அநுபவித்தான்.

"எடுத்துக்கிட்டு போ. நல்லாத் துன்னு; வாழ்த்து. எவ சம்பாரிச்சாளோ அவ செத்துச் சவமாயி போயுட்டா. ஆனா ஒன் வாழ்த்து அவளுக்குக் கட்டாயம் போய்ச் சேரும். ஒவ்வொரு ரோமத்தாலும் வாழ்த்து. ரொம்பக் கஸ்டப்பட்டுச் சம்பாரிச்ச பணம்!" என்றான் கீஸூ.

மாதவன் மீண்டும் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டே, " அவ வைகுண்டத்துக்குப் போவா, அப்பனே! வைகுண் டத்துக்கு ராணியா இருப்பா!" என்றான்.

கீஸூ எழுந்து நின்றான். உல்லாஸ அலைகளில் மிதப்ப வன்போல, "ஆமாம் மவனே, வைகுண்டத்திற்குப் போவா. அவ யாரையும் சதாய்க்கிலே;யாரையும் தபாய்க்கிலே. சாவுற போதுகூட நம்ப வாழ்வுலெ இருந்த ஆசெயெத் தீத்துட்டுப் போனா. அவ வைகுண்டத்துக்குப் போகாட்டீ, இந்தப் பருத்த பருத்த ஆசாமிங்க - ஏழைங்களெ ரெண்டு கையாலும்

கொள்ளையடிக்கிறாங்களே, தம் பாவத்தெக் கழுவறத்துக் காக கங்கெயிலெ முழுக்குப் போட்டுக் கோயிலுலே ஜலங் கொட்டுறாங்களே - இவுங்களா போவாங்க வைகுண்டத் துக்கு?'' என்றான்.

சிரத்தையின் இந்த நிறம் உடனே மாறியது. நிலை யின்மை போதையின் தனிக் குணம். இப்போது துன்பமும் நிராசையும் தோன்றின.

"ஆறு அப்பேன், அவ பாவம்! ஆயுசுலெ ரொம்பத் துன்பப்பட்டா. எவ்வளவோ துன்பத்தெப் பொறுத்துக் கினு செத்தா !'' என்றான் மாதவன்.

கண்களின் மீது கை வைத்துக்கொண்டு, அவன் கோவென்று கதறி அழலானான்.

கீஸா அவனுக்குச் சமாதானம் சொன்னான்: "ஏண்டா அளுறே மவனே, அவ இந்த மாய வலெயிலேந்து விட்டுப் போயிட்டாடா ! இந்தத் தொந்தரவுலேந்து விட்டுப் போயிட்டாடா ! அதுக்காகச் சந்தோஷப்படு. இவ்வளோ தொரையா மாயெ மோகம் இதுங்க கட்டுங்களையெல்லாம் ஒதறிட்டுப் போயிட்டாளே, அவ பெரிய பாக்கியம் பண்ணவ தாண்டா !''

பிறகு இருவரும் நின்றவாறே, "ஏனடி பெண்ணே கண்ணைச் சிமிட்டுகிறாய்!....'' என்று பாட ஆரம்பித்தார்கள்.

குடிகாரர்களின் கண்கள் இவர்களையே நோக்கிக் கொண்டிருந்தன. இவர்கள் இருவரும் தம் மனத்தில் 'குஷி' பொங்கப் பாடிக்கொண்டிருந்தார்கள். அப்புறம் கூத் தாடினார்கள்; எழும்பினார்கள்; குதித்தார்கள்; விழுந்தார் கள்; கண்களைச் சிமிட்டினார்கள்; முகபாவங்கள் காட்டி அபிநயமும் செய்தார்கள். கடைசியில் கள்ளின் மயக்கத் தால் உணர்விழந்து அங்கேயே விழுந்தார்கள்.

மண்டைக் கிறுக்கு

1

ஈச்வரன் பெரிய ஜமீந்தாரின் பிள்ளை. நானே, உழைத்துச் சம்பாதிப்பதைத் தவிர வேறு சொத்து இல்லாத ஏழைக் குமாஸ்தாவின் பிள்ளை. எங்கள் இருவரிடையே அடிக்கடி வாதவிவாதங்கள் நடக்கும். நான் ஜமீந்தார்களைப்பற்றி இழிவாகப் பேசுவேன்; அவர்களை, 'ஹிம்ஸை செய்யும் மிருகங்கள், ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், மரங்களின் நுனிக்கிளைகளில் பூக்கும் மலட்டுப்பூக்கள்' என்பேன். அவன் ஜமீந்தார்களின் பக்ஷமாகப் பேசுவான். ஆனல், இயற்கையில் அவன் பக்கம் கொஞ்சம் பலவீனமுள்ளதாகத்தான் இருந்தது. ஏனெனில், ஜமீந்தார்களுக்கு அநுகூலமான தர்க்கம் அவனிடம் ஒன்றுகூட இல்லை.

'மனிதர்கள் யாவரும் சமமாகமாட்டார்கள். சிறியோரும் பெரியோரும் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; இருந்துகொண்டுதான் இருப்பார்கள்' என்று சொல்வது உபயோகமற்ற தர்க்கம். ஏதாவதொரு மானுஷிக நியமத்தையோ நீதி சம்பந்தமான விதியையோ வைத்துக்கொண்டு, 'இந்த வியவஸ்தை சரியானது' என்று நிரூபிப்பது கடினம். நான் இந்த விவாதங்களின் ஆவேசத்தில் பெரும்பாலும் கோபங்கொண்டு, அவனைச் சுடும்படியான வார்த்தைகள் சொல்லிவிடுவது வழக்கம். ஆனல் ஈச்வரன் தோல்வியடைந்துங்கூடப் புன்னகை பூத்த வதனத்தோடு விளங்குவான். நான் அவனுக்குக் கோபம் வந்து எப்போதும் பார்த்ததே இல்லை. தன் கட்சி பலவீனமானது என்பதை அவன் அறிந்திருந்ததுதான் ஒருவேளை இதற்குக் காரணமாக இருந்திருக்கும்.

வேலைக்காரர்களிடம் அவன் முகங் கொடுத்துப் பேசமாட்டான். பணக்காரர்களிடத்தில் தென்படும் ஒருவிதமான இரக்கமின்மையும் கொடுந்தன்மையும் அவனிடத்தி

லும் அதிக அளவில் இருந்தன. வேலைக்காரன் படுக்கை போடுவதில் கொஞ்சம் தாமதித்தாலும், பால் வேண்டிய அளவுக்குமேல் சூடாகவோ ஆறியோ இருந்தாலும், 'ஸைக்கிள்' நன்ருகச் சுத்தம் செய்யப்படாமலிருந்தாலும் அவனுக்குத் தன்னை மீறி எரிச்சல் வரும். சோம்பேறித்தனத்தையோ மரியாதைக்குறைவையோ அவன் கொஞ்சங் கூடப் பொறுக்கமாட்டான். ஆனல் நண்பர்களிடமும், அதிலும் விசேஷமாக என்னிடமும், அவன் மிகவும் நல்ல எண்ணத்தோடும் வணக்கத்தோடும் பழகி வந்தான். அவன் ஸ்தானத்தில் நான் இருந்தால், அவனிடமிருக்கும் கடுந்தன்மைகள் ஒருகால் என்னிடமும் உண்டாகலாம். ஏனெனில், எனக்கு உலகத்தின்மீது அன்பு உண்டானதற்குக் காரணம் ஏதாவதொரு லக்ஷ்யத்தில் பற்றுள்ளமை அன்று; என் சொந்த நிலைமைகளே அதற்குக் காரணம். ஆனல், அவன் என் ஸ்தானத்தில் இருந்தும் ஒருவேளை பணக்காரனுகவே இருந்திருக்கலாம்; ஏனெனில், அவன் சுபாவத்திலேயே மிதப்பிலும் ஐசுவரியத்திலும் பிரியமுள்ளவனுக இருந்தான்.

நவராத்திரி லீவுக்கு என் சொந்த ஊருக்குப் போகப் போவதில்லை என்று தீர்மானித்திருந்தேன். என்னிடம் ரெயில் செலவுக்குப் பணமில்லை. பெற்ருேரைத் தொந்தரவு படுத்தவும் எனக்கு இஷ்டமில்லை. அவர்கள் இப்போது எனக்கு அனுப்பிவரும் தொகையே அவர்களின் அந்தஸ்துக்கு எவ்வளவோ அதிகமானது என்பதை நான் அறிவேன். அதோடு கூடவே பரீக்ஷையைப் பற்றியும் கவனிக்க வேண்டி யிருந்தது. இன்னும் படிப்பதற்கு நிறையப் பாக்கி இருந்தது. அங்கே, வீட்டுக்குப் போனல் எவனுக்குப் படிக்க மனம் வருகிறது! 'போர்டிங் ஹௌஸி'லும் பைத்தியக்காரன்போல் தனியே விழுந்து கிடக்க மனம் விரும்பவில்லை. ஆகையால் ஈச்வரன் என்னை லீவில் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தபோது, நான் மறுக்காமலே அதற்குச் சம்மதித்துவிட்டேன். ஈச்வரனேடு கூடப் பரீக்ஷைக்கும் நன்ருகப் படிக்கலாம். அவன் பணக்காரனுக இருந்தும் உழைப்பாளி; புத்திசாலி.

அவன் அதோடு கூடவே, "ஆனல் தம்பி, ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள் : அங்கே ஜமீந்தார்களைப் பற்றித் தூஷணை செய்தாயானல் காரியமே கெட்டுப் போகும். என் வீட்டிலுள்ளவர்களுக்கு அது கெடுதலாகப் படும். இறைவன் குடியானவர்களைத் தமக்குத் தொண்டு செய்யவே படைத்திருக்கிருன் என்ற எண்ணத்துடன் அவர்கள் குடியானவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிருர்கள். குடியானவர்களும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். 'ஜமீந்தார்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே அடிப்படையான பேதம் எதுவுமில்லை' என்று அவர்களிடம் சொல்லிவிட்டால், பின்பு ஜமீந்தார்கள் இருக்குமிடமே தெரியாமல் மறைந்து போக நேரும்" என்று சொன்னன்.

"அப்போது என்ன, நான் அங்கே போய் வேறு மனிதனுகிவிடுவேன் என்று நீ நினைக்கிருயா?" என்று கேட்டேன்.

"ஆமாம், நான் அப்படித்தான் நினைக்கிறேன்."

"நீ அப்படி நினைத்துக்கொண்டிருப்பது தவறு."

ஈச்வரன் இதற்கு ஒன்றும் மறுமொழி கூறவில்லை. ஒருவேளை அவன் இந்த விஷயத்தை என் பகுத்தறிவுக்கு விட்டுவிட்டான் போலும்! அவன் அவ்விதம் செய்தது நல்லதாயிற்று. தன் பேச்சை அவன் அழுத்திச் சொல்லியிருந்தால் நானும் பிடிவாதம் பிடித்திருப்பேன்.

2

இரண்டாவது வகுப்பென்ன, 'இண்டர்' வகுப்பில் கூட நான் எப்போதும் பிரயாணம் செய்ததில்லை. இப்போதுதான் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. வண்டி இரவு ஒன்பது மணிக்கு வருகிறது. ஆனல் பிரயாணச் சந்தோஷத்தில் நாங்கள் சாயங்காலமே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்து விட்டோம். கொஞ்சநேரம் இங்கு மங்கும் சுற்றிவிட்டு, 'ரிப்ரெஷ்மெண்ட் ரூமி'ல் சென்று போஜனம் செய்தோம்.

நோட்டம் பார்ப்பதில் வல்லவர்களான 'ஸர்வர்'களுக்கு என் உடுப்பிலிருந்தும் நடவடிக்கையிலிருந்துமே எஜமானன் யார், அவனைத் தொடரும் வால் யார் என்பது தெரிந்துவிட்டது. ஆனால், ஏனோ அவர்களுடைய அந்த அதிகப்பிரசங்கித்தனம் எனக்குப் பிடிக்கவில்லை. பணம் ஈச்வரனின் சட்டைப் பையிலிருந்து செலவழிந்தது. என் தகப்பனுருக்குக் கிடைக்கும் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாக இந்த 'ஸர்வர்'களுக்கு இனம்களும் வெகுமதிகளும் வாங்குவதிலேயே கிடைத்துவிடும்போ லிருக்கிறது. ஈச்வரன் புறப்படும்போது அவர்களுக்கு அரை ரூபாய் கொடுத்தான். எவ்வளவு கருத்தோடும் வணக்கத்தோடும் அவர்கள் அவனுக்குத் தொண்டு செய்தார்களோ அதே விதமாக எனக்கும் செய்யவேண்டுமென்று நான் எதிர் பார்த்தேன்! 'ஈச்வரன் கூப்பிட்டவுடனே ஏன் எல்லோரும் ஓடுகிறார்கள்? நான் ஏதாவது கேட்டால் ஏன் அவ்வளவு உற்சாகம் காண்பிப்பதில்லை?' என்ற எண்ணத்தில், எனக்குச் சாப்பாட்டில் ஒன்றும் ருசியே தெரியவில்லை. என் கவனம் முழுதும் இந்த வித்தியாசத்தைப் பற்றிச் சிந்திப்பதிலேயே ஈடுபட்டிருந்தது.

வண்டி வந்தது. நாங்கள் இருவரும் ஏறிக்கொண்டோம். 'ஸர்வர்'கள் ஈச்வரனுக்கு ஸலாம் செய்தார்கள். என்னைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

"எவ்வளவு மரியாதையாக இருக்கிறார்கள், இவர்களெல்லாரும்! நம்முடைய வேலைக்காரர்களைப் பார்; எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாது" என்றான் ஈச்வரன்.

நான் சலிப்படைந்த மனத்தோடு, "இதே மாதிரி நீ உன் வேலைக்காரர்களுக்கும் எட்டணுத் தினந்தோறும் இனம் கொடுத்தாயானல், அவர்கள் இதைக்காட்டிலும் இன்னும் எவ்வளவோ அதிக மரியாதையோடு உழைப்பார்கள்" என்றேன்.

"அப்படியானல் இவர்களெல்லாரும் கேவலம் இனம் பெறும் லோபத்தால் இவ்வளவு மரியாதையாக இருக்கிறார்கள் என்று நீ நினைக்கிறாயா?"

" இல்லே, இல்லே ; அப்படி இல்லே ! ஒழுங்கும் மரியாதையும் இவர்கள் ரத்தத்திலேயே கலந்து ஊறியிருக்கின்றன !"

வண்டி வேகமாகப் பறந்துகொண்டிருந்தது. மெயில் வண்டி. பிரயாகையிலிருந்து புறப்பட்டதும் பிரதாப்கட் போய் நின்றது. ஒருவன் கதவைத் திறந்துகொண்டு எங்கள் பெட்டிக்குள் வந்தான். நான் உடனே, " இது இரண்டாவது வகுப்பு; ஸெகண்டு கிளாஸ் கம்பார்ட்மெண்ட் !" என்று கத்தினேன்.

அந்தப் பிரயாணி வண்டிக்குள் வந்து, என்னை விசித்திரமான ஓர் உபேக்ஷையுடன் பார்த்துவிட்டு, " ஆமாம் ஸார், எனக்கும் அவ்வளவு தெரியும் !" என்று கூறிக் கொண்டே நடுவில் இருந்த 'பர்த்'தில் உட்கார்ந்தான். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

பொழுது விடிய நாங்கள் முராதாபாத் போய்ச் சேர்ந்தோம். ஸ்டேஷனில் எங்களை வரவேற்பதற்குப் பலர் கூடியிருந்தனர். அவர்களில் இருவர் கனவான்கள். ஐந்து கூலியாட்கள். கூலியாட்கள் எங்கள் 'லக்கேஜ்'களைத் தூக்கிக்கொண்டார்கள். இரண்டு கனவான்களும் பின்னாலேயே நடந்தனர். ஒருவன் மகம்மதியன் ; பெயர் ரியாஸத் அலி. மற்றொருவன் பிராம்மணன்; பெயர் ராமநாதன். இருவரும் பழக்கமில்லாமையைத் தெரிவிக்கும் கண்களோடு, " நீ காக்கையாக இருப்பவன் இந்த ஹம்ஸத்தோடு எப்படி வந்தாய் ?" என்று கேட்பவர்கள்போல என்னைப் பார்த்தார்கள்.

" இந்தக் கனவானும் உங்களோடு கூடவே படிக்கிறாரா ?" என்று ரியாஸத் அலி ஈச்வரனைக் கேட்டான்.

" ஆமாம் ; படிப்பது மட்டுமல்ல, என்னோடு கூடவே தான் வாசமும் செய்கிறார். இன்னும் கேட்டால், இவரால் தான் நான் அலஹாபாத்திலேயே விழுந்து கிடக்கிறேன். இல்லாவிட்டால் எப்போதோ லக்னௌக்குப் போயிருப்பேன். இந்தத் தடவை நான் இவரை இங்கே இழுத்து வந்தேன். இவர் வீட்டிலிருந்து எத்தனையோ தந்திகள்

வந்திருந்தன. ஆனால் நான் எல்லாவற்றிற்கும், ‘வர முடியாது’ என்று பதில் கொடுக்கச் செய்தேன். கடைசியில் ஓர் அவசரத் தந்தி வந்தது. ஒரு பதத்துக்கு நாலணு வீதம் பீஸ் கட்டி அனுப்பிய தந்தி அது! ஆனால் அதற்கும் இங்கிருந்து, ‘முடியாது’ என்றே பதில் போயிற்று!”

இதைக் கேட்டு அவ்விருவரும் என்னைத் திடுக்கிட்டுப் பார்த்தார்கள். அவர்கள் நடவடிக்கையில் பயத்தால் நடுங்கும் பாவனை தென்பட்டது.

ரியாஸத் அலி பாதி சந்தேகம் தொனிக்கும் குரலில், “இவர் ரொம்ப சாதாரணமான உடை உடுத்துக்கொண்டிருக்கிறாரே!” என்றான்.

“மகாத்மா காந்தியின் பக்தர், ஐயா! கதரைத் தவிர வேறு ஒன்றும் உடுத்துவதில்லை. பழைய துணிகளையெல்லாம் நெருப்பில் போட்டு எரித்துவிட்டார்! இவர் ஒரு பெரிய ராஜா; வருஷத்தில் ஒன்றரை லக்ஷம் ரூபாய் வருமானமுள்ள ஸம்ஸ்தானத்துக்கு உடையவர். ஆனால் பார்ப்பதற்கோ இப்போதுதான் அநாதாலயத்திலிருந்து பிடித்துக் கொண்டுவரப்பட்டவர் போலத் தோற்றுகிறார்!” என்று ஈச்வரன் அவனுடைய சந்தேகத்தைப் போக்கினான்.

“பணக்காரர்கள் இந்த மாதிரி சுபாவத்தோடு இருப்பது மிகவும் அருமை. யாரும் இவரைப் பார்த்து, ‘இவர் பணக்காரர்’ என்று தெரிந்துகொள்ளவே முடியாது” என்றான் ராமநாதன்.

“நீங்கள் ஸாங்க்லி மகாராஜாவைப் பார்த்திருந்தால் மூக்கில் விரலை வைப்பீர்கள்! ஒரு சாதாரண நிஜாரும் நாட்டுச் செருப்பும் போட்டுக்கொண்டு கடைத் தெருவில் திரிவாராம். ஒரு தடவை எவனோ ஒருவன் அவரைக் கூலி வேலைக்குக்கூடக் கூப்பிட்டு வேலை வாங்கினானும். அவர் பத்து லக்ஷம் ரூபாய் செலவழித்துக் காலேஜ் கட்டி வைத்திருக்கிறார்!” என்று ரியாஸத் அலி இந்தப் பேச்சுக்கு ஸமர்த்தனம் செய்தான்.

எனக்கு மனசு அறுத்தது. ஆனால் எந்தக் காரணத்தினாலோ, இந்தப் பச்சைப் புளுகு, அப்போது எனக்குச்

சிரிப்புக்கு இடமுள்ளதாகத் தோற்றவில்லை. அவனுடைய ஒவ்வொரு வாக்கியத்துக்கும் நான் அந்தக்கற்பனைச் செல்வத்தினருகே நெருங்கி வந்துகொண் டிருப்பதுபோலத் தோற்றியது.

நான் நல்ல குதிரைச் சவாரிக்காரனல்ல. சிறுவயதில் எத்தனையோ தடவைகள் சுமைகள் ஏற்றிச் செல்லும் குதிரைகள்மீது சவாரி செய்ததுண்டு. ஆனால் இங்கே பார்த்த போது இரண்டு நல்ல ராசிக் குதிரைகள் எங்களுக்காகத் தயாராக நின்றன. எனக்குப் பாதி உயிர் போய்விட்டது. மெல்ல ஏறிக்கொண்டேன். கைகால்கள் நடுங்கின. கூடிய வரையில் முகத்தைக் கடுத்துக் கொள்ளாம லிருந்தேன். என் குதிரையை ஈச்வரனின் குதிரைக்குப் பின்னால் விட்டேன். அவன் குதிரையை வேகமாக விடாதது நல்லதாயிற்று; இல்லாவிட்டால் நான் அன்று கைகால்களை ஒடித்துக்கொண்டு திரும்பியிருப்பேன். நான் எவ்வளவு ஆழத்திலிருக்கிறேன் என்பது ஒருவேளை ஈச்வரனுக்குத் தெரிந்திருக்கலாம்.

3

ஈச்வரனின் வீடு என்ன, பெரிய கோட்டைதான்! கோட்டைவாசல் போன்ற பெரிய முன்வாசல்! அங்கே எப்போதும் பாராக்காரன் நடமாடிக்கொண் டிருந்தான். வேலைக்காரர்களுக்கோ கணக்கு வழக்கே இல்லை. மைதானத்தில் ஒரு யானை கட்டி யிருந்தது. ஈச்வரன் என்னைத் தன் தந்தை, சிற்றப்பா, பெரியப்பா முதலிய எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினான், அதே மிகுதிபடக் கூறலோடு. அவன் என்னைத் தூக்கி வைத்த பெருமையைக் கேட்கவே வேண்டாம். வேலைக்காரர்கள் மட்டுமல்ல; வீட்டிலுள்ளவர்கள்கூட எனக்கு மரியாதை செய்யலானார்கள். நாட்டுப்புறத்து ஜமீந்தார்கள் அவர்கள்; லக்ஷக்கணக்கான வருமானம். ஆனால் போலீஸ் கான்ஸ்டேபிளைக் கண்டால் கூட 'அதிகாரி' என்று கருதுபவர்கள். சில கனவான்கள் என்னிடம், "எஜமானே, எஜமானே!" என்றுகூடப் பேசலாயினர்.

சற்றுத் தனிமை கிடைத்ததும் நான் ஈச்வரனிடம், "நீ பெரிய சைத்தானு யிருக்கிறுயே, நண்பா! ஏன் என்னை இப்படி உருக் குலைக்கிறுய்?" என்றேன்.

ஈச்வரன் திடமான புன்னகையுடன், "இந்தக் கழுதை களுக்கு முன்னுல் இப்படித்தான் நடந்துகொள்ள வேண் டும்; இல்லாவிட்டால் இவர்கள் முகங் கொடுத்துக்கூடப் பேசமாட்டார்கள்!" என்ருன்.

சற்று நேரங் கழித்து ஒரு வேலைக்காரன் எங்கள் கால்களைப் பிடிக்க வந்தான். "என் ராசாவுங்க டேசன் லேந்து வந்தாங்களே; களச்சுப் போயிருப்பாங்க!" என் ருன். ஈச்வரன் என்னைச் சுட்டி, "முதலில் அந்த இள வரசனின் காலைப் பிடி!" என்ருன்.

நான் கட்டிலில் படுத்துக்கொண் டிருந்தேன். என் வாழ்க்கையில் இதற்குமுன்பு யாரும் என் கால்களைப் பிடிக் கும் சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. நான் இதைப் பணக் காரர்களின் வீண் பெருமை, மிராசுதார்களின் கழுதைத் தனம், பெரிய மனிதர்களின் டம்பம் என்று என்னவெல் லாமோ சொல்லி ஈச்வரனைப் பரிகாசம் செய்வது வழக்கம். இன்று நான் மிராசுதார்களுக்கெல்லாம் அரசனுக நடித்துக் கொண்டிருந்தேன்.

இதற்குள் மணி பத்து அடித்தது. அவர்கள் பழைய ஆசாரக்காரர்கள். நவநாகரிகம் இப்போதுதான் மலையுச்சி யவ்வளவு உயரத்தில் அங்கே ஊசலாடிக்கொண் டிருந்தது. உள்ளிருந்து சாப்பாட்டுக்கு அழைப்பு வந்தது. நாங்கள் குளிக்கச்சென்ருேம். என் வஸ்திரங்களை நானே துவைத்துப் பிழிந்து உலர்த்துவது வழக்கம். ஆனுல் இங்கே ஈச்வர னைப்போலவே என் வஸ்திரங்களையும் அவிழ்த்துப் போட்டு விட்டேன். என் கையால் என் துணியைத் துவைப்பது மிக வெட்கமாயிருந்தது. உள்ளே சாப்பிடப் போனேம். 'ஹாஸ்டலி'ல் செருப்புக் கால்களோடு மேஜையினருகில் போய் உட்கார்ந்துவிடுவோம். இங்கே கால்களைக் கழுவி விட்டு உள்ளே போகவேண்டி யிருந்தது. வேலைக்காரன் தண்ணீரை வைத்துக்கொண்டு நின்ருன். ஈச்வரன் தன்

கால்களை நீட்டினுன். வேலைக்காரன் அவன் கால்களைக் கழுவினுன். நானும் என் கால்களை நீட்டினேன். அவன் என் கால்களையும் கழுவினுன். என் மூளை அப்போது எங்கே போயிருந்ததோ, அறியேன்.

4

இங்கே கிராமத்துக்கு வந்து நன்ருக மனமூன்றிப் படிக்கலாமென்று நினைத்திருந்தேன். ஆனல் இங்கே நாள் முழுதும் ஊர் சுற்றுவதிலேயே கழிந்து கொண்டிருந்தது. சில சமயங்களில் ஆற்றில் தோணிகளில் உட்கார்ந்து இக்கரைக்கும் அக்கரைக்குமாகச் சுற்றுவோம். சில சமயங்களில் மீன் பிடிப்போம் அல்லது பறவைகளை வேட்டையாடுவோம். இன்னும் சில சமயங்களில் பயில்வான்கள் குஸ்தி போடுவதை வேடிக்கை பார்ப்போம். பின்னும் சிலபொழுது சதுரங்கம் விளையாடுவோம். ஈச்வரன் நிறைய முட்டைகள் வரவழைத்துத் தன் அறையில் 'ஸ்டவ்'வில் 'ஆம்லெட்' தயாரிப்பான். வேலைக்காரர்களின் கும்பல் எப்போதும் எங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கும். நாங்கள் எங்கள் கைகால்களை அசைக்கவேண்டிய அவசியமே இல்லை. கேவலம் நாக்கை அசைத்தால் போதுமானது. நாங்கள் குளிக்க உட்கார்ந்தால் இரண்டு பேர் குளிப்பாட்டத் தயார்! படுத்துக்கொண்டால் இரண்டு பேர் பங்கா போட ஆஜர்! 'மகாத்மா காந்தியின் சிஷ்யரான இளங்குமரர்' என்று என் பெயர் பிரசித்தியா யிருந்தது. உள்ளிருந்து வெளிவரையில் எங்கும் என் ஆதிக்கந்தான். "டிபனுக்குக் கொஞ்சங்கூட 'லேட்' ஆகக் கூடாது; இல்லாவிட்டால் இளங்குமரர் கோபித்துக் கொள்வார்!", "படுக்கை போட்டாயிற்ரு? இளங்குமரர் தூங்கும் வேளை வந்துவிட்டதே!" என்ற வாக்கியங்கள் என் காதுகளில் விழலாயின. நான் ஈச்வரனைக் காட்டிலும் பெரிய நாசுக்குக்கார ஞகிவிட்டேன்; அல்லது ஆகும்படிக் கட்டாயப் படுத்தப்பட்டேன். ஈச்வரன் தன் கையால் படுக்கை போட்டுக்கொள்ளலாம்; ஆனல் விருந்தாளியான இளங்குமரர் தம் கையால் எப்படித் தம் படுக்கையைப் போடலாம்? அவருடைய பெருந்தன்மைக்கு அது இழுக்கல்லவா?

ஒரு நாள் உண்மையாகவே அப்படித்தான் நடந்தது. ஈச்வரன் வீட்டுக்குள்ளே இருந்தான். ஒருவேளை அம்மாவுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தான்போல் இருக்கிறது. இங்கே மணி பத்து அடித்துவிட்டது. தூக்கத்தினால் என் கண்கள் சுழன்றன. ஆனால் நான் எப்படிப் படுக்கை போடுவது? யுவராஜா ஆயிற்றே! சுமார் பதினொன்றரை மணிக்கு வேலைக்காரன் வந்தான். வீட்டில் எல்லோருக்கும் அவன்மீது பிரியம். வீட்டு வேலைகளின் தொந்தரவில் அவனுக்கு என் படுக்கையைப் போடும் ஞாபகமே இல்லை. இப்போது ஞாபகம் வந்ததுமே ஓடிவந்தான். நான் அவனை மிரட்டிய மிரட்டு; வெகு நாட்கள் வரையில் அவன் என்னை மறந்திருக்கமாட்டான்.

ஈச்வரன் என் மிரட்டலைக் கேட்டு வெளியே வந்து, “நீ செய்தது ரொம்ப சரி. இந்த நன்றி கெட்ட மனிதர்களை இப்படித்தான் நடத்தவேண்டும்” என்றான்.

இப்படித்தான் ஒரு நாள் ஈச்வரன் எங்கோ ஒரு விருந்துக்குப் போயிருந்தான்; இருட்டிவிட்டது. ஆனால் இன்னும் விளக்குக் கொளுத்தப்படவில்லை. விளக்கு மேஜை மேல்தான் வைத்திருந்தது. தீப்பெட்டியும் அங்கேயே இருந்தது. ஆனால் ஈச்வரன் தன் கையால் எப்போதும் விளக்கேற்றுவதில்லை. அப்போது யுவராஜா மட்டும் எப்படி ஏற்றுவார்? எனக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அன்றைப் பத்திரிகை, அப்போதுதான் வந்தது, அங்கே வைக்கப்பட்டிருந்தது. மனம் அதன்மீதே இருந்தது; ஆனால் விளக்கு இல்லை. நல்ல காலமாக அப்போதுதான் குமாஸ்தா ரியாஸத் அலி அந்த வழியே வந்தான். நான் அவன்மேலேயே என் கோபத்தை இறக்கினேன். நான் போட்ட கூச்சலில், அவன் பாவம்! ஆந்தைபோல விழித்தான். “விளக்கை ஏற்றச் சொல்வதற்குக் கூடவா உங்களுக்கெல்லாம் கவனமில்லாமல் போய்விட்டது? இந்த மாதிரி சோம்பேறிப் பயல்கள் இங்கே எப்படிக் காலந் தள்ளுகிறார்களோ, தெரியவில்லை! என் ஸம்ஸ்தானத்தில் இவர்களெல்லாம் வந்தால் ஒருமணி நேரங்கூட நிர்வகிக்க முடியாது” என்று மிரட்டினேன். ரியாஸத் அலி நடுங்கும் கைகளால் விளக்கை ஏற்றிவிட்டுப் போனான்.

அங்கே டாகுர் ஒருவன் அடிக்கடி என்னிடம் வருவான். அவன் கொஞ்சம் சுதந்திரமான மனிதன்; மகாத்மா காந்தியின் பரம பக்தன். நான் மகாத்மாவின் சிஷ்யன் என்பதைத் தெரிந்துகொண்டு என்னிடம் மிகவும் மரியாதையாக இருந்தான். ஆனால் என்னிடம் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் அவனுக்குக் கூச்சம். ஒரு நாள் நான் தனியே இருப்பது கண்டு, என்னிடம் வந்து, கைகூப்பிக் கொண்டு, "எஜமான் காந்தித் தாத்தாவுக்குச் சிஷ்யர் என்று கேள்விப்பட்டேன். 'ஸ்வராஜ்யம் வந்துவிட்டால் ஜமீந்தார்கள் இருக்கமாட்டார்கள்' என்று ஜனங்கள் சொல்லுகிறார்களே, மெய்தானா?" என்று கேட்டான்.

நான் அதிகாரத் தொனியுடன், "ஜமீந்தார்கள் இருந்தே தீரவேண்டிய அவசியந்தான் என்ன? இவர்கள் ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சுவதைத் தவிர வேறென்ன செய்கிறார்கள்?" என்றேன்.

"ஏன் எஜமானே, அப்போது எல்லா ஜமீந்தார்களின் நிலங்களும் பிடுங்கப்பட்டுவிடுமோ?" என்று டாகுர் மீண்டும் கேட்டான்.

"பல பேர்கள் தாங்களே சம்மதப்பட்டுத் தம் நிலங்களைச் சந்தோஷமாகக் கொடுத்துவிடுவார்கள். சம்மதப் பட்டுக் கொடுக்காதவர்களின் நிலங்களைப் பிடுங்கிக்கொள்ள வேண்டியிருக்கும். நாங்கள் எல்லோரும் அப்படிச் செய்ய ஸித்தமாகவே இருக்கிறோம். ஸ்வராஜ்யம் வந்தவுடனே, நாங்கள் எங்கள் ஸம்ஸ்தானம் முழுதையும் குடியானவர்கள் பெயருக்குத் தானப் பத்திரம் எழுதிக் கொடுத்து விடுவோம்" என்றேன்.

நான் நாற்காலியில் கால்களைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். டாகுர் என் கால்களைப் பிடிக்கலானான். "இப்போதெல்லாம் ஜமீந்தார்கள் பெரிய அநியாயம் செய்கிறார்கள், எஜமானே! எஜமான் தம் ஸம்ஸ்தானத்தில் எனக்குக் கொஞ்சம் நிலம் கொடுத்தால் நான் அங்கேயே உழுது பயிரிட்டுக்கொண்டு எஜமானுக்குத் தொண்டு செய்யலாமென்று பார்க்கிறேன்" என்றான்.

" இன்னும் என் கைக்கு அதிகாரம் வரவில்லை, தம்பி ! ஆனல் அதிகாரம் கிடைத்ததோ இல்லையோ, உடனே எல்லோருக்கும் முன்னல் உன்னைக் கூப்பிடுவேன். உனக்கு மோட்டார் ஓட்டக் கற்றுக்கொடுத்து, உன்னை என் 'டிரைவரா'க வைத்துக்கொள்வேன் " என்றேன்.

அன்றைத் தினம் டாகுர் நிறையக் 'கஞ்சா' இலையை அரைத்துச் சாப்பிட்டதாகவும், தன் பெண்டாட்டியை நன்ருக அடித்ததாகவும், கிராமத்து ஸாவ்காரோடு சண்டை போடத் தயாராகிவிட்டதாகவும் கேள்விப் பட்டேன்.

5

லீவு இவ்விதம் முடிந்ததும் நாங்கள் மீண்டும் பிரயாகைக்குப் போகப் புறப்பட்டோம். கிராமத்திலுள்ள அநேகம் பேர் எங்களை வழியனுப்ப வந்தார்கள். டாகுரோ எங்களோடு ஸ்டேஷன் வரைக்கும் வந்தான். நானும் என் 'பார்ட்'டை மிகவும் கச்சிதமாக நடித்தேன். குபேரனுக்குப் பொருத்தமான என் வணக்கத்தையும் தெய்வத்தன்மையையும் ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலும் முத்திரையிட்டேன். ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் நல்ல இனம் கொடுக்கலாமென்றுதான் என் எண்ணம்; ஆனல் என்னிடம் அதற்கேற்ற தகுதி ஏது? 'ரிடர்ன் டிக்கட்டு'கள் வாங்கியிருந்தோம்; சும்மா வண்டியில் உட்கார வேண்டியதுதான். வண்டி வந்தது. ஒரே ஜனக்கூட்டம், நெருக்கம்! நவராத்திரி லீவைக் கழித்துவிட்டு எல்லோரும் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். 'ஸெகண்ட் கிளாஸி'ல் எள் போட இடமில்லை! 'இண்டர் கிளாஸி'லோ அதைவிட மோசம்! இதுதான் கடைசி வண்டி. எவ்விதத்திலும் பின் தங்க முடியாது. வெகு சிரமப்பட்டு மூன்ருவது வகுப்பில் இடம் கிடைத்தது. எங்கள் ஐசுவரியம் அங்கே தன் பெருமையைக் காட்டியது. ஆனல் எனக்கு அங்கே உட்காரப் பிடிக்கவில்லை. வரும்போது சுகமாகப் படுத்துக்கொண்டே வந்தோம். போகும்போது? - உடம்பைச் சுருட்டி வைத்துக்கொண்டு போகிறேம். கைகால்களை ஆட்டுவதற்குக் கூட இடமில்லை!

வண்டியிலிருந்தவர்களில் பலரும் படிப்பாளிகள். அவர்கள் தமக்குள் ஆங்கில அரசாங்கத்தைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். "இப்படிப்பட்ட நடுநிலைமையை எந்த அரசாங்கத்திலும் காண முடியாது. சிறியவர்களும் சரி; பெரியவர்களும் சரி; எல்லாரும் சரிசமம். அரசனே எவனிடத்திலாவது அநியாயமாய் நடந்துகொண்டாலும், ஹைகோர்ட் அவன் கழுத்தைக்கூட நறுக்கிவிடும்" என்றார் ஒரு பெரியவர்.

"ஆமாம், ஐயா! நீங்கள் நியாயமிருந்தால் சக்கரவர்த்தியின் மீது கூடப் பிராது கொடுக்கலாம்! கோர்ட்டில் சக்கரவர்த்தியின் மேல் கூட 'டிக்ரீ' ஆகிவிடும்!" என்று இன்னொரு பெரியவர் அதை ஆமோதித்தார்.

முதுகின்மேல் ஒரு பட்டிக்காட்டான் ஒரு பெரிய மூட்டையை வைத்துக்கொண்டு நின்றிருந்தான். அவன் கல்கத்தா போகிறவன். மூட்டையை வைப்பதற்கு எங்கும் இடமில்லை. அதை முதுகிலே கட்டி வைத்திருந்தான். அதனால் அவன் அமைதியின்றி அடிக்கடி கதவோரமாக வந்து நிற்பான். நான் கதவின் அருகிலேயே உட்கார்ந்திருந்தேன். அவன் அடிக்கடி அங்கே வந்து தன் மூட்டையால் என் முகத்தைத் தேய்ப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ஏற்கனவே காற்றுக் குறைவு; போதாக் குறைக்கு அந்தப் பட்டிக்காட்டான் வந்து என் தலைமேல் நிற்பது எனக்குப் பிராண சங்கடமா யிருந்தது. சற்று நேரம் வரையில் நான் பொறுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். திடீரென்று எனக்குக் கோபம் பொங்கியது. நான் அவனைப் பிடித்துப் பின்னால் தள்ளி, ஓங்கி இரண்டு அறைகள் வைத்தேன்.

அவன் என்னை முறைத்துப் பார்த்து, "ஏன் சாமீ, என்னெ அடிக்கிறே? நானுந்தான் சத்தங் கொடுத்திருக்கேன்!" என்றான்.

நான் எழுந்து படபடவென்று இரண்டு மூன்று அறைகள் மறுபடியும் விட்டேன்.

வண்டியில் புயல் வீசியது. நாலா பக்கங்களிலிருந்தும் என்மீது சொல்லம்புகள் பாய்ந்தன.

"இவ்வளவு நாசுக்காயிருக்கிறது என்றால் முதல் வகுப்பில் உட்காருவதற்கென்ன ?"

"பெரிய ஆசாமியாயிருந்தால், அவன் வீட்டுவரைக் கும்! என்னை இந்த மாதிரி அடித்திருந்தால் தெரியும், ஆசாமியை நான் படுத்துகிற பாடு!"

"அவன் பாவம்! என்ன தப்பு செய்துவிட்டான்? வண்டியிலே மூச்சு விட இடமில்லை. ஜன்னலண்டை சென்று கொஞ்சம் மூச்சுவிட நின்றால் அவன் மீது இவ் வளவு கோபமா! மனுஷன் பணக்காரனாயிருந்தால் என்ன, மனுஷத்தன்மையேயா அடியோடு போய்விடும் ?"

"இதுதான் ஆங்கில அரசாங்கம். நீங்கள் ஏதோ பீத்திக்கொண்டிருந்தீர்களே !"

"கச்சேரிங்கள்ளே நொழையவே விடமாட்டேங்கி றாங்க இவுங்களெ! இந்த லச்சனத்திலே இவுங்களுக்கு இவ்வளோ கெர்வம்!" என்றான் ஒரு பட்டிக்காட்டான்.

ஈச்வரன் ஆங்கிலத்தில், "வாட் அன் இடியட் யூ ஆர், வீர்!" என்றான்.

என் மண்டைக் கிறுக்கு அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக இறங்குவதை உணர்ந்தேன்.

அன்னை

1

இன்று கைதி விடுதலையடைந்து வீட்டுக்கு வரப்போகிறுன். கருணை ஒரு நாள் முன்னமே வீட்டை மெழுகிக் கோலமிட்டு வைத்திருக்கிறுள். அவள் இந்த மூன்று வருஷங்களில், கடுமையான தவஞ்செய்து சேர்த்து வைத்திருந்த பத்துப் பன்னிரண்டு ரூபாய்களைக் கணவனை வரவேற்பதற்கும், மரியாதை செய்வதற்குமான ஆயத்தங்களில் செலவழித்துவிட்டாள். கணவனுக்காக இரண்டு ஜோடி வேஷ்டிகள் வாங்கினுள்; ஒரு புதுச் சட்டை தைத்தாள். குழந்தைக்கு ஒரு புதிய 'கோட்'டும் குல்லாயும் வாங்கத் திட்டம் போட்டாள். அடிக்கடி குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டு மகிழ்ந்தாள். இந்தக் குழந்தை சூரியனைப்போல உதித்து, அவளுடைய இருளடர்ந்த வாழ்க்கையை ஒளிரச் செய்யாமலிருந்திருந்தால், பல தாக்குதல்கள் ஒன்று சேர்ந்து அவள் வாழ்க்கையை இத்தனை நாளைக்கெல்லாம் ஒழித்திருக்கும். அவள் கணவர் சிறைத் தண்டனையடைந்த மூன்று மாதங்களுக்கெல்லாம், இந்தக் குழந்தை பிறந்தது. இதன் வதனத்தைப் பார்த்தவண்ணமாகவே அவள் மூன்று கொடிய வருஷங்களைக் கழித்துவிட்டாள்.

'நான் குழந்தையை அவரிடம் எடுத்துக்கொண்டு போனல், அவர் எவ்வளவு சந்தோஷப் படுவார்! அதைப் பார்த்து அவர் முதலில் திடுக்கிடுவார். பின்பு அதை மடியில் வைத்துக்கொண்டு, "கருணை, நீ இந்த ரத்தினத்தைக் கொடுத்து என் மனேரதங்களையெல்லாம் நிறைவேற்றினுய்" என்பார். குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டு, சிறைக் கஷ்டங்கள் முழுதையும் மறப்பார். குழந்தையின் ஸரளமான, தூய, மோகனப் பார்வை அவருடைய மனத் துன்பங்கள் யாவற்றையும் அழிக்கும்' என்று கற்பனை செய்துகொண்டு அந்த ஆனந்தத்தில் அவள் மூழ்கியிருந்தாள். ஆதித்தியனேடு பலர் வருவார்களென்றும், வீட்டு வாசலில் அவர் வரும்போது ஜனங்கள் போடும் 'வாழ்க,

வாழ்க' என்ற ஒலி ஆகாயத்தில் எதிரொலிக்குமென்றும் அவள் கருதினாள். அது எத்தனை தெய்விகக் காட்சியாக இருக்கும்! வரப்போகும் மனிதர்கள் உட்காருவதற்காக அவள் ஒரு கிழிந்த கோணிப்பட்டையை விரித்திருந்தாள். வெற்றிலை பாக்கு முதலியவற்றை ஒரு தட்டில் தயாராக வைத்திருந்தாள். அடிக்கடி ஆவல் பொங்கும் கண்களோடு வாசலை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். சிறை செல்லும்போது, மிகவும் திடமாகவும் பரந்தும் ஒளி வீசிக் கொண்டுமிருந்த கணவனின் முகத் தோற்றம் அடிக்கடி அவள் கண்களின் முன்னே சுழன்றது. போகும்போது அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட அந்தச் சொற்கள் அடிக்கடி அவள் நினைவுக்கு வந்தன. போலீஸாரின் தடியடிகளுக்கும் அசையாத அவருடைய அந்தத் தைரியத்தையும், அந்த ஆத்ம பலத்தையும், அப்போதுகூட அவர் உதடுகளில் தவழ்ந்துகொண்டிருந்த அந்தப் புன்னகையையும், அப்போதுகூட அவர் வதனத்தில் திகழ்ந்துகொண்டிருந்த அந்த ஸ்வாபிமானத்தையும் கருணுவின் உள்ளம் என்ருயினும் மறக்கமுடியுமா?

இவை யாவும் நினைவுக்கு வந்தவுடனே கருணுவின் ஒளியிழந்த முகத்தில் ஆத்ம கௌரவத்தின் செம்மை படர்ந்தது. இந்த ஒரு பிடிப்புத்தான் இந்த மூன்று வருஷங்களாக அவ்வளவு கொடிய துன்பங்களிலும் அவள் உள்ளத்துக்கு ஆறுதல் கொடுத்துவந்தது. எத்தனையேக இரவுகளை அவள் உபவாசமிருந்து கழித்தாள். அநேவு நாட்கள் வீட்டிலே விளக்கேற்ற எண்ணெய் இராது; ஆனல் அவள் கண்களிலிருந்து எப்போதும் ஏழைமைக் கண்ணீர் சிந்தியதில்லை. இன்று அந்த விபத்துக்களுக்கெல்லாம் முடிவு வரும். கணவனின் நெருங்கிய ஆலிங்கனத்தால் அவள் எல்லாவற்றையும் சிரித்துக்கொண்டே பொறுப்பாள். அந்த அனந்தமான நிதியைப் பெற்று, அவள் அவாவற்று வீடு பெறுவாள்.

வெகுதூரம் பிரயாணம் செய்து அலுத்துப்போன ஆகாயமார்க்கத்தின் பாதசாரி, வேகமாக இளைப்பாறுமிடம் சென்றுகொண்டிருந்தான். மாலைமங்கை பொன்னிறத்

துகிலைப் பரப்பி, மணங்கமழும் தூய வெண்மலர்ப் படுக்கையை அங்கே விரித்து வைத்திருந்தாள். அதே தருணத்தில் கருணை, ஒருவன் தடியை ஊன்றிக்கொண்டு, தளர்வெய்திய ஒரு கிழவனின் துன்ப ஒலியே போல், வருவதைக் கண்டாள். அவன் அடிக்கொருதரம் நின்று இருமிக்கொண்டிருந்தான். தலை தொங்கியிருந்ததால், அவன் முகத்தை அவள் பார்க்க முடியவில்லை. நடையிலிருந்து அவன் ஒரு கிழவனென்றே தோற்றியது. ஆனால் அருகில் வந்ததும், ஒரே க்ஷணத்தில் கருணை அவனை அறிந்துகொண்டாள். அவளுக்கினிய கணவரே அவர்! ஆனால் அந்தோ! அவர் உருவம் எவ்வளவு மாறிவிட்டது! அந்த இளமை, அந்த ஒளி, அந்தத் துடிதுடிப்பு, அந்தக் கட்டுக்கோப்பு - யாவும் குலைந்தன. எலும்புகளின் கூடு ஒன்றுதான் மிச்சமிருந்தது. அவருடன் கூட்டாளி எவனும் இல்லை; சிநேகிதனும் இல்லை; நண்பனும் இல்லை; அன்பனும் இல்லை! கருணை அவரை அறிந்துகொண்ட மறுகணமே வெளியே ஓடி வந்தாள். ஆனால், அவரை ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவள் உள்ளத்திலேயே புதைந்தது. கற்பனைகள் யாவும் மண்ணில் கலந்தன. அவளுடைய மனோல்லாஸம் முழுதும் கண்ணீர் வெள்ளத்தில் ஓடியது; மறைந்தது!

ஆதித்தியன் வீட்டிற்குள் அடி எடுத்துவைத்ததும் புன்சிரிப்புடன் கருணையை நோக்கினர்; ஆனால் அந்தப் புன்சிரிப்பில் துன்பத்தின் ஓர் உலகம் நிரம்பியிருந்தது. கருணை இதயத்துடிப்பே நின்றுவிட்டாற் போலத் தளர்வெய்தினாள். தன் கண்களின்மீது இன்னமும் தனக்கே நம்பிக்கை இல்லாதவள்போல, கண்களை விரித்துக் கணவனை இமை கொட்டாமல் பார்த்தாள். வரவேற்பைப்பற்றியோ அல்லது துன்பத்தைப்பற்றியோ ஒரு சொல்கூட அவள் வாயிலிருந்து வெளிவரவில்லை. அவள் மடியில் உட்கார்ந்திருந்த பாலகனும், அச்சமுற்ற கண்களோடு அந்த எலும்புக் கூட்டைப் பார்த்து, அன்னையின் மடியோடு மடியாக ஒட்டிக்கொண்டான்.

கடைசியில் அவள் நடுங்கும் குரலில், "இதென்ன

இப்படி இருக்கிறது உங்கள் நிலை? அடையாளமே தெரிய வில்லையே?" என்றாள்.

ஆதித்தியன் அவள் கவலையைப் போக்கப் புன்னகை புரிய முயன்று, "ஒன்றுமில்லை, ஏதோ கொஞ்சம் இளைத் திருக்கிறேன். உன் கைச் சாப்பாடு கிடைத்ததும் மறுபடி யும் சொஸ்தமாய் விடுவேன்" என்றார்.

"இதென்ன! இப்படி உலர்ந்து ஈர்க்காகிவிட்டீர் களே! அங்கே வயிறு நிரம்பச் சாப்பாடுகூடவா கிடைக்க வில்லை? 'அரசியல் கைதிகள் மிகவும் நன்றாக நடத்தப்படு கிறார்கள்' என்று நீங்கள் சொல்லிக்கொண் டிருந்தீர்களே? ஸதா ஸர்வகாலமும் உங்களைச் சூழ்ந்துகொண்டு, உங்கள் வேர்வைக்குப் பதிலாகத் தமது ரத்தத்தைக் கொடுக்கத் தயாராயிருந்தார்களே; உங்களுடைய அந்த நண்பர்கள் என்ன ஆனார்கள்?"

ஆதித்தியன் புருவங்களை நெறித்தார். "இது மிகவும் கசப்பான அநுபவம், கருணை! கைது செய்யப்பட்டவுடனே ஜனங்கள் இப்படி என்னைப் புறக்கணிப்பார்களென்பதை யும், எவனும் க்ஷேம ஸமாசாரங்கூடக் கேட்கமாட்டா னென்பதையும் நான் முன்பே அறிந்துகொண்டிருக்க வில்லை. தேசத்தின் பெயரால் தம்மை அழித்துக்கொள் வோருக்கு இதுதான் பரிசு என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை. பொதுஜனம் தன் ஊழியர்களை வெகு விரைவில் மறந்துவிடுவதை நான் அறிந்திருந்தேன். ஆனால், என்னோடு ஒத்துழைத்தவர்களும் உதவி செய்தவர்களுங் கூட இவ்வளவு நன்றி கெட்டவர்களாக இருப்பதை இப் போதுதான் முதல் தடவையாக என் அநுபவத்தில் காண் கிறேன். நான் யார்மீதும் குற்றஞ் சாட்டவில்லை. தொண்டு தன்னில்தானே பரிசாக நிற்பது. இதற்காக நான் புகழும் பேரும் விரும்பியது என் தவறு" என்றார்.

"அப்படியானால் என்ன, அங்கே சாப்பாடு கூடவா கிடைக்கவில்லை?"

"அதையெல்லாம் கேட்காதே, கருணை! அது பெரிய துன்பக் கதை. நான் உயிரோடு திரும்பிவந்ததே பெரி

தென்று நினைத்துக்கொள். உன்னை மீளவும் பார்க்கும் பாக்கியம் இருந்தது; இல்லாவிட்டால் நான் பட்ட கஷ்டங் களுக்கு, எப்போதோ இவ்வுலக வாழ்க்கையிலிருந்து பிரிந்து செல்ல நேர்ந்திருக்கும். நான் சற்றுப் படுத்துக் கொள்ளுகிறேன். என்னால் நிற்க முடியவில்லை. பகல் முழுதும் வெகு தூரத்திலிருந்து நடந்து வந்திருக் கிறேன்."

"வந்து, கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, இளைப்பாறப் படுத்துக்கொள்ளுங்கள். (குழந்தையை இடுப்பில் எடுத்துக் கொண்டு) இவர் உன் அப்பாடா, குழந்தாய், உன் அப்பா. அவரிடத்தில் போ, அன்பாக இருப்பார்."

ஆதித்தியன் கண்ணீர் நிரம்பிய கண்களால் குழந்தை யைப் பார்த்தார். அவருடைய ஒவ்வொரு ரோமமும் அவரை வெறுத்தது. தமது தளர்ந்த நிலையைக் கண்டு, அவருக்கு எப்போதும் இத்தனை துன்பம் உண்டான தில்லை. இறைவனின் எல்லையற்ற திருவருளால் அவர் நிலை மீண்டும் செம்மைப்படுமாயின், அவர் இனி இந்தத் தேசீய இயக்கங்களின் பக்கமே நோக்கமாட்டார். மலர் போன்ற இந்தக் குழந்தையை இவ்விதம் உலகத்தில் கொணர்ந்து, ஏழைமையும் எளிமையுமாகிய தீயில் வாட்ட அவருக்கு என்ன உரிமை இருந்தது? இனி அவர் லக்ஷ்மியை உபாஸனை செய்வார். தமது அற்ப வாழ்க்கை யைக் குழந்தையைக் காத்துப் போஷிப்பதில் அர்ப்பித்து விடுவார். குழந்தை தம்மைப் புறக்கணித்துப் பார்ப்பது போலவும், 'எனக்காக நீ செய்யவேண்டிய கடமைகளில் எதைச் சரியாகச் செய்தாய்?' என்று கேட்பது போலவும் அப்போது அவருக்குத் தோற்றியது. அவருடைய எண் ணம் முற்றும், அன்பு முற்றும், குழந்தையை மார்போ டணைத்துக்கொள்ள அதைரியத்துடன் விரைந்தது; ஆனால் அவரால் கைகளைப் பரப்ப முடியவில்லை. அவர் கைகளில் பலமே இல்லை.

கருணை குழந்தையை எடுத்துக்கொண்டு எழுந்தாள். தட்டில் கொஞ்சம் உணவு கொண்டுவந்து வைத்தாள். ஆதித்தியன், வெகு நாட்களுக்குப் பின்பு இன்று

தின்பண்டத்தைக் கண்டவர்போல், பசி நிரம்பிய பார்வையோடு தட்டைப் பார்த்தார். பல நாட்கள் உபவாசமிருந்த அந்த நிலையில் - ஆரோக்கியம் சீர்கெட்டிருந்த அந்த நிலையில் - வாயைக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவருக்குத் தெரியும். ஆனால் அவரால் நாவை அடக்க முடியவில்லை. தட்டிலிருந்த உணவு முழுதையும் ஒரேயடியாகத் தீர்த்துவிட்டார். கருணைவுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவள் இரண்டாம் முறை என்ன வேண்டுமென்று கேட்கவேயில்லை. தட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். ஆனால் அவள் மனம், 'இவர் எப்போதும் இவ்வளவு சாப்பிடுவது வழக்கமில்லையே!' என்று சொல்லிக்கொண்டிருந்தது.

அவள் குழந்தைக்குச் சோறு ஊட்டிக்கொண்டிருந்தாள். திடீரென்று, 'கருணை!' என்ற குரல் அவள் காதில் விழுந்தது.

ஓடிவந்து, "நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களா?" என்று கேட்டாள்.

ஆதித்தியனின் முகம் வெளுத்திருந்தது. சுவாஸம் வேகமாக இழுத்தது. கைகளை ஊன்றிக்கொண்டு அவர் அங்கேயே கோணிப் பட்டைமேல் படுத்திருந்தார். அவருடைய அந்த நிலையைக் கண்டு அவள் பயந்துவிட்டாள். "போய் வைத்தியனைக் கூப்பிட்டு வரட்டுமா?" என்றாள்.

அவர் கையால் 'வேண்டாம்' என்று சைகை செய்து, "இனி வைத்தியனை அழைப்பது வீண், கருணை! இனி உன்னிடம் மறைப்பதில் பிரயோஜனமில்லை. எனக்கு க்ஷயரோகம். பல தடவைகள் செத்துப் பிழைத்தேன். உங்களைப் பார்க்கும் பாக்கியம் இருந்தது; அதனால்தான் பிராணன் போகவில்லை. அழாதே, என் கண்ணே!" என்றார்.

அவள் விக்கல்களைத் தடுத்துக்கொண்டு, "நான் இப்போதே போய் வைத்தியரை அழைத்து வருகிறேன்" என்றாள்.

ஆதித்தியன் மீண்டும் தலையை அசைத்தார். "வேண்டாம், கருணா! சும்மா என் பக்கத்தில் உட்கார்ந்திரு. இனி யாராவது ஏதாவது செய்ய முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. டாக்டர்கள் எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். நான் இத்தனை தூரம் எப்படி வந்து சேர்ந்தேன் என்பதே எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. எந்தத் தெய்விக சக்தி என்னை அங்கிருந்து இழுத்து வந்ததோ, அறியேன். ஒருவேளை அது இந்த அணையும் விளக்கின் கடைசி ஒளியாய் இருந்திருக்கலாம். ஐயோ! நான் உனக்கு எத்தனை பெரிய அநியாயம் இழைத்தேன்! இந்தத் துன்பம் எனக்கு எப்போதும் இருக்கும். என்னால் உனக்கு ஒரு சுகமும் இல்லை. உனக்காக நான் ஒன்றும் செய்ய முடியவில்லை. தாலியைக் கட்டின களங்கத்துடன், ஒரு குழந்தையைப் பராமரிக்கும் பாரத்தையும் வைத்துவிட்டுப் போகிறேன். ஆ! ஐயோ!" என்றார்.

கருணா மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "எங்காவது வலிக்கிறதா என்ன? தவிட்டைச் சுட வைத்து ஒற்றடம் கொடுக்கிறேன். ஏன் ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறீர்கள்?" என்றாள்.

அவர் வேறு புறமாகத் திரும்பி, "ஒன்றும் செய்ய வேண்டிய அவசியமில்லை, கருணா! எங்கும் வலி இல்லை. தண்ணீரில் மூழ்குபவனைப்போல என் மனம் தைரியமிழப்பதை உணருகிறேன். வாழ்க்கை விளையாட்டு முடிந்து கொண்டிருக்கிறது. விளக்கு அணைந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறேன். எப்போது வாய் அடைத்துவிடுமோ, சொல்ல முடியாது. சொல்ல வேண்டியதை எல்லாம் இப்போதே சொல்லிவிட விரும்புகிறேன். அந்த எண்ணத்தை நான் ஏன் எடுத்துப் போகவேண்டும்? என்னுடைய ஒரு கேள்விக்கு விடை தருவாயா? கேட்கட்டுமா?" என்றார்.

கருணாவின் மனத்திலிருந்த பலவீனம் முழுதும், சோகம் முழுதும், வேதனை முழுதும் மறைந்து போயின. அவைகளின் ஸ்தானத்தில், மிருத்தியுவைக் கண்டு நகைக்க வல்லதும், விபத்துக்களாகிய பாம்புகளோடு விளையாட வல்லதுமாகிய ஆத்ம பலம் உதித்தது. ரத்தினங்கள்

இழைத்த, பஞ்சணைபோல் மிருதுவான உறையில் கூர்மை யான கத்தி ஒளிந்திருப்பது போலவும், நீரின் கோமளமான வெள்ளத்தில் எல்லையற்ற சக்தி மறைந்திருப்பது போலவும், பெண்மணியின் கோமள உள்ளத்தின்கண் ஸாஹஸமும் தைரியமும் மறைந்துள்ளன. கோபம் கத்தியை வெளியே இழுக்கச்செய்வது போலவும், விஞ்ஞானம் தண்ணீரின் சக்தியை வெளிப்படுத்துவது போலவும், காதல், பெண் மணியின் ஸாஹஸத்தையும் தைரியத்தையும் ஒளியுறச் செய்கிறது.

அவள் கணவனின் தலைமேல் கையை வைத்துக் கொண்டு, "கேளுங்களேன் அந்தக் கேள்வியை!" என் றாள்.

அவளுடைய மெல்லிய கரங்களின் ஸ்பரிசத்தை அநுப வித்துக்கொண்டே, "உன் சிந்தனைக்கேற்க என் வாழ்க்கை எப்படி இருந்தது? வாழ்த்துவதற்கு உரியதாயிருந்ததா? இதோ பார்: நீ எப்போதும் என்னிடமிருந்து எதையும் ஒளித்ததில்லை. இப்போதும் தெளிவாகவே சொல். உன் அபிப்பிராயத்தில் நான் என் வாழ்க்கைக்காகச் சிரிக்க வேண்டுமா, அல்லது அழவேண்டுமா?" என்றார் அவர்.

அவள் உல்லாஸத்துடன், "என் உயிரே! இந்தக் கேள்வியை ஏன் கேட்கிறீர்கள்? நான் எப்போதாவது உங்களைப் புறக்கணித்தது உண்டா? உங்கள் வாழ்க்கை தேவர்களின் வாழ்க்கையைப்போல் இருந்தது; தன்னல மற்றதாய், எதிலும் ஒட்டாததாய், ஆதர்சமாக விளங்கி யது. தடைகளினாலும் துன்பங்களினாலும் சலித்துப்போய், நான் எத்தனையோ தடவைகள் உங்களை ஸம்ஸாரத்தில் இழுக்க முயன்றேன். ஆனால் அப்போதுகூட, ஓர் உயர்ந்த ஆசனத்திலிருந்து உங்களை நான் வீழ்த்திக்கொண் டிருக்கி றேன் என்ற எண்ணம் எனக்கு உண்டாகாமலில்லை. நீங் கள் மாயையிலும் மோகத்திலும் சிக்குண்டிருந்தால், ஒரு வேளை என் மனத்துக்கு அதிக ஸந்தோஷம் உண்டாகி யிருக்கலாம். ஆனால் என் ஆத்மா இப்பொழுது அநுபவித் துக்கொண்டிருக்கும் பெருமிதமும் உல்லாஸமும் அப்போது

தோன்றியிரா. நான் எவனுக்காவது மிகப் பெரிய ஆசீர் வாதம் தர முடியுமானல், அது, அவனுடைய வாழ்க்கை உங்களுடையதைப் போல் இருக்கவேண்டும் என்பதே'' என்ருள்.

இதைச் சொல்லும்போது, கருணையின் ஒளியிழந் திருந்த முகமண்டலம், அவளுடைய ஆத்மா தெய்விகப் பொருளாகிவிட்டதோ என்று கூறும்படியாக, ஜோதி மயமாகப் பிரகாசித்தது. அவர் அவளைப் பெருமிதத்தோடு பார்த்து, "அவ்வளவுதான்; இப்போது எனக்குத் திருப்தி யாய் விட்டது, கருணை! இந்தக் குழந்தையின் வாழ்க்கை யைப்பற்றி இனி எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. நான் அதை இவைகளைக் காட்டிலும் அதிகத் திறமை வாய்ந்த கைகளில் விட்டுப்போக முடியாது. வாழ்க்கையின் இந்த உயர்ந்த லக்ஷ்யத்தை நீ எப்போதும் உன் முன்னே வைத்துக்கொண்டிருப்பாய் என்பது என் நம்பிக்கை. இனி நான் சாகத் தயாராயிருக்கிறேன்'' என்ருர்.

2

ஏழு வருஷங்கள் கழிந்தன.

குழந்தை பிரகாசன் இப்போது பத்து வயதுள்ள அழகிய சிறுவன். நல்ல பலசாலி; எப்போதும் சிரித்த முகம்; காண்பதற்கரிய ஒளியும், ஸாஹஸமும், மனத் திடமும் கொண்டவன்; பயத்தையே கண்டறி யாதவன். கருணையின் கொதிக்கும் உள்ளம் அவனைக் கண்டு தண்மை பெறும். உலகம் அவளைத் துர்ப்பாக்கிய வதி யென்றும் ஏழை யென்றும் சொன்னல் சொல்லட்டும். அவள் எப்போதும் விதியை நினைந்து அழுததில்லை. கண வன் வாழ்ந்த நாளில் தனக்கு உயிரினும் பிரியமாக இருந்த அந்த நகைகளை அவள் விற்ருள். அந்தப் பணத்தைக் கொண்டு சில பசுக்களும் எருமைகளும் வாங்கினள். மாடுகள் வைத்துக் காப்பது அவளுக்குப் புதிய தொழிலன்று. அதில் அவளுக்கு நல்ல பழக்கமுண்டு. அதையே தன் வாழ்க்கைக்குச் சாதனமாக வைத்துக்கொண்டாள். இந்த நாட்களில் சுத்தமான பால் கிடைப்பதேது? ஆகவே

அவள் விற்கும் பால் முழுதும் கையோடு கையாகச் செல வழிந்துவிடும்.

கருணைவுக்கு விடிய ஒரு ஜாமத்திலிருந்து இரவு ஒரு ஜாமம் வரையில் வேலை செய்யவேண்டியிருந்தது. ஆயினும் அவள் சந்தோஷமாயிருந்தாள். அவள் முகத்தில் நிராசை அல்லது ஏழைமையின் நிழல் படரவில்லை; திடச் சங்கற்பமும் ஸாஹஸமும் ஒளி வீசின. அவளுடைய ஒவ்வோர் அவயவத்தினின்றும் ஆத்ம கௌரவத்தின் ஜோதி பிரகாசித்தது. கண்களிலே கம்பீரமும், ஆழ்ந்ததும், எல்லையற்றதுமான ஒரு தெய்விக ஒளி இருந்தது. வேதனைகள் யாவும் - வைதவ்யத்தின் சோகமும், விதியின் இரக்கமற்ற சாட்டையடியும், எல்லாம் - அந்த ஒளியின் ஆழத்தில் மறைந்தன. பிரகாசன்மீது அவள் உயிர் வைத்திருக்கிறாள். அவளுடைய ஆனந்தம், அவள் விருப்பம், அவள் உலகம், அவள் ஸ்வர்க்கம் - எல்லாம் பிரகாசனுக்கு அர்ப்பணங்களாயின. ஆனால் அவன் எந்த உபத்திரவமும் செய்ய அவள் பார்த்துக்கொண் டிருக்கமாட்டாள். அவனுடைய ஒழுக்கத்தை மிகவும் கடுமையாகத் தணிக்கை செய்துவருகிறாள். அவள் பிரகாசனுக்குத் தாய் மட்டுமல்ல; தாய், தகப்பன் இருவரும் அவள்தான். அவளுடைய புத்திர ஸ்நேஹத்தில் தாயின் பரிவோடு கூடவே தகப்பனின் கடுமையும் கலந்துள்ளது. கணவனின் அந்திமச் சொற்கள் இப்போதும் அவள் காதுகளில் எதிரொலிக்கின்றன. அவள் முகத்தில் அன்று வீசிய அந்த ஆத்ம உல்லாஸமும், அன்று அவள் கண்களில் ஓடிய கர்வமயமான அந்தச் செவ்வரியும் இன்றும் அவளிடத்தே குடிகொண்டுள்ளன. கணவனைப் பற்றிய ஓயாச் சிந்தனை, அவள் கண்களில் ஆதித்தியனைப் பிரத்தியக்ஷமாக்கியது. அவர் எப்போதும் தன்னோடு இருப்பதாகவே அவள் உணருகிறாள். அவருடைய ஆத்மா தன்னை எப்போதும் காத்துக்கொண்டிருப்பதாக அவளுக்குத் தோற்றுகிறது. பிரகாசன் இளைஞனாகித் தகப்பன் சென்ற வழியைத் தொடர வேண்டுமென்பதே அவளுடைய மனப்பூர்வமான அபிலாஷை.

மாலை நேரம். ஒரு பிச்சைக்காரி வாசலில் வந்து பிச்சை கேட்டாள். கருணை அப்போது பசுமாடுகளுக்குத் தவிடு

வைத்துக்கொண் டிருந்தாள். பிரகாசன் வெளியே விளை யாடிக்கொண் டிருந்தான். குழந்தைதானே அவன்! ஏதோ வேடிக்கை செய்யவேண்டுமென்று தோன்றிற்று. வீட்டிற்குள் சென்று, ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் உமி எடுத்துக்கொண்டு வந்தான். பிச்சைக்காரி தன் பையை விரித்தாள். அவன் உமியைப் பையில் கொட்டிவிட்டு, கை தட்டி நகைத்துக்கொண்டே ஓடினன்.

பிச்சைக்காரி தீப்பறக்க விழித்து, "நல்ல புள்ளே தாண்டா நீ! என்னேண்டெயா விளையாட வர்றே? தாயி தகப்பனுங்க ஒனக்கு இதுதானு கத்துக் கொடுத்தாங்க? கொலத்தெ நல்லாத்தான் வெளங்கவெப்பே, போ!" என்று கத்தினள்.

கருணு அவள் பேச்சைக் கேட்டு வெளியே வந்து, "என்ன அம்மா, யாரைப்பற்றிச் சொல்லுகிருய்?" என்று கேட்டாள்.

பிச்சைக்காரி பையனைச் சுட்டிக் காட்டி, "இது ஒம் மவன்தானே? பாரு, கிண்ணத்துலே உமி கொண்ணுந்து என் பையிலே கொட்டிட்டு ஓடிட்டான். ஒரு கை கோதும மாவு இருந்திச்சு; அதுவும் மண்ணுயிடுச்சு. ஏளைங்களே இப்படியா வதெப்பாங்க? எப்பவும் யாரும் ஒரே நெலயிலே இருக்கமாட்டாங்க. மனுசனுக்கு எப்பவும் கொர்வம் ஆவாது, தாயே!" என்ருள்.

கருணு கடுமையான குரலில், "பிரகாச்!" என்று கூப்பிட்டாள்.

பிரகாசன் வெட்கப்படவில்லை. அபிமானத்தால் தலை நிமிர, வந்தான். "இவள் ஏன் நம் வீட்டில் பிச்சை கேட்க வருகிருள்? ஏதாவது வேலைசெய்து பிழைப்பதற்கென்ன?" என்ருன்.

கருணு அவனுக்குப் புத்தி புகட்ட முயன்று, "வெட் கமாயில்லை உனக்கு? மேலும் பேச்சு வேறு?" என்ருள்.

"வெட்கமென்ன? இவள் ஏன் தினமும் பிச்சை கேட்க வருகிருள்? நம் வீட்டில் ஏதாவது சும்மா வரு கிறதா?"

“உனக்கு ஒன்றும் கொடுக்க இஷ்டமில்லாவிட்டால் நேரே சொல்லவேண்டும். ஏன் இந்தத் துஷ்டத்தனம் செய்தாய்?”

“இல்லாவிட்டால் அவள் பழக்கம் எப்படி விடும்?”

கருணை கோபத்துடன், “இனிமேல் நீ என் கையால் அடிபடுவாய்” என்றாள்.

“நான் ஏன் அடிபட வேண்டும்? நீ என்னை ஒரு காரணமும் இல்லாமல் வலுக் கட்டாயமாக அடிப்பாயா? வேறு தேசங்களில் யாராவது இப்படிப் பிச்சை கேட்டால், உடனே கைது செய்து அவர்களைக் கொண்டுபோவார்கள். அங்கே இந்த மாதிரி இவர்களுக்குச் சாதகமாக யாரும் பேசமாட்டார்கள்.”

“முடமாயிருந்தால் எப்படி வேலைசெய்ய முடியும்?”

“அப்படியிருந்தால் எங்காவது போய் முழுகிச் சாவது! ஏன் உயிரோடு இருக்கவேண்டும்?”

கருணை பதில் சொல்லவில்லை. பிச்சைக்காரிக்குக் கோதுமை மாவும், பருப்பும் கொடுத்து அனுப்பினாள். ஆனால், பிரகாசனின் குதர்க்கம் அவள் உள்ளத்தில், கட்டியைப் போல, வலியை உண்டாக்கியது. ‘இவன் இந்தத் துஷ்டத்தனத்தை, இந்தத் துண்டைத்தனத்தை, இந்த வணக்கமின்மையை எங்கே கற்றான்?’: அன்றிரவுகூட இதே எண்ணந்தான் அவளை அடிக்கடி வாட்டியது.

கிட்டத்தட்ட பாதி இரவாகியிருக்கும். திடீரென்று பிரகாசனின் தூக்கம் கலைந்தது. அவன் கண் விழித்துப் பார்த்தபோது ராந்தல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கருணை உட்கார்ந்து அழுதுகொண் டிருந்தாள். அவன் எழுந்து உட்கார்ந்தான்; “அம்மா, நீ இன்னுமா தூங்கவில்லை?” என்றான்.

அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு, “எனக்குத் தூக்கம் வரவில்லை. நீ ஏன் விழித்துக்கொண்டாய்? தாகமாயிருக்கிறதா?” என்றாள்.

"இல்லே அம்மா. ஏனே தூக்கம் போய்விட்டது. இன்று நான் பெரிய குற்றம் செய்தேன், அம்மா!"

கருணை அவன் முகத்தை அன்போடு பார்த்தாள்.

"நான் இன்று அந்தப் பிச்சைக்காரியை மிகவும் உபத்திரவப் படுத்தினேன், அம்மா! என்னை மன்னித்து விடு. இனி எப்போதும் இந்த மாதிரி துஷ்டத்தனம் செய்யமாட்டேன்" என்று சொல்லி, அவன் அழலானன். கருணை அவனை அன்போடு அணைத்துக்கொண்டு, கன்னங்களில் முத்தமிட்டு, "குழந்தாய், நீ என்னை ஸந்தோஷப் படுத்துவதற்காகச் சொல்லுகிருயா, அல்லது உண்மையிலேயே உனக்குப் பச்சாத்தாபமா யிருக்கிறதா?" என்று கேட்டாள்.

பிரகாசன் விக்கிக்கொண்டே, "இல்லே, அம்மா! எனக்கு உள்ளூற வருத்தமாயிருக்கிறது. இனிமேல் அந்தப் பிச்சைக்காரி வந்தால் நான் அவளுக்கு நிரம்பக் காசுகள் கொடுப்பேன்" என்ருன்.

கருணையின் உள்ளம் குளிர்ந்தது. ஆதித்தியனே தன் எதிரே நின்று குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்து, "கருணை, மனங் கலங்காதே. பிரகாசன் தன் தந்தையின் பெயரை விளங்க வைப்பான். உன் எண்ணங்கள் யாவும் நிறைவேறும்" என்று சொல்வது போலத் தோற்றியது அவளுக்கு.

3

ஆனல், பிரகாசனின் பேச்சுக்கும் செய்கைக்கும் சம்பந்த மில்லாமலிருந்தது. நாட்கள் செல்லச் செல்ல அவனுடைய ஒழுக்கத்தின் இந்த லக்ஷணம், பிரத்தியக்ஷமாகிக்கொண்டே போயிற்று. அவன் நல்ல புத்திசாலி தான்; சர்வகலாசாலேயிலிருந்து அவனுக்கு உபகாரச் சம்பளங்கள் கிடைத்துவந்தன. கருணையும் அவனுக்கு யதேஷ்டமான பண உதவி செய்துவந்தாள். இவ்வளவும் இருந்தும் அவனுக்குச் செலவுக்குப் போதவில்லே. சிக்கனத்தைப்பற்றியும், எளிய வாழ்க்கையைப் பற்றியும்

அவன் பாண்டித்தியம் நிரம்பிய பிரசங்கங்கள் செய்வான்; ஆனால் அவனுடைய நடையுடை பாவனைகள் 'பாஷனி'ன் கண்மூடிப் பக்தர்களைக் காட்டிலும் எள்ளளவும் குறைந்தனவாக இல்லை. தன் பெருமையை வெளிக்காட்டும் டம்பம் அவனிடத்தில் விடாது குடிகொண்டது. அவனுடைய மனத்துக்கும் புத்திக்குமிடையே ஓயாத த்வந்த்வ யுத்தம் நிகழ்ந்துவந்தது. அவன் மனம் நாட்டினரின் பக்கமாகவும், புத்தி அவன் பக்கமாகவும் இருந்தன. புத்தி மனத்தை அடக்கியது. அதன் முன்பு மனத்துக்கு ஒன்றும் சாய வில்லை. நாட்டுத் தொண்டு உவர் நிலத்தைப் போன்றது. அங்கே கிடைக்கும் மிகப் பெரிய பரிசு, கௌரவமும் கீர்த்தியுமே. ஆனால் அதுவும் ஸ்திரமானதல்ல; வாழ்க்கையில் செய்த மகத்தான தியாகங்களுக் கெல்லாம் ஒரு க்ஷணத்திலே மதிப்பில்லாமல் போகலாம், அவ்வளவு நிலையற்ற பொருள் அது. ஆதலால், அவன் மனம், தடுக்கவியலா வேகத்தோடு மிதப்பான வாழ்க்கையின் பக்கமே சென்றது. வரவர அவன் தியாகத்தையும் புலன் அடக்கத்தையும் வெறுக்கும் தூரத்துக்கு, அது வந்துவிட்டது. சீர்கெட்ட நிலையையும் ஏழைமையையும் அவன் தாழ்வனவாகக் கருதலானான். அவனிடத்தில் உள்ளமில்லை; உணர்ச்சி இல்லை; மூளை ஒன்றுதான் இருந்தது. மூளைக்குத் துன்பம் ஏது? இரக்கம் ஏது? அங்கே தர்க்கங்களும், பேராவல்களும், மனக்கோட்டைகளுமே உள்ளன.

ஸிந்து மாகாணத்தில் வெள்ளம் அடித்தது. ஆயிரக் கணக்கானவர்கள் நாசமானார்கள். காலேஜார் அங்கே ஒரு தொண்டர் படையை அனுப்பினர். பிரகாசனின் மனத்தில், 'போகலாமா, வேண்டாமா?' என்ற த்வந்த்வம் எழுந்தது. அத்தனை நாட்கள் அவன் பரீக்ஷைக்குப் படித்தானானல், முதல் வகுப்பில் தேறலாம். தொண்டர் படை போகும் சமயத்தில் அவன், 'எனக்கு உடம்பு சரியில்லை' என்று சாக்குப் போக்குச் சொன்னான். இதைக் கேள்வியுற்ற கருணா, "ஸிந்து மாகாணத்துக்கு நீ போகாதது எனக்கு வருத்தமாயிருக்கிறது. உடம்பு சரியில்லாமலிருந்தும் நீ அங்கே போயிருக்கலாம். தொண்டர் படையில் டாக்டர்களுங்கூட இருக்கிறார்களே!" என்று எழுதி

யிருந்தாள். பிரகாசன் அந்தக் கடிதத்துக்குப் பதிலே எழுதவில்லை.

ஒரிஸ்ஸாவில் பஞ்சம் வந்தது. ஜனங்கள் ஈக்களைப் போலச் செத்தார்கள். பஞ்சத்தால் வாடியவர்களுக்கு உதவி செய்ய, காங்கிரஸ் ஒரு 'மிஷனை'த் தயார் செய்தது. அப்போதுதான் காலேஜார் சரித்திர மாணவர்களைச் சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சி செய்வதற்காக இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்தனர். "நீ ஒரிஸ்ஸாவுக்குப் போ" என்று கருணை பிரகாசனுக்கு எழுதினாள். ஆனால் அவனுக்கு இலங்கைக்குப் போக ஆவலாயிருந்தது. அவன் சில நாட்கள் இதே யோசனையில் ஆழ்ந்திருந்தான். கடைசியில் இலங்கை ஒரிஸ்ஸாவை வென்றது. கருணை இந்தத் தடவை அவனுக்கு ஒன்றுமே எழுதவில்லை. பேசாமல் அழுதுகொண்டிருந்தாள்.

இலங்கையிலிருந்து திரும்பி வந்ததும், பிரகாசன் லீவில் வீட்டுக்கு வந்தான். கருணை அவனோடு அதிகமாக நெருங்கிப் பழகவில்லை. அவன் வெட்கமடைந்து, இனி ஏதாவது சந்தர்ப்பம் கிடைத்தால் அம்மாவைத் திருப்திப் படுத்த வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். இந்தத் தீர்மானத்தோடு அவன் காலேஜுக்குத் திரும்பினான். அங்கே போனதும் பரீக்ஷைக் கவலை அவனை வாட்டியது. கடைசியில் பரீக்ஷை நாட்களும் வந்தன. ஆனால் பரீக்ஷையிலிருந்து ஓய்வு கிடைத்த பின்பும் அவன் வீடு செல்லவில்லை. காலேஜிலிருந்த ஒரு புரொபஸர் காஷ்மீருக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யப் போனார். பிரகாசனும் அவரோடு கூடவே காஷ்மீருக்குப் புறப்பட்டான்.

பரீக்ஷை முடிவு வெளியானதும், தான் முதல்வனாகத் தேறியிருப்பதைக் கண்ட பின்புதான் அவனுக்கு வீட்டு ஞாபகம் வந்தது. தான் உடனே புறப்பட்டு வருவதாகத் தாய்க்குக் கடிதம் எழுதினான். அவளை ஸந்தோஷப்படுத்துவதற்காக, அதில் அவன் தேச சேவையைப் பற்றியும் சில வாக்கியங்கள் எழுதினான்: "இனி நான் உன் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தயாராயிருக்கிறேன். நான்

உபாத்திமைத் தொழில் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். இதே எண்ணம் கொண்டுதான் நான் இந்தத் தனிப்பட்ட ஸ்தானத்தைப் பெற்றேன். நம் தலைவர்கள்கூட, காலேஜ் புரொபஸர்களுக்குத்தான் மரியாதை செய்கிறார்கள். இன்னுங்கூட இந்தப் பட்டங்களின் மோகத்திலிருந்து அவர்கள் விடுபடவில்லை. இந்தப் பட்டத்தைப் பெற்று, நான் வாஸ்தவமாகவே என் தொண்டின் பாதையிலிருந்த ஒரு தடையை நீக்கிக் கொண்டேன். நம் தலைவர்கள் கூட, பட்டங்களுக்குக் கொடுக்கும் அவ்வளவு மதிப்பு யோக்கியதாம்சங்களுக்கும், உற்சாகத்துக்கும், உழைப்புக் கும் தருவதில்லை. இனி எல்லோரும் என்னை மரியாதையாக நடத்துவார்கள். முன்பு கேட்டிருந்தால்கூடக் கிடைத்திராத பொறுப்பான வேலைகளை இப்போது என்னிடம் ஒப்பு விப்பார்கள்.''

கருணாவின் ஆசைக்கொடி மீண்டும் தளிர்த்தது.

4

காலேஜ் திறந்தவுடனே பிரகாசனுக்கு ரிஜிஸ்ட்ரா ரிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில், அவன் மேல்படிப்புக்காக இங்கிலாந்து செல்லும் பக்ஷத்தில், சர்க்கார் உபகாரச் சம்பளம் கொடுக்கத் தீர்மானித்திருப் பதாகக் கண்டிருந்தது. அவன் அந்தக் கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, ஆனந்தம் பொங்க, அன்னை யிடம் சென்று, "அம்மா, நான் இங்கிலாந்து சென்று படிப்பதற்காகச் சர்க்காரிலிருந்து உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கிறது'' என்றான்.

கருணா உதாஸீனமாக, "அப்படியானால் உன் யோசனை என்ன?'' என்று கேட்டாள்.

"என் யோசனையா? இந்த மாதிரியான சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது எவன்தான் அதைக் கைவிடுவான்?''

"நீ தொண்டர் படையில் சேருவதாயிருந்தாயே?''

"தொண்டர் படையில் சேருவதுதான் தேசத் தொண்டு என்று நீ நினைக்கிறாயா? நான் இங்கிலாந்தி

லிருந்து திரும்பிவந்த பின்பும் தொண்டு செய்யலாமே, அம்மா. வாஸ்தவத்தில் ஒரு மாஜிஸ்டிரேட் தன் தேசத்துக்கு எவ்வளவு உபகாரம் செய்ய முடியுமோ, அவ்வளவு உதவி ஆயிரம் தொண்டர்கள் சேர்ந்துகூடச் செய்ய முடியாது. நான் 'ஸிவில் ஸர்விஸ்' பரீக்ஷைக்குப் போவேன். அதில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

கருணை திடுக்கிட்டு, "அப்படியானல் நீ மாஜிஸ்டிரேட் ஆகப் போகிருயா?" என்று கேட்டாள்.

"தொண்டையே நோக்கமாகக் கொண்ட மாஜிஸ்டிரேட் ஒருவன், ஆயிரம் தலைவர்களைக் காட்டிலும் அதிக உபகாரம் செய்ய முடியும். பத்திரிகைகளில் அவனைப் பற்றி நீண்ட புகழுரைகள் அச்சிட்டு வரா; அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு ஜனங்கள் கைகொட்டமாட்டார்கள்; அவர்கள் அவனுடைய ஊர்வல வண்டியை இழுக்கமாட்டார்கள்; காலேஜ் மாணவர்கள் அவனுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கமாட்டார்கள்; ஆனல், உண்மையான ஊழியத்தை மாஜிஸ்டிரேட்தான் செய்ய முடியும்."

அவள் அவன் பேச்சைத் தடுத்து, "ஆனல் இந்த மாஜிஸ்டிரேட்கள்தானே தேசத் தொண்டர்களுக்குத் தண்டனை விதிக்கிருர்கள்? அவர்கள்மீது துப்பாக்கி குண்டுகளைப் பிரயோகம் செய்கிருர்கள்?" என்று கேட்டாள்.

"மாஜிஸ்டிரேட்டின் உள்ளத்தில் பரோபகார எண்ணம் இருந்தால், துப்பாக்கி குண்டுகளைச் செலுத்தியும் பிறர் செய்ய முடியாத வேலைகளை அவன் நல்லதனமாகச் செய்து முடிப்பான்."

"நான் இதை ஒப்புக்கொள்ள மாட்டேன். அரசாங்கம் தன் வேலைக்காரர்களுக்கு அவ்வளவு சுதந்திரம் கொடுப்பதில்லை. அது ஒரு நீதி ஏற்படுத்துகிறது. ஒவ்வோர் அரசாங்க வேலைக்காரனும் அதன்படி நடக்க வேண்டும். 'அரசாங்கம் நாளுக்குநாள் அதிகக் கட்டுப்பாடும் திட்முமுள்ளதாக ஆகவேண்டும்' என்பதே சர்க்காரின் முதல் நீதி. இதற்காகச் சுதந்திர உணர்ச்சிகளை

அடக்க வேண்டிய தேவை ஏற்படும். எந்த மாஜிஸ்டிரேட்டாவது இந்த நீதிக்கு விரோதமாக வேலை செய்தால், அவன் மாஜிஸ்டிரேட்டாக இருக்க முடியாது. உன் தகப்பனருக்கு ஒன்றுமில்லாத ஒரு சிறிய விஷயத்துக்காக மூன்று வருஷச் சிறைத் தண்டனை அளித்தவன் இந்திய மாஜிஸ்டிரேட்தான். அந்தத் தண்டனை அவர் உயிரைப் பறித்தது. பிரகாச், என் பேச்சைக் கேள். அரசாங்கப் பதவிகளில் மோகம் வைக்காதே. நீ அதிகாரியாகித் தடபுடலாக வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும், சாதாரண உணவு உண்டு, பருமனான துணிகள் உடுத்து, நம் நாட்டுக்குத் தொண்டு செய்வது எனக்குச் சம்மதம். என்றைத் தினம் நீ அதிகாரியின் நாற்காலியில் உட்காருகிறாயோ, அன்றையிலிருந்து உன் மூளையும் அதிகாரிகளின் மூளைகளைப்போல் ஆகிவிடும் என்பதைத் தெரிந்து கொள். அதிகாரிகளிடையே உனக்கு நல்ல பெயரும், 'பிரமோஷன்' களும் வேண்டுமென்றுதான் நீ விரும்புவாய். ஒரு சாதாரண உதாரணம் சொல்லுகிறேன், கேள் : ஒவ்வொரு பெண்ணும் கன்னிகையாகப் பிறந்த வீட்டில் இருக்கும் வரையில் அதைத் தன் வீடென்றே நினைக்கிறாள். ஆனால், அவள் என்றைத் தினம் புக்ககம் போகிறாளோ, அன்றையிலிருந்து தன் வீட்டைப் பிறருடைய வீடென்றே கருத ஆரம்பிக்கிறாள். தாய்-தந்தையர், அண்ணன்-தங்கைகள் எல்லாரும் முன்பிருந்த அவர்களே ; ஆனால் அந்த வீடு அவளுடையதாக இருப்பதில்லை. இதுதான் உலக வழக்கம்.''

பிரகாசன் எரிச்சலுடன், "அப்படியானால் நான் வாழ்நாள் முழுதும் நாலா பக்கமும் உதைகள் வாங்கிக்கொண்டு அலைய வேண்டுமென்று நீ விரும்புகிறாயா?'' என்றான்.

கருணா அவனைக் கடுமையாகப் பார்த்து, "உதைகள் வாங்கிக்கொண்டானாலும், ஆத்மா சுதந்திரமாக இருக்க முடியுமானால், உதைகள் வாங்குவது நல்லதென்றே நான் சொல்லுவேன்'' என்றாள்.

கேள்வியில் நிச்சயம் தோன்றும்படியாக, “அப்படி யானல் இதுதான் உன் இஷ்டமா?” என்று அவன் கேட்டான்.

அவளும் அதே மாதிரியான குரலில், “ஆம், இதுதான் என் இஷ்டம்” என்ருள்.

பிரகாசன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. எழுந்து வெளியே போனன். உடனே ரிஜிஸ்ட்ராருக்கு மறுப்புக் கடிதம் எழுதி அனுப்பிவிட்டான். ஆனல் அந்த க்ஷணத்திலிருந்து தன் தலையில் ஆபத்து வந்து உட்கார்ந்துகொண்டதுபோல அவன் நடந்துகொண்டான். பற்றற்றவனய், ஆசையிழந்தவனய், அவன் ஸதா தன் அறையில் விழுந்து கிடப்பான்; எங்கும் உலாவப் போகமாட்டான்; யாருடனும் கலந்துகொள்ள மாட்டான். தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உள்ளே வருவான்; நாலு கவளம் சாப்பிட்டுவிட்டுப் போவான். இப்படியாக ஒரு மாதம் கழிந்தது. அவன் முகத்தில் முன்பிருந்த அந்தச் செம்மை இல்லை; அந்த ஒளி இல்லை. கண்கள், அநாதைகளின் முகத்தைப்போல், பரிதாபகரமாக இருந்தன. உதடுகள் சிரிப்பை மறந்தன. அந்த மறுப்புக் கடிதத்தோடு கூடவே அவனுடைய சைதன்யம் முழுதும், துறுதுறுப்பு முழுதும், ரஸிகத்தன்மை முழுதும் – யாவும் போய்விட்டனவோ என்று சொல்லும்படியாக இருந்தது. கருணா அவனுடைய மனேபாவத்தை அறிந்திருந்தாள். அவனுடைய துன்பத்தை மறக்கச் செய்ய முயன்ருள். ஆனல், கோபித்துக் கொண்ட தெய்வம் பிரஸன்னமாவதாகவே இல்லை!

கடைசியில் ஒரு நாள் அவள் பிரகாசனிடம், “மகனே, உனக்குச் சீமைக்குப் போகவேண்டுமென்று தீர்மானமாயிருந்தால், புறப்பட்டுப் போ. நான் உன்னைத் தடுக்கவில்லை. முன்பு உன்னைத் தடுத்ததற்காக வருந்துகிறேன். உனக்கு இவ்வளவு துன்பமுண்டாகுமென்று தெரிந்திருந்தால், தடுத்தே இருக்கமாட்டேன். தேசத் தொண்டில் நீ முனைந்திருப்பது கண்டு உன் தகப்பனரின் ஆத்மா மகிழ்ச்சியுறும் என்ற ஒரே எண்ணத்தினல்தான் தடுத்தேன்.

அவர் போகும்போது இந்த உயில்தான் செய்துவைத்துப் போனார்" என்றாள்.

பிரகாசன் தாழ்ந்த குரலில் உணர்ச்சியற்று, "இனி நான் எப்படிப் போவது? மறுப்புக் கடிதம் எழுதியாயிற்று. இனி எனக்காக எவன் காத்துக்கொண்டிருப்பான்? வேறொரு மாணவனைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். இனி மேல் நான் அங்கே செய்யவேண்டியதுதான் என்ன மிச்ச மிருக்கிறது? உன் இஷ்டப்படி கிராமம் கிராமமாகத் திரிந்தால், அதுவே சரி" என்று பதில் சொன்னான்.

கருணாவின் கர்வம் சிதைந்தது. இந்த அநுமதியைக் கொடுத்து அவள் தன் தடை வேலையை முடிக்க விரும்பினாள். ஆனால் அவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. "இன்னும் யாரையும் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள். 'நான் போகத் தயார்' என்று எழுது" என்றாள்.

"இனி ஒன்றும் நடக்காது. ஜனங்கள் பரிகாசம் செய்வார்கள். என் வாழ்க்கையை உன் எண்ணத்துக்கு அநுகூலமாகச் சமைத்துக்கொள்வதென்று நிச்சயம் செய்துவிட்டேன்" என்று அவன் சினத்தோடு சொன்னான்.

"நீ இந்தத் தீர்மானத்தைச் சுத்தமான மனத்துடன் செய்திருந்தால், இப்படி இருக்கமாட்டாய். நீ என்னிடம் சத்தியாக்கிரகம் செய்கிறாய். உன் மனத்தை அடக்கி, என்னை உன் பாதையிலுள்ள முள் என்று கருதி, என் எண்ணத்தை நீ நிறைவேற்றினாலும் அதனால் என்ன ஆகப்போகிறது? உன் மனத்தில் தொண்டு செய்யும் பாவனை இயற்கையாக, தானாகவே, தோன்றியிருந்தால், அப்போது நான் அதைச் சரியென்று ஒப்புக்கொண்டிருப்பேன். இன்றே நீ ரிஜிஸ்ட்ராருக்குக் கடிதம் எழுது."

"இனி நான் எழுத முடியாது."

"அப்போது என்ன, இதே சோகத்தில் கரைந்து கொண்டிருக்கப் போகிறாயா?"

"வேறு வழி இல்லை."

பிறகு கருணை ஒன்றும் சொல்லவில்லை. சற்று நேரங் கழித்து அவள் எங்கோ போவதை அவன் கண்டான். ஆயினும் அவன் ஒன்றும் பேசவில்லை. கருணை சாதாரணமாகவே வெளியே போய் வருவது வழக்கந்தான். ஆனல் இருட்டிய பின்பும் அவள் வராதுபோகவே, அவனுக்குக் கவலையுண்டாயிற்று. 'அம்மா எங்கே போனுள்?' என்ற கேள்வி அடிக்கடி அவன் மனத்தில் எழுந்தது.

பிரகாசன் இரவு முழுதும் வாசலில் உட்கார்ந்திருந்தான். அவன் மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் தோன்றின. புறப்படும்போது கருணையின் முகம் சோர்ந்திருந்ததும், அவள் கண்கள் சிவந்திருந்ததும் அவன் நினைவுக்கு வந்தன. இந்த விஷயங்கள் அப்போது ஏன் அவன் கண்ணில் படவில்லை? அவன் ஏன் அப்போது தன்னலத்தினுல் குருடனகி யிருந்தான்?

ஆம், இப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது: அம்மா தூய வெண்மையான உடைகள் அணிந்திருந்தாள். அவள் கையில் குடைகூட இருந்தது. ஆகவே அவள் எங்காவது வெகு தூரம் போயிருப்பாளா? யாரைக் கேட்பது? ஏதோ ஓர் ஆபத்தை நினைந்து அச்சமுற்று அவன் அழலானுன்.

ஆவணிமாதத்து இருட்டு; பயங்கரமான இரவு. கருத்த முகிற்கணங்கள், பயங்கரமான கனவுகளைப் போல, ஆகாயத்தில் சூழ்ந்திருந்தன. பிரகாசன் அடிக்கடி ஆகாயத்தை நோக்கினுன். கருணை அந்த மேகமாலைகளினிடையே ஒளிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிருள் என்று அவன் கருதினுன் போலும்!

அவன் யோசிக்கலானுன்: 'பொழுது விடிந்ததுமே அம்மாவைத் தேடப் புறப்படுவேன்; ஒருவேளை அவள்....'

யாரோ கதவைத் தட்டினுர்கள். பிரகாசன் ஓடிப் போய்க் கதவைத் திறந்தான். பார்த்தால், கருணை நிற்கிருள்! அவளுடைய முகமண்டலம், இன்றுதான் அவளுடைய மாங்கல்யம் போய்விட்டது போலவும், இனி அவளுக்கு உலகத்தில் யாருமே இல்லைபோலவும், அவள் நதிக்கரையில் நின்றுகொண்டு, ஒன்றும் செய்யமுடியாதவளாய், பாரம் நிரம்பிய தன் படகு ஆற்றில்

மூழ்கிப் போவதைப் பார்த்துக் கொண்டிருப்பது போலவும், அவ்வளவு களையிழந்ததாக - அவ்வளவு கருணை நிரம்பியதாக - இருந்தது.

பிரகாசன் அதைரியத்துடன், "எங்கே அம்மா போயிருந்தாய்? வெகு நேரமாய்விட்டதே?" என்று கேட்டான்.

அவள் தரையை உற்று நோக்கியவண்ணம், "ஒரு வேலையாகப் போயிருந்தேன். நேரமாய்விட்டது" என்றாள்.

இதைச் சொல்லிவிட்டு பிரகாசன் முன்பு அவள் ஒரு மூடிய கவரை விட்டெறிந்தாள். அவன் ஆவலுடன் கவரை எடுத்தான். மேலே காலேஜின் முத்திரை இருந்தது. உடனே கவரைத் திறந்து படித்தான். அவன் முகத்தில் மெல்லிய செம்மை படர்ந்தோடியது. "இது எப்படி அம்மா, உனக்குக் கிடைத்தது?" என்று கேட்டான்.

"உன் ரிஜிஸ்ட்ராரிடமிருந்து வாங்கிவந்தேன்."

"நீ அங்கே போயிருந்தாயா?"

"வேறு என்ன செய்வது?"

"நேற்று நீ போகும்போது ரெயிலுக்குப் பொழுது இல்லையே?"

"'டாக்ஸி' வைத்துக்கொண்டேன்."

பிரகாசன் ஒரு கணம் மௌனமாக நின்றான். அவன் நெஞ்சையடைக்கும் குரலில், "உனக்கு இஷ்டமில்லாத போது என்னை ஏன் அனுப்புகிறாய்?" என்றான்.

கருணை விரக்தியாக, "உனக்குப் போக ஆவலாயிருக்கிறதே என்றுதான். உன்னுடைய இந்தப் பஞ்சை வேஷத்தை என்னால் பார்க்க முடியவில்லை. என் வாழ்க்கையின் இருபது வருஷங்களை உன் நன்மையை விரும்பியே அர்ப்பணம் செய்தேன். இப்போது உன் மனக் கோட்டையைத் தகர்க்கமாட்டேன். உன் பயணம் வெற்றிகரமாக வேண்டும் என்பதே என் மனப்பூர்வமான கோரிக்கை" என்றாள்.

அவள் நெஞ்சடைத்தது; மேலே அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

5

பிரகாசன் அன்றையிலிருந்தே பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலானான். கருணாவிடம் இருந்த பணம் முழுதும் செலவழிந்தது. கொஞ்சம் கடனும் வாங்கவேண்டி வந்தது. புது 'ஸூட்டு'கள் தைக்கப்பட்டன; 'ஸூட் கேஸ்'கள் வாங்கப்பட்டன. பிரகாசன் தன் பெருமையிலேயே மூழ்கியிருந்தான். ஒரு சமயம் ஒரு வஸ்து வேண்டுமென்பான்; இன்னொரு சமயம் இன்னொன்று வேண்டுமென்பான்.

இந்த ஒரு வாரத்தில் அன்னை எவ்வளவு இளைத்துப் போயிருக்கிறாளென்பதும், அவள் கூந்தலில் எவ்வளவு வெண்மை படர்ந்துவிட்டதென்பதும், அவள் முகத்தில் எத்தனை சுருக்கங்கள் விழுந்துவிட்டன என்பதும், அவன் கண்களுக்குத் தென்படவே இல்லை. இங்கிலாந்தின் காட்சிகளே அவன் கண்களில் இடங்கொண்டிருந்தன. மனக்கோட்டை அவன் கண்களுக்குத் திரை போட்டது.

அவன் புறப்படும் நாள் வந்தது. இன்று பல நாட்களுக்குப் பின்பு வெயில் காய்கிறது. கருணா கணவனின் பழந்துணிகளை வெளியே எடுத்துக்கொண்டிருந்தாள். அவருடைய துப்பட்டியும், கதர்ச் சட்டையும், நிஜாரும், போர்வையும் இதுவரையில் பெட்டியில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வருஷமும் அவள் அவைகளை வெயிலில் உலர்த்தித் தட்டி மடித்து, மீண்டும் பெட்டியில் வைப்பது வழக்கம்.

கருணா இன்று மறுபடியும் அவைகளை எடுத்தாள்; வெயிலில் உலர்த்தி மீண்டும் உள்ளே வைப்பதற்காக அல்ல, ஏழைகளுக்குக் கொடுப்பதற்காக. இன்று அவளுக்குக் கணவன்மீது அசாத்தியக் கோபம். ஆதித்தியனுக்கு வெகு நாளைய கூட்டாளிகளாயிருந்து, அதன் பின்பு இன்றுவரையில் இருபது வருஷங்களாகக் கருணாவின் ஆராதனைக்குப் பாத்திரங்களாயிருந்த அந்தச் செம்பும், கயிறும், கடிகாரமும் இன்று முற்றத்தில் வீசி எறியப்பட்டன. வருஷக் கணக்காக ஆதித்தியனின் தோள்

வாகனத்தில் ஏறியிருந்த அந்த 'ஜோல்னு'ப் பை இன்று குப்பையில் கொண்டு போடப்பட்டது. இருபது வருஷங்களாகக் கருணை எந்தப் படத்தின் முன்பு தலைகுனிந்து, மலர் தூவி, நைவேத்தியமிட்டு, அதை வழிபட்டு வந்தாளோ, அந்தப் படம் இன்று சிறிதும் இரக்கமின்றித் தரையில் எறியப்பட்டிருந்தது. கணவனின் எந்த நினைவுச் சின்னத்தையும் அவள் இனிமேல் தன் வீட்டில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. சோகத்தினுலும் நிராசையினுலும் அவள் உள்ளம் பிளவுபட்டிருக்கிறது. கணவனைத் தவிர வேறு யார்மீது அவள் தன் கோபத்தை இறக்குவது? 'நம்மைச் சேர்ந்தவர்' என்று அவளுக்கு யார் இருக்கிருர்கள்? யாரிடம் அவள் தன் மனத் துன்பத்தைக் கூறுவது? யாருக்குத் தன் ஹ்ருதயத்தைப் பிளந்து காட்டுவது? அவர் இருந்தால், இன்று பிரகாசன் அடிமைத் தளையைக் கழுத்தில் போட்டுக்கொண்டு இப்படித் தலைகால் தெரியாமல் குதிப்பானு? 'ஆதித்தியனும் இந்தச் சந்தர்ப்பத்தில் வருந்துவதைத் தவிர வேறென்றும் செய்ய முடியாது' என்பதை அவளுக்கு யார் சொல்வது?

பிரகாசனின் நண்பர்கள் அன்று அவன் சீமைக்குப் புறப்படுவதை முன்னிட்டு விருந்து வைத்தார்கள். அவன் அங்கிருந்து சாயங்காலம் பல நண்பர்களுடன் 'காரி'ல் வந்தான். அவனுடைய சாமான்கள் 'காரி'ல் ஏற்றப்பட்டன. அவன் உள்ளே சென்று தாயிடம், "அம்மா, நான் போய் வருகிறேன். பம்பாய்க்குப் போனதும் கடிதம் எழுதுவேன். என் ஆணையாக நீ அழக்கூடாது. என் கடிதங்களுக்கு அடிக்கடி பதில் கொடுத்துக்கொண்டிரு" என்ருன்.

பிணத்தை வெளியே எடுத்துவரும்போது உறவினர்கள் தைரியமிழந்து, அவர்கள் தடுத்துவைத்திருந்த கண்ணீர் பலபலவென்று உதிர, உள்ளத்தில் சோக அலைகள் எழும்புவதுபோன்ற நிலையிலே அப்போது கருணை இருந்தாள். அவள் நெஞ்சத்தில், 'ஐயோ, ஐயோ!' என்ற ஒரு கூக்குரல் எழுந்தது. அது அந்தப் பலவீன ஆத்மாவின் ஒவ்வோர் அணுவையும் நடுங்கச் செய்தது. தன் கால்கள் தண்ணீரில் வழுக்கி, தான் அலைகளில் மிதப்பதுபோல

அவளுக்குத் தோற்றியது. அவள் வாயிலிருந்து ஒரு துன்பச் சொல்லோ ஓர் ஆசி மொழியோ வெளிவர வில்லை. பிரகாசன் அவள் கால்களில் விழுந்தான்; கண்ணீரினல் தாயின் அடிகளை அலம்பினான்; பின்பு வெளியே வந்தான். கருணை கற்சிலைபோல நின்றுகொண்டிருந்தாள்.

இடையன் வந்து, "அம்மா, அண்ணாத்தெ மேலச் சீமைக்கி போயிட்டாரு! போற பொயுதிக்கி சும்மா அயுதுக்கினு இருந்தாரு" என்று சொன்னபோதுதான் அவள் சமாதி கலைந்தது. பார்த்தாள். எதிரே யாரும் இல்லை. வீட்டில் சாவு போன்ற நிச்சப்தம் படர்ந்திருந்தது. அவள் இதயத் துடிப்பே நின்றுவிட்டதுபோ லிருந்தது.

திடீரென்று கருணையின் பார்வை மேலே சென்றது. ஆதித்தியன் தமது மடியில் பிரகாசனின் உயிரற்ற உடலை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருப்பதை அவள் கண்டாள்; மூர்ச்சித்து விழுந்தாள்.

6

கருணை உயிரோடு இருந்தாள்; ஆனால் இப்போது உலகத்தோடு அவளுக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. அவள் தன் கற்பனை உள்ளத்திலே நிர்மித்த அவளுடைய சிறிய உலகம், கனவைப்போல, முடிவிலாப் பாழிலே கலந்தது. அவள் எந்த ஒளியைத் தன் எதிரில் கண்டு, வாழ்க்கையின் இருளடர்ந்த இரவிலுங்கூட ஹ்ருதயத்தில் ஆசைச் செல்வத்தைத் தாங்கிப் போய்க்கொண் டிருந்தாளோ, அந்த ஒளி அணைந்தது. செல்வமும் கொள்ளை போயிற்று. இனி அவளுக்கு ஒரு புகலும் இல்லை; புகலுக்குத் தேவையும் இல்லை. எந்தப் பசுக்களுக்கு அவள் இரண்டு வேளைகளிலும் தன் கையால் தவிடும் தண்ணீரும் வைத்துத் தடவிக் கொடுத்து வந்தாளோ, அவை இப்போது குச்சுக்களில் கட்டப்பட்டபடியே, ஆசையிழந்த கண்களோடு, கதவின் பக்கமாக உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தன. கன்றுகளைத் தழுவி முத்தமிட இப்போது யாரும் இல்லை. யாருக்காகப் பால் கறக்கவேண்டும்? வெண்ணெய் திரட்ட

வேண்டும்? சாப்பிடுபவர் யார்? கருணை தன் சிறிய உலகைத் தனக்குள்ளேயே மடக்கி வைத்துக்கொண்டாள்.

ஆனால், ஒரே வாரத்தில் கருணையின் வாழ்க்கையின் நிறம் மீண்டும் மாறியது. அவளுடைய அந்தச் சிறிய உலகம் பரந்து பரந்து அகில உலகத்திலும் வியாபித்தது. படகைக் கரையோடு ஒரு கேந்திர ஸ்தானத்தில் பிணித்து வைத்திருந்த லங்கர் பெயர்ந்து போயிற்று. படகு இனிமேல் கடலின் மீதியிலாப் பரப்பில் பிரயாணம் செய்யும்; கட்டுக்கு அடங்காத அலைகளின் மார்பிலேயே அது மறைந்துபோனாலும் சரிதான்!

கருணை வாசலில் வந்து உட்கார்ந்து, தெருவிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் ஒன்றுகூட்டி, அவர்களுக்குக் குடிக்கப் பால் தருவாள். நடுப்பகல் வரையில் வெண்ணெய் எடுப்பாள். அதைத் தெருப்பிள்ளைகள் தின்பார்கள். பிறகு விதவிதமான தின்பண்டங்கள் சமைத்து நாய்களுக்கு உண்ணக் கொடுப்பாள். இதுவே அவளுடைய நித்திய நியமம் ஆயிற்று. பறவைகளும், நாய்களும், பூனைகளும், எறும்புகளும், எல்லா ஜீவராசிகளும் அவளுடையவை ஆயின. அந்த அன்பு-வாசல் இப்போது யாருக்காகவும் மூடப்பட்டிருக்கவில்லை. ஒளி தங்குவதற்குக் கூடப் போதாமலிருந்த அந்த ஓரங்குல அளவு இடத்தில், இப்போது அகில உலகமும் அடங்கியது.

ஒரு நாள் பிரகாசனின் கடிதம் வந்தது. கருணை அதை எடுத்துத் தொலையில் எறிந்தாள். பின்பு சிறிது நேரம் கழித்து அவள் அதை எடுத்துக் கிழித்துப் போட்டாள். பறவைகளுக்குக் கொத்தித் தின்னத் தானியங்கள் தந்தாள். ஆனால் நிசியாகிய சந்நியாசினி தன் வேள்வித்தீயை மூட்டியதும், வேதனைகள் அவளிடம் வரம் கேட்க விரைந்து சென்ற தருணத்தில், கருணையின் மனத்திலிருந்த வேதனையும் விழித்துக்கொண்டது. பிரகாசனின் கடிதத்தைப் படிக்க அவள் மனம் தவித்தது. 'பிரகாசன் எனக்கு யார்? அவனால் எனக்கு என்ன ஆகவேண்டும்? ஆம், பிரகாசன் எனக்கு யார்?' என்று அவள் யோசிக்கலானாள். 'பிரகாசனே உனக்கு ஸர்வமும்; நீ எப்போ

தைக்குமாக இழந்துவிட்ட உன்னுடைய அந்த அழியாக் காதலின் அடையாளம் அவன். அவன் உன் உயிருக்கு உயிர்; உன் வாழ்க்கை விளக்கின் ஒளி; நீ திரட்டிய எண்ணங்களின் இனிமை; உன் கண்ணீரில் விளையாடும் புன்னகை' என்று ஹ்ருதயம் பதில் சொல்லிற்று. கருணை தன் சிதறிய உயிர்த் துண்டங்களைப் போன்ற அந்தக் கடிதத் துணுக்குகளை ஒன்றாகத் திரட்டினாள். ஒவ்வொரு துணுக்கும் அவளுக்குத் தான் இழந்த காதலின் ஒவ்வோர் அடிச்சுவடுபோலத் தோற்றியது. எல்லாத் துணுக்குகளும் சேர்ந்த பின்பு, அவள் விளக்கின் முன்னே உட்கார்ந்து, பிரிவுற்ற ஓர் உள்ளம் காதலின் அறுந்த தந்திக்கம்பிகளைக் கூட்டுவதுபோல, அவைகளை ஒன்றோடொன்று பொருத்தி வைக்கலானாள். அந்தோ, அன்னையின் பரிவே! அந்த அபாக்கியவதி இரவு முழுதும் அந்தத் துணுக்குகளைப் பொருந்த வைத்துக்கொண்டிருந் தாள். கடிதம் இரு புறங்களிலும் எழுதப்பட்டிருந்தது. ஆகையால் துணுக்குகளைச் சரியான இடத்தில் வைப்பது மிகவும் கடினமாயிருந்தது. இடையே ஒரு சொல் அல்லது வாக்கியம் விட்டுப் போயிருக்கும். அந்த ஒரு துணுக்கை அவள் மறுபடியும் தேடுவாள். இரவெல்லாம் கழிந்தது; ஆனால் கடிதம் இன்னும் அபூர்ணமாக இருந்தது.

வெயில் ஏறியது. தெருப் பிள்ளைகள் பாலும் வெண் ணெயும் சாப்பிட ஆவலோடு கூடினார்கள். நாய்களும் பூனைகளும் வந்தன. பறவைகள் முற்றத்திலே வந்து 'விர் விர்' ரெனப் பறந்தன. ஒரு பறவை உரல்மீது உட்கார்ந்தது; மற்றொன்று துளசி மாடத்தின் மேடையில் அமர்ந்தது. ஆனால், கருணைவுக்குத் தலைதூக்க ஓய்வில்லை.

நடுப்பகலாயிற்று. கருணை தலை தூக்கவில்லை. பசியும் இல்லை; தாகமும் இல்லை. பின்பு மாலை நேரம் வந்தது. ஆனால் அந்தக் கடிதம் இன்னமும் அரைகுறையாகவே இருந்தது. கடிதத்தின் கருத்து அர்த்தமாயிற்று: பிரகாச னின் கப்பல் எங்கிருந்தோ எங்கோ போய்க்கொண்டிருக் கிறது. அவன் உள்ளத்தில் என்னவோ எழுகிறது. என்ன எழுகிறது? கருணைவால் அதை அறிய முடியவில்லை.

தாகத்தால் துடிக்கும் மனிதனின் வேட்கையைப் பனித் துளிகள் தணிக்குமா? கருணை மகனின் பேனாவிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் படித்து, அதைத் தன் உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ள விரும்பினாள்.

இவ்வாறே மூன்று நாட்கள் கழிந்தன. அந்தி நேர மாயிற்று. மூன்று நாட்களாக விழித்திருந்த கண்கள் சற்று மூடின. கருணை பார்த்தாள்: நீளமும் அகலமுமான ஓர் அறை. அதில் மேஜைகளும் நாற்காலிகளும் போடப் பட்டிருக்கின்றன. நடுவே ஓர் உயர்ந்த ஆசனத்தில் எவனோ உட்கார்ந்திருக்கிறான். கருணை கவனத்தோடு பார்த்தாள்: அவன் பிரகாசன்! கண நேரத்தில் அவன் முன்பு ஒரு கைதி கொண்டுவரப்பட்டான். அவன் கைகளும் கால்களும் தளைப்பட்டிருந்தன; முதுகு வளைந் திருந்தது. இவர் ஆதித்தியன்!

கருணையின் கண்கள் திறந்தன. கண்ணீர் வடிந்தது. அவள் கடுதாசித் துண்டுகளை மீண்டும் ஒன்று சேர்த்துக் கொளுத்திச் சாம்பராக்கினாள். ஒரு சிடிகைச் சாம்பரைத் தவிர அங்கே வேறு ஒன்றும் இல்லை. இதுதான் அவள் உள்ளத்தைப் பிளந்துகொண்டிருந்த அந்தப் பரிவின் சிதை. இந்த ஒரு சிடிகைச் சாம்பரிலேயே, பொம்மை விளையாட்டுக்கள் விளையாடிய அவளுடைய குழந்தைப் பரு வமும், தீப்பட்டெரிந்த அவளது இளமையும், வேட்கை மயமான அவளது வைதவ்யமும் - யாவும் அடங்கிப் போயின.

காலையில் ஜனங்கள் அவளை வந்து பார்த்தபோது, சடலத்தை விட்டு உயிர் பறந்து போயிருந்தது. ஆதித்தி யனின் படம் அப்போதும் அவளுடைய சூனிய ஹ்ருதயத் தில் ஒட்டிக்கொண் டிருந்தது. அந்த இடிந்த உள்ளம் கணவனின் காதல் நினைவிலே இளைப்பாறிக்கொண் டிருந்தது. பிரகாசனின் கப்பல் ஐரோப்பாவுக்குச் சென்று கொண்டிருந்தது!

கடைசிச் சாக்கு

உலக சரித்திரத்தில் முக்கியமாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய தேதிகளை யெல்லாம், இரவு முழுதும் கண் விழித்து மூளையைச் செலவழித்து உருப் போட்டதுதான் மிச்சம்; நான் அவைகளை அறவே மறந்து விட்டேன். ஆனல், எனக்கு விவாகமான திருநாள் மட்டும், சம தரையான பூமியில் ஒரு ஸ்தம்பம் போல, அசையாமல் என் நினைவில் இருக்கிறது. அதை நான் மறப்பதில்லை, மறக்க முடியாது. அதற்கு முன்னும் பின்னும் நடந்த சம்பவங்கள் யாவும் மனத் திரையிலிருந்து அழிந்து போயின. அவைகளின் அடையாளங்கூட மிச்சமில்லை. அந்த எல்லா அநேகங்களும் என் விவாக தினமாகிய ஏக வஸ்துவில் கலந்தன. அந்நாளை மறந்துவிட வேண்டு மென்றுதான் விரும்புகிறேன்; ஆனல் தினந்தோறும் ஸ்மரணம் செய்யும் தேதி எப்படி மறக்கும்? பேராபத்தில் சிக்கிக் கொண்டு, இறைவனை வழிபடுவதைத் தவிர வாழ்க்கையின் உத்தாரத்துக்கு வேறு எந்த ஆதாரமும் இல்லாமல் பரிதவிக்கும் அந்தப் பேர்வழியைக் கேட்டீர் களானல், என் விவாக தினத்தை நான் ஏன் அநுதினமும் ஸ்மரிக்கிறேன் என்பது தெரியும்.

ஆனல், நான் மண வாழ்க்கையிலிருந்து விலகி ஓடு வதற்குக் காரணம் என்ன என்கிறீர்கள்? என்னிடத்தில் ரஸிகத்தன்மை இல்லையா? நான் மெல்லியலாரின் மோகன சக்தியால் தீண்டப்படாதவன? அநாஸக்திப் பதவியை அடைந்துவிட்டேன? உலாவப் போகையில் என் ஹ்ருதயேச்வரியும் என்னேடு வீற்றிருக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லையா? உல்லாஸப் பொருள்கள் விற்கும் கடைகளுக்கு அவளோடு சென்று, சிறிது நேரமாவது ரஸமயமான வற்புறுத்தலின் ஆனந்தத்தை அநுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இல்லையா? என் மற்றச் சகோதரர்களின் இருதயத்தில் இயங்குவதுபோலவே, என்

உள்ளத்திலும் அந்தச் சமயத்தில் ஊசலாடக்கூடிய அந்தக் கர்வத்தையும், ஆனந்தத்தையும், பெருமையையும் நான் கற்பனைக் கண்களால் காண முடிகிறது; ஆனால் என் பாக்கியத்தில் அந்தச் சந்தோஷங்கள் - அந்தக் கேளிக்கைகள் - இல்லை.

ஏனெனில், படத்தின் மற்றொரு பக்கத்தையும் நான் பார்க்கிறேன். ஒரு பக்கம் எவ்வளவு மோகனமாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கிறதோ, மற்றொன்று அவ்வளவே ஹ்ருதய-பேதகமாயும் பயங்கரமாயும் இருக்கிறது. அஸ்தமித்ததோ இல்லையோ, நீங்கள் உங்கள் துரதிருஷ்டக் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு, செக்கு மேட்டிலோ அல்லது விறகுத் தொட்டியின் வாசலிலோ நிற்கிறீர்கள். இருட்டியதும், நீங்கள் கோதுமை மூட்டையை அக்குளில் இடுக்கிக் கொண்டு, ஏதோ திருடிக் கொண்டு வந்துவிட்டவர்கள் போல, தெருவழியே வேகமாக அடியெடுத்து வைத்து நடக்கிறீர்கள். சூரியன் உதித்தானோ இல்லையோ, குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, 'ஹோமியோபதிக் டாக்டரி'ன் வீட்டில், ஒடிந்த நாற்காலியில் வீற்றிருக்கிறீர்கள். தெருவில் ஒரு மிட்டாய்க்காரன் ரஸமான குரலில் சத்தமிடுவது கேட்டு, உங்கள் குழந்தை வான் பிளந்து போகுமாறு புலம்பத் தொடங்கினால், உங்கள் மூச்சுத் தடுமாறுகிறது. ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போது காலணுவுக்கோ அரையணுவுக்கோ வேர்க்கடலை அல்லது வாழைப்பழங்கள் வாங்கி, 'வீட்டுக்குப் போனதுமே குழந்தைகள் நம்மைத் தாக்கி இவற்றைத் தீர்த்துவிடும்' என்று கருதி, வழியில் அவசர அவசரமாக மிகவும் ஆத்திரத்தோடு அவைகளை வாயில் போட்டு விழுங்கிக்கொண்டே செல்லும் பல தகப்பன்மார்களையும் நான் பார்த்திருக்கிறேன். திருவிழாக் கூட்டத்தில் குழந்தை ஒரு பொம்மைக் கடையின் முன்னே நின்று அமர்க்களம் செய்யும்போது, தந்தையார் அவர்கள், மகரிஷிகளைப் போன்ற அறிவு முதிர்ச்சியோடு அந்தப் பொம்மைகளின் நிலையில்லாமையைப்பற்றி ராக ஆலாபனை செய்யும் அந்தக் காட்சியைப் பார்க்குந்தோறும் எவ்வளவு நிராசையுண்டாகிறது நமக்கு!

படத்தின் முதல் பக்கம் எனக்கு ஒரு மன்மத ஸ்வப்ன மாக இருக்கிறது; மறுபக்கமோ பயங்கரமான ஓர் உண்மை. இந்த உண்மையின் முன்பு என் ரஸிகத்தன்மை முழுதும் காற்ருய் மறைகிறது. என் சொந்தச் சரக்கு முழுதையும் - என் முழு ரசனைத் திறனையும் - இந்தத் தாம்பத்திய வலைகளிலிருந்து விடுபடுவதில்தான் உபயோகப் படுத்தியிருக்கிறேன். நானும் ஒரு நாள் வலையில் சிக்க வேண்டியவனே என்பது எனக்குத் தெரியும். ஆனல் வலை எவ்வளவுக்கெவ்வளவு அழகிய நிறங்களுள்ளதாகவும், பிராணிகளைத் தன் புறமாக இழுக்கும் சக்தி வாய்ந்ததாக வும் இருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு இரையும் உயிரை வாங்குவதாகவும் விஷங் கொண்டதாகவும் இருக்கும். இந்த வலையில் பறவைகள் துடிதுடிப்பதையும் படபடப் பதையும் பார்த்து, நான் மீண்டும் கிளைமேல் போய் உட்காருகிறேன்.

சென்ற சில நாட்களாக, என் ஸம்ஸாரம், "என்னை அழைத்துக் கொள்ளுங்கள்" என்று என்னை இடை விடாமல் வற்புறுத்த ஆரம்பித்திருக்கிருள். முன்பெல்லாம் லீவுகளில் அங்கே போகும்போது, "நீ எங்கே வரப் போகிருய்!" என்று நான் சொல்வதே அவளுடைய மனச் சாந்திக்குப் போதுமா யிருந்தது. அதற்குப் பின்பு, "அங்கே தொந்தரவுகள் அதிகம்" என்று சொல்லி, அவளுக்கு ஆறுதல் கூறி வந்தேன். அப்புறம் இல்லற வாழ்க்கையின் சங்கடங்களை விவரித்துச் சொல்லி அவளைப் பயமுறுத்தினேன். ஆனல் இப்போது சில நாட்களாக அவளுடைய அவநம்பிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. அவளுடைய வற்புறுத்தல் கடிதங்கள் வரத் தலைப்பட்டது முதல், நான் போனல் எங்கே அவளும் கூடவே வந்து விடுவாளோ என்ற பயத்தால், லீவுகளில் அங்கே போவதையே நிறுத்திவிட்டேன். பலவிதமாகச் சாக்குப் போக்குகள் சொல்லி அவளைப் பயமுறுத்திய வண்ணமாக இருக்கிறேன்.

என் முதல் சாக்குக் கடிதத்தில் பத்திரிகாசிரியர் களின் வாழ்க்கையிலுள்ள ஆபத்துக்களைப்பற்றி எழுதி யிருந்தேன் :

"சில சமயம் இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் தூங்கப் போக முடியும்; சில சமயம் இரவெல்லாம் கண் விழிக்க வேண்டி யிருக்கும். பகல் முழுதும் தெருத் தெருவாக அலைய வேண்டி யிருக்கிறது. இவை போதா என்று தலைமேல் ஸதா உருவிய கத்தி தொங்கிக்கொண் டிருக்கிறது: எப்போது என்னைக் கைது செய்துவிடுவார்களோ, எப்போது ஜாமீன் பணம் கேட்டுவிடுவார்களோ, எதுவும் நிலையில்லை. ரகசியப் போலீஸின் ஒரு பட்டாளம் எப்போது பார்த்தாலும் என்னையே தொடர்ந்த வண்ணமாய் இருக்கிறது. தெருவில் நான் போகும் போதெல்லாம் ஜனங்கள் என்னை விரலால் சுட்டிக் காட்டி, 'அதோ போகிறான் பாருங்கள், பத்திரிகைக்காரன்!' என்கிறார் கள். உலகத்திலுள்ள தெய்விகமும், ஆதிதெய்விகமும், பௌதிக மும், ஆதிபௌதிகமுமான எல்லாத் தொந்தரவுகளுக்கும் நான் தான் ஜவாப்தார் என்றும், என் மண்டை பொய்ச் செய்திகளை உண்டாக்கும் யந்திரசாலை என்றும் அவர்கள் நினைத்துக்கொண் டிருக்கிறார்கள் போலும்! பகல் முழுதும் ஆபீஸர்களுக்கு ஸலாம் போடுவதிலும், போலீஸாரை முகஸ்துதி செய்வதிலுமே கழிந்து போகிறது. கான்ஸ்டேபிள்களைப் பார்த்தாலே பிராணன் துடிக்கிறது. என் நிலை இப்படி என்றால், அதிகார வர்க்கத்தினருக்கோ என்னைப் பார்த்தாலே நடுக்கமாயிருக்கிறது. ஒரு நாள் துர்ப்பாக்கியவசமாக, ஓர் ஆங்கிலேயனின் பங்களா வுக்குப் போனேன். 'என்ன உத்தியோகம் உனக்கு?' என்று துரை கேட்டான். 'பத்திரிகாசிரியன்' என்று நான் கர்வத்தோடு பதில் சொன்னேன். துரை உடனே வீட்டிற்குள் நுழைந்து கதவைச் சாத்தி, 'பீங் முத்திரை' வைத்துவிட்டான். பின்பு துரைசானியும், வெள்ளைக்காரக் குழந்தைகளும், நான் ஏதோ ஒரு பயங்கரமான மிருகம் என்று கருதும்படியாக, ஜன்னல்களிலிருந்து என்னை எட்டி எட்டிப் பார்ப்பதைக் கண்டேன். ஒரு தடவை நான் ரெயிலில் போய்க்கொண் டிருந்தேன். என்னோடு இன்னும் பல நண்பர்களும் இருந்தார்கள். அதனால், என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இரண்டாம் வகுப்பு டிக்கட் வாங்கவேண்டி வந்தது. வண்டியில் உட்கார்ந்ததும், ஒரு துரை என் 'ஸூட் கேஸி'ன் மேல் எழுதியிருந்த என் பெயரையும் உத்தியோகத்தையும் பார்த்து, உடனே தன் பெட்டியைத் திறந்தான்; 'ரிவால்வ'ரை எடுத்து என் முன்னால் அதில் குண்டுகளை நிரப்பினான். என் விஷயத்தில் அவன் ஜாக்கிரதை யாக இருப்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவன் எண்ணம்."

இவ்வாறு நான் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தேன். என் பணச் சங்கடங்களைப் பற்றி நான் எப்போதுமே என்

ஸம்ஸாரத்தினிடம் பேச்சுக் கொடுத்ததில்லை; ஏனெனில் இந்த விஷயத்தைப் பெண்மணிகளிடம் சொல்வது நமக்கு மரியாதையல்ல என்பது என் கொள்கை. அதைப் பற்றி அவளிடம் சொல்லி யிருந்தால், நான் கட்டாயம் அவள் இரக்கத்துக்குப் பாத்திரனுகி யிருப்பேன்.

இந்தக் ,கடிதத்தைக் கண்டு அவள் இங்கே வரும் பேச்சையே எடுக்கமாட்டாள் என்று நம்பியிருந்தேன். ஆனல், இது பிரமைதான்! அவளுடைய வற்புறுத்தல்கள் முன்போலவே தொடர்ந்தன.

இன்னெரு சாக்குச் சொல்ல யோசித்தேன்.

"நோய்களுக்கு நகரம் இருப்பிடம். நாம் சாப்பிடும் ஒவ்வொரு பொருளிலும், நாம் குடிக்கும் ஒவ்வொரு திரவ பதார்த்தத்திலும், விஷம் இருக்குமோ என்று சந்தேகம். பாலில் விஷம், நெய்யில் விஷம், பழங்களில் விஷம், கறிகாய்களில் விஷம், காற்றில் விஷம், நீரில் விஷம். இங்கே மனித வாழ்க்கை நீர்மேல் இழுத்த கோடு. என்ன மாயம், இன்று பார்த்தவனை நாளைக்குக் காணவில்லை! ஒருவர் ஒரு வியாதி வெக்கையுமின்றி, இரும்புக் குண்டாக உட்கார்ந்திருக்கிருர்; திடீரென்று, என்னடா என்ருல், அவருடைய இருதயத் துடிப்பு நின்று போகிறது. வீட்டிலிருந்து காற்று வாங்க உலாவப் போனவர், மோட்டார் காரில் முட்டிக்கொண்டு, தேவலோகத்து வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிருர். சாயங்காலம் ஒருவன் தன் வீட்டுக்கு ஸாங்கோபாங்கமாக, முழு உடலுடன், வந்து சேர்ந்துவிட்டால், அவனைப் பாக்கியவானென்றே சொல்ல வேண்டும். கொசுக் களின் 'ஙொய்' என்ற சத்தம் காதில் விழுகிறதோ இல்லையோ, உடனே சுவாஸம் கெட்டுப் போகிறது. ஈ கண்ணில் பட்டதோ இல்லையோ, கைகால்கள் வீங்குகின்றன. எலி வளையிலிருந்து தலையை நீட்டுவதுதான் தாமதம், மனிதனின் பிராணன் எகிறி விடுகிறது. எங்கே பார்த்தாலும் யமராஜனின் அட்டகாசம்! மோட்டாருக்கும் டிராமுக்கும் ஒருகால் தப்பி வந்துவிட்டாலும், ஈக்களுக்கோ, கொசுக்களுக்கோ இரையாகவேண்டியதுதான். சுருக்கமாக, சாவு ஒவ்வொரு நிமிஷமும் தலைமேல் வந்து உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள். நான் இரவெல்லாம் கொசுக்களோடும், பகலெல்லாம் ஈக்களோடும் சண்டை போடுகிறேன். சின்னஞ் சிறு பிராணனை எந்த எந்தப் பகைவர்களிடமிருந்து காப்பேன்? க்ஷயக் கிருமிகள் சுவாஸ கோசத்தில் போகாமலிருக்கவேண்டுமே என்பதற்காக நான் மூச்சுக்கூட அதிகமாக விடுவதில்லை"

என்று எழுதினேன்.

என் ஸம்ஸாரத்துக்கு அப்போதும் என்னிடம் நம்பிக்கை உண்டாகவில்லை. அடுத்த கடிதத்திலும் அதே கோரிக்கைதான் இருந்தது. "உங்கள் கடிதம் எனக்கு இன்னுமொரு கவலையை உண்டாக்கிவிட்டது. இனி ஒவ்வொரு நாளும் கடிதம் எழுதி வரவும். இல்லாவிட்டால் நான் யார் பேச்சையும் கேளாமல் நேரே அங்கே வந்து சேருவேன்" என்று எழுதியிருந்தது. 'ஒழிகிறது, இதோடு தொந்தரவு விட்டதே!' என்று மனத்தில் சொல்லிக் கொண்டேன்.

ஆனல், மறுபடியும் அவளுக்கு நகரத்துக்கு வர வேண்டும் என்ற பைத்தியம் எப்போது பிடித்துவிடுமோ என்று சந்தேகமாகவே இருந்தது. ஆகையால் நான் மூன்ருவது உபாயமொன்றை யோசித்தேன்.

"இங்கே சிநேகிதர்கள் வந்து ஸதா ஸர்வகாலமும் என் பிராணனை வாட்டுகிருர்கள். ஒருதரம் வந்து உட்கார்ந்து விட்டால் எழுந்துபோகும் பேச்சையே எடுப்பதில்லை. தங்கள் வீடுவாசல்களையே விற்று வந்தவர்கள்போல இங்கேயே முகாம் போடுகிருர்கள். நாம் வீட்டை விட்டுத் தட்டிக் கழித்துக்கொண்டு போனலோ, கொஞ்சமும் ஸங்கோசமில்லாமல் அறையில் வந்து உட்கார்ந்து, தமக்கு வேண்டிய பொருள்களை வேலைக்காரன் மூலம் கடனுக வரவழைக்கிருர்கள். பணம் நான் கொடுக்க நேருகிறது. சிலர் வாரக்கணக்காக இங்கேயே விழுந்துகிடக் கிருர்கள்; இங்கிருந்து அசைவதாயில்லை. நாள்தோறும் இவர் களுக்குத் தொண்டும் மரியாதையும் செய்யவேண்டும். இரவில் சினிமாக் கொட்டகைக்கு அழைத்துச் செல்லவேண்டும்; பிறகு பொழுது விடியும் வரையில் இவர்களுடன் சீட்டோ சதுரங் கமோ விளையாடவேண்டும். இவர்களில் பெரும்பாலானவர் களுக்கு மதுபானம் முதலியன இல்லாமல் உயிரோடு இருக்க முடியாது. அநேகமாக இவர்கள் நோயுற்றே இங்கு வருகிருர்கள்; இன்னுங்கேட்டால், நோயாளிகள்தாம் வருகிருர்கள். பொழுது விடிந்தால், பொழுதுபோனல், டாக்டரைக் கூப்பிட்டு வந்து, இவர்களுக்குச் சிகிச்சையும் சுச்ருஷைகளும் செய்யவேண்டும். இரவெல்லாம் தலைமாட்டில் உட்கார்ந்து விசிறி வீசவேண்டும். இவ்வளவும் செய்ததுபோக, 'இங்கே யாரும் என்னை ஏனென்று கூடக் கேட்பதில்லை!' என்ற இவர்களின் குற்றச்சாட்டையும் கேட்டுக்கொள்ளவேண்டும்.

"என் கடிகாரம் மாதக் கணக்காயிற்று; என் கைக்கு வரவேயில்லை. ஷர்ட்டு ஒரு கனவானிடம் இருக்கிறது. 'கோட்'டை

இன்னொருவர் வாங்கிப் போயிருக்கிறார். செருப்பை இன்னொரு பெரியவர் அடித்துக்கொண்டு போய்விட்டார். நான் அதே கிழிந்த 'கோட்'டையும், நாட்டுச் செருப்பையும் மாட்டிக்கொண்டு ஆபீஸுக்குப் போகிறேன். நான் என்ன புதிய வஸ்து கொண்டு வருகிறேன் என்று நண்பர்கள் கண்ணோட்டம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது கொண்டுவந்தால், யாருக்கும் தெரியாமல், பயத்தோடு பெட்டியில் வைத்துப் பூட்டுகிறேன்.

"எவனாவது என் கண்ணில் பட்டுவிட்டால், உடனே அவனை என்னோடு ஹோட்டலுக்குச் சாப்பிட அழைத்துப்போக வேண்டியதுதான். முதல் தேதி சம்பளம் கிடைத்ததும், 'வீட்டு வாசலில் எந்த மகானுபாவனும் ரூபாயை எதிர்பார்த்துப் 'பிகெடிங்' செய்யாமலிருக்க வேண்டுமே' என்ற எண்ணத்தோடு, திருடனைப்போல் சந்தடி செய்யாமல், வீட்டுக்கு வருகிறேன். அவர்களுடைய தேவைகள் முழுதும், எதற்காக முதல் தேதி வரும் வழியையே எதிர்பார்க்கின்றனவோ, தெரியவில்லை. ஒரு நாள் சம்பளம் வாங்கிக் கொண்டு இரவு பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்பினேன். ஆனால், வந்து பார்த்தால், அப்போதுகூட அரை டஜன் சிநேகிதர்கள் அவ்விடத்தை விட்டு நகரவில்லை. தலையில் அடித்துக் கொண்டேன். எவ்வளவோ சாக்குப் போக்குகள் சொல்லியும் அவர்கள் முன்பு ஒன்றும் சாயவில்லை. 'வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது: தாயாருக்கு உடம்பு சரியில்லையாம்' என்று நான் சொன்னால், 'கிழவர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் சாக மாட்டார்கள், ஸார்! சாவதாயிருந்தால் இத்தனை நாள் ஏன் பிழைத்திருக்கிறார்கள்! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்: இன்னும் இரண்டு மூன்று நாட்களில் உடம்பு குணம் என்று கடுதாசி வரும். அப்படிச் செத்துப்போய் விட்டாலும், கிழவர்களின் சாவு மங்களச் சாவாயிற்றே; அது சந்தோஷமான செய்தியாயிற்றே!' என்று பதில் வருகிறது. 'வரி கட்டப் பெரிய தொந்தரவாயிருக்கிறதாம்' என்று சொன்னால், 'இப்போதெல்லாம் வரியைத் தள்ளுபடி செய்துகொண்டிருக்கிறார்களே, ஸார்! வரி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை' என்று பதில் வரும். ஏதாவது சடங்கு என்று சாக்குச் சொன்னாலோ, 'நீங்கள்கூட என்ன, ஸார், விசித்திரமான மனுஷராயிருக்கிறீர்கள்! இந்தக் கெட்ட வழக்கங்களையெல்லாம் கொண்டாடுவது உங்கள் பெருமைக்கு அழகாயில்லை. நீங்கள் அவைகளை வேரிலேயே வெட்டி எறிந்தால், இந்த வீண் செலவுகள் என்ன, ஆகாசத்திலிருந்தா வந்து குதிக்கும்?' என்பார்கள். ஸாராம்சத்தில் எந்த விதத்திலும் உயிர் மிஞ்சுவதாயில்லை."

என்று எழுதினேன்.

இந்தச் சாக்கு சரியாகப் பயன்படும் என்று நினைத்தேன். நண்பர்களுக்கே தன்னை அர்ப்பணம் செய்து விட்ட ஒருத்தனுடைய வீட்டில் எந்தப் பெண் குடியிருக்க விரும்புவாள்? ஆனால் மீண்டும் நான் ஏமாந்தேன். அதே வற்புறுத்தல்தான் பதிலாக வந்தது.

அப்போது நான்காவது சாக்கு யோசித்தேன்.

"இங்கே இருப்பவை வீடுகளா, பக்ஷிக் கூடுகளா! காற்றுமில்லை; வெளிச்சமும் இல்லை. துர்நாற்றம் மண்டையைப் பிளக்கிறது. பலருக்கு இதே துர்நாற்றத்தினால் ப்ளேக், டைபாயிட், க்ஷயம் முதலிய ரோகங்கள் உண்டாகின்றன. மழை பெய்கிறதோ இல்லையோ, வீடு ஒழுக ஆரம்பிக்கிறது. மழை ஒரு மணி நேரம் பெய்தால், வீடு இரவு முழுதும் சொட்டுகிறது. பேய் பிசாசுகள் இல்லாத வீடுகள் மிகக் குறைவு. ஜனங்களுக்குப் பயங்கரமான கனவுகள் தென்படுகின்றன. எத்தனையோ பேருக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. இன்று புது வீட்டுக்குக் குடித்தனம் வந்தவர்கள் நாளைக்கே அதை மாற்றுவதற்கு யோசனையும் கவலையும் படுகிறார்கள்.

"ஒருவன் தள்ளு வண்டியில் சாமான்களைப் போட்டுக் கொண்டு போகிறான்; மற்றொருவன் வருகிறான். எங்கே பார்த்தாலும் தள்ளு வண்டிகளாகவே காணப்படுகின்றன. திருடுகள் போவதோ சொல்லவே வேண்டாம்; ஒரு ராத்திரி நல்ல பிரகாரமாகக் கழிந்தால் தெய்வத்துக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். நடு ராத்திரியில், 'திருடன்! திருடன்! பிடியுங்கள்! பிடியுங்கள்!' என்ற கூக்குரல்கள் காதில் விழும். போய்ப் பார்த்தால், ஜனங்கள் வாசற்படிகளில் குண்டாந்தடிகளும், தோல் வார்களும், செருப்புக்களும், 'சிம்டா'க்களும் வைத்துக்கொண்டு நிற்பார்கள். அப்படியிருந்தும் திருடர்கள் மிகவும் கெட்டிக்காரத்தனமாக அவர்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு, உள்ளே போய்த் திருடிவிட்டு ஓடியிருப்பார்கள்.

"என் நெருங்கிய நண்பரொருவர், சிநேகத்தினால் இரவு வெகு நேரம் வரையில் என் அருகில் உட்கார்ந்திருப்பது வழக்கம். ஒரு நாள் இரவு இருட்டில் பாத்திரங்கள் ஓசைப் படவே, நான் ஸ்விச்சை அழுத்தினேன். பார்த்தால் அந்த நண்பரே பாத்திரங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார். என் குரலைக் கேட்டதும் அவர் கக்கக்க வென்று சிரித்து, 'நான் உங்களை வேடிக்கைக்கு ஏமாற்றலாமென்று பார்த்தேன்!' என்றார். பாத்திரங்கள் போய்விட்டிருந்தால்,

அவருடையனவாக ஆகியிருக்கும்; நான் விழித்துக்கொள்ளவே அது வேடிக்கையான ஏமாற்றுதல் ஆகிவிட்டது. அவர் வீட்டுக்குள்ளே எப்படி வந்தார் என்பதே ரகஸ்யமாக இருக்கிறது. ஒருவேளை இரவில் சீட்டாடிவிட்டுப் போகும் போது, வெளியே போவதற்குப் பதிலாக கீழே இருட்டறையில் ஒளிந்துகொண்டார்போ விருக்கிறது.

"மற்றொரு நாள் ஒரு பெரியவர் என்னிடம் ஒரு கடிதம் எழுதவேண்டுமென்று வந்தார். கீழே அறையில் இங்கிபுட்டிப் பேனா இல்லை. மேல் அறையிலிருந்து கொண்டுவரப் போனேன். திரும்பி வந்து பார்த்தால், பெரியவரைக் காணவில்லை; அவரோடு என் பௌண்டன் பேனாவையும் காணவில்லை. மொத்தத்தில் நகர வாழ்க்கை நரக வாழ்க்கையைக் காட்டிலும் குறைந்த துன்பமுள்ளதல்ல."

என்று எழுதித் தபாலில் போட்டேன்.

என் ஸம்ஸாரத்துக்கு நகர வாழ்க்கையைப் பற்றி யாராவது மருந்து மாயம் இட்டு வைத்தார்களோ என்னவோ; எனது எந்தச் சாக்கும் அவளிடம் பலிக்க வில்லை. இந்தக் கடிதத்துக்கு, "நீங்கள் ஏதோ தட்டிக் கழிக்கிறீர்கள். நான் எதையும் ஒப்புக்கொள்ளமாட்டேன். வந்து என்னை அழைத்துப் போங்கள்" என்று பதில் எழுதினாள்.

பிறகு நான் ஐந்தாவது சாக்குச் சொன்னேன். இது கூடைக்காரர்களைப் பற்றியது.

"இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கக்கூட இல்லை. விசித்திரமான சப்தங்கள் காதுகளைத் துளைக்கின்றன. பாபுல் நகரத்துக் கோபுரம் கட்டும்போதுகூட இவ்வளவு வீண் சத்தங்கள் கிளம்பியிரா. இது கூடைக்காரர்களின் சப்த-விளையாட்டு. இந்தக் கூடைக்காரர்கள் மத்தளமும் கஞ்சிராவும் வைத்துக்கொண்டு, ஜனங்களைத் தம் பண்டங்களி னருகே வரச் செய்தால், எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். ஆனால் இவர்களுக்கு அத்தனை மூளை ஏது! கேட்பவர்கள் திடுக்கிட்டுப் போகும்படியாகப் பைசாச ஸ்வரங்களில் கூவுகிறார்கள். அதைக் கேட்டுக் குழந்தைகள் தாயின் மடியோடு ஒட்டிக்கொள்ளுகின்றன. நான்கூட இரவில் எத்தனையோ தடவைகள் திடுக்கிட்டு விழித்துக்கொள்ளுகிறேன். ஒரு நாள் பக்கத்து வீட்டில் ஒரு விபத்து நேர்ந்தது. இரவு மணி பதினொன்று இருக்கும். அந்த வீட்டுக்காரி குழந்தைக்குப் பால் கொடுக்க எழுந்தாள். திடீரென்று ஒரு கூடைக்காரனின்

பயங்கரமான கூக்குரல் காதில் விழுந்ததும், கீச்சிட்டுப் பிரக்ஞையற்று விழுந்தாள். மாதக்கணக்காக வைத்தியம் செய்து உடல் நிலை சரிப்பட்டது. இப்போது இராக்காலங்களில் காதுகளில் பஞ்சு அடைத்துக்கொண்டு தூங்குகிறாள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நகரத்தில் எத்தனையோ நடக்கின்றன. என் நண்பர்களில் பலர் தம் மனைவிமார்களை ஊரிலிருந்து அழைத்து வந்தார்கள்; ஆனால் அவர்கள் பாவம்! மறு நாளே இந்தக் கூக்குரல்களுக்குப் பயந்து ஊருக்குத் திரும்பிப் போனார்கள்.''

என்று வரைந்தேன்.

என் ஸம்ஸாரம், "நான் கூடைக்காரர்களின் கூக்குரலைக் கேட்டுப் பயந்து போவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இங்கே குள்ளநரிகள் ஊளையிடுவதையும், ஆந்தைகள் கத்துவதையும் கேட்டுப் பயப்படாதவளா, கூடைக்காரர்களிடம் பயப்படப் போகிறேன்?'' என்று பதில் எழுதியிருந்தாள்.

கடைசியில் எனக்கு அற்புதமான ஓர் உபாயம் தோன்றிற்று. அதன் வெற்றியைப் பற்றி எனக்கு முழு நம்பிக்கை இருந்தது. அதில் எனக்குக் கொஞ்சம் கெட்ட பெயர் வரும். ஆனால் இந்த விபத்திலிருந்து பயந்த அளவுக்கு நான் கெட்ட பெயருக்குப் பயப்படவில்லை.

''நகரம் நல்ல வீட்டுப் பெண்கள் வசிக்கத் தகுந்த இடமல்ல. இங்குள்ள சிடுமூஞ்சி வேலைக்காரிகள் சாதாரணப் பேச்சுக்களுக்கு வசவுகளில்தான் பதில் கொடுப்பார்கள். இவர்களுடைய செயற்கை அலங்காரங்களைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்! நல்ல வீட்டுப் பெண்கள் இவர்களுடைய அலங்காரங்களைக் கண்டவுடனே நாணத்தால் முகத்தைப் புதைத்துக் கொள்வார்கள். தலையிலிருந்து கால் வரையில் தங்கமாகவே இழைத்துப் போட்டுக் கொண்டு, இவர்கள் நம்மைத் தாண்டிச் சென்றதும், ஏதோ ஒரு ஸுகந்தக் குவியல் போனதுபோ லிருக்கிறது. ஸம்ஸாரிகளுக்கு இந்த 'ஷோக்'கெல்லாம் எங்கிருந்து கொண்டுவர முடியும்? அவர்களுக்கு ஆயிரம் வீட்டுக் கவலைகள். இந்த வேலைக்காரிகளுக்கோ செயற்கை யலங்காரங்கள் செய்துகொள்வதைத் தவிர வேறு வேலையே இல்லை. ஒவ்வொரு நாளும் புதுப் புது அலங்காரம், புதுப் புது வேஷம்! இவர்களின் சஞ்சலத்தன்மையோ, ரத்தத்திற்குப் பதிலாக இவர்களுடலில் பாதரசம் ஓடுகிறதோ என்று கருதும்படியாக இருக்கிறது. இவர்கள் மினுக்குவதும், கண்களைச் சிமிட்டுவதும், நாணுவதும், கடைக்கண் வீசிப்

> புன்னகை புரிவதும்; - வீட்டுக்காரிகள் பார்த்தால் வெட்கப் படும்படியாக இருக்கின்றன. இவர்கள் வலுக் கட்டாயமாக வீட்டுக்குள்ளே புகுந்து வேலை செய்யும் தைரியம் வாய்ந்தவர் களாக இருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் இவர்களுடைய கூட்டந்தான். இவர்களால், நல்ல மனுஷர்கள் வீட்டுக்குள் வசிப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஒருத்தி, 'கடிதம் எழுத வேண்டும்' என்ற சாக்கு வைத்துக் கொண்டு வருகிறாள்; மற்றொருத்தி, 'கடிதம் படிக்க வேண்டும்' என்று வருகிறாள். உண்மை என்னவென்றால், குடித்தனப் பெண்களின் மானத்தை வாங்குவதிலே இவர்களுக்கு அபாரமான ஆனந்தம். ஆகை யால்தான் நல்ல வீட்டுப் பெண்கள் நகரத்துக்கு மிகவும் குறைவாகவே வருவார்கள்.''

என்று எழுதினேன்.

இந்தக் கடிதத்தில் நான் தவறாக என்ன எழுதி னேனோ, எனக்குத் தெரியவில்லை. கடிதம் எழுதிய மூன்றாம் நாள், என் ஸம்ஸாரம் ஒரு கிழ வேலைக்காரனோடு கூட, என் விலாசத்தை விசாரித்துக் கொண்டு, தன் மூன்று குழந்தைகள் சமேதமாய், தீராத ஒரு வியாதி போல, வந்துசேர்ந்தாள்.

நான் ஒன்றும் தோன்றாதவனாய், "ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானே ?'' என்று கேட்டேன்.

என் ஸம்ஸாரம் சேலைத் தலைப்பைச் சரிப்படுத்திக் கொண்டே, "வீட்டிற்குள்ளே ஒரு முண்டையும் இல்லையே? இங்கே எவளாவது அடி எடுத்துவைத்தால் மூக்கை அறுத்து விடுவேன்; ஆனால், நீங்கள் அவள் பக்ஷமாகப் பேசாதிருக்கும் வரையில் சரி!'' என்றாள்.

அட ராமா! இப்போதுதான் எனக்கு ரகசியம் புரிந்தது. தலையில் அடித்துக் கொண்டேன். நான் அறைந்த அறை என் கன்னத்திலேயே விழப் போகிற தென்று எனக்கு முன்னமேயே தெரியாமல் போயிற்று.

புல்லுக்காரி

1

மூலியா பச்சைப் பசேலென்ற புற்கட்டைச் சுமந்துகொண்டு வீடு வந்தபோது, அவளுடலின் பொன்னிறம் சிவந்திருந்தது; அவளுடைய மதம் நிரம்பிய, ஆளை விழுங்கும் கண்களில் அச்சம் குடிகொண்டிருந்தது. மஹாவீரன் அவள் முகம் சிவந்திருப்பதைக் கண்டு, "என்ன மூலியா, இன்னிக்கி ஒடம்பு கிடம்பு சரியில்லையோ?" என்று கேட்டான்.

மூலியா ஒன்றும் பதில் சொல்லவில்லை; அவள் கருவிழிகள் நீரில் மிதந்தன.

மஹாவீரன் அருகில் வந்து, "என்ன நடந்தது? ஏன் சொல்ல மாட்டேங்கிறே! யாரானும் ஏதாச்சியும் சொன்னாங்களா? அம்மா ஏதாச்சியும் மெரட்டிச்சா? ஏன் இப்படி வாடியிருக்கே?" என்று கேட்டான்.

மூலியா விக்கிக்கொண்டே, "ஒண்ணுமில்லையே; நல்லாத்தானே இருக்கேன்?" என்றாள்.

மஹாவீரன் மூலியாவைத் தலையிலிருந்து கால் வரையில் பார்த்து, "சும்மா அயுதுக்கினுதான் இருப்பாயா? சொல்ல மாட்டியா?" என்றான்.

மூலியா பேச்சைத் தட்டி, "ஏதாச்சியும் இருந்தாத் தானே சொல்லுவேன்!" என்றாள்.

மூலியா, அந்த உவர் நிலத்தில் ரோஜா மலரெனத் தோன்றியவள். பொன்னிறம்; மானொத்த கண்கள்; கீழே சிறிது நீண்ட மோவாய்க்கட்டை; கன்னங்களில் ஓடிய மெல்லிய செம்மை; நீண்ட கூர்மையான இமைகள்; கண்களில் அற்புதப் பசை; அந்தப் பசையில் ஒரு தெளிவான வேதனை, ஓர் ஊமைத் துன்பம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. சக்கிலியர்களின் அந்த வீட்டில் இந்த அப்சரப் பெண் எங்கிருந்துதான் வந்தாளோ!

மெல்லிய பூப்போன்ற அவள் மேனி, தலைமேல் புற் சுமையைத் தாங்கிச் சென்று விற்று வருவதற்கு உரியதாகவா இருந்தது? அந்தக் கிராமத்திலும், அவள் அடியிணைக்குக் கீழே தம் கண்களைப் பஞ்சணைகளாக விரிக்க விரும்பியவர்களும், அவளுடைய ஒரு கண் சிமிட்டலுக்காக ஏங்கியவர்களும், அவள் ஒரு சொல் பேசினால்கூடத் தம்மைப் பாக்கியவான்களென்று கருதுபவர்களும் அநேகம் பேர் இருந்தார்கள். ஆனால், வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகியும், அவள் எந்த இளைஞனையும் உற்றுப் பார்த்தோ அல்லது எவனுடனாவது பேசியோ யாரும் கண்டதில்லை. அவள் புல் வெட்டி வரப் புறப்படும் போது, உஷையின் பிரபை தன் பொன்னிறக் காந்தியைப் பரப்பிக்கொண்டு போவதுபோல இருக்கும். அப்போது ஒருவன் தில்லானாப் பாடுவான்; மற்றொருவன் மார்பில் கை வைத்துக்கொள்வான்; ஆனால் முலியா கண்களைத் தாழ்த்திய வண்ணம் தன் வழியே செல்வாள். "இவ்வளவு அபிமானமா இவளுக்கு! மஹாவீரனுக்கு என்ன, தனி இறக்கைகள் முளைத்திருக்கின்றனவா? பார்ப்பதற்கும் அவன் அப்படிச் சிறுபிள்ளை அல்லவே! இவள் எப்படி அவனோடு வாழ்கிறாளோ, தெரியவில்லை!" என்று ஜனங்கள் பொறாமையோடு பேசுவார்கள்.

ஆனால் அன்று நடந்த ஒரு சம்பவம் - அது அந்த ஜாதியைச் சேர்ந்த மற்ற இளம் பெண்களுக்கு ஒரு ரகசிய அழைப்பாக இருந்திருக்கும் - முலியாவின் உள்ளத்தில் சூலம் கொண்டு குத்துவதுபோல இருந்தது. பொழுது விடியும் நேரம். காற்று மாம்பூக்களின் மணத்தால் சொக்கிப் போயிருந்தது. ஆகாயம் பூமியின்மீது பொன்னைப் பொழிந்துகொண் டிருந்தது. முலியா தலையில் கூடையை வைத்துக்கொண்டு புல் அறுக்கப் போனபோது, அவள் மஞ்சள் மேனி, காலைப் பொற் கிரணங்கள் பட்டு ஸ்வர்ணம் போல் பிரகாசித்தது. திடீரென்று இளைஞனான சைன்சிங் அவள் எதிரே வந்தான். முலியா ஒதுங்கிப் போய்விட வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், சைன்சிங் அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "முலியா, உனக்கு என்மேல் கொஞ்சங்கூடவா இரக்கமில்லை?" என்றான்.

பூப்போல் மலர்ந்திருந்த அவள் முகம் நெருப்பைக் கக்கி யது. அவள் சிறிதும் பயப்படவில்லை; சற்றும் ஸங்கோசப் படவில்லை. கூடையைத் தரையில் வீசி எறிந்து, "என்னை வுட்டுடு; இல்லாட்டீ கூச்சல் போடுவேன்" என்றாள்.

சைன்சிங்குக்கு அன்று தன் வாழ்க்கையில் ஒரு புதிய அநுபவம் உண்டாயிற்று. 'தாழ்ந்த ஜாதிப் பெண்களின் அழகும் இனிமையும், உயர்ந்த ஜாதிக்காரர்களுக்குப் பொம்மைகளாவதற்குத் தவிர வேறு எந்தப் பிரயோஜனத் துக்காக இருக்கின்றன?' என்பது அவன் எண்ணம். இம்மாதிரியான எத்தனையோ போராட்டங்களில் அவன் வெற்றி பெற்றிருந்தான். ஆனால் அன்று முலியாவின் முகத்தில் தென்பட்ட அந்த வேறுபாட்டையும், அவளுடைய அந்தச் சினத்தையும், அவளுடைய அபிமானத்தையும் கண்டு அவன் கதி கலங்கினான். வெட்கமுற்று, அவள் கையை விட்டான்.

முலியா வேகமாக அங்கிருந்து அகன்றாள். போராட் டத்தின் வேகத்தில், காயம் பட்ட துன்பம் உண்டாவதில்லை; பின்புதான் அது வலிக்கிறது. சிறிது தூரம் சென்றதும், அவள் தன் கோபத்தையும், பயத்தையும், உபாயமின் மையையும் நினைந்து பார்த்தாள். அவள் கண்களில் நீர் தளும்பியது. சிறிது நேரம் பொறுத்தாள்; ஆனால், பின்பு விக்கி விக்கி அழலானாள். அவள் இவ்வளவு ஏழையாக இல்லாமலிருந்தால் எவனாவது அவளை இவ்விதம் அவமானப்படுத்தத் துணிவானா? அவள் அழுதுகொண்டே புல் அறுத்தாள். மஹாவீரனின் சினத்தை அவள் அறிவாள். 'அவனிடம் இந்தச் சம்பவத்தைச் சொன்னால், நாயகரின் ரத்தத்தைக் குடிக்க அவன் வெறி கொள்வான். அப்புறம் என்ன என்ன நடக்குமோ!' இதை நினைத் ததுமே அவள் மெய் சிலிர்த்தது. ஆகையால்தான் அவள் மஹாவீரனின் கேள்விக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

2

மறுநாள் முலியா புல் அறுக்கப் போகவில்லை. "நீ ஏன் போவலே? மீதி அல்லாரும் போயிட்டாங்களே?" என்று அவள் மாமியார் கேட்டாள்.

மூலியா தலைகுனிந்து, "நான் தனியாப் போவ மாட்டேன்" என்றாள்.

மாமியார் கோபத்துடன், "தனியாப் போனா என்ன? ஒன்னெப் புலி தூக்கிக்கிட்டுப் போயிடுமா?" என்றாள்.

மூலியா பின்னும் தலை குனிந்து, தாழ்ந்த குரலில், "அல்லாரும் என்னெச் சீண்டறாங்க" என்றாள்.

மாமியார் அவளை மிரட்டினாள்: "நீ அல்லாரோடெ கூடவும் போவ மாட்டே; தனியாவும் போவ மாட்டே. அப்போ எப்படித்தான் போவே? 'நான் போவலே'ன்னு தெளிவாச் சொல்லிடறதுதானே? என் வூட்டுலே நீ ராணியாக் குந்திக்கிட்டிருந்தா, காரியம் நடவாது. எனக்குத் தோலெக் கண்டா ஆவாது; வேலெயெக் கண்டாத்தான் ஆவும். நீ அயவாயிருந்தா நான் என்ன அதெ வளிச்சு நக்கறதா? எளுந்திருடீ மவளே, கூடையெத் தூக்கிக்கினு போயி, புல்லு கொண்ணாந்து போடு."

வாசலில் வேப்பமரத்து நிழலில் நின்று, மஹாவீரன் குதிரையைத் தேய்த்துக்கொண் டிருந்தான். மூலியா அழாக் குறையாகப் போவதை அவன் பார்த்தான்; ஆனால் அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. தன் வசத்தில் இருந்தால், அவன் மூலியாவைத் தன் நெஞ்சிலே உட்காரவைத்துக் கண்களால் மறைத்து மூடிவைத்துக்கொண்டிருந்திருப்பான். குதிரையின் வயிற்றை நிரப்புவதும் அவசியமாக இருந்தது. அதற்குப் புல் விலைகொடுத்து வாங்கிப் போடுவதானால், தினம் பன்னிரண்டணாவுக்குக் குறையாது. அவனுக்கு அப்படிச் சத்தந்தான் என்ன கிடைக்கிறது? வெகு கஷ்டப்பட்டு ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய் கிடைக்கும். அதுவும் சில சமயம் கிடைத்தால் கிடைத்தது; இல்லாவிட்டால் இல்லை. இந்த நாசமாய்ப் போன பஸ்கள் ஓடத் தொடங்கியது முதல் ஜட்காவை ஏனென்று கேட்பாரில்லை. இனமாகக்கூட அதில் சவாரி செய்ய வருவோர் இல்லை. ஸாவ்காரிடம் நூற்றைம்பது ரூபாய் கடன் வாங்கி, அவன் வண்டியும் குதிரையும் வாங்கினான். ஆனால், பஸ்கள் இருக்கும்போது ஜட்காவை யார் கூப்பிடு

கிறர்கள்? ஸாவ்காருக்கு வட்டி கொடுப்பதே கஷ்டமாக இருந்தது; அசலைப்பற்றிக் கேள்வியே வேண்டாம்.

அவன் மேலுக்கு, "இஷ்டமில்லாட்டீ போகவேணும், பார்த்துக்கலாம்" என்றான்.

இந்த அன்பான வார்த்தையைக் கேட்டு முலியா மகிழ்ச்சி யடைந்தாள். "போகாட்டீ குதிரை என்னத்தெ தின்னும்?" என்றாள்.

இன்று அவள் நேற்றைய வழியை விலக்கிவிட்டு, வயல் வரப்புக்களின் வழியே சென்றாள். அடிக்கடி இங்குமங்கும் கண்களைச் சுழற்றி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டே போனாள். வயலில் இருபுறமும் கருப்பங்கழிகள் நின்றுகொண் டிருந்தன. எங்காவது கொஞ்சம் ஓசைப்பட்டாலும் அவளுக்குத் 'திக் திக்' என்று இருக்கும். எவனாவது கருப்பஞ்சோலையில் ஒளிந்துகொண் டிருப்பானோ என்று அவள் நினைத்தாள். ஆனால் அப்படி ஒரு சம்பவமும் நிகழவில்லை. கருப்பஞ் சோலைகளைத் தாண்டி, மாந்தோப்பையும் தாண்டினாள். நீர் பாய்ந்த வயல்கள் தென்பட்டன. தூரத்துக் கிணற்றிலிருந்து கவலை ஓட்டும் சத்தம் கேட்டது. வயல் வரப்புக்களில் பசும்புல் நிரம்ப இருந்தது. முலியாவின் மனம் அதைக் கண்டு ஆவலித்தது. 'இங்கே அரைமணி நேரத்தில் எவ்வளவு புல் அறுக்க முடியுமோ அவ்வளவு புல் உலர்ந்த மைதானத்தில் நடுப்பகல் வரையில் அறுத்தால்கூடச் சேராது. இங்கே நம்மை எவன் பார்க்கிறான்? எவனாவது கத்தினால் ஓடிப் போவேன்' என்று நினைத்து அவள் அங்கேயே உட்கார்ந்து புல் அறுக்கலானாள். ஒரு மணி நேரத்தில் பாதிக் கூடைக்கு மேலே நிரம்பிவிட்டது. அவள் தன் வேலையில் பெரிதும் முனைந்திருந்தாள். பின்னாலிருந்து சைன்சிங் வருவது அவளுக்குத் தெரியவில்லை. திடீ ரென்று காலடிச் சத்தம் கேட்டு, அவள் தலை நிமிர்ந்த போது, சைன்சிங் நிற்பதைக் கண்டாள்.

முலியாவின் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. கூடையைக் கவிழ்த்துவிட்டு வெறுங் கூடையோடு ஓடிப்போகலாமென்று அவள் நினைத்தாள்.

ஆனால் சைன்சிங் பல கஜங்கள் தூரத்திலேயே தயங்கி நின்று, “ பயப்படாதே! பயப்படாதே! பகவானுக்குத் தெரியும், என் மனசில் இருப்பது! நான் உன்னிடம் ஒன்றும் பேசமாட்டேன். புல் எவ்வளவு வேண்டுமானாலும் அறுத்துக்கொண்டு போ; என் வயல்தான் இது ” என்றான்.

அவள் கைகள் ஸ்தம்பித்து நின்றன; அரிவாள் அவள் கையில் ஒட்டிக்கொண்டாற் போல இருந்தது. புல்லே அவள் கண்களுக்குத் தெரியவில்லை. பூமி படீ ரென்று வெடித்து, தான் உள்ளே போய்விடலாகாதா என்று அவளுக்குத் தோற்றியது. உலகம் அவள் கண் களின் முன்பு சுழன்றது.

“ நீ ஏன் புல் அறுக்காமலிருக்கிறாய்? நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லையே? தினந்தோறும் நீ இங்கேயே வா. நானே உனக்குப் புல் அறுத்துக் கொடுப்பேன் ” என்று சைன்சிங் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

சித்திரத்தில் வரைந்த பாவைபோல, அவள் உட்கார்ந் திருந்தாள்.

சைன்சிங் ஓரடி எடுத்துவைத்து முன்னே வந்து, “ நீ என்னைக் கண்டு ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்? இன்றும் நான் உன்னைத் துன்புறுத்த வந்திருக்கிறேனென்று நீ நினைக்கிறாயா? ஈசுவரனுக்குத் தெரியும்: நேற்றுக்கூட உன்னைத் துன்புறுத்துவதற்காக நான் உன் கையைப் பிடிக்கவில்லை. உன்னைக் கண்டு என் கைகள் தாமாகவே முன்னுக்கு வந்தன. எனக்கு ஒன்றும் சுரணையே இல்லை. நீ போனதும் நான் அங்கேயே உட்கார்ந்து மணிக் கணக்காக அழுதுகொண் டிருந்தேன். என் கையை வெட்டிப் போடலாமென்று எனக்குத் தோன்றிற்று. விஷம் குடித்துவிடலாமென்று ஒரு தரம் யோசித்தேன். அப்போதிலிருந்தே உன்னைத் தேடுகிறேன். இன்று நீ இந்த வழியாக வந்தாய். நான் எல்லா வயல்களையும் தேடிய பின்பு இங்கே வந்திருக்கிறேன். இனி நீ உனக்கு இஷ்ட மான தண்டனையை எனக்குக் கொடு. நீ என் தலையை வெட்டிப் போட்டால்கூட ‘ ஊம் ’ கூட்டமாட்டேன். நான்

சோதாவாக இருந்தேன்; லம்படனுக இருந்தேன். ஆனல் உன்னைப் பார்த்ததிலிருந்து என் மனத்திலிருந்த தீமைகள் யாவும் ஒழிந்தன. ‘நான் உன் நாயாக இருந்தால் உன் பின்னலேயே வரலாமே; உன் குதிரையாக இருந்தால் நீ உன் கையால் எனக்குப் புல்லு போடுவாயே’ என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது. எப்படியாவது இந்தச் சடலம் உனக்கு உதவவேண்டும் என்பதே என் மனத்திலுள்ள மிகப் பெரிய விருப்பம். நான் ஏதாவது கெட்ட நினைவோடு இந்தப் பேச்சுப் பேசியிருப்பேனுயின், என் இளமை ஒன்றுக்கும் உதவாமல் போகக்கடவது. மஹாவீரன் பெருத்த பாக்கியவான்; அவனுக்கு இப்படிப் பட்ட தேவி கிடைத்தாள்" என்ருன்.

முலியா பேசாமல் கேட்டுக்கொண் டிருந்தாள். பிறகு தலை குனிந்துகொண்டு, கவடில்லாமல், "அப்படியானு நீ என்னெ என்ன செய்யச் சொல்றே?" என்று கேட்டாள்.

சைன்சிங் இன்னும் அருகில் வந்து, "உன் தயை ஒன்றுதான் எனக்கு வேண்டும்" என்ருன்.

அவள் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள். அவள் வெட்கம் எங்கோ மாயமாய் மறைந்தது. உறுத்தும் குரலில், "உன்னண்டெ ஒரு விஷயம் சொன்னு, நீ வேறெ விதமா நெனெக்க மாட்டியே? ஒனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா, இல்லையா?" என்று கேட்டாள்.

சைன்சிங் தாழ்ந்த குரலில், "கல்யாணம் என்னவோ ஆகிவிட்டது. ஆனல் கல்யாணம் என்ன, அது ஒரு விளை யாட்டு!" என்ருன்.

முலியாவின் உதடுகளில் அவனைத் திரஸ்கரிக்கும் புன்சிரிப்பு ஓடியது. "இருந்தாலும், என் வூட்டு மனுசன் ஒன் பெண்ஜாதியண்டெ இப்படிப் பேசினு ஒனக்கு என்னமா இருக்கும்? நீ அவன் கழுத்தெ வெட்டத் தயாராயிருப்பெ அல்ல? சொல்லு! மகாவீரன் சக்கிலியனுனு, ‘அவன் ஒடல்லே ரத்தம் இல்லே, அவனுக்கு வெக்கம் இல்லே, தன் மரியாதெயெப் பத்தி அவனுக்கு ஓசனை இல்லே’ என்னு நீ நெனச்சுக்கிட்டயா? என் அழகு உன்னெப் பிடிச்சிக்கினு இழுக்குது. ஆனு கொளக்கரெலே என்னெ

விட அழகான பொம்பிளேங்க திரியலே? என்னெ அவுங்க காலுலெ கட்டி அடிக்கலாம்; அவ்வளவு அழகானவங்க அவுங்க. நீ அவுங்களாண்டெ யாரண்டெயாவது போயி தயெ கேக்கிறதுதானே? அவுங்களாண்டெ தயெ இல்லியா? ஆனு அங்கே நீ போவமாட்டே. அங்கே போவறதுன்னு நீ பயத்தாலெ சாவுறே. என்னுண்டெ வந்து தயெ கேக்கிறே. இதெல்லாம் என்னுத்துக்கு? நான் சக்கிலிச்சி; தாழ்ந்த சாதிக்காரி. தாழ்ந்த சாதிக்காரப் பொம்பிளே சித்தெ மெரட்டினு, இல்லாட்டி கொஞ்சம் பேராசெ காட்டினு, ஒன் கையிலே சிக்கிக் கொள்ளுவா. எவ்வளவு மலிவான சரக்கு? என்னு இருந்தாலும் நாயகர் இல்லே! இவ்வளவு மலிவான சரக்கெ விடுவயா?" என்றுள்.

சைன்சிங் வெட்கத்துடன், "அப்படியில்லே, மூலு! நான் உண்மையாகச் சொல்லுகிறேன்: இதில் உயர்ந்த் ஜாதி, தாழ்ந்த ஜாதியைப் பற்றிய பேச்சில்லே. எல்லா மனிதர்களும் சமம். நான் உன் காலடிகளில் தலேவைக்கத் தயாராயிருக்கிறேன்" என்றுன்.

"நான் ஒண்ணும் செய்ய முடியாதுன்னு ஒனக்குத் தெரியும்; அதனுலெத்தானே இதெல்லாம். எவளாவது ஒரு நாயகச்சியாண்டெ போயி அவ காலுலெ தலெயெ வெச்ச யானு ஒனக்கு அப்போ தெரியும்: காலுலெ தலெயெ வெச்சா என்னு பலன் கெடக்கும்'னு! அப்போ இந்தத் தலெ ஒன் கழுத்துலே இராது!"

சைன்சிங் வெட்கத்தினுல் பூமியில் புதையுண்டவன் போல ஆனுன். மாதக்கணக்காக நோயில் படுத்திருந்து எழுந்தவன் போல, அவன் முகம் வாடியது. வாயிலிருந்து பேச்சே எழவில்லே. மூலியா பேச்சில் இவ்வளவு வல்லவளாக இருப்பாளென்று அவன் கனவில்கூட நினைக்கவில்லே.

மூலியா மீண்டும் சொன்னுள்: "நானும் தெனம் பஜாருக்குப் போறேன். பெரிய பெரியவங்க வூட்டுச் சமாசாரங்கள்ளாம் எனக்குத் தெரியும். எவனுவது ஒரு ஜட்காக்காரனே, கோச்சுக்காரனே, வேலேக்காரனே, பண்டிதரோ, சமையல்காரனே உள்ளே நொழையாத ஒரு

வூடு நீ சொல்லு, பாக்கலாம். இதெல்லாம் பெரியவங்க வூட்டு லீலே. அவுங்க பொம்பிளேங்கள்ளாம் செய்யறது ரொம்ப சரி. அவுங்க வூட்டுக்காரங்கதான் சக்கிலிச்சிங்க, வேலேக்காரிங்க மேலே உசிரெ வெச்சிருக்காங்களே! கொடுக்கலும் வாங்கலும் சமமாப் போயிடுச்சு. பாவம்! ஏளெங்களுக்கு இதெல்லாம் ஏது? என் புருசனுக்கு ஒலகத்திலே இருக்கிறதெல்லாம் நானு ஒருத்திதான். அவன் இன்னெரு பொம்பிளேயெக் கண்ணெடுத்துக் கூடப் பாக்க மாட்டான். தற்செயலா நானு கொஞ்சம் அழவா இருக்கேன்; ஆனு நானு கன்னங்கரேல்னு இருந்தாக்கூட அப்பவும் அவன் என்னெ இப்படித்தான் வெச்சுக்குவான். இது எனக்கு நம்பிக்கெதான். நான் சக்கிலிச்சியா இருந்தாக்கூட நம்பிக்கெத் துரோகம் செய்யும்படி அவ்வளவு தாழ்ந்தவ இல்லே. ஆனு அவன் தன் மனசுபோலே நடந்துக்கினு என்னெ கஸ்டப்படுத்தினுன், அப்பொ நானும் அவனெ கஸ்டப்படுத்துவேன். நீ என் அழுவெக் கண்டு தானே சொக்கறே? இன்னிக்கி எனக்கு மாரியாத்தா கண்டுச்சுன்னு, இல்லே எனக்குக் கண்ணு பொட்டெயாப் போயிடுச்சுன்னு, நீ என்னெ நிமிந்துகூடப் பாக்கமாட்டே. சொல்லு, நானு சொல்லறது பொய்யா?"

சைன்சிங் அவள் கூற்றை மறுக்க முடியவில்லே.

மூலியா கர்வம் நிரம்பிய அதே குரலில், "ஆனு, என் ரெண்டு கண்ணும் பொட்டெயாப் போனுகூட அவன் என்னெ இதே மாதிரி வெச்சுக்குவான். என்னெத் தூக்குவான்; ஒக்கார வெப்பான்; சோறு போடுவான். இந்த மாதிரி மனுசனுண்டே நானு கவடம் செய்யணும்'னு தானே நீ சொல்றே? போ, இனிமே என்னெச் சீண்டாதே. அப்படிச் செய்தயோ, பாத்துக்கோ: நல்லா இராது!" என்ருள்.

3

இளமையில் ஆவேசம், பலம், சாகசம், தயை, தன்னம்பிக்கை, கௌரவம் - இன்னும் வாழ்க்கையைத் தூயதாகவும், ஒளி பொருந்தியதாகவும், பூர்ணமாகவும் ஆக்கக் கூடிய எல்லாப் பொருள்களும் நிரம்பியுள்ளன. இளமை

யின் கிறுக்கு - கர்வம், இரக்கமின்மை, தன்னலம், வீருப்பு, விஷய வாசனை, கசப்பு - இன்னும் வாழ்க்கையை மிருகத் தன்மைக்கும், விகாரத்துக்கும், வீழ்ச்சிக்கும் கொண்டு போகக்கூடிய எல்லாப் பொருள்களும் அதுதான். சைன் சிங்குக்கு இளமையின் கிறுக்கு ஏறியிருந்தது. முலியாவின் தண்மையான திவலைகள் அந்தக் கிறுக்கை இறக்கின. பொங்கிவரும் பாகில் நீர்த் திவலைகள் விழுந்தால் நுரைகள் கிளம்புவது நின்று, அழுக்கு ஒழிந்து, நிர்மலமும் தூயதுமான ரஸம் தங்குவதுபோல, அவனுடைய இளமையின் கிறுக்கு ஒழிந்தது; இளமை மட்டும் எஞ்சி நின்றது. ஒரு பெண்மணியின் சொற்கள், எவ்வளவு சுலபமாக மதத்தையும் நல்லொழுக்கத்தையும் நாசமாக்க முடியுமோ அவ்வளவே சுலபமாக அவைகளைத் தூக்கிவிடவும் முடியும்.

சைன்சிங் அன்றையிலிருந்து வேறு மனிதனானான். எப்போதும் அவனுக்குக் கோபம் மூக்கின்மேல் இருக்கும்; எடுத்ததற்கெல்லாம் ஆட்களைத் திட்டுவதும், மிரட்டுவதும், அடிப்பதும் அவன் சுபாவமாக இருந்தது. ஆட்கள் அவனைக் கண்டால் நடுங்குவார்கள். கூலியாட்கள் அவன் வருவதைக் கண்டால் முனைந்து வேலை செய்வார்கள்; ஆனால் அவன் திரும்பிச் சென்றானோ இல்லையோ, இங்கே பீடி பிடிக்க ஆரம்பிப்பார்கள். யாருக்கும் அவனைக் கண்டால் ஆகாது; எல்லாரும் அவனைத் திட்டுவார்கள். ஆனால் அன்றையிலிருந்து சைன்சிங், ஜனங்கள் ஆச்சரியப்படும்படியாக, அவ்வளவு இரக்கமும், அவ்வளவு கம்பீரமும், அவ்வளவு பொறுமையும் உள்ளவனானான்.

பல நாட்கள் கழிந்துவிட்டன. ஒரு நாள் சாயங்காலம் சைன்சிங் வயலைப் பார்க்கப் போனான். கவலை ஓடிக் கொண்டிருந்தது. ஓரிடத்தில் வாய்க்காலின் மடை சரிந்து, தண்ணீரெல்லாம் வீணாக ஓடிப்போவதையும், பாத்திகளில் கொஞ்சங்கூடத் தண்ணீர் செல்லாதிருப்பதையும் அவன் கண்டான். மடை கட்டி விடும் கிழவி சும்மா உட்கார்ந்திருந்தாள். தண்ணீர் ஏன் அங்கே வரவில்லை என்பதைப் பற்றி அவளுக்குச் சிறிதும் கவலையில்லை. முன்பெல்லாம் இம்மாதிரி நிலையைக் கண்டால், சைன்சிங்குக்குத் தன்னை மீறிக் கோபம் வரும்; அந்தக் கிழவியின் அன்றைக் கூலி

முழுதையும் பிடித்துக்கொள்வான்; கவலை ஓட்டுபவர்களை மிரட்டுவான். ஆனால் இன்று அவனுக்குக் கோபம் வர வில்லை. அவன் தானே மடையைக் கட்டி, வாய்க்காலை ஓட விட்டுவிட்டு, வயலிலிருந்த கிழவியிடம் சென்று, "நீ இங்கே ஒன்றையும் பாராமல் உட்கார்ந்திருக்கிறாய்; அங்கே தண்ணீரெல்லாம் ஓடிப்போகிறதே!" என்றான்.

கிழவி பயந்துபோய், "மடை இப்பொத்தான் தெறந்து விட்டிருக்கும், ராசா! நானு இப்பவே போயி மடையைக் கட்டறேன்" என்றாள்.

இதைக் கூறியதும் அவள் உடல் வெடவெட வென்று நடுங்கியது. சைன்சிங் அவளுக்குச் சந்தோஷமூட்டிக் கொண்டே, "ஓடாதே, ஓடாதே, கிழவி! நானே மடையைக் கட்டிவிட்டேன். கிழவனை வெகு நாட்களாகக் காணவில்லையே; எங்கேயாவது வேலைக்குப் போகிறானா, இல்லையா?" என்றான்.

கிழவி குரல் தழுதழுக்க, "இப்பல்லாம் சும்மாதான் குந்திக்கினு இருக்காங்க, அண்ணே. எங்கேயும் ஒண்ணும் வேலெ கெடக்கிலே" என்றாள்.

சைன்சிங் விநயத்துடன், "அப்படியானால் என் னிடம் வேலைக்கு அனுப்பு. கொஞ்சம் சணல் நார் இருக்கிறது; அதைத் திரிக்கட்டும்" என்றான்.

இதைக் கூறிக்கொண்டே அவன் கிணற்றருகே சென்றான். அங்கே நான்கு கவலைகள் ஓடிக்கொண் டிருந்தன; ஆனால் கவலையோட்டுபவர்களில் இருவர் அப்போது இலந்தைப்பழங்கள் சாப்பிடப் போயிருந்தனர். சைன்சிங்கைப் பார்த்தவுடனே ஆட்களின் பாதி உயிர் போய்விட்டது. 'அந்த இரண்டு ஆட்கள் எங்கே என்று நாயகர் கேட்டால் என்ன பதில் சொல்வது? அவர் எல் லாரையும் சேர்த்து மிரட்டுவாரே' என்று அவர்கள் மனம் கலங்கியது. "அவர்கள் இரண்டு பேரும் எங்கே போனார் கள்?" என்று சைன்சிங் கேட்டான்.

எவன் வாயிலிருந்தும் பதில் வரவில்லை. உடனே எதிரே இரண்டு ஆட்கள் துணியின் ஒரு மூலையில்

இலந்தைப் பழங்களை நிரப்பிக் கட்டிக்கொண்டு வருவது தெரிந்தது. அவர்கள் 'குஷி'யாகப் பேசியவண்ணம் வந்துகொண்டிருந்தார்கள். சைன்சிங்கின்மீது பார்வை விழுந்ததுமே அவ்விருவர்களின் குடல்களும் நடுங்கின. கால்கள் மணங்கவ்வளவு பாரமுடையவை ஆயின. மேலே வரவும் முடியவில்லை; திரும்பிப் போகவும் முடியவில்லை. 'இன்று நல்ல மிரட்டல்தான் கிடைக்கும்; ஒருவேளை கூலியும் பிடிக்கப்படலாம்' என்று இருவரும் தெரிந்துகொண்டார்கள். அவர்களின் நடை தளர்ந்தது. இதற்குள் சைன்சிங்க் இருவரையும் கூப்பிட்டான்: "வாருங்கள், வாருங்கள்! எப்படி இருக்கின்றன இலந்தைப் பழங்கள்? இப்படி எனக்கும் கொஞ்சம் கொடுங்கள், பார்க்கலாம்! என் மரத்துப் பழங்கள்தானே?" என்றான்.

இரண்டு பேரும் இன்னும் அதிகமாகப் பயந்தார்கள். 'இன்று நாயகன் நம்மை உயிரோடு விடமாட்டான். எவ்வளவு இனிமையாகப் பேசுகிறான், பார்! அவ்வளவே நன்றாகச் செருப்பால் அடிப்பான்!' என்று நினைத்து, அவர்கள் பரவம், இன்னும் அதிகக் கூச்சம் கொண்டனர்.

சைன்சிங்க் மீண்டும், "சீக்கிரமாக வாருங்களேண்டா! பழுத்த பழங்களாக நான் எடுத்துக்கொள்வேன். சற்று எவனாவது உடனே ஓடிப்போய் வீட்டிலிருந்து கொஞ்சம் உப்புக் கொண்டு வாருங்கள்!" என்று கூறிவிட்டு, மற்ற இரண்டு ஆட்களிடமும், "நீங்களும் இரண்டு பேரும் வாருங்கள். அந்த மரத்து இலந்தைகள் தித்திப்பாய் இருக்கும். பழங்களை முதலில் சாப்பிடலாம். வேலை எப்போதும் இருக்கவே இருக்கிறது!" என்றான்.

அந்த இரண்டு 'படவா'க்களுக்கும் இப்போதுதான் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று. எல்லோருமாக வந்து, பழங்கள் முழுதையும் சைன்சிங்கின் முன்பு கொட்டி, பழுத்த கனிகளாக அவனுக்குப் பொறுக்கிக் கொடுத்தனர். ஒருவன் உப்புக் கொண்டுவர ஓடினான். அரை மணி நேரம் நான்கு கவலைகளும் ஓடாமல் நின்றன. இலந்தைகள் முழுதும் 'ஸ்வாஹா' ஆகி, நாயகர் புறப்பட்டபோது, இரண்டு அபராதிகளும் கைகூப்பிக்கொண்டு,

"சாமீ, இன்னிக்கி உயிர்ப் பிச்சைக் கொடுக்கணும். பசி வாதெ பொறுக்கலே; இல்லாட்டி போயிருக்க மாட்டோம்" என்றார்கள்.

சைன்சிங்க் நயத்தோடு, "இதில் என்ன தவறு? நானுந்தானே இலந்தைப் பழங்கள் சாப்பிட்டேன்? ஓர் அரை மணி நேரம் வேலை நின்றது; இவ்வளவுதானே? நீங்கள் மனம் வைத்தால் ஒரு மணி நேரத்து வேலை அரை மணியில் முடிந்துவிடும். உங்களுக்கு இஷ்டமில்லாமல் நாள் முழுதும் வேலை செய்தாலும் ஒரு மணி நேரத்து வேலைகூட முடியாது" என்றான்.

அவன் போனதும் நால்வரும் பேசலானார்கள்.

"எசமான் இப்படி இருந்தாத்தானே வேலை செய்ய மனசு வரும்? எப்பொப் பாத்தாலும் தலைமேலே நின்னு!"

"இன்னிக்கி நம்மெப் பச்சையாவே கடிச்சுத் துன்னுடுவாருன்னு நானு பாத்தேன்."

"இப்பொ கொஞ்ச நாளாப் பாக்கிரேண்டா: ஆசாமி ரொம்ப அடங்கிப் போயிட்டாரு."

"சாயந்தரம் முழுக் கூலி கெடச்ச அப்பறம் சொல்லுடா!"

"நீ எருமைச் சாணிடா! ஆசாமியெப் பாக்கச் சொலவே தெரியலே?"

"இனிமெ நல்லா மனசு வெச்சு வேலெ செய்வோண்டா."

"இல்லாம என்ன! அவரு எல்லாத்தெயும் நம்ம மேலெ போட்டுட்டபோது, நல்லா சுத்தமா வேலெ செய்யறதுதானேடா நம்ம தருமம்?"

"எனக்கு மாத்திரம் அண்ணத்தெ, இப்போகூட நாயகர் மேலெ நம்பிக்கை இல்லே."

4

ஒரு நாள் சைன்சிங்குக்கு ஏதோ வேலையாகக் கோர்ட்டுக்குப் போகவேண்டியிருந்தது. ஐந்து மைல்

தூரம் போக வேண்டும். சாதாரணமாக அவன் எப்போதும் தன் குதிரைமீது போய்வருவது வழக்கம். ஆனால் அன்று வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. ஆகவே ஜட்காவிலேயே போகலாமென்று நினைத்தான். மஹாவீரனுக்கு ஜட்கா கொண்டுவருமாறு சொல்லி யனுப்பினான். சுமார் ஒன்பது மணிக்கு மஹாவீரன் வந்து கூப்பிட்டான். சைன்சிங்க் தயாராக உட்கார்ந் திருந்தான். சட்டென்று ஜட்காவில் வந்து உட்கார்ந்தான். குதிரை மிகவும் இளைத்துப் போயிருந்தது. ஜட்கா வில் விரித்திருந்த ஜமக்காளம் ஒரே அழுக்காகவும் கிழிந்தும் இருந்தது. அதிலிருந்த சாமான்கள் யாவுமே உபயோகமற்றவையா யிருந்தன. சைன்சிங்குக்கு அதில் உட்கார வெட்கமாயிருந்தது. "என்ன மஹாவீர், ஏன் எல்லா உருப்படிகளும் இவ்வளவு மோசமாயிருக்கின்றன? உன் குதிரை எப்போதும் இவ்வளவு இளைத்திருந்த தில்லையே? இப்போதெல்லாம் என்ன, சவாரிகள் கிடைப்பதில்லையா?" என்று கேட்டான்.

"இல்லே சாமி, சவாரிங்க இல்லாமெ என்ன? ஆனா, பஸ்ஸுங்களுக்கு முன்னே ஜட்காவெ எவன் கேக்கறான்? முன்னெல்லாம் ரெண்டு, ரெண்டரை, மூணு ரூபா சம்பாச் சிக்கினு வூட்டுக்கு வருவேன். இப்பொ ஒன்னேகால் ரூபாக் காசு கெடக்கிறது குதிரைக் கொம்பா இருக்குது! குதிரைக்கி என்ன தீனிபோட்டு நான் என்ன துன்னுறது? பெரிய ஆபத்தா இருக்குது, சாமீ! குதிரையையும் வண்டி யையும் வித்தூட்டு ஒங்களுக்குக் கூலிவேலை செய்யலாம்'னு கூட ஒசனை பண்ணேன். ஆனா இதுங்களெ வாங்கறவன் இல்லே. குறைஞ்ச பட்சம் தெனம் பன்ரண்டணாவாச்சியும் குதிரைக்கே வேணும்; புல்லு வேறெ. நம்ப வவுத்துக்கே இல்லேன்னா குதிரையெ எவன் கேக்கறான்?" என்று மஹாவீரன் பதில் சொன்னான்.

சைன்சிங்க் அவனுடைய கிழிந்த சட்டையைப் பார்த்து, "ஒரு நாலுகாணி நிலத்தை வைத்துக்கொண்டு பயிரிடுவது தானே?" என்று கேட்டான்.

மஹாவீரன் தலை குனிந்துகொண்டு, "பயிர் வேலெ செய்யறத்துக்கு ரொம்ப சாமர்த்தியம் வேணும், சாமீ!

எவனாவது வாங்கறவன் வந்தா, இந்த வண்டியெ ஒண்ணுக்கும் முக்காலுக்குமா வித்தூட்டு, அதுக்கப்பொறம் நானும் புல்லு அறுத்து பஜாரிலே கொண்டுபோயி விக்கலாம்'னு பாக்கறேன். இப்பல்லாம் மாமியாரு, மருமவ ரெண்டு பேரும் அறுக்கறாங்க. ரெண்டு பேருமா அறுத்தாத்தான் பத்துப் பனிரண்டணாக் காசாச்சும் கெடக்கிறதுங்க" என்றான்.

"அப்படியானால் கிழவிதான் கடைத்தெருவுக்குப் போய் புல் விற்கிறாளா?"

மஹாவீரன் வெட்கத்துடன், "இல்லெ சாமீ! அவ என்னமா அவ்வளவு தொலெவு போவா? என் வூட்டுக்காரிதான் போவறா. நடுப்பவல் வரையிலே புல் வெட்டுறா; அதுக்கு மேலே பஜாருக்குப் போவறா. இருட்டிக் கொஞ்ச நேரம் ஆனதும் அங்காந்து திரும்பி வர்றா. ரொம்பக் களெச்சுப் போயிடறா, சாமீ! ஆனா, நான் என்ன செய்வேன்? தலெவிதி அப்படி இருக்குதே!" என்றான்.

சைன்சிங் கோர்ட்டுக்குப் போனான். மஹாவீரன் சவாரிகளைத் தேடியவண்ணம், வண்டியை இங்குமங்குமாகத் திருப்பிக்கொண்டு, டவுனை நோக்கிச் சென்றான். சைன் சிங் அவனை ஐந்து மணிக்கு வரச் சொல்லியிருந்தான்.

சுமார் நான்கு மணிக்கு, சைன்சிங் கோர்ட்டு வேலைகள் முடிந்து வெளியே வந்தான். காம்பவுண்டுக்குள்ளேயே வெற்றிலைக் கடை இருந்தது. அதற்குச் சற்றுத் தள்ளி, ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதன் நிழலில் பல ஜட்காக்களும், பெட்டி வண்டிகளும், கோச்சுகளும் நின்றிருந்தன. வக்கீல்கள், கூலிக்காரர்கள், ஆபீஸர்கள் முதலியவர்களின் வண்டிகள் அங்கேதான் நிற்பது வழக்கம். சைன்சிங் தண்ணீர் குடித்ததும், வெற்றிலை போட்டுக் கொண்டான். பஸ் வந்ததும் சற்று டவுனுக்குப் போய் வரலாமென்று அவன் நினைத்துக்கொண் டிருக்கையில், திடீரென அவன் பார்வை ஒரு புல்லுக்காரிமீது விழுந்தது. தலையில் புற் சுமையை வைத்துக்கொண்டு அவள் கோச்சுக் காரர்களிடம் பேரம் பேசிக்கொண் டிருந்தாள். அவன் உள்ளம் குதித்தெழும்பியது. 'இவள் மூலியா வாயிற்றே!'

ஒரு ரோஜா நிறப் புடைவை யணிந்து, தன்னை நன்ருக அலங்கரித்துக்கொண் டிருந்த அவள், கோச்சுக்காரர் களிடம் விலை பேசிக்கொண்டிருந்தாள். பல கோச்சுக் காரர்கள் அங்கே கூடிவிட்டார்கள். ஒருவன் அவளோடு பரிகாசம் செய்கிருன்; இன்னெருவன் அவளை முறைத்துப் பார்க்கிருன்; இன்னுமொருவன் சிரிக்கிருன்.

கன்னங்கரேலென்றிருந்த ஒரு கோச்சுக்காரன், "மூனு, புல்லு மொத்தம் வெலெயே ஆறணுத்தானே?" என்ருன்.

கண்டோரை மயக்கும் தன் கண்களால் அவனைச் சுழற்றிப் பார்த்துவிட்டு அவள், "ஆறணுவுக்கு வாங் கணும்'ஞ அங்கே எதிரெ புல்லுக்காரிங்க குந்திக்கினு இருக்காங்களே, அங்கே போ. மூணு நாலு துட்டு கம்மி யாக்கூடக் கெடெக்கும். என் புல்லு பன்னிரண்டணுவுக் குத்தான் போவும்" என்ருள்.

வயது சென்ற ஒரு கோச்சுக்காரன் பெட்டி வண்டி யின்மேல் உட்கார்ந்தவாறே, "ஒனக்குத்தான் இப்போ காலம். பனிரண்டணு இல்லே; ஒரு ரூபா கேளு. வாங்கற வங்க அப்பனுக்கு அயுதுக்கினு கொடுத்துட்டும் போவாங்க. இப்போ வக்கீலுங்க வரட்டும். ரொம்ப நேரம் ஆவாது" என்ருன்.

ரோஜா நிறத் தலைப்பாகை யணிந்திருந்த ஒரு ஜட்காக் காரன், "கெயவனுருக்குக்கூட வாயிலே தண்ணி ஒழு குது. இனிமே மூலியா எவனெயும் கண்ணெடுத்துப் பாக்கறது ஏது!" என்ருன்.

சைன்சிங்குக்கு அந்தத் துஷ்டர்களையெல்லாம் செருப் பால் அடிக்கலாம்போல அவ்வளவு கோபம் வந்தது. 'எல் லோரும் அவளைக் கண்களாலேயே விழுங்கிவிடுபவர்கள் போல், எப்படி உற்றுப் பார்க்கிருர்கள்! மூலியாவும் இங்கே எவ்வளவு 'குஷி'யா யிருக்கிருள்! வெட்கமு மில்லை, சங்கோசமுமில்லை, அச்சமுமில்லை! எப்படிச் சிரித்துச் சிரித்து, ரஸமாகக் கண்களைச் சிமிட்டிக்கொண்டே, ஒன்றுக் குப் பத்தாகப் பேசுகிருள்! பெண் சிங்கத்தைப்போல் துடித்

தெழுந்த அந்த மூலியாதானா இவள்?' என்று அவன் நினைக்கலானான்.

இதற்குள் மணி நான்கு அடித்தது. வக்கீல்களும், ஜட்ஜும், கட்சிக்காரர்களும், குமாஸ்தாக்களும் வெளியே வந்தார்கள். ஒரு பெரிய திருவிழாக் கூட்டம்போல் இருந்தது. பஸ்ஸுகளுக்கும், கோச்சுகளுக்குமாக எல்லாரும் ஓடினார்கள். கோச்சுக்காரர்களும் அவசர அவசரமாகக் குதிரைகளை வண்டிகளில் பூட்டினார்கள். மூலியாவைப் பலர் ரஸிகக் கண்களோடு பார்த்துவிட்டுத் தத்தம் வண்டிகளில் போய் உட்கார்ந்தார்கள்.

திடீரென்று மூலியா புற் சுமையைத் தூக்கிக்கொண்டு ஒரு கோச்சின் பின்னால் ஓடினாள். கோச்சில் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கிய, இளைஞரான ஒரு வக்கீல் உட்கார்ந்திருந்தார். கால்மிதியின் அருகில் புல்லை வைக்கச் சொல்லி, சட்டைப் பையிலிருந்து ஏதோ பணம் எடுத்து அவர் மூலியாவிடம் தந்தார். அவள் குறுநகை புரிந்தாள். இரண்டு பேருக்குள் ஏதோ பேச்சும் நடந்தது. அது சைன்சிங்கின் காதுக்குக் கேட்கவில்லை.

ஒரு க்ஷணத்தில் மூலியா ஆனந்தம் தாண்டவமாடும் முகத்தோடு வீடுநோக்கிச் சென்றாள். சைன்சிங்க வெற்றிலைக் கடையில் தன்னை மறந்து நின்றான். வெற்றிலைக்காரன் கடையைக் கட்டிவிட்டு, உடை அணிந்துகொண்டு, வெளிக் கதவைப் பூட்டிவிட்டு, கீழே இறங்கியபோதுதான் சைன்சிங்கின் ஸமாதி கலைந்தது. "என்ன, கடையைக் கட்டியாயிற்றா?" என்று கேட்டான்.

வெற்றிலைக்காரன் அநுதாபத்துடன், "இதற்கு உடனே வைத்தியம் செய்யுங்கள், நாயகரே! இந்த வியாதி நல்லதல்ல!" என்றான்.

சைன்சிங்க் திடுக்கிட்டு, "எந்த வியாதி?" என்று கேட்டான்.

"எந்த வியாதியா! அரை மணிநேரமாக, இங்கே சுரணையில்லாமல் நிற்கிறீர்களே! கோர்ட்டு முழுதும் கலைந்தது. கடைகளெல்லாம் மூடியாயிற்று. வேலைக்

காரர்கள் கூடப் பெருக்கிவிட்டுப் போய்விட்டார்கள். உங்களுக்கு எதுவுமே தெரியவில்லையே? இது மகா கெட்ட வியாதி. உடனே வைத்தியம் செய்யுங்கள்!" என்றான் வெற்றிலைக் கடைக்காரன்.

சைன்சிங் பிரம்பைக் கையால் தட்டிக்கொண்டு 'கேட்'டண்டை வந்ததுமே, மஹாவீரனின் ஜட்கா எதிரே வந்தது.

5

ஜட்கா சிறிது தூரம் சென்றதும், "இன்று எவ்வளவு பணம் சம்பாதித்தாய், மஹாவீர்?" என்று சைன்சிங் கேட்டான்.

மஹாவீரன் சிரித்துக்கொண்டே, "இன்னிக்கிச் சாமீ, நாளெல்லாம் சும்மாதான் கெடந்தேன். ஒரு சவாரி கூடக் கெடெக்கெலே. போதாத்துக்கு ஒரணு பீடி குடிச்சுட்டேன்" என்றான்.

சைன்சிங் சற்று நேரம் கழித்து, "நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்: நீ என்னிடமிருந்து தினம் ஒரு ரூபாய் வாங்கிக்கொள். நான் கூப்பிடும்போது ஜட்காவை ஓட்டிக்கொண்டு வா. அப்போது உன் வீட்டுக்காரி புல்லைச் சுமந்துகொண்டு கடைத் தெருவுக்குப் போகும்படி இராதே? இது உனக்குச் சம்மதமா?" என்றான்.

மஹாவீரன் கண்களில் நீர் வடிய, "எசமானே, நீங்க இட்ட பிச்செதான் துன்னறேன். நானு ஒங்க குடி. எப்பொ வேணும்'னாலும் கட்டிப் பிடிச்சுக்கினு போங்க. ஒங்க கிட்டெ ரூபா........" என்றான்.

சைன்சிங் இடைமறித்து, "இல்லை, இல்லை. நான் உன்னிடம் தண்டத்துக்கு வேலை வாங்க விரும்பவில்லை. நீ என்னிடம் வந்து தினம் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு போ. வீட்டுக்காரியைப் புற் சுமையுடன் கடைத்தெருவுக்கு அனுப்பாதே. உன்னுடைய மானமும் என் மானந்தான். தவிர உனக்கு எப்போது பணம் வேண்டியிருந்தாலும்,

சற்றும் அச்சமின்றி என்னிடம் வந்து கேள். ஆனால் ஒன்று: மூலியாவினிடம் இந்தப் பேச்சை மறந்துபோய்க் கூடச் சொல்லாதே. அதனால் என்ன பிரயோஜனம்!'' என்றான்.

பல நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலையில் மூலியா சைன்சிங்கைச் சந்தித்தாள். சைன்சிங் குடியானவர்களிடம் வரி வசூல் செய்துவிட்டு, வீட்டுக்கு வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் அன்று மூலியாவின் கையைப் பிடித்த அதே இடம். அவள் குரல் அவன் காதில் விழுந்தது. அவன் திடுக்கிட்டுப் பின்னால் பார்த்தபோது, அவள் ஓடி வந்துகொண்டிருந்தாள். "என்ன மூலா! ஏன் ஓடிவருகிறாய்? நான்தான் நிற்கிறேனே!'' என்றான்.

அவள் இரைக்க இரைக்க, "வெகு நாளா ஒங்களைப் பாக்க நினெச்சேன். இன்னிக்கிதான் நீங்க வந்ததெப் பாத்ததும் ஓடிவந்தேன். நான் இப்பொவெல்லாம் புல் விற்கப் போவறதில்லே'' என்றாள்.

"ரொம்பவும் நல்லதாயிற்று.''

"நான் எப்பவாவது புல் விக்கச்சே நீங்க என்னெப் பாத்தீங்களா?''

"ஆமாம். ஒரு நாள் பார்த்தேன். மஹாவீரன் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டானா என்ன? நான் சொல்லவேண்டாமென்று தடுத்திருந்தேனே?''

"அவுங்க என்னண்டெ எதெயும் மறச்சுவெக்க மாட்டாங்க.''

இருவரும் ஒரு கணம் பேசாமல் நின்றனர். யாருக்கும் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. திடீரென்று மூலியா புன்னகை புரிந்து, "இங்கெதான் நீங்க என் கையைப் பிடிச்சீங்க'' என்றாள்.

சைன்சிங் வெட்கத்துடன், "அதை மறந்துவிடு, மூலா! அப்போது என்னை ஏதோ ஒரு பிசாசு பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது'' என்றான்.

அவள் தழுதழுத்த குரலில், ''நான் ஏன் அதெ மறப்பேன்? அந்தக் கை பிடிச்ச மானத்தெத்தானே நீங்க இப்ப

காப்பாத்தறீங்க! ஏழைமை மனுசனே என்ன வேணுமான லும் செய்யச் சொல்லும். நீங்க தான் என்னெக் காப்பாத் தினீங்க!'' என்றாள். மீண்டும் இருவரும் பேசாம லிருந்தனர்.

அவள் சற்று நேரம் கழித்து, "நான் அப்போ சிரிப்பிலும் பேச்சிலும் மூழ்கியிருந்தேன்'னு நீங்க நெனச்சுக்கிட்டீங்களா?'' என்று கேட்டாள்.

சைன்சிங் அழுத்தமான குரலில், "இல்லே, முலியா! நான் ஒரு கணங்கூட அப்படி நினைத்ததில்லே'' என்றான்.

புன்சிரிப்புடன், "நான் ஒங்களண்டெ அதெத்தான் எதிர்பார்த்தேன், எதிர்பார்ப்பேன்'' என்றாள் அவள்.

காற்று, நீர் பாய்ந்த வயல்களில் இளைப்பாறச் சென்று கொண்டிருந்தது. கதிரவன் இரவின் மடியில் இளைப்பாறச் சென்றுகொண் டிருந்தான். சைன்சிங் அந்த மெல்லிய அந்தி வெளிச்சத்தில் நின்றவண்ணம், முலியாவின் மறையும் உருவைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

இலவசப் புகழ்

அப்போது வந்திருந்த ஜில்லா கலெக்டர் நல்ல வேளையாக ஒரு சிறந்த ரஸிகராக இருந்தார். சரித்திர ஞானத்திலும், பழைய நாணயங்களின் ஆராய்ச்சியிலும் அவருக்கு நல்ல பிரசித்தி. ஆபீஸின் கடுமையான வேலைகளி லிருந்து, அவருக்குச் சரித்திர ஆராய்ச்சிகள் செய்ய எப்படித்தான் ஓய்வு கிடைத்துவந்ததோ, அது ஆண்டவனுக் குத்தான் வெளிச்சம். சாதாரணமாக நீங்கள் எந்தப் பெரிய அதிகாரியை வேண்டுமானாலும் கேளுங்கள்: அவர், "வேலைகள் மிகவும் மும்முரமா யிருக்கின்றன. வெளியே தலைகாட்ட ஓய்வில்லை. பிராணன் போகிறது!" என்று தான் சொல்வார். வேட்டையாடுவதும் ஊர் சுற்றுவதுங் கூட அவர்கள் வேலையில் சேர்ந்திருக்குமென்று தோற்று கிறது. அந்தக் கனவான்களின் பிரதாபங்களை யெல்லாம் கண்டு, மனத்தில் அவர்களுக்கு நான் மரியாதை வைத்திருந் தேன்; ஆனால் அவர்களுடைய அதிகாரத்தன்மை எவ் விதமான நெருங்கிய சம்பந்தத்துக்கும் இடையூறாக இருந்தது. நானாக முதலில் வலியச் சென்று அவர்களோடு கலந்துகொண்டால், நான் ஏதோ தன்னலத்துக்காகப் பாடுபடுகிறேன் என்று ஜனங்கள் நினைப்பார்கள். ஆகை யால் நான் எந்த விதத்திலும் அந்தக் குற்றத்தை என் தலைமேல் போட்டுக்கொள்ளத் தயாராயில்லை.

அதிகார வர்க்கத்தினரை விருந்துகளுக்கும் பொது வான உற்சவங்களுக்கும் அழைப்பதுகூட எனக்குப் பிடிக்காது. எவராவது ஓர் அதிகாரி ஒரு பொதுக்கூட்டத் துக்குத் தலைமை வகித்தாலும் சரி; அல்லது ஒரு ஸ்கூலோ ஆஸ்பத்திரியோ விதவாசிரமமோ ஒரு கவர்னரின் பெய ரால் திறக்கப்பட்டாலும் சரி; நான் என் தேசபந்துக்களின் அடிமை மனப்பான்மையை நினைந்து, மணிக்கணக்காக வருந்துவது வழக்கம். ஆனால் ஒரு நாள் ஜில்லா கலெக்டர் தாமாகவே வலிந்து, "நான் தங்களைச் சந்திக்க விரும்பு கிறேன். தாங்கள் என் பங்களா வரையில் வந்து செல்லும்

சிரமத்தை ஏற்றுக்கொள்வீர்களா ?" என்று எனக்கு ஒரு கடிதம் எழுதியபோது, நான் பெரும் சங்கடத்தில் அகப் பட்டுக் கொண்டேன். அவருக்கு என்ன பதில் கொடுப்பது? நண்பர்கள் ஓரிருவரை ஆலோசனை கேட்டேன்.

"எனக்கு ஒய்வு இல்லை என்று தெளிவாக எழுதி விடுங்கள். அவர் ஜில்லா கலெக்டராயிருந்தால் தம் வீட் டோடு இருக்கட்டும்! ஏதாவது சர்க்கார் வேலையோ, சட்ட சம்பந்தமான வேலையோ இருந்தால் தாங்கள் போவது அவசியமே. ஆனால் அவருடைய சொந்த விஷயமாகத் தாங்கள் அவரை நேரில் போய்ப் பார்ப்பது தங்கள் மரியாதைக்கு விரோதம். அவரே ஏன் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கக்கூடாது? இதனால் அவர் மரியாதைக்கு என்ன பங்கம் வந்துவிட்டிருக்கும்? தாம் ஜில்லா கலெக்டர் என்ற எண்ணத்தினால்தானே தாமாக நேரே வரவில்லை? ஆபீ ஸுக்கு வெளியே வந்தால், எங்களையும் தங்களையும் போலவே, தாமும் சாதாரண மனிதர்களே என்ற அறிவு இந்த முட்டாள்களான இந்தியர்களுக்கு எப்போதுதான் வருமோ? இவர்கள் தங்கள் வீட்டுக்காரிகளிடங்கூடத் தம் அதிகாரங்களைக் காட்டுவார்கள்போல் இருக்கிறது! தம் பதவிகளை இவர்கள் எப்போதும் மறப்பதில்லை!" என்று அவர்கள் கூறினர்.

காற்றில் பறந்துலவும் வதந்திகளுக்கு நடமாடும் பொக்கிஷமாயிருந்த என் நண்பரொருவர், இந்திய அதிகாரிகளைப்பற்றி மனோரஞ்ஜகமான பல சம்பவங் களைச் சொன்னார். "ஒரு பெரிய அதிகாரி தம் மாமனார் வீட்டுக்குப் போனார். சௌகரியப்பட்டால் ஒருவேளை மனைவியையும் அழைத்துவரலாம் என்பது அவர் எண்ணம். பொதுவான வழக்கப்படி, முதல் தடவை அழைத்ததுமே பெண்ணை அனுப்புவது உசிதமென்று மாமனார் நினைக்க வில்லை. 'இருக்கட்டும், மாப்பிள்ளை! இத்தனை நாட்களுக் கப்புறம் இப்போதுதானே வந்திருக்கிறாள்? இப்போதே அவளை எப்படி அனுப்புவேன்? ஐந்தாறு மாத காலமாவது இங்கே இருக்கட்டும்' என்று அவர் சொன்னார். அதிகாரி யின் தர்மபத்தினியும் தன் தம்பி மூலம், 'இப்போது உடனே வர எனக்கு இஷ்டமில்லை. பெற்றோர்களும்

கூடப்பிறந்தவர்களும் மட்டும் எனக்கு உறவினர்கள் இல்லையா? நான் என்ன, உங்களுக்கு விற்கப்பட்ட பொம்மையா?' என்று அவருக்குச் செய்தி சொல்லி யனுப்பினுள். மாப்பிள்ளையோ பெரிய அதிகாரி. தம்மை மீறிக் கோபம் வந்தது அவருக்கு. உடனே குதிரைமீது ஏறித் தம் 'ஹெட் க்வார்டர்ஸு'க்குப் போனுர். மறு நாளே மாமனுர் பேருக்கு 'ஸம்மன்' ஜாரி செய்துவிட்டார். கிழவர் பாவம்! உடனே பெண்ணை அழைத்துக்கொண்டு, மாப்பிள்ளையின் காலில் போய் விழுந்தார். பின்புதான் அவர் உயிர் தப்பியது. இவர்களெல்லோரும் இவ்வளவு வீண் அபிமானம் கொண்டவர்கள். ஆகவே உங்களுக்கு ஜில்லா கலெக்டரைப்பற்றி ஆகவேண்டியது என்ன? நீங்கள் புரட்சிகரமான ஒரு கதையோ கட்டுரையோ எழுதினுல், அடுத்த க்ஷணத்தில் அரசாங்கத்தார் உங்களைக் கைது செய்வார்கள். அப்போது ஜில்லா கலெக்டர் கொஞ்ச மாவது தாக்ஷிண்யம் பார்க்கமாட்டார். 'இது கவர் மெண்டின் உத்தரவு; நான் என்ன செய்வது?' என்று சொல்வார். உங்கள் பிள்ளைக்கு மாஜிஸ்டிரேட் வேலையோ தாசில்தார் வேலையோ வாங்கிக்கொடுக்கவேண்டும் என்ற ஆசை என்னவோ உங்களுக்கு இல்லவே இல்லை. ஏன் நீங்கள் வீணுக்கு அங்கே ஓடவேண்டும்?" என்று அவர் கூறினுர்.

என் நண்பர்களின் இந்த ஆலோசனை எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு பெரிய மனுஷ்யன் நம்மை மதிப்பு வைத்துக் கூப்பிடும்போது, 'அவன் ஜில்லா கலெக்டர்' என்ற ஒரு சப்பைக் காரணத்தை வைத்துக்கொண்டு அவனுடைய அழைப்பை மறுப்பது மனுஷத்தனமாகுமா? கலெக்டர் என் வீட்டுக்கு வந்தால் அவருடைய மதிப்பு குறைந்து போகாதென்பது வாஸ்தவம். பரந்த உள்ளம் வாய்ந்த மனிதனுயிருந்தால் கொஞ்சமும் சங்கோசமில்லா மல் நம் வீட்டுக்கு வந்துவிடுவான். ஆனுல், ஏன் ஐயா, ஒரு ஜில்லா முழுமைக்கும் அதிகாரியாக இருப்பது என்ன சாதாரண விஷயமா? ஒரு நாவலாசிரியருக்கு என்ன ஐயா, பெருமையுண்டு? இங்கிலாந்திலும் அமெரிக்கா விலும், கதாசிரியர்களின் மேஜைக்கும் நாவலாசிரியர்களின்

மேஜைக்கும் அழைக்கப்படுவதில் முதல் மந்திரிகூடத் தனக்குக் கௌரவம் என்று நினைக்கிருன்; ஜில்லா கலெக்டர் எந்தக் கணக்கில் சேர்த்தி! ஆனல் இது பாரதவர்ஷம். இங்கே ஒவ்வொரு தனிகனின் தர்பாரிலும் கவிச் சக்கரவர்த்திகளின் ஒரு கூட்டம் அவனுடைய கீர்த்தியைப் பாடக் குழுமியிருந்ததுண்டு. இன்றுகூடப் பட்டாபிஷேகங்கள் நடக்கும்போது, நம் எழுத்தாளர்களின் சங்கம் ராஜசபைகளில் ஆஜராகி, கவிதைகள் பாடிப் பரிசு பெறுவதற்காகக் கையை விரிக்கிறது. அப்படி இருக்கும்போது நான் என்ன ஐயா, அவ்வளவு பெரிய கொம்பனு, ஜில்லா கலெக்டர் என் வீட்டுக்கு வர? ஒன்றுமில்லாத நமக்கெல்லாம் இவ்வளவு கர்வமும் திமிரும் இருக்கும்போது, ஒரு ஜில்லா முழுமைக்கும் சக்கரவர்த்தியாக இருக்கிருனே, அவனுக்குக் கொஞ்சமாவது கர்வம் இருப்பது உசிதந்தானே? இதை அவனுடைய பலவீனம் என்ருே, அஸமஞ்ஜஸத்தனம் என்ருே, முட்டாள்தனம் என்ருே, முரட்டுத்தனம் என்ருே - எது வேண்டுமானுலும் சொல்லுங்கள். ஆனுலும் இது தகுதியானதே. தேவனுக இருப்பது கர்வப்படவேண்டிய விஷயம்; ஆனல் மனிதனுக இருப்பதும் குற்றமன்று.

மேலும், நான் சொல்லுகிறேன்: ஜில்லா கலெக்டர் என் வீட்டுக்கு வராததற்காக நான் ஆண்டவனை வாழ்த்த வேண்டும். வந்திருந்தால் எனக்கு எவ்வளவு அவமானமாக இருந்திருக்கும்? அவருக்கு ஸம்மானமும் மரியாதையும் செய்வதற்கு வேண்டிய பொருள்கள் என்னிடம் ஏது? ஒரு நல்ல நாற்காலிகூட வீட்டில் இல்லையே, ஐயா! அவரை என்ன, அந்த மூன்று கால்களுள்ள சிம்மாசனத்தில் உட்காரவைப்பதா, அல்லது அந்த அழுக்கு ஜமக்காளத்தின் மேல் உட்காரச் சொல்வதா? முக்காலணுவுக்கு இருபத்து நான்கு நாட்டுச் சுருட்டுக்கள் வாங்கிக் குடித்துவிட்டு, நான் என் மன ஆசையைத் தீர்த்துக் கொள்ளுகிறேன். என்னிடம் அவ்வளவு அந்தஸ்து ஏது ஐயா, ரூபாய்க்கு இரண்டு ஸிகரெட்டுகள் வாங்க? அந்த ஸிகரெட் எங்கே கிடைக்கிறது, அதன் பெயர் என்ன என்பதுகூட எனக்குத் தெரியாதே! ஜில்லா அதிகாரி என் வீட்டுக்கு வராமல்,

என்னைக் கூப்பிட்டுக்கொண்டதற்காக, நான் என் பாக்கியத்தைப் புகழ வேண்டாமா? நாலைந்து ரூபாய்கள் வீண் செலவு ஆவதோடு, நான் வெட்கப்பட வேண்டியும் இருந்திருக்கும்.

ஒருகால் என் பரம துர்ப்பாக்கியங்களுக்கும் பாவங்களுக்கும் தண்டனையாக, அவருடைய தர்மபத்தினியும் அவரோடு கூடவே இங்கே வந்துவிட்டால், அப்போது பூமியில் அழுங்குவதைத் தவிர எனக்கு வேறு வழி ஏது? நானோ என் தர்மபத்தினியோ அந்த அம்மாளுக்கு மரியாதை செய்திருக்க முடியுமா? நீங்கள் அந்த மாதிரியான சங்கடத்தில் அகப்பட்டுக்கொள்வீர்களானால், உங்கள் வாய் அடைத்துப்போகும், ஐயா! என்ன செய்வதென்றே தோன்றாமல் விழித்துக்கொண்டு நிற்பீர்கள்! அந்தச் சீமாட்டி நம் வீட்டுக்கு வந்தால், நாம் நம் ஏழைமையை மறைத்து அலங்கரித்து வைத்திருக்கும் முன் கட்டு 'ஹாலோ'டு நின்றுவிடுவாளா? அதுவரைக்கும் நம் ஏழைமை தெரிந்தாலும், விகாரமாவது இல்லாமலிருக்கும். ஆனால் உள்ளே காலை எடுத்து வைத்தால், ஒவ்வோர் அடிக்கும் 'கச்சாம் பிச்சா' மென்று விகாரமான காட்சிகளே தென்படும். நீங்கள் உங்கள் வீட்டில் வேணுமானால் கிழிசலையோ கந்தலையோ உடுத்துக்கொண்டு, உங்கள் வறுமையிலேயே திருப்திகொண்டவர்களாகக் காலம் தள்ள முடியும். ஆனால், தன்னபிமானமுள்ள எந்த மனிதனும் தன் ஈன நிலை மற்றவர்களின் பரிகாசத்துக்குரிய பொருளாவதை விரும்பமாட்டான். அந்தச் சீமாட்டிக்கு முன்னே நீங்கள் வாய் திறந்து பேசவே மாட்டீர்கள்.

ஆகவே நான் ஜில்லா கலெக்டரின் அழைப்பை ஏற்றுக்கொண்டேன். அவருடைய சுபாவத்தில் அநாவசியமான அதிகாரப் பெருமை இருந்தபோதிலும், அவருடைய சிநேகமும் தாராள மனப்பான்மையும் அதைக் கூடியமட்டும் வெளிக்குக் காட்டாமல் தடுத்தன. மொத்தத்தில், அவர்மீது நான் குற்றம் சொல்லும்படியாக அவர் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. அதிகாரப் பிரகிருதியை மாற்றிக்கொள்வது அவருடைய சக்திக்குப் புறம்பானது.

நான் இந்தச் சம்பவத்துக்கு ஒரு மகத்துவமும் கொடுக்கவில்லை. மகத்துவம் தரக்கூடிய விஷயமும் அதில் ஒன்றுமில்லை. அவர் என்னைக் கூப்பிட்டார்; நான் போனேன். ஏதோ வம்பளந்துவிட்டுத் திரும்பி வந்தேன். யாரிடந்தான் இதைப்பற்றிச் சொல்லவேண்டிய அவசியம் என்ன? கறிகாய் வாங்கக் கடைத்தெருவுக்குப் போகிற வன்போலப் போனேன்; வந்தேன்.

ஆயினும், மோப்பம் பிடிப்பவர்களுக்கு இந்தச் சம்பவம் எப்படியோ தெரிந்துபோயிற்று. விசேஷமான வட்டாரங்களில், எனக்கும் கலெக்டருக்கும் மிகவும் நெருங்கிய நட்பு இருப்பதாகவும், அவர் என்னிடம் பெருத்த மரியாதை வைத்திருப்பதாகவும் பேச்சு உலவியது. ஜனங்களின் அதிசயோக்தி என் மரியாதையைப் பின்னும் அதிகப்படுத்தியது. என்னைக் கேளாமல் கலெக்டர் எந்தத் தீர்மானமும், எந்த ரிபோர்ட்டும் எழுதுவதில்லை என்ற அளவுக்குப் பேச்சு பிரசித்தமாகப் பரவியது.

புத்திசாலியான மனிதனொருவன் இந்தப் பிரசித்தியால் லாபமடைந்திருக்க முடியும். தன்னலத்தினுல் மனிதன் பித்தனுகிவிடுவதுண்டு. ஒரு சிறு துரும்பு அவனுக்கு ஆதாரமாகக் கிடைத்தால் போதும். அப்படிப்பட்ட தன்னலக்காரர்களுக்கு, 'என்மூலமாக உங்கள் வேலைமுடியும்' என்று நம்பிக்கையூட்டுவது எனக்குக் கஷ்டமான காரியமன்று. ஆனல் இத்தகைய விஷயங்களைக் கண்டாலே எனக்கு வெறுப்பு. நூற்றுக்கணக்கான ஆசாமிகள் தத்தம் கதைகளைச் சொல்லிக்கொண்டு என்னிடம் வந்தார்கள். போலீஸாரால் வீணுகத் துன்புறுத்தப்பட்டவர்கள் சிலர். வருமானவரிக்காரர்களின் தொந்தரவுகள் பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டவர்கள் சிலர். ஆபீஸ்களில் தம்மைப் புறக்கணித்து, தம் உரிமைகளை யெல்லாம் குறைத்து, தமக்குப் பின்பு வந்தவர்களுக்கெல்லாம் மேன்மேலே சம்பள உயர்வுகள் கொடுப்பதாகவும், தம் நம்பர்களும் முறைகளும் வரும்போது யாரும் கவனிப்பதில்லையென்றும் குறைகள் சொல்லிக்கொண்டு வந்தவர்கள் சிலர். இப்படியாக ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு விஷயம் என்னிடம் வந்தவண்ணமாக இருந்தது. ஆனல் எல்லாவற்றிற்கும்

நான் சொல்லும் பதில் ஒன்றுதான் : "எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை!" என்பதே.

ஒரு நாள் நான் என் அறையில் உட்கார்ந்திருந்த போது, என் குழந்தைப் பருவத்திய சகபாடி நண்பனொருவன் திடீரென்று வந்து குதித்தான். நாங்கள் இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். சுமார் நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முந்திய சமாசாரம் அது. அப்போது எனக்கு வயது எட்டு அல்லது ஒன்பதுக்கு மேல் இருந்திராது. அவனும் ஏறக்குறைய அதே வயதினனாகத்தான் இருந்திருப்பான். ஆனால் அவன் என்னை விட அதிக பலசாலி; வாட்டமும் சாட்டமுமாக இருந்தான். நான் நல்ல புத்திசாலி; அவனுடைய புத்தியோ உலக்கைக் கொழுந்துதான்! உபாத்தியாயர் அவனிடம் தோல்வியுற்று, அவனுக்குப் பாடம் சொல்லும் பாரத்தை என்னிடம் ஒப்புவித்திருந்தார். என்னைவிட இரண்டத்தனை பருமனான ஒருவனுக்குப் பாடம் சொல்வது எனக்குப் பெரிய பெருமையாக இருந்தது. நான் அவனுக்குக் கருத்தூன்றிப் பாடம் சொல்லிவந்தேன். அதன் பயனாக, உபாத்தியாயரின் பிரம்பு வெற்றி பெறாத இடத்தில் என் அன்பு வெற்றி பெற்றது. பலதேவன் நன்றாகப் படித்து ஐந்தாவது வகுப்புவரையில் ஏறினான். ஆனால் அதற்குள் உபாத்தியாயர் இறந்து போகவே அந்தக் கிளை முறிந்தது. அங்கே படித்த மாணவர்களும் இங்குமங்குமாகப் பிரிந்தனர். அதற்கப்புறம் பலதேவனை இரண்டு மூன்று தடவைகள் வழியிலே பார்த்ததுண்டு. ஒருவரையொருவர் வெறுமே க்ஷேம சமாசாரம் கேட்டுவிட்டுப் பிரிந்துபோவோம். இப்போதும் நான் அதே மாதிரி ஈர்க்குச்சிப் பயில்வானாக இருக்கிறேன்; அவன் பலபீமனாக இருக்கிறான்.

நான் அவனோடு கைகுலுக்கி, "வா அப்பா பலதேவா, சௌக்கியமாக இருக்கிறாயா? ஏது இவ்வளவு தூரம்? என்னை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறாயா? இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டேன்.

பலதேவன் துன்பமுற்ற குரலில், "ஏதோ காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறேன், தம்பி; வேறென்ன?

வெகு நாட்களாக உன்னைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. உனக்கு ஞாபகம் இருக்கிறதா, அந்த ஸ்கூல் சமாசாரம்: நீ எனக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாயே? உன்னால்தான் நாலு எழுத்துக்கள் கற்றுக் கொண்டு, என் பயிர் வேலையைச் சமாளித்துக்கொள்ளு கிறேன். இல்லாவிட்டால் முட்டாளாகவே இருந்திருப் பேன். எனக்கு நீதான் குரு, தம்பி! உண்மையாகச் சொல்லுகிறேன்: என்னைப்போன்ற கழுதைக்குப் பாடம் சொல்ல உன்னால்தான் முடிந்தது. என்ன காரணத் தாலோ, உபாத்தியாயரிடம் பாடம் படித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் எனக்கு எல்லாம் மறந்துபோய் மூளையே சூனிய மாக இருக்கும். நீ சொல்லிக்கொடுத்ததெல்லாம் திருப்பிப் படிக்காமலே எனக்கு மனப்பாடமாகிவிடும். அப்போதும் நீ நல்ல புத்திசாலியாக இருந்தாய்'' என்று சொல்லிவிட்டு, என்னைப் பரிவோடு பார்த்தான்.

சிறுபருவத்துக் கூட்டாளிகளைப் பார்த்தால் எனக்கு ஆனந்தம் பொங்கும். கண்களில் நீர் ததும்ப, "உன்னைப் பார்க்கும்போதெல்லாம், ஓடிவந்து உன்னைக் கட்டித் தழுவிக்கொள்ள மனம் ஆவலிக்கிறது. நாற்பத்தைந்து வருஷத்திய யுகம் காற்றாக மறைந்து போகிறது. அந்தப் பள்ளிக்கூடம் என் கண்களின் முன்பு சுழலுகிறது. என் குழந்தைப் பருவம், எல்லாக் கவர்ச்சிகளோடு கூடவும், புதிதாகக் காட்சி தருகிறது'' என்றேன்.

பலதேவனும் உருக்கமான குரலில், "நான் எப் போதுமே உன்னை என் இஷ்ட தெய்வமாக நினைத்திருக் கிறேன், தம்பி! உன்னைப் பார்க்கும்போதெல்லாம் என் மார்பு பூரிக்கும். 'என் குழந்தைப் பருவத்துக் கூட்டாளி அதோ போகிறான். சமயம் வரும்போது அவன் நம்மை விட்டுக்கொடுக்க மாட்டான்' என்ற எண்ணம் உண்டாகும். உன் பெருமைகளைக் கேட்டுக் கேட்டு நான் சந்தோஷப் படுவதுண்டு. அது போகட்டும்; உனக்கு என்ன, சாப்பாடே கிடைக்கிறதில்லையா? நீ ஒன்றும் சாப்பிடு வதே இல்லையா? ஏன் இப்படி உலர்ந்து ஈர்க்காகப் போகிறாய்? நெய் இல்லை யென்றால் சொல்லு; போன வுடனே மூன்று நான்கு டின்கள் அனுப்பி வைக்கிறேன்.

இப்போது நீயும் கிழவனுகிவிட்டாய். நன்ருக வயிறு நிரம்பச் சாப்பிடு. இனிமேல் தேகத்தில் கொஞ்சநஞ்ச மிருக்கும் காந்தியும் வலுவும் சாப்பாட்டைத்தான் பொறுத் திருக்கின்றன. இப்போதுகூட நான் தினம் ஒரு படி பாலும், பத்துப் பலம் நெய்யும் வயிற்றுக்குள் கொட்டாம லிருப்பதில்லே. சில நாட்களாக வெண்ணெயும் சாப்பிட ஆரம்பித்திருக்கிறேன். வாழ்நாள் முழுதும் குழந்தை குட்டிகளுக்காக உழைத்துச் சுண்ணும்பானேம். இப்போது எவனும், 'செத்தாயா, இருக்கிருயா?' என்றுகூட விசா ரிப்பதில்லே. இன்று நான் வீட்டில் தலேயைச் சாய்த்தால், ஒரு லோட்டா தண்ணீர் கொடுப்பவன் எவனுமில்லே. ஆகையால் நன்ருகச் சாப்பிடுகிறேன். எல்லோரையும்விட அதிகமாக வேலே செய்கிறேன். வீட்டில் என் அதிகாரந் தான் செல்லுபடியாகிறது. அவன் ஒருத்தன் இருக்கிருனே, உன் மூத்த பிள்ளே. அவன்மேல் போலீஸ்காரர்கள் ஒரு பொய்க் 'கேஸ்' போட்டிருக்கிருர்கள். இளமையின் கர்வத்தில் அவன் யாரையும் ஒன்றும் மதிப்பதில்லே. நல்ல பயில்வானுகத்தான் இருக்கிருன். ஒரு தடவை போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் இவனுக்கும் ஏதோ பேச்சு வார்த்தை யில் தகராறு உண்டாயிற்று. அப்போதிலிருந்து அவன் இவனேக் கறுவிக்கொண்டிருந்தான். கிராமத்தில் ஒரு கொள்ளேக் 'கேஸ்' நடந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரணே நடத்துகையில் இவனேயும் சிக்க வைத்து விட்டான். இன்று ஒரு வாரமாக 'லாக்-அப்'பில் இருக்கிருன். 'கேஸ்' டெப்டி கலெக்டர் முகம்மது கலீலின் முன்பு விசாரணேக்குப் போயிருக்கிறது. முகம்மது கலீலுக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் நெருங்கிய சிநேகம். ஆகவே கட்டாயம் இவனுக்குத் தண்டனே விதிக்கப்பட்டுவிடும். நீ காப்பாற்றிஞல்தான் இவன் உயிர் தப்பும். வேறு கதி இல்லே. தண்டனே கிடைப்பதோடு மட்டும் நில்லாமல், நமது மானமும் மண்ணுய்விடும். நீ நேரே ஜில்லா கலெக்டரிடம் போய், 'இது பொய்க் கேஸ். தாங்கள் நேரில் சென்று விசாரணே நடத்துங்கள்' என்று சொன்ஞல் போதும். நீ என் பால்ய ஸ்நேகிதன். முடியா தென்று சொல்லாதே. இம்மாதிரியான விஷயங்களில் நீ

தலை கொடுப்பதில்லை என்பது எனக்குத் தெரியும். உன்னைப் போன்ற ஆசாமி அப்படி இருக்கவும் கூடாது. நீ பொது ஜனங்களுக்காகச் சண்டைபோடும் மனுஷன். சர்க்காரைச் சேர்ந்த மனிதர்களோடு பழக்கம் வைத்துக்கொள்வது உசிதமன்று. இல்லாவிட்டால் பொதுஜனம் உன்னை மதிக்காது. ஆனால் இது உன் வீட்டுச் சொந்த விஷயம். அடியோடு பொய்யான கேஸாக இல்லாமலிருந்தால், நான் உன்னிடம் ஒருபோதும் வந்தே இருக்கமாட்டேன் என்பதை அறிந்துகொள். பையனுடைய அம்மா அழுது அழுது உயிரை விடுகிறாள். நாட்டுப் பெண்ணோ அன்ன ஆகாரத் தையே தீண்டுவதில்லை. ஏழு நாட்களாக வீட்டில் அடுப்பு எரியவில்லை. நானாவது கொஞ்சம் பால் குடிக்கிறேன்; மாமியாரும் நாட்டுப் பெண்ணும் நிராஹாரமாக விழுந்து கிடக்கிறார்கள். பையனுக்குத் தண்டனை கிடைக்குமானால், இரண்டு பேரும் செத்தே போவார்கள். நான் அவர்களிடம், 'என் தம்பி க்ஷேமமாக இருக்கும் வரையில், எவனும் நம்மை அசைக்க முடியாது' என்று சமாதானம் சொல்லி விட்டு வந்தேன். உன் மதனி நீ எழுதிய புத்தகமொன்றைப் படித்திருக்கிறாள். அவள் உன்னைத் தெய்வமென்றே நினைக்கிறாள். ஏதாவது பேச்சு வந்தால், உன்னை உதாரண மாகக் காட்டி என்னை வெட்கமுறச் செய்கிறாள். நானும் தெளிவாக, 'அந்தப் பையனைப் போன்ற புத்தி எனக்கு எங்கிருந்து வரும்?' என்று சொல்லிவிடுவது வழக்கம். உன்மீது அவள் வைத்திருக்கும் மதிப்பைக் குறைப்ப தற்காக, 'அந்தப் பையனா! அந்தச் சாவானா!' என்று உன்னை இழிவுபடுத்திக்கூடச் சொல்லி யிருக்கிறேன். ஆனால், அவளுக்கு உன்னிடமுள்ள மதிப்பு இம்மியும் குறைவதில்லை" என்றான்.

நான் பெரும் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். என்ன என்ன தடைகள் நான் சொல்ல முடியுமோ, எல்லாவற்றிற்கும் பலதேவன் ஏற்கனவே பதில் சொல்லி விட்டான். அவைகளை மீண்டும் திருப்பிச் சொல்வது வீண். "நான் போய், கலெக்டரிடம் சொல்லுகிறேன்" என்று சொல்லுவதைத் தவிர்த்து வேறு பதில் சொல்ல எனக்குத் தோன்றவில்லை. அதோடுகூடவே, "நான் போய்ச்

சொல்லுவதால் விசேஷமான பலன் உண்டாகுமென்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மேலதிகாரிகள் எப்போதும் தம் கீழிருப்பவர்களின் பக்கமாகத்தான் பரிந்து பேசுவது வழக்கம்'' என்றும் சேர்த்துச் சொன்னேன்.

பலதேவன் சந்தோஷத்தோடு, "அதைப்பற்றிக் கவலை இல்லை. தலையெழுத்துப்போல் நடக்கும். நீ போய்ச் சொல்லிவிட்டால் அதுவே போதும்!''.

"சரி, அப்படியே.''

"நாளைக்குப் போவாயா?''

"ஆம், கட்டாயம் போவேன்.''

"'தாங்களே சென்று விசாரணை செய்யுங்கள்' என்று கட்டாயம் சொல்லு.''

"ஆகா! அதை அவசியம் சொல்லுவேன்.''

"பலதேவன் என் அண்ணன் என்றுகூடச் சொல்லு.''

"பொய் சொல்லும்படி என்னை வற்புறுத்தாதே.''

"நீ எனக்குத் தம்பி இல்லையா? நான் எப்போதும் உன்னை என் தம்பியென்றே நினைத்துக்கொண்டிருக்கிறேன்.''

"சரி, அதையும் சொல்லுவேன்.''

அவனை அனுப்பிவிட்டு, நான் என் கட்டுரையை எழுதி முடித்தேன். பின்பு சாப்பிட்டுவிட்டுச் சுகமாகப் படுத்துக்கொண்டேன். அவனைத் தட்டிக் கழிப்பதற்காக நான் வீணுக உறுதிமொழி கூறியிருந்தேன். ஜில்லா கலெக்டரிடம் இந்த விஷயமாக எதுவும் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. அதனுல்தான் முன் ஜாக்கிரதையாக, "மேலதிகாரிகள் சாதாரணமாகப் போலீஸ் கேஸ்களில் தலையிடுவதில்லை'' என்று சொல்லி யிருந்தேன். அவன் மகன் தண்டிக்கப்பட்டால்கூட, "கலெக்டர் என் பேச்சைக் கேட்கவில்லை'' என்று நான் சொல்லுவதற்குப் போதுமான இடம் இருந்தது.

பல நாட்கள் கழிந்தன. நான் இந்தச் சம்பவத்தை அடியோடு மறந்து போயிருந்தேன். திடீரென்று ஒரு நாள் பலதேவன், பயில்வானுகிய தன் மகனுடன் என் அறையில் வந்து நின்றான். அவன் மகன் என் கால்களில் தலையை வைத்து வணங்கிவிட்டு, மரியாதையாக ஓர் ஓரமாக நின்றான். பலதேவன், "பையன் ஒரு சிக்கு சள்ளை இல்லாமல் விடுபட்டுவிட்டான், தம்பி! கலெக்டர் நேராக இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, 'நல்லவர்களையெல்லாம் நீங்கள் இப்படித் துன்புறுத்தி அவமானப்படுத்துகிறீர்களா? மறுபடியும் இவ்விதம் பொய்க் கேஸ் கொண்டு வந்தால் உங்களை வேலையிலிருந்து நீக்கவேண்டியிருக்கும்' என்று நன்ருக மிரட்டினர். இன்ஸ்பெக்டருக்கு வெட்கம் சொல்லி முடியாது. அப்போது நான் அவரை வணங்கி ஸலாம் செய்தேன். பாவம்! அவருக்குப் பெருத்த அவமானமாகப் போயிற்று. இது உன் சிபார்சின் மகிமை, தம்பி! நீ உதவி செய்யாமலிருந்திருந்தால் என் குடும்பம் அழிந்தே போயிருக்கும். நாலு ஜீவன்களைக் காப்பாற்றிய புண்ணியம் உன்னைச் சேர்ந்தது. முதல் முதலில் நான் உன்னிடம் மிகவும் பயந்துகொண்டே வந்தேன். 'ஏன் வீணுக அவனிடம் போகிருய்? அவன் கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாத ஆசாமி. அவன் யாருக்கும் எந்த உபகாரமும் செய்யமாட்டான். பிறருக்கு உபகாரம் செய்பவனல்லவா மனிதன்? எவன் பேச்சையும் காதிலேயே வாங்கிக்கொள்ளாதவன் என்ன மனுஷன்?' என்று ஜனங்கள் சொன்னர்கள். ஆனல், நான்மட்டும், தம்பி, யார் பேச்சையும் கேட்கவில்லை. என் மனசில் உட்கார்ந்திருந்த தெய்வம், 'அவன் எவ்வளவுதான் கடுமையாகவும், எதிலும் ஒட்டாமலும் இருந்தால்கூட உன்னைக் கண்டு கட்டாயம் இரக்கப்படுவான்' என்று சொல்லிக்கொண்டிருந்தது" என்ருன்.

இதைச் சொல்லிவிட்டு அவன் தன் பிள்ளைக்கு ஏதோ ஜாடை காட்டினன். அவன் வெளியே போய், ஒரு பெரிய மூட்டையைத் தூக்கிக்கொண்டு வந்தான். நாட்டுப்புறத்தில் விளையும் பல பொருள்கள் அடங்கிய மூட்டை அது. "நீ இதெல்லாம் ஏதுக்கு வீணுகக் கொண்டுவந்தாய்? இவைக

ளுக்குத் தேவை என்ன? என்ன பட்டிக்காட்டானடா நீ! உன் பட்டிக்காட்டுத்தனத்தைத்தானே கடைசியில் காட்டு கிருய்? நான் கலெக்டரிடம் போகவும் இல்லை; ஒன்றும் சொல்லவும் இல்லை'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். என் பேச்சை அவன் கேட்டால்தானே? வெண்ணெய், திரட்டிப்பால், தயிர், பட்டாணி, வடு மாங்காய்கள், புது வெல்லம் - இன்னும் என்ன என்னவோ பொருள்கள் வந்திருந்தன.

பேச்சுக்கு என்னவோ ஒரு விதமாக, ''நான் கலெக்டரிடம் போகவே இல்லை. நடந்ததெல்லாம் தாஞகை நடந்தது. நான் ஒன்றும் உபகாரம் செய்யவில்லை'' என்றுதான் சொன்னேன். ஆனல் விநயமாகவும், இனமாக வந்த பொருள்களைத் திருப்புவதற்காகவுமே நான் ஏதோ சாக்குச் சொல்லுகிறேன் என்று அவர்கள் அதற்கு அர்த்தம் செய்துகொண்டார்கள். என் பேச்சில் அவர்க ளுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி உறுத்திச் சொல்லும் தைரியம் எனக்கு உண்டாகவில்லை. இதற்கு அவர்கள் செய்துகொண்ட அர்த்தத்தைத்தான் நானும் கேட்க விரும்பினேன். இலவசமாகக் கிடைத்த புகழை விட்டுவிட எனக்கு மனம் வரவில்லை. கடைசியில் நான் அவர்களிடம், ''இந்த விஷயத்தைப்பற்றி யாரிடமும் சொல்லாதே. இல்லா விட்டால் என்னிடம் பிராதுகளின் பெருங் கூட்டம் வந்து குவிந்துவிடும்'' என்று உறுத்திச் சொன்னபோது, நான் சிபார்சு செய்ததாகவும், அதுவும் பலமாகச் செய்ததாகவும் ஒப்புக்கொண்டதாக ஆயிற்று.

மார்கழி இரவு

1

ஹல்கூ தன் பெண்டாட்டியிடம் வந்து, “ஸஹனு வந்திருக்கான். வச்சிருக்கிற ரூபாயெக் கொண்டா; அவனுண்டெ கொடுத்துடலாம். எப்படியாவது பீடெ நம்மெ விட்டுத் தொலஞ்சாப் போதும்” என்றான்.

முனியா வீட்டைப் பெருக்கிக்கொண் டிருந்தாள். பின்னல் திரும்பி, “மூணு ரூபாதானே இருக்குது. அதெக் கொடுத்துட்டா, கம்பிளி எங்காந்து வரும்? மார்கழி மாசத்து ராவிலே வயல்லெ என்னமா உறங்குவே? அவனுண்டெ சொல்லு: ரூபா ரெண்டு அறுவடெலே கொடுத்துடறேன், இப்ப இல்லே’ன்னு” என்றாள்.

ஹல்கூ ஒரு கணம் தீர்மானத்துக்கு வராமலே நின்றான். ‘மார்கழி மாதம் தலைவாசலில் வந்து நிற்கிறது. கம்பளமில்லாமல் இரவு நேரத்தில் எவ்விதத்திலும் வயலில் தூங்க முடியாது. ஆனல் ஸஹனு கேட்கமாட்டான். மிரட்டுவான்; திட்டுவான். நாம் குளிரில் செத்தால் அவனுக்கு என்ன? கழுத்துக்கு வந்த ஆபத்து தலையோடு போகட்டும்!’ என்று நினைத்தவனய், அவன் பருமனன சரீரமுள்ள தன் மனைவியின் அருகில் சென்று, முகஸ்துதி செய்து, “அதெக் கொண்டா; சனி ஒழிஞ்சு போவட்டும். கம்பிளிக்கு வேறெ உபாயம் ஒசனை பண்றேன்” என்றான்.

முனியா அவனருகிலிருந்து தொலையில் விலகி, கண்களைச் சுழற்றியவண்ணம், “செய்தாயே வேறெ உபாயம்! சத்தெச் சொல்லு பாக்கலாம்: என்ன உபாயம் பண்றே’ன்னு? எவனவது இனமாக் கொடுப்பான கம்பிளி? எவ்வளவோ பாக்கிகள் கொடுக்கணும். ஒண்ணும் கொடுக்க முடியறதில்லே. நான் சொல்லறேன்: நீ இந்த வயலெ ஏன் விட்டுத் தொலெக்க மாட்டேன்றே? செத்துச் செத்துச் சுண்ணும்பாவறே. வெளஞ்சுதுன்ன பாக்கியெக் கொடு.

பாக்கியெக் கொடுக்கத்தானே நீ புள்ளெ பொறந்திருக்கே! வயித்துப் பொழெப்புக்கு எங்கானும் போயி கூலி வேலெ செய்யலாம். இந்தப் பயிரு வேலெ செஞ்சது போதும்! நானு ரூபா கொடுக்கமாட்டேன்; கொடுக்கமாட்டேன்!'' என்றாள்.

ஹல்கூ வாட்டமடைந்து, "அப்போ என்னெத் திட்டு வாங்கிக்கச் சொல்றியா?'' என்றான்.

முனியா படபடப்புடன், "அவன் ஏன் திட்டுவான்? அவன் ராஜ்யமா?'' என்றாள்.

ஆனால் இதைக் கூறியதுமே அவளுடைய நெறித்த புருவங்கள் தளர்ந்தன. ஹல்கூவின் அந்த வாக்கியத்திலிருந்த கடுமையான உண்மை, பயங்கரமான ஒரு மிருகத்தைப்போல, அவளை உற்று உருட்டிப் பார்த்தது.

அவள் உள்ளே சென்று வட்டிலிலிருந்து ரூபாயைக் கொண்டுவந்து, ஹல்கூவின் கையில் வைத்தாள். "இப்போதிலேந்து நீ இந்தப் பயிர் வேலெயெ வுட்டுடு. கூலி வேலெயிலே சொகமா ஒரு கவளஞ் சோறுனு துன்னக் கெடெக்கும். எவனும் நம்மாண்டெ வந்து அட்டஞ் செலுத்தமாட்டான். நல்லாத்தான் இருக்குது இந்தப் பயிரு வேலெ! கூலியிலே சம்பாதிருச்சுனு வரத்தெயும் அதிலெயே போடறது போவ, கண்டவனுண்டெயும் பேச்சு கேக்கிறது வேறெ!'' என்றாள்.

ஹல்கூ ரூபாயை வாங்கிக்கொண்டு, தன் உள்ளத்தையே எடுத்துக் கொடுப்பவன் போல, அங்கிருந்து அகன்றான். கூலிப் பணத்திலிருந்து கால் காலணாவாக மிச்சப்படுத்தி அவன் மூன்று ரூபாய் சேர்த்து வைத்திருந்தான், கம்பளம் வாங்குவதற்காக. இன்று அந்தப் பணத்தை எடுத்தாயிற்று. ஒவ்வோர் அடி எடுத்து வைக்குந்தோறும் அவன் தலை வறுமையின் பாரத்தினால் கவிந்து கொண்டிருந்தது.

2

மார்கழி மாதத்து இருளடர்ந்த இரவு. ஆகாயத்திலிருந்த நக்ஷத்திரங்களும் குளிரால் நடுங்குவனபோலத்

தென்படுகின்றன. ஹல்கூ தன் வயலோரத்தில், கருப்பந் தோகைகளாலான ஒரு பந்தலில், மூங்கிற்கட்டிலில் துப்பட்டியைப் போர்த்திக்கொண்டு, உடல் வெடவெட வென்று நடுங்க, சுருட்டிப் படுத்திருக்கிறான். கட்டிலின் கீழ் அவன் தோழனான நாய் ஜபரா வயிற்றில் முகத்தை மறைத்துக்கொண்டு, குளிர் தாங்காமல், 'கூம், கூம்' என்று மெதுவாகக் குரைக்கிறது. அவ்விருவரில் ஒருவருக்காவது தூக்கம் வரவில்லை.

ஹல்கூ நாயின் முழங்கால்களைத் தன் கழுத்தோடு அணைத்துக்கொண்டு, "ஏண்டா ஜபரா, குளிரு எடுக்குதா? நான் அப்பவே சொன்னேனே: வூட்டுச் சாம்பலிலே படுத்துக்கினு கிடடா'ன்னு. இங்கே என்ன கெடெக்கும்'னு வந்தே? இப்போ குளிருலே தவி. நான் என்ன செய்யறது? இங்கெ நான் அலுவா சாப்பிட வரேன்னு நினெச்சுக் கிட்டயா? எனக்கு முன்னே ஓடி ஓடி வந்தாயே! இப்ப அழு, பாட்டன் பேரெச் சொல்லிக்கினு!" என்றான்.

ஜபரா படுத்தவாறே வாலை ஆட்டி, தன் 'கூம், கூம்' என்ற குரலை இன்னும் நீட்டி, ஒரு முறை கொட்டாவி விட்டுவிட்டுச் சும்மா இருந்தது. தன் எஜமானனுக்கு இந்த 'கூம், கூம்' சந்தடியால்தான் தூக்கம் வரவில்லையோ என்று அதன் நாய்ப்புத்திக்குத் தோன்றிற்றுபோலும்!

ஹல்கூ கையை வெளியே நீட்டி, ஜபராவின் சில் லென்ற முதுகைத் தடவிக்கொடுத்து, "நாளெயிலேந்து என்னோடெ வராதே. வந்தா செத்துப்போயிடுவே. இந்தப் பாழாப்போன மேற்கத்திக் காத்து எங்காந்தோ பனியெக் கொண்ணாந்து கொட்டி வீசுது. எழுந்து ஒரு பீடியானும் பத்தவெக்கலாம். எப்படியாவது ராவெக் கழிக்கணுமே! எட்டு பீடிக் குடிச்சாச்சு. இதுதான் பயிர் வேலேலே சொகம்! எத்தனையோ பாக்கியவானுங்க இருக்காங்களே; குளிரு அவுங்களாண்டே போச்சுதுன்னா, சூட்டுக்கு பயந்துக்கினு ஓடிவந்துடும்! பருமன் பருமனா மெத்தெங்க, தலைகாணிங்க, கம்பிளிங்க, துப்பட்டிங்க! குளிரு அங்கே போயி என்னா செய்யும்! இதெல்லாம் அவவுங்க சேஞ்ச பாக்கியம்! கூலிவேலே நாம்ப செய்யறது; இன்னும் இருக்கறவங்க சொகமா தூங்கறாங்க!" என்றான்.

அவன் எழுந்து, பள்ளத்திலிருந்து கொஞ்சம் நெருப் பெடுத்து, பீடியைப் பற்றவைத்தான். ஜபராவும் எழுந்து உட்கார்ந்தது.

அவன் பீடி பிடித்துக்கொண்டே, "பீடி குடிக்கிறியாடா, ஜபரா! இதனலே குளிரு என்ன போவுது; சும்மா மனசுக்கு ஒரு தெம்புதான்" என்றான்.

ஜபரா அவன் முகத்தை அன்பு ததும்பும் கண்களோடு பார்த்தது. "இன்னிக்கு எப்படியாவது இந்தக் குளிரைப் பொறுத்துக்கோ. நாளெயிலேந்து நான் இங்கே சுள்ளி, குச்சி, சருகு அல்லாம் கொண்ணுந்து போட்டுவெக்கிறேன். அதுலெ நுளெஞ்சு கமுக்கமாக் குந்திக்கினயானு, குளிரு தெரியாது."

ஜபரா தன் முன்னங்கால்களை அவன் முழங்கால்மீது வைத்து, அவன் முகத்தினருகே தன் முகத்தைக் கொண்டு போயிற்று. அதன் உஷ்ணமான சுவாசம் ஹல்கூவின் மீது பட்டது.

அவன் பீடி குடித்த பின்பு, 'என்ன ஆனாலும் இனித் தூங்கவேண்டியதுதான்' என்ற தீர்மானத்தோடு படுத்துக் கொண்டான். ஆனல் ஒரு க்ஷணத்துக்கெல்லாம் அவன் இதயத்தில் நடுக்கம் உண்டாயிற்று. இங்கும் அங்குமாகப் புரண்டான். குளிர் பிசாசைப் போல அவன் மார்பை அழுத்தியது.

எவ்விதத்திலும் பொறுக்க முடியாமல் போனபோது, அவன் ஜபராவை மெதுவாகக் கிளப்பி, அதன் தலையைத் தட்டித் தன் மடியில் தூங்கவைத்தான். நாயின் உடலி லிருந்து ஏதோ ஒரு துர்க்கந்தம் அடித்தது. ஆயினும் அவன் அதைத் தன் உடலோடு பொருத்திக்கொண்டு, பல மாதங்களாகத் தனக்குக் கிடைக்காத அபூர்வமான சுகத்தை அநுபவித்துக்கொண்டிருந்தான். ஜபராவுக்கு அதுதான் ஸ்வர்க்கம் என்று தோன்றிற்று. ஹல்கூவின் தூய ஆத்மாவினிடமோ, அந்த நாயைக் குறித்து வெறுப்பின் வாசனையே வீசவில்லை. தனக்கு நெருங்கிய ஒரு நண்பனே சகோதரனே வந்திருந்தாலும், அவன் அவனையும் இவ்வளவே பரிவுடன் தன் கழுத்தோடு அணைத்துக்

கொண்டிருப்பான். இன்று தன்னை இந்த நிலைக்குக் கொணர்ந்த ஏழைமைக்காக அவன் வருந்தவில்லை. அது மட்டுமல்ல; இந்த விசித்திர நட்பு அவனுடைய ஆத்மாவின் கபாடங்களையெல்லாம் திறந்து வைக்க, அதன் ஒவ்வோர் அணுவும் ஒளியில் மிளிர்வது போலத் தோற்றியது அவனுக்கு.

திடீரென்று ஜபராவுக்கு ஏதோ ஒரு பிராணியின் காலடிச் சத்தம் கேட்டது. அந்த விசேஷமான நட்பு அதனிடத்தில் ஒரு புதிய ஊக்கத்தை உண்டாக்கிவிட்டது. பனியைக் கொட்டும், காற்றலைகளை அது துச்சமாக எண்ணியது. அது பாய்ந்தோடி, பந்தலுக்கு வெளியே சென்று குரைத்தது. ஹல்கூ பல தடவைகள் 'சூ, சூ' என்று அதைக் கூப்பிட்டான். ஆனால் அது அவனிடம் வரவில்லை. வயலில் நாற்புறமும் ஓடியோடிக் குரைத்தது. ஒரு க்ஷணம் அவனிடம் வந்துவிட்டு மீண்டும் உடனே ஓடிப்போகும். கடமை அதன் உள்ளத்தில் பேராவலைப்போல எழும்பிக் கொண்டிருந்தது.

3

பின்னும் ஒரு மணி நேரம் கழிந்தது. இரவு, குளிரைக் காற்றினால் ஓட்ட ஆரம்பித்தது. ஹல்கூ எழுந்து உட்கார்ந்து, இரு முழங்கால்களையும் மார்போடு பொருத்திக் கொண்டு, அதில் தலையை மறைத்துக்கொண்டான். ஆயினும் குளிர் குறையவில்லை. ரத்தம் முழுதும் தோய்ந்துவிட்டது போலவும், நரம்புகளில் ரத்தத்துக்குப் பதிலாகப் பனி ஓடுவது போலவும் இருந்தது அவனுக்கு. அவன் குனிந்தபடியே, இரவு இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறதென்று ஆகாயத்தைப் பார்த்தான். ஸப்தரிஷி மண்டலம் இன்னும் ஆகாயத்தில் பாதிக்குக்கூட வரவில்லை. அது மேலே வரும்போதுதான் பொழுது விடியும். இரவு இன்னும் ஒரு ஜாமத்துக்கு மேல் இருக்கிறது.

ஹல்கூவின் வயலிலிருந்து ஒரு குண்டு போய்ப் பாயக் கூடிய தூரத்தில் மாந்தோப்பு ஒன்று இருந்தது. இலையுதிர் காலம் ஆரம்பமாகி யிருந்தது. தோப்பில் சருகுகள் குவியல் குவியலாக விழுந்து கிடந்தன. 'போய் அவை

களைத் திரட்டி வந்து, கொளுத்திக் குளிர் காயலாம். இரவில் நான் சருகுகளைத் திரட்டுவது கண்டு எவனாவது பேய் பிசாசென்று பயப்படுவான். அங்கே என்ன பூச்சி பொட்டு இருக்குமோ? ஆனால் இனிமேல் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது' என்று அவன் நினைத்தான்.

அருகிலிருந்த துவரைக் கொல்லைக்குச் சென்று, சில செடிகளைப் பிடுங்கிவந்து, அவைகளை ஒரு துடைப்பமாகக் கட்டி எடுத்துக்கொண்டு, எரியும் வரட்டியைக் கையில் பிடித்த வண்ணம் அவன் தோப்புக்குச் சென்றான். ஜபரா அவன் போவதைக் கண்டதும் அருகில் வந்து வாலை ஆட்டியது.

"இனிமே பொறுக்க முடியாது, ஜபரா! வா, தோப்புக்குப் போயி உலந்த சருகுங்களெத் தெரட்டிக்குனு வந்து குளிரு காயலாம். கொஞ்சம் சூடு ஏறினதும் வந்து தூங்கலாம். இன்னும் ராவுப்போது ரொம்ப இருக்குது" என்றான் ஹல்கூ.

ஜபரா அவன் பேச்சை 'கூம், கூம்' என்று ஆமோதித்து, அவனுக்கு முன்னால் தோப்புக்குள் போயிற்று.

தோப்பில் கும்மிருட்டாக இருந்தது. அந்த இருளில் இரக்கமற்ற காற்று இலைகளை மிதித்துக்கொண்டு சென்றது. கிளைகளிலிருந்து பனித்துளிகள் 'டப் டப்' என்று கீழே கொட்டின.

காற்றின் ஓர் அலை மருதோன்றிப் பூக்களின் மணத்தைத் தாங்கிக்கொண்டு வந்தது.

"எவ்வளவு நல்லா வாசனெ அடிக்குது, ஜபரா! ஒன் மூக்குலே எதாவது வாசனெ அடிக்குதா?" என்றான் ஹல்கூ.

ஜபராவுக்கு எங்கோ தரையில் விழுந்துகிடந்த எலும்புத் துண்டு ஒன்று கிடைத்து விட்டது. அது அதைக் கடித்துக்கொண்டிருந்தது.

ஹல்கூ நெருப்பைக் கீழே வைத்துவிட்டு, இலைகளைத் திரட்டினான். சிறிது நேரத்தில் சருகுக் குவியல் சேர்ந்தது. அவன் கைகள் உதறி நடுங்கின. செருப்பில்லாத

வெறுங் கால்கள் மரத்துப் போயின. அவன் சருகுகளை மலைபோலக் குவித்தான். இந்தத் தீயில் அவன் குளிரை எரித்துச் சாம்பராக்கிவிடுவான்.

சற்று நேரங் கழித்துத் தீப் பற்றியது. அதன் ஜ்வாலை மேலே மரத்திலிருந்த இலைகளைத் தீண்டிக்கொண்டு பறந்தது. நிலையற்ற அந்த ஒளியில், தோப்பிலிருந்த விசாலமான மரங்கள் ஆழங்காணு அந்தகாரத்தைத் தம் தலைகள் மீது தாங்குவனபோல நின்றன. முடிவற்ற அந்தகாரக் கடலிலே, அந்த ஒளி ஒரு படகைப்போல் அசைந்தாடுவதாகத் தோற்றியது.

ஹல்கூ தீயின் முன்பு உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தான். க்ஷணப்பொழுதில், துப்பட்டியை எடுத்து அக்குளில் அழுத்திக் கொண்டு, 'குளிரே, இனி நீ உனக்கு இஷ்டமானதைச் செய்!' என்று குளிரை அறைகூவி அழைப்பவன்போல, இரண்டு கால்களையும் நீட்டிவிட்டான். குளிரின் எல்லையற்ற சக்தியை ஜயித்துவிட்ட அவனல், அந்த வெற்றியின் கர்வத்தைத் தன் உள்ளத்தில் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

"என்ன ஜபரா, இப்போ குளிரு அடிக்கல்லியே?" என்று அவன் ஜபராவைக் கேட்டான்.

ஜபரா, 'இனிமேல் குளிராவது, அடிப்பதாவது!' என்று சொல்வதுபோல, "கூம், கூம்" என்றது.

"மொதல்லேயே இந்த உபாயம் தோணலே. இல்லாட்டி இவ்வளவு குளிரெ ஏன் பொறுத்துக்கினு இருந்திருப்போம்?"

ஜபரா வாலை ஆட்டியது.

"சரி, வா. இந்தத் தீயெத் தாண்டி குதித்து எவன் அந்தாண்டெ போருன், பாக்கலாம். நீ எரிஞ்சு போயிட்டே, நான் வைத்தியம் செய்யமாட்டேன்!"

ஜபரா அந்தத் தீக்குவியலைப் பயந்த கண்களோடு பார்த்தது.

"முனியா கிட்டெ நாளெக்குச் சொல்லிடாதே. இல்லாட்டீ அவ சண்டெ பிடிப்பா" என்று சொல்லிவிட்டு,

அவன் ஒரே குதியாக அந்தத் தீயைத் தாண்டிக் குதித்தான். கால்களில் கொஞ்சம் தீப் பட்டது; ஆனால் அது ஒன்றும் பிரமாதமில்லை. ஜபரா நெருப்பைச் சுற்றி வந்து அவனருகில் நின்றது.

" சரி, நீ இதுக்கு நேரா வரவேண்டாம். அந்தப் பக்கமா மேலே குதிச்சு வா, உம்!'' என்றான் ஹல்கூ.

நாய் அசையாமல் நின்றது. அவன் மீண்டும் குதித்து, தீயைத் தாண்டி இந்தப் புறம் வந்தான்.

4

சருகுகள் எரிந்து போயின. தோப்பில் மீண்டும் இருள் கவிந்தது. சாம்பலின் கீழே கொஞ்சநஞ்சம் மறைந்திருந்த நெருப்பு, காற்றுப்பட்டதும் சற்றுக் கிளம்பும்; ஆனால் க்ஷண நேரத்தில் மீண்டும் அவியும்.

ஹல்கூ மறுபடியும் துப்பட்டியைப் போர்த்திக் கொண்டு, சூடான சாம்பலினருகே உட்கார்ந்து, ஒரு பாட்டை முணுமுணுக்கலானான். அவன் உடலில் சூடு ஏறியிருந்தது; ஆனால் குளிர் வளர வளர, சோம்பல் அவனை அழுத்தியது.

ஜபரா உரக்கக் குரைத்துக்கொண்டே வயலை நோக்கி ஓடியது. மிருகங்களின் ஒரு கூட்டம் தன் வயலில் வந்திருப்பதுபோல அவனுக்குத் தோற்றியது. ஒருவேளை அது நீல மான்களின் கூட்டமாயிருக்கும். அவைகள் குதிக்கும் சத்தமும், ஓடும் சத்தமும் நன்றாகக் காதில் விழுந்தன. அவை வயலை மேய்ந்துகொண்டிருப்பது போல அவனுக்கு மீண்டும் புலப்பட்டது. அவை ' சர், சர்' என்று தானியங்களைத் தின்னும் ஓசை அவனுக்குக் கேட்டது.

' இராது; ஜபரா இருக்கும்போது ஒரு மிருகமும் வயலில் வர முடியாது. அது எந்த மிருகத்தையும் வர வொட்டாமல் மேலே பாய்ந்து, பிடுங்கிப் பிறாண்டிவிடும். ஏதோ எனக்குப் பிரமை! எங்கே? இப்போது ஒன்றும் காதில் விழவில்லையே? ஏதோ ஏமாந்தேன்!' என்று அவன் நினைத்தான்.

"ஜபரா, ஜபரா!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

ஜபரா குரைத்துக்கொண்டே இருந்தது; அவனிடம் வரவில்லை.

மீண்டும் வயலை மேயும் சத்தம் அவன் காதில் விழுந்தது. இப்போது அவன் தன்னை ஏமாற்ற முடிய வில்லை. தான் இருந்த இடத்திலிருந்து அசைவது அவனுக்கு விஷமாக இருந்தது. குளிர் பொறுக்காமல், அவன் அடங்கி ஒடுங்கி உட்கார்ந்திருந்தான். அந்த ஒடுக்கும் குளிரில் வயலுக்குப் போவதும், மிருகங்களின் பின்னால் ஓடுவதும் யோசனையில்லாத பைத்தியக்காரத் தனமான வேலை என்று அவன் நினைத்தான். தான் இருந்த இடத்தை விட்டு அவன் அசையவில்லை.

"லிஹோ-லிஹோ! லிஹோ-லிஹோ!" என்று அவன் உரக்கக் கூவினன்.

ஜபரா மறுபடியும் குரைத்தது. மிருகங்கள் வயலை மேய்ந்துகொண் டிருந்தன. அறுவடைக்குத் தயாராக இருந்தது வயல். ஆனல் அந்தத் துஷ்ட மிருகங்கள் செழித்த அழகிய பயிரை நாசம் செய்துகொண்டிருந்தன.

ஹல்கூ திடமான தீர்மானத்துடன் எழுந்து இரண்டு மூன்று அடிகள் எடுத்துவைத்தான். ஆனல், உடனே அவன் மேல் வீசிய குளிர்ந்த காற்று, அவனை ஆயிரம் ஊசிகள் கொண்டு குத்துவது போலவும், தேள் கொட்டுவது போலவும் இருந்தது. அவன் திரும்பவும் அணையும் தீயினருகில் வந்து உட்கார்ந்து, சாம்பலைக் கிளறி, தன் குளிர்ந்த உடலுக்குச் சூடேற்றலானன்.

ஜபரா தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருந்தது. நீல மான்கள் வயலை அழித்துக்கொண் டிருந்தன. ஹல்கூ சூடான சாம்பலினருகில் அமைதியாக உட்கார்ந்திருந்தான். சோம்பல், கயிற்றைப் போல, அவனை நாலா பக்கத்தி லிருந்தும் பிணித்துக்கொண்டிருந்தது.

அதே சாம்பலினருகே சூடான தரையில், துப்பட்டி யைப் போர்த்திக்கொண்டு அவன் தூங்கிவிட்டான்.

காலையில் அவன் தூக்கம் கலைந்தபோது, நாற்புறமும் வெயில் பரவியிருந்தது. முனியா, "இன்னிக்கெல்லாம் உறங்கிக்குனேதான் இருப்பாயா? நீ இங்கே வந்து சோகமாப் படுத்துட்டே; அங்கே வயலெல்லாம் நாசமாப் போச்சுது!" என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவன் எழுந்து, "நீ வயல் பக்கம் போய்த்தான் வர்றயா?" என்று கேட்டான்.

அவள், "ஆமாம், பயிர் முழுதும் நாசமாயி போச்சுது! இப்படிக்கூட ஒருத்தன் தூங்குவானா? நீ இங்கே பந்தல் போட்டுக்குனு என்னப் பிரயோசனம்?" என்றாள்.

"நான் ராவிக்கி செத்துப் பொளச்சேன். நீ என்னடான்னா, வயலெப் பத்திப் பேசிண்டிருக்கே. வவுத்துலே என்ன வலி, என்ன வலி! ராவெல்லாம் பட்டது எனக்குன்ன தெரியும்!" என்று அவன் பாசாங்கு செய்தான்.

இருவருமாக வரப்பினருகே வந்தார்கள். பார்த்தால், பயிர் முழுதும் நசுக்கப்பட்டுப் பாழாய்ப் போயிருந்தது. ஜபரா பந்தலின் கீழ், உயிரே போய்விட்டது போல, அசையாமல் உறங்கிக்கொண்டிருந்தது.

இருவரும் வயலின் நிலையைப் பார்த்தனர். முனியாவின் முகத்தில் வாட்டம் சூழ்ந்திருந்தது; ஆனால் ஹல்கூ சந்தோஷமாயிருந்தான்.

அவள் கவலையோடு, "இனிமே கூலி வேலெ செய்து தான் வரி கட்டணும்" என்றாள்.

ஹல்கூ சந்தோஷம் பொங்கும் குரலில், "ராவுலெ குளிருலெ இனிமே இங்கே தூங்கவேண்டி இராதே?" என்றான்.

குற்றச்சாட்டு

வாழ்க்கையின் பெரும் பகுதி இவ்வீட்டிலேயே கழிந்துபோயிற்று; ஆனல், எனக்கு எப்போதும் சுகம் கிடைத்ததில்லை. என் கணவர் உலகத்தாருக்கு மிகவும் நல்லவராகவும், பெரிய சிஷ்டராகவும், வெகு தாராள மனப்பான்மை யுடையவராகவும், ரொம்ப ஸாதுவாகவும் இருக்கலாம்; ஆனல், அவரோடு படுகிறவர்களுக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியும். உலகத்தாருக்கு என்ன? தன் வீட்டு விஷயங்களைக் கொஞ்சமும் கவனியாமல், பிறருக்காகத் தன்னை அழித்துக்கொள்பவனைப் புகழ்வதில்தான் அவர்களுக்கு ஆனந்தம். தன் வீட்டு மனிதர்களுக்காகச் சாகிறவனை உலகம் புகழ்வதில்லை. அப்படிப்பட்டவன் உலகத்தாரின் நோக்கத்தில் தன்னலமுள்ளவன்; கருமி; குறுகிய உள்ளமுடையவன்; கர்வி; நல்ல ஆசாரங்கள் இல்லாதவன். இதே மாதிரி, வெளியாருக்காக உயிரை விடுபவர்களை வீட்டார் புகழ்வதேது?

இவரைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன். நாள் முழுதும் எனக்கு இவரால் தொந்தரவுதான். நான் 'கோஷா' ஸ்திரீ இல்லை; ஆனலும், சாமான்கள் வாங்கிவர நானே கடைத் தெருக்குப் போவது எனக்கு உசிதமென்று தோன்றவில்லை. இவரிடம் சொல்லி ஏதாவது சாமான் வரவழைத்தாலோ, எந்த வாடிக்கைக்காரனும் மறந்து போய்க்கூட நுழையாத ஒரு கடையிலிருந்து வாங்கி வருவார். இந்த மாதிரியான கடைகளில் பண்டங்களும் நன்ருயிரா; படிக்கல்லும் சரியாயிராது; விலையும் சரியாயிராது. இந்தக் குற்றங்கள் இல்லாமலிருந்தால் அந்தக் கடைக்கு ஏன் கெட்ட பெயர் வருகிறது? இவருக்கு இப்படிப்பட்ட உபயோகமில்லாத கடைகளிலிருந்து சாமான்கள் வாங்குவது சுபாவமாய்ப் போயிற்று.

" நல்ல வியாபாரம் நடக்கும் கடையிலிருந்து சாமான்கள் வாங்கிவாருங்கள், அங்கே சாமான்கள் அதிகமாகச்

செலவழிவதால், புதுச் சரக்குகள் வந்துகொண்டே யிருக்கும்'' என்று பல தடவைகள் இவரோடு முட்டிக்கொண்டேன். ஆனல், சொற்ப முதலாளிகளுக்கும் இவருக்குந் தான் சரிப்படுகிறது. அவர்கள் இவரை நன்ருக மொட்டையடிக்கிருர்கள். இவர் வாங்கிவரும் இந்த மாதிரியான உள்ளேயே பூச்சிகள் அரித்த, உபயோகமில்லாத கோதுமை, கடைத்தெரு முழுதும் தேடினலும் கிடைக்காது. அரிசியோ, எருதுமாட்டுக்கு வைத்தால்கூடத் தின்னுது. அவ்வளவு தடிமன். பருப்பு ஒரே கல்லும் சத்தையுமா யிருக்கிறது. விறகுக் கட்டைகளை மணங்குக் கணக்காக அடுப்பில் வைத்துக் கொளுத்துங்கள்; அவை எரிந்தால் பாருங்கள்! இவர் நெய் வாங்கிவந்தால், படிக்குப் பாதி எண்ணெயோ அல்லது முழுக்க முழுக்க கோகோ ஜெம்மோ, அதுவுமில்லாவிட்டால் சரியான அளவுக்கு ஐந்து பலம் குறைவாகவோ இருக்கும்! நல்லெண்ணெய் வாங்கிவந்தால் அது கலப்படமில்லாமல் இராது. தலையில் தடவினல் பிசுக்கு ஒட்டிக்கொள்ளும். ஆனல் அதற்கு விலையோ, அப்பட்டமான அசல் நெல்லிக்காய்த் தைலத்தின் விலையைக் கொடுத்துவிட்டு வருவார்! நல்ல வியாபாரமாகும் பிரசித்தமான கடைக்குப் போவதென்றல் இவருக்குப் பயம். 'கடை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சாமான்கள் மோசமாயிருக்கும்' என்பது இவருடைய சித்தாந்தம். சில்லறைக் கடைகளில் சாமான்கள் 'அமிஞ்சி'யாகவே இருக்கும் என்பது என் அநுபவம்.

ஒரு நாளைக்கானல் ஏதோ போகிறதென்று பொறுத்துக்கொள்ளலாம். தினந்தோறும் இந்தத் தொந்தரவு என்னல் பொறுக்க முடியவில்லை. "நீங்கள் ஏன் இந்தச் சொற்ப முதலாளிகளின் கடைகளுக்கே போகிறீர்கள்? அவர்களைப் பரிபாலனம் செய்து போஷிக்க நீங்கள் ஏதாவது 'காண்டிராக்ட்' எடுத்துக்கொண் டிருக்கிறீர்களா?'' என்று கேட்டால், "என்னைப் பார்த்ததுமே எல்லோரும் கூப்பிடுகிருர்கள்!'' என்கிருர். அடடா! என்னவென்று சொல்வது! இவரைக் கூப்பிட்டு, நாலைந்து வார்த்தைகள் முகஸ்துதியாகச் சொன்னல் போதும்;

இவர் உச்சி குளிர்ந்துபோகிறது. அப்புறம் கடைக்காரன் இந்தக் குப்பை கூளங்களைக் கட்டிக் கொடுக்கிறானா அல்லது என்ன கட்டுகிறான் என்பதே இவருக்கு ஞாபகம் இராது. "நீங்கள் அந்த வழியாகப் போவானேன்? வேறு வழியாகப் போவதற்கென்ன? இப்படிப்பட்ட பித்த லாட்டக்காரர்களை ஏன் தலைமேல் வைத்துக்கொள்கி றீர்கள்?" என்று கேட்டால் பதில் இல்லை. ஒரு மௌனம் நூறு தடைகளை வென்றுவிடுகிறது.

ஒரு தடவை எனக்கு ஒரு நகை செய்யக் கொடுக்க வேண்டியிருந்தது. இவரைத்தான் எனக்கு வெகு நன்றாகத் தெரியுமே! இவரிடம் எதையும் கேட்பது வீண். எனக்குத் தெரிந்த ஒரு தட்டானைக் கூப்பிட ஆள் அனுப்புவதா யிருந்தேன். தற்செயலாக இவரும் அருகில் இருந்தார். "அந்தத் தட்டானை நம்பாதே. ஏமாந்து போவாய். எனக்கு ஒரு தட்டானைத் தெரியும்; என்கூடப் படித்தவன். வருஷக் கணக்காக நாங்கள் இருவரும் ஒன்றாக விளையாடினோம். அவன் என்னிடம் பித்தலாட்டம் செய்ய முடியாது" என்றார். நானும், 'சரி, இவருடைய நண்பன்; அதிலும் குழந்தைப் பருவம் முதல் நண்பன் என்றால், சிநேகி தத்தை விட்டுக்கொடுக்க மாட்டான்' என்று நினைத்து, ஒரு பொன் நகையையும் நூறு ரூபாயையும் இவர் கையில் கொடுத்தேன். இந்த மகாத்மா எந்தக் கெட்டுப்போனவ னிடம் நகையையும் ரூபாயையும் கொண்டு கொடுத்தாரோ, தெரியவில்லை. வருஷக்கணக்காக அவனோடு போராடிக் கடைசியில் நகையை வாங்கிவந்தார். பார்த்தால், பேர் பாதி செப்புக் கலப்படமாயிருந்தது. நகையும் அந்தமா யில்லை; பார்ப்பதற்கே வெறுப்பாயிருந்தது. எத்தனையோ வருஷங்களாக என் மனசில் வைத்துக்கொண்டிருந்த ஆசை மண்ணாயிற்று.

நண்பனின் கழுத்தில் கத்தியை வைக்கக் கூசாத அவ்வளவு நன்றியுள்ளவர்கள் இவருடைய சிநேகிதர்கள்! ஊர் முழுதிலும் பொறுக்கியெடுத்த சோதாப் பயல்கள்; கன்னக்கோல் திருடர்கள்; ஏமாந்தால் சட்டைப் பையைக் கத்தரித்துப் பணப் பையை 'அபேஸ்' செய்பவர்கள்; உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பவர்கள்; தண்டச்

சோறு தின்றுவிட்டு வேலையற்று அலைபவர்கள்; இப்படிப் பட்டவர்களோடுதான் இவர் சிநேகம் வைத்துக்கொள்வார். இவரைப்போன்ற கண்ணில்லாக் குருடர்களோடு நட்பு வைத்துக்கொள்வதுதானே அவர்களுக்கு உத்தியோகம்.

பொழுது போனால், பொழுது விடிந்தால், எவராவது ஒரு கனவான் கடன் கேட்டு இவர் பிராணனை வாங்கிக் கொண்டேயிருப்பார்; பணம் வாங்கிக்கொள்ளாமல் இவரை விட்டு நகரமாட்டார். ஆனால், வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தவர் அவர்களில் யாருமில்லை. மனுஷன் ஒரு தடவை ஏமாந்தாலும், இரண்டாம் தடவையாவது ஜாக்கிரதையாய் இருப்பான். ஆனால் இந்த மனுஷருக்கு ஆயிரம் தடவைகள் ஏமாந்தும் ஒன்றும் தெரியவில்லை. "ரூபாயைத் தூக்கிக் கொடுத்தீர்களே. இப்போது போய் வாங்கிவருவதுதானே? உங்களுடைய அந்த ஸ்நேகிதர்கள் செத்தா போய்விட்டார்கள்?" என்று கேட்டால், தலை குனிந்துகொண்டு மீனமேஷம் பார்ப்பார். நண்பர்களுக்கு, 'இல்லை' என்று கண்டிப்பாகப் பதில் சொல்ல இவரால் முடியாது. போனால் போகிறது; கண்டிப்பாக 'இல்லை' என்று சொல்லவேண்டாம். 'நண்பர்களிடம் தாக்ஷிண்ய மில்லாமலிருங்கள்' என்று நான் சொல்லவில்லை. இனிப் பாகப் பேசி, ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி அனுப்ப லாமோ, இல்லையோ? அது இல்லை. எவனாவது வந்து ரூபாய் கேட்டால், அவன் கவலை இவரைப் பிடித்துக்கொள் ளும். பாவம்! அவனுக்கு எப்படி 'இல்லை' என்று சொல்வது! 'இவரும் ஒன்றுக்கும் உபயோகமில்லைடா!' என்றுதானே கடைசியில் ஜனங்கள் சொல்லுவார்கள்? என் நகைகளைக் கொதுவை வைத்தாலும் பரவாயில்லை; தம்மைப் பணக்காரன் என்று ஜனங்கள் நினைக்கவேண் டும் என்பது இவர் எண்ணம். உண்மையாகச் சொல்லு கிறேன்: சில சமயம் வீட்டில் காலணாவுக்குக்கூடப் பஞ்சமா யிருக்கும்; அந்தச் சமயத்தில் எங்காவது ரூபாய் வாங்கி வந்து யாருக்காவது கடன் கொடாவிட்டால் இவருக்குப் போது போகாது.

இவருடைய காரியங்களை யெல்லாம் எவ்வளவு தூரத் துக்குச் சொல்வது? எனக்குப் பெரிய பிராண சங்கடமா

யிருக்கிறது. தினம் எவனாவது ஒரு விருந்தாளி, யம கிங்கரனைப்போல, வீட்டிற்குள் வந்து நிற்கிறான். இந்த மாதிரியான கவலையற்ற நண்பர்கள் இவருக்கு எங்கேதான் கிடைக்கிறார்களோ! எங்கு எங்கிருந்தோ எவன் எவனோ இங்கே வந்து சாகிறான்! வீடு என்ன என்கிறீர்கள்; மொண்டி முடங்களின் 'ஜிம்கானா'தான்! 'இக்கிணியுண்டு' வீடு; இரண்டு கட்டில்கள் போடுவதற்கே இடம் சங்கடமா யிருக்கிறது. போர்வையோ படுக்கையோ அதிகப்படியாக ஒன்றுமில்லை. ஆனால் இவர் ஸதா ஸர்வகாலமும் தம் நண்பர்களை யெல்லாம் கூட்டி வந்து, இங்கே தங்க இடம் கொடுத்து, உபசாரங்கள் செய்ய ஒற்றைக்காலால் தயாரா யிருக்கிறார். இவருக்கு என்ன! அதிதிகளோடு கூடவே தூங்குவார். வீட்டிலுள்ள கட்டில்கள், மெத்தைகள், படுக்கைகள் - எல்லாமும் இவர்களுக்கே வேண்டும்; இல்லாவிட்டால் வீட்டு ரகசியம் அம்பலமாகிவிடுமே! நானும் என் குழந்தைகளும்; படும் அவதி - வெயிற்காலத்தில் அவ்வளவு கஷ்டமில்லை; ஆனால் குளிர்காலத்தில் நாங்கள் படும் கஷ்டம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். வெயில் நாட்களிலும் மொட்டைமாடி விருந்தினர்களின் சொத்தாகிவிடும். குழந்தைகளை நான் வைத்துக்கொண்டு, 'போனி'ல் அடைபட்டிருக்கவேண்டியவளே. 'என்னடா! வீடு இந்த நிலையில் இருக்கிறதே! துணிமணிகள்கூட இல்லாத இப்படிப்பட்ட தரித்திரங்களை ஏன் அதிதிகளாக வைத்துக் கொள்ள வேண்டும்?' என்ற இவ்வளவு அறிவு இவருக்கு இல்லை.

ஈசுவர கிருபையால் இவருடைய எல்லா நண்பர்களும் இதே வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். எந்த மகானுபாவனும் சமயத்தில் காலணாவுக்குக்கூட உதவிசெய்ய வருவதில்லை. இரண்டொரு தடவை இவருக்கு இதைப்பற்றிய அநுபவம் - மிகவும் கசப்பான அநுபவம் - ஏற்பட்டிருக்கிறது; ஆனால் இந்த ஜடபரதர் கண்களைத் திறந்து பார்ப்பதேயில்லை என்று சத்தியம் பண்ணியிருக்கிறார்போலும்! இப்படிப்பட்ட தரித்திரப் பண்டாரங்களுக்கும் இவருக்குந்தான் ஒத்துவருகிறது. ஊரில் இத்தனை பணக்காரர்கள் - லக்ஷ்மி புத்திரர்கள் -

இருக்கிறார்களே; இவருக்கு யாரையும் தெரியாது. அவர்களிடம் போகும்போது இவர் உள்ளம் நோவும். வீட்டில் சாப்பாட்டுக்கே தாளம் போடுகிறவர்களோடுதான் இவர் சிநேகம் வைத்துக்கொள்வார்.

ஒரு தடவை எங்கள் வீட்டு வேலைக்காரன் வேலையை விட்டுப் போய்விட்டான். வெகு நாட்கள் வரையில் வேறு வேலைக்காரன் கிடைக்கவில்லை. நான் ஒரு கெட்டிக்கார வேலைக்காரன் வேண்டுமென்று தேடி விசாரித்துக்கொண்டிருந்தேன். இவர் உடனே ஒருவனை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவசரப்பட்டார். வீட்டு வேலைகள் யாவும் முன்போலவே நடந்துவந்தன; ஆனால் வண்டி நின்றுபோனதுபோல இவருக்குத் தோற்றியது. நான் பாத்திரங்கள் தேய்த்துக் கழுவுவதும், தாம் கறிகாய்கள் வாங்கிவரக் கடைத்தெருவுக்குப் போவதும் இவருக்குச் சகிக்கவில்லை. ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு மட சாம் பிராணியைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தார். அவனைப் பார்த்தாலே 'காட்டாள்' என்று சொல்லிவிடலாம்; ஆனால் இவர் அவனைப்பற்றிச் செய்த வர்ணனைகளை என்னென்பது! ரொம்பவும் கெட்டிக்காரன்; சொல் பேச்சுத் தவறாதவன்; முதல்தரமான உழைப்பாளி; சுளுவாகக் காரியங்களை முடிப்பதிலே 'வஸ்தாது'; மிகவும் நாணயமுள்ளவன்; - என்ன என்னவோ சொன்னார். போனால் போகிறதென்று நான் அவனை வைத்துக்கொண்டேன். நான் ஏன் அடிக்கடி இவர் பேச்சில் மயங்கிவிடுகிறேன் என்பது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. அந்த வேலைக்காரன் உருவத்தில்தான் மனிதனாயிருந்தான். வேறு ஒரு மனித லக்ஷணமும் அவனிடத்தில் இல்லை. எந்த வேலையும் செய்து பழக்கமில்லை. நாணயமற்றவன் அன்று; ஆனால், அசல் கழுதைதான்!

நாணயமற்றவனாயிருந்தாலும் தானாவது சாப்பிட்டுப் போகிறான் என்று ஓர் ஆறுதல் இருக்கும். இந்தத் தரித்திரன் கடைக்காரர்களிடம் பணத்தை அதிகமாகக் கொடுத்துவிட்டு ஏமாந்து வருவான். பத்துவரையில்கூட அவனுக்குச் சரியாக எண்ணத் தெரியாது. ஒரு ரூபாயைக் கையில் கொடுத்துக் கடைத்தெருவுக்கு

அனுப்பினால், சாயங்காலம்வரையில் கணக்குச் சொல்லி யாகாது. எனக்குக் கோபம்கோபமாக வரும்; அடக்கிக் கொள்வேன். சிலசமயங்களில் அவன் காதைப் பிடித்துத் திருகலாம்போல, ரத்தம் கொதிக்கும். ஆனால் இவர் அவனை ஒன்றுமே சொல்லமாட்டார்; அதட்டுவதைப்பற்றிப் பேச்சு ஏது? கிணற்றங்கரையில் இவர் துணி தோய்த்துக் கொண்டிருப்பார். அவன் தொலையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண் டிருப்பான். நானாயிருந்தால் அவன் மண்டையை நறுக்கியிருப்பேன்; இவருக்குக் கொஞ்சங்கூடத் துன்பம் உண்டாகாது. நான் மிரட்டியதும் அவன் துணி தோய்க்கப் போனால், இவர் அவனைத் தம் அருகில் வரவிடமாட்டார். அவனுடைய குற்றங்களையே குணங்களாக்கிக் காட்ட இவர் முயன்றார். இந்த முயற்சியில் வெற்றி பெறாதபோது அவனுடைய குற்றங்களை மறைத்து வைப்பார்.

அந்த முட்டாளுக்குத் துடைப்பங்கொண்டு பெருக்கக்கூடத் தெரியாது. முன்பக்கத்து அறைதான் வீட்டிலேயே ஒருமாதிரி அழகாக இருக்கும் அறை. அவன் அதைப் பெருக்கினால் அங்குள்ள சாமான்கள் இங்கும், இங்குள்ள சாமான்கள் அங்குமாக, ஏதோ ஒரு பூகம்பம் வந்துவிட்டதுபோல இருக்கும். பெருக்கிய பின்பு பார்த்தால், தாராளமாக மூச்சுவிட முடியாது; அவ்வளவு கூளங்களும் தூசுகளும் அப்படியே கிடக்கும்! ஆனால் இவர் வெகு அமைதியாக அந்த அறையில் உட்கார்ந்திருப்பார், அறை ஏதோ மிகவும் சுத்தமாக இருப்பதுபோல!

ஒரு நாள் நான் அவனை, "நாளையிலிருந்து சரியாகப் பெருக்காவிட்டால், உன் காதைப் பிடித்து வெளியே அனுப்பி விடுவேன்" என்று மிரட்டினேன். காலையில் எழுந்து பார்க்கிறேன்: அறை சுத்தமாகப் பெருக்கியிருக்கிறது; ஒவ்வொரு வஸ்துவும் ஒழுங்காக வைத்திருக்கிறது. எங்கும் குப்பை என்ற பெயரே இல்லை. நான் ஆச்சரியத்தோடு பார்த்தபோது இவர், "என்ன பார்க்கிறாய்? இன்று வேலைக்காரன் விடிகாலையில் எழுந்து அறையைப் பெருக்கினான். நான் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தேன். நீ அவனைச் சும்மா மிரட்டுகிறாயே தவிர,

எந்த வேலையை எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்லித் தருவதில்லை !" என்றார்.

'சரி, ஒழிகிறது. அந்தத் துஷ்டன் ஒரு வேலையை யாவது சரியாகச் செய்யக் கற்றுக்கொண்டானே !' என்று நினைத்தேன். அதற்கப்புறம் தினமும் அந்த அறை சுத்தமாகப் பெருக்கியிருக்கும். அந்த வேலைக்காரன் என் நம்பிக்கைக்குப் பாத்திரனாகத் தலைப்பட்டான். தற்செயலாக ஒரு நாள் நான் வழக்கத்துக்குச் சிறிது நேரம் முன்பே எழுந்து, வாசலறைக்கு வந்து பார்த்தேன். வேலைக்காரன் கதவருகே நிற்கிறான்; இவர் உடம்பும் மனமும் வணங்கிப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்! எனக்குத் தாங்கமாட்டாத கோபம் வந்தது. அந்தத் துடைப்பத் தாலேயே அவன் தலையில் அறைந்து, அந்த மடையனை அதே நிமிஷம் வெளியில் அனுப்பிவிட்டேன்.

"அவனுக்கு ஒரு மாதச் சம்பளமாவது கொடுத்து அனுப்பவேண்டாமா? என்னடீ சுத்த முட்டாளாயிருக் கிறாயே!" என்றார் இவர். அவன் செய்த வேலைக்குச் சம்பளம் ஒரு கேடா? நான் தம்படிகூடக் கொடுக்கவில்லை. இவர் அவனுக்கு ஒரு சட்டை கொடுத்திருந்தார்; அதையும் பிடுங்கிக் கொண்டேன். இதற்காக இந்த ஜடபரதர் வெகு நாட்கள் வரையில் என்னிடம் கோபமாயிருந்தார். வீட்டை விட்டே ஓடிப் போவதாயிருந்தார். வெகு தூரம் மன்றாடி, அதற்கப்புறம் போகாமல் நின்றார். இந்த வேலைக்காரனைப் போன்ற முட்டாள்கள்கூட உலகத்தில் வாசம் செய்கிறார் களே! நான் ஒருத்தி இல்லாமலிருந்தால், இத்தனை நாளைக் குள் எவனாவது இவரைக் கடைத்தெருவில் விற்றுவிட் டிருப்பான்!

ஒரு நாள் தோட்டி, "ஏதாவது பழந்துணிகள் இருந்தால் கொடுங்கள்!" என்றான். இந்த வேலையில்லாத் திண்டாட்டக் காலத்தில், உபயோகமற்ற பழந்துணிகள் போலீஸ்காரர்கள் அல்லது பிரபுக்களின் வீடுகளில் ஒரு வேளை இருக்கலாம். தேவையான துணிகளே என் வீட்டில் போதுமான அளவுக்கு இல்லை. இவருடைய துணிகள் முழுதையும் தபால் பார்ஸலில் அனுப்பக்கூடிய

ஒரு சிறு பெட்டியில் வைத்துவிடலாம்; அவ்வளவு குறைவான துணிகள். போதாக்குறைக்கு இவ்வருஷம் குளிர் காலத்துக்காகத் துணிகளே தைக்கவில்லை. பணம் கண்ணால் பார்க்கவே கிடைப்பதில்லை; துணிகள் எங்கிருந்து வரும்? நான் தோட்டியிடம் 'இல்லை' என்று கறாராகச் சொல்லி விட்டேன். குளிர் கடுமையாக இருப்பது எனக்குத் தெரியாமலில்லை. ஏழைகள் படும் துன்பத்தை நான் அறியாதவளல்ல. ஆனால், என்னிடமும் உங்களிடமும் வருந்துவதைத் தவிர இதற்கு வேறு என்ன உபாயம் இருக்கிறது? சமூகத்தின் அமைப்பு இதேமாதிரியாக இருக்கும்வரையில் இந்தக் குறைபாடுகள் இருந்துகொண்டுதான் இருக்கும். ஒவ்வொரு பணக்காரனிடமும், பிரபுவினிடமும் ஒவ்வொரு கூட்ஸ் வண்டி கொண்ட துணிகள் நிரம்பியிருக்கும்போது, ஏழைகள் பிறந்த வடிவோடு இருக்கும் துன்பத்தை அநுபவியாமல் வேறு என்ன செய்வது?

சரி, அது இருக்கட்டும். நான்தான் தோட்டிக்கு 'இல்லை' என்று சொல்லியாயிற்றே; இவர் என்ன செய்தார்? தம் 'கோட்'டை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டார். எனக்குப் பற்றிக்கொண்டுபோயிற்று! பிறருக்குச் சாப்பாடு போட்டுவிட்டு நான் பட்டினியாகத் தூங்குமளவுக்கு, நான் அத்தனை தானி அல்ல. இந்தத் தியாகியிடம் இருந்த 'கோட்'டே இது ஒன்றுதான். 'நாம் எதையடா போட்டுக்கொள்வோம்?' என்று இவருக்குக் கொஞ்சமும் கவலையில்லை! கீர்த்தியின் ஆசை இவர் புத்தியையே அபகரித்துவிட்டதுபோலும்! தோட்டி இவருக்கு ஸலாம்செய்து வாழ்த்திவிட்டுத் தன்வழியே போனான். இவர் பின்பு வெகு நாட்கள் வரையில் குளிரில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். காலையில் உலாவப்போகும் வழக்கத்தை நிறுத்திக்கொண்டார்.

ஆண்டவன் இவருக்குக் கொடுத்திருக்கும் உள்ளமும் அற்புதமாகத்தான் இருக்கிறது. கிழிந்த பழந்துணிகளை உடுத்துக்கொள்ள இவர் சற்றும் சங்கோசப்படுவதில்லை. எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது; ஆனால் இவர் அதைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. "சிரிக்கிறவன் சிரிக்கட்டும். அதனால் நமக்கு என்ன நஷ்டம்!" என்பார்.

எனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை. கடைசியில் என் பணத்தில் ஒரு 'கோட்' தைத்துக் கொடுத்தேன். 'குளிரில் நன்றாக வதைபடட்டும்!' என்றுதான் மனசில் எரிச்சல் வந்தது; ஆனால், உடம்புக்கு வந்துவிட்டால் ஆபத்தாயிற்றே என்று பயந்தேன். எப்படியும் இவர் வேலைசெய்து உழைத்தால்தானே ஸம்ஸாரம் நடக்கும்?

இவர் தாம் மிகவும் வணக்கமுள்ளவரென்றும், பெரிய பரோபகாரி யென்றும் தம் மனத்தில் எண்ணிக்கொண் டிருக்கலாம். இதைப்பற்றி இவருக்குக் கர்வங்கூட இருக் கலாம். நான் இவரைப் பரோபகாரி என்றோ, வணக்க முள்ளவர் என்றோ நினைப்பதில்லை. இது ஜடத்தன்மை, பற்றற்ற தன்மை என்கிறேன். எந்தத் தோட்டிக்கு இவர் 'கோட்' கொடுத்தாரோ, அவனை நான் பல தடவைகள் இரவில் குடி மயக்கத்தில் ஆடிக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிறேன்; இவருக்கும் காட்டி யிருக்கிறேன். அப்படியிருக்க, பிறரின் விவேகமின்மையின் காலியான இடத்தை நாம் ஏன் நிரப்பவேண்டும்? இவர் வணக்க முள்ளவராகவும் பரோபகாரியாகவும் இருந்தால், வீட்டி லுள்ளவர்களிடமும் கொஞ்சமாவது தாராளத்தன்மை காட்டுவார் அல்லவா? அல்லது, இவருடைய தாராளத் தன்மை முற்றும் வெளியார்களுக்கென்றே 'ரிஸர்வ்' செய்யப்பட்டிருக்கிறதா? வீட்டுக்காரர்களுக்கு அதில் சிறி தளவுகூடக் கிடைக்காதா?

எனக்கு இத்தனை வயதாயிற்றே; இந்த மகான் எப்போதாவது தம் கையால் எனக்கு ஏதாவது ஒரு பரிசு அளித்திருக்கிறாரா, கேளுங்கள். நான் கடைத் தெருவி லிருந்து எந்தப் பொருள் வாங்கிவந்தாலும் இவர் ஆக்ஷே பிப்பதில்லை என்பது வாஸ்தவம்; கொஞ்சங்கூட ஆக்ஷேபம் செய்வதில்லை. ஆனால் ரூபாய் நான் கொடுக்க வேண்டுமென்பது நிபந்தனை. அந்த உற்சாகம் இவருக்குத் தானாகவே வருவதில்லை. பாவம்! இவர் தமக்கென்றும் ஒன்றும் வாங்கிக்கொள்வதில்லை. நான் இவருக்கு என்ன வரவழைத்துத் தருகிறேனோ அதோடு திருப்தியாயிருக்கிறார் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், மனுஷ்ய

னுக்குத் தனக்கு ஆசையான பண்டங்கள் வாங்கவேண்டும் என்ற ஆவல் உண்டாகவேண்டாமா?

எத்தனையோ புருஷர்களைப் பார்த்திருக்கிறேன். மனைவி மாருக்குப் பலவித நகைகளும், விதவிதமான துணிகளும், சிங்காரப் பொருள்களும் வாங்கிக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இங்கே இப்படிப்பட்ட வழக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்குக்கூட மிட்டாய்களோ, பொம்மைகளோ, கிலுகிலுப்பைகளோ இவர் தம் வாழ்க்கையில் ஒரு தடவையாவது வாங்கிக் கொடுத்ததில்லை! ஆகையால் நான் இவரைக் கருமி என்பேன்; ரஸிகத்தன்மை இல்லாதவர் என்பேன். தாராள மனப்பான்மையுடையவர் என்று சொல்ல மாட்டேன். இவரிடம் பிறருக்குத் தொண்டு செய்யும் தன்மை இருப்ப தற்குக் காரணம், இவருக்குப் புகழ் மீதுள்ள ஆசையும், வியவகார அறிவு போதாமையுமே.

இவருடைய வணக்கம் எப்படிப்பட்டது தெரியுமா? இவர் எந்த ஆபீஸில் வேலை செய்கிறாரோ, அங்கே எந்த அதிகாரியோடும் அதிகமான கூட்டுறவுகள் வைத்துக் கொள்வதில்லை. ஆபீஸர்களுக்கு ஸலாம் போடுவதே இவருடைய கொள்கைக்கு மாறானது; அவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் அல்லது 'பார்ட்டி'கள் கொடுப்பதைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். அவ்வளவு தூரம் எதற்கு? இவர் எந்த ஆபீஸரின் வீட்டுக்கும் எப்போதும் போவதில்லை. இதற்கெல்லாம் ஏற்ற பலனை இவர் அநுபவிக்காமல் வேறு யார் அநுபவிப்பார்கள்? பிறருக்குச் சம்பளத்தோடு லீவுகள் கிடைக்கின்றன; இவர் சம்பளம் பிடிக்கப்படுகிறது. பிறருக்குச் சம்பள உயர்வுகள் கிடைக்கையில் இவரை யாரும் ஏனென்று கேட்பதில்லை. 'அடெண்டென்ஸி'ல் ஐந்து நிமிஷம் நேரமானல்கூட, உடனே 'எக்ஸ்ப்ளனேஷன்' கேட்கப் படுகிறது. இவர் பாவம், அங்கே உடம்பு ஒடிய வேலை செய்கிறார். ஏதாவது கஷ்டமான வேலை வந்தால் அதை இவர் தலையில் தள்ளிவிடுவார்கள். அதை இவர் சிறிதும் ஆக்ஷேபிக்க மாட்டார். ஆபீஸில் இவருக்கு, 'ராக்ஷஸன்', 'சுழலும் யந்திரம்' என்ற பட்டப்

பெயர்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இவர் எவ்வளவு தான் வேலை செய்தாலும், இவர் தலையில் அந்தச் சொற்பச் சம்பளந்தான் எழுதியிருக்கிறது. இது வணக்கமாகாது; ஸ்வாதீன மனப் பான்மையும் ஆகாது. இதை நான் சமயத்துக்கேற்ற கெட்டிக்காரத்தனமின்மை, விவகார அறிவு போதாமை என்று சொல்லுவேன்.

இப்படி இருந்தால் எந்த ஆபீஸர்தான் இவரிடம் சந்தோஷமாக இருப்பான்? இவர் பெரிய உழைப்பாளி என்பதற்காகவா? உலகத்து வேலைகள் அன்பினாலும் நெருங்கிய பழக்கத்தினாலும் நடக்கின்றன. நாம் ஒருவனிட மிருந்து ஒதுங்கி யிருந்தால், அவனும் நம்மிடமிருந்து ஒதுங்காமலிருக்க ஒரு காரணமுமில்லை. மேலும், மனத்தில் கலக்கமிருந்தால் அது ஆபீஸ் விவகாரங்களிலும் வெளி யாகியே தீரும். எந்த வேலைக்காரன் ஆபீஸரைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ள முயலுகிறானோ, எவனால் ஆபீஸருக்கு ஏதாவது சொந்தமான உபகாரம் உண்டாகிறதோ, எவன்மீது அவன் நம்பிக்கை வைக்க முடியுமோ, அப்படிப்பட்டவனிடந்தான் அவன் இயற்கை யாகத் தாக்ஷிண்யம் வைப்பான். இவரைப் போலத் தலையில் நெருப்பை வைத்துக்கொண்டிருப்பவனிடம் எவனுக்குத்தான் அநுதாபம் இருக்கும்? ஆபீஸரும் மனுஷ்யன்தானே? அவனுடைய உள்ளத்திலிருக்கும் மரியாதை விருப்பமும், தான் எல்லோருக்கும் மேலே தனிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்ற ஆவலும் எவ்விதத்தில் தீரும்? அவன் கீழே வேலை செய்பவர்கள் அவனிடம் முறைப்பாக இருந்தால், அவனாக வந்து அவர்களுக்கு ஸலாம் போட்டுவிட்டுப் போவானா? இவர் எங்கே வேலை செய்தாலும் அங்கிருந்து நீக்கப்படுகிறார். எந்த ஆபீஸிலும் இவர் இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேல் நிலைத்ததில்லை. ஆபீஸரிடமாவது ஒன்று சண்டை போட்டுவிட்டு வருவார்; அல்லது வேலை மிகுதி பொறுக்காமல் தாமே வேலையை விட்டுவிட்டு வருவார்.

குடும்பத்துக்குத் தொண்டு செய்வதில் இவருக்கு நிகர் யாருமில்லை. இவருக்கு எத்தனையோ அண்ணன் தம்பி களும், அவர்களுடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

ஆனல் எவனும் இவரை 'ஏனடா பாவி!' என்று கேட்ப தில்லே. இவர் மாத்திரம் விடாமல் அவர்களேப்பற்றி விசாரித்துக்கொண்டே யிருப்பார். இவருடைய அண்ண ஞெருவர் இப்போது தாசில்தாராக இருக்கிருர். வீட்டுச் சொத்து முழுதும் அவருடைய மேற்பார்வையில்தான் இருக்கிறது. அவர் தடபுடலாக வாழ்கிருர். மோட் டார்கார், வேலேக்காரர்கள் - எல்லாம் உண்டு. ஆனல் இங்கே மறந்துபோய்க்கூடக் கடிதம் போடுவதில்லே. ஒரு தடவை எங்களுக்குப் பணத்துக்கு மிகவும் நெருக்கடியாக இருந்தது. "உங்கள் முத்தண்ணுவைக் கேட்பதுதானே?" என்று நான் சொன்னேன். "அவரை எதற்காகக் கவலே யில் ஆழ்த்தவேண்டும்? அவருக்கும் சொந்தச் செலவுகள் இல்லேயா? அவருக்கு மாத்திரம் எங்கிருந்து பணம் மீறப் போகிறது?" என்ருர். நான் மிகவும் வற்புறுத்தியதும் இவர் ஒரு கடிதம் எழுதினர். இவர் அதில் என்ன எழுதினரோ, அல்லது கடிதமே எழுதாமல் என்னே ஏமாற்றிவிட்டாரோ, அது எனக்குத் தெரியாது. ஆனல் ரூபாய் வரவேண்டிய ரூபாயாக இல்லே; வரவும் இல்லே!

பல நாட்கள் கழித்து, "திரு. முத்தண்ணுவின் தர்பாரி லிருந்து ஏதாவது பதில் வந்ததா?" என்று கேட்டேன். இவர் கோபத்தோடு, "கடிதம் போய்ச் சேர்ந்து ஒரு வாரந்தான் ஆகி யிருக்கும். இதற்குள் பதில் எப்படி வர முடியும்?" என்ருர். இன்னும் ஒரு வாரமும் கழிந்தது; ஆனல் பதில் இல்லே. இப்போது இவர் எனக்கு அதைப் பற்றிப் பேச இடமே கொடுப்பதில்லே. எப்போது பார்த் தாலும் மன மகிழ்ச்சியோடு காட்சி யளிக்கிருர். என்ன வென்று சொல்வது! வெளியிலிருந்து வரும்போதெல்லாம் 'குஷி'யாக வருகிருர். ஏதாவது ஒரு புதிய சமாசாரத் துடன் வருகிருர். என்னே நன்ருகப் போற்றவும் ஆரம் பித்திருக்கிருர். என் பிறந்தவீட்டுக்காரர்களேயும் புகழ் கிருர். என்னுடைய வீட்டு 'மானேஜ்மண்டை'ப்பற்றி என்றுமில்லாதபடி வர்ணிக்கிருர். இவருடைய தந்திரம் எனக்குத் தெரியும். இவருடைய திரு. முத்தண்ணுவைப் பற்றி நான் ஒன்றும் கேட்டு வைக்கக்கூடாது என்பதற் காகத்தான் இவ்வளவு சமத்காரமும்! அரசியல், பொருளா

தாரம், சமூகம், ஆசார அநுஷ்டானங்கள் முதலிய விஷயங் களைப்பற்றிய எல்லாப் பிரச்னைகளுக்கும், மிகவும் விவர மாகவும் ஆராய்ச்சியுடனும், அந்தந்த விஷயங்களில் தனிப் பயிற்சியுள்ள பண்டிதர்களெல்லாரும் தோற்றுப்போகும் படியாக, என்னைக் கொண்டு வியாக்கியானங்கள் செய்யப் பட்டு வருகின்றன. இவை யாவும், நான் அந்த விஷய மாகக் கேட்க இடங்கொடுக்கலாகாது என்ற ஒரே காரணத் துக்காகத்தான்.

ஆனால் நானா விட்டு விடுபவள்? இரண்டு வாரங்கள் முற்றும் கழிந்து போய், 'இன்ஷ்யூரென்ஸு'க்குப் 'பிரீமியம்' கட்டும் நாள், சாவைப்போல் தலைமேல் வந்து உட்கார்ந்தபோது, "என்ன ஆயிற்று? உங்கள் மூத்தண்ணாவிடமிருந்து ஏதாவது ஸ்ரீமுகம் வந்ததா, அல்லது இன்னமும் கடிதம் போய்ச் சேரவே இல்லையா? வீட்டுச் சொத்தில் நமக்கும் ஏதாவது கொஞ்சம் பங்கு உண்டோ இல்லையோ? அல்லது நாம் எவளாவது ஓர் அடிமைச்சி அல்லது தாசியின் சந்ததிகளா? பத்து வருஷங்களுக்கு முந்தியே வருஷத்துக்கு ஐந்நூறு ரூபாய் வருமானம் வந்துகொண்டிருந்தது. இப்போது ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இராது. ஆனால் நமக்கு ஒரு செப்பாலடித்த காசு எப்போதும் பார்க்கக் கிடைப்ப தில்லை! தோராயமாகப் பார்த்தால்கூட இரண்டாயிரம் ரூபாய் நமக்குக் கிடைக்கவேண்டும். இரண்டாயிரம் இல்லாவிட்டால் போகிறது; ஆயிரமோ, ஐந்நூறோ, இருநூற்றைம்பதோ; ஒன்றுமில்லாவிட்டாலும் இன்ஷ் யூரென்ஸ் பிரீமியத்துக்கு மட்டுமாவது கிடைக்கவேண் டாமா? தாசீல்தாரின் வருமானமோ நம் வருமானத்தை விட நாலுபங்கு வருகிறது. லஞ்சம் வேறு வாங்குவார். அப்படி யிருக்க அவர் நம் ரூபாயைக் கொடுப்பதற்கென்ன?" என்று கேட்டேன்.

இவர் 'நெங்க மிங்க' வென்று ஆரம்பித்தார். "பாவம், வீட்டுக்கு ஏதாவது ரிப்பேர் செய்துகொண் டிருப்பார். பங்காளிகளை உட்கார வைத்துச் சாப்பாடு போடுவதிலே அவருக்கு மட்டான செலவா பிடிக்கும்? உறவினர்களுக் கெல்லாம் வேறு, அவரவர்களுக்கு வேண்டியதை அனுப்பு

கிறார். நமக்கு அனுப்ப அவரிடம் பணம் ஏது?'' என்றார். அடடா! என்ன மூளை! என்ன மூளை! சொத்திலிருந்து வரும் வருமானம் அதிலேயே செலவழிந்து விடுவதற்காகத் தான் அது இருக்கிறது போலும்! இவருக்குச் சாக்குகள் சொல்லக்கூடத் தெரியவில்லையே! என்னைக் கேட்டால், ஒன்றல்ல, இரண்டல்ல; ஆயிரம் சாக்குகள் சொல்வேன்; ஒன்றைவிட ஒன்று மேலானதா யிருக்கும்! வீட்டில் நெருப்புப் பிடித்துக் கொண்டது; இருந்ததெல்லாம் 'ஸ்வாஹா' ஆகிவிட்டது. அல்லது, திருடு போய்விட்டது; ஒரு துரும்புகூட மிச்சமில்லை. அதுவுமில்லையா; பத்தாயிரம் ரூபாய்க்கு நெல் பிடித்தார். பெருத்த நஷ்டம் வந்தது. அல்லது, ஒரு 'கிரிமினல் கேஸி'ல் அகப்பட்டுக்கொண்டார்; அதில் சொத்தெல்லாம் செலவழிந்து 'திவாலா'கப் போய் விட்டது. - இப்படி எத்தனையோ காரணங்கள் சொல்ல லாமே! இவருக்குத் தோன்றினால்கூடச் சொத்தையான காரணந்தான் தோன்றுகிறது! சிவனே என்று தலை விதியை நொந்துகொண்டு உட்கார்ந்திருந்தேன். பிறகு பக்கத்து வீட்டுக்காரியிடம் கடன் வாங்கிவந்து, பணத்தைக் கட்டினேன். இப்படியிருந்தும் இவர் தம் பங்காளிகளையும் பங்காளிப் பிள்ளைகளையும் அளவுக்கு மிஞ்சிப் புகழும் போதுதான் எனக்குப் பற்றி எரிகிறது! இப்படிப்பட்ட கௌரவர்களிடமிருந்து ஆண்டவன்தான் நம்மைக் காக்க வேண்டும்.

ஈசுவரனுடைய கிருபையால் இவருக்கு இரண்டு பிள்ளைகளும், இரண்டு பெண்களும் இருக்கிறார்கள். இதை ஈசுவரனுடைய கிருபை என்பதா, கோபம் என்பதா? எல்லோருமே உபத்திரவம் செய்வதில் முதல் நம்பர்! அவர்களின் உபத்திரவம் என்னால் பொறுக்கவே போக வில்லை. இவர் எந்தக் கழுதையையாவது சற்று முறைத்தாவது பார்ப்பார்? இரவு எட்டு மணியாகியும், 'இளவரசர்' ஊர் சுற்றிவிட்டு இன்னும் வரவில்லை. எனக்குப் பயமாயிருக்கிறது. இவர் நிச்சிந்தையாகப் பேப்பர் படித்துக்கொண் டிருக்கிறார். எரிச்சலோடு சென்று, பேப்பரைப் பிடுங்கி எறிந்து, "இந்தக் கழுதை எங்கே போனானோ; சற்றே போய்ப் பார்த்து வாருங்களேன்?

உங்கள் நெஞ்சில் இரக்கமே இல்லையா? ஆண்டவன் எதற்காகத்தான் உங்களுக்குச் சந்ததிகளைக் கொடுத்தானே? தகப்பன் பிள்ளைக்குச் செய்யவேண்டிய கடமை ஒன்றுமில்லையா?'' என்று நான் கேட்கிறேன். அப்போது இவருக்கும் கோபம் வருகிறது.

"இன்னுமா வரவில்லை, அந்தப் பிசாசு? இன்றைக்கு அவன் வரட்டும், சொல்லுகிறேன். காதைப் பிடித்துத் திருகிவிடுகிறேன். பிரம்பால் அடித்து விளாசித் தோலை உரித்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, ஆத்திரத்தோடு அவனைத் தேடப் போகிறார்.

இவர் அப்படிப் போகும்போது பையன் இப்படி வந்துவிடுகிறான். "நீ எங்கிருந்தடா வந்தாய்? அவர் உன்னைத் தேடிக்கொண்டு போயிருக்கிறார்.வரட்டும், பார்: இன்றைக்கு உனக்கு நல்ல பூசை கிடைக்கிறது! இந்த வழக்கத்தையே இனி விட்டுவிடுவாய். பற்களை நெறித்துக்கொண்டே போயிருக்கிறார்! ஆச்சு, வரும் சமயந்தான்! பிரம்புகூட இருக்கிறது அவர் கையில்! நீ சொன்ன பேச்சைக் கேளாமல் இவ்வளவு தான்தோன்றி யாகிவிட்டாயே? இன்றைக்குத் தெரிந்துவிடும் எல்லாம்!'' என்று நான் அவனை மிரட்டுகிறேன். அவன் நடுங்கிப்போய், விளக்கை வைத்துக்கொண்டு படிக்க உட்காருகிறான். இரண்டு இரண்டரை மணி நேரங் கழித்து இவர் திரும்பிவருகிறார்; களைத்துப்போய், சோர்ந்து, மூச்சுப் பேச்சில்லாமல்.

வீட்டில் காலெடுத்து வைத்ததுமே, "வந்தானா, இல்லையா?'' என்று கேட்கிறார்.

நான் அவர் கோபத்தை மூட்டுவதற்காக, "வந்து உட்கார்ந்திருக்கிறானே; போய் அவனைக் கேட்பதுதானே? 'எங்கடா போனாய்?' என்று நான் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டேன். அவன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை'' என்கிறேன்.

இவர் கர்ஜித்துக்கொண்டு, "அடே பையா, இங்கே வா'' என்கிறார்.

பையன் நடுங்கிக்கொண்டே வந்து முற்றத்தில் நிற்கிறான். இரண்டு பெண்களும் ஏதோ பெரிய ஆபத்து

நடக்கப் போகிறதென்று பயந்து வீட்டிற்குள் ஒளிந்து கொள்ளுகிறார்கள். சிறு பையன் ஜன்னலிலிருந்து எலியைப் போல் எட்டிப் பார்க்கிறான். இவர் முகத்தில் கோபம் ஜ்வலிக்கிறது. கையில்தான் பிரம்பு இருக்கவே இருக்கிறது. 'எதற்காக இவரிடம் போய் இதைச் சொன்னேம்?' என்று எனக்குக்கூட இவருடைய கோபம் பொங்கும் வடிவத்தைக்கண்டு பச்சாத்தாபம் உண்டாகிறது. இவர் பையனிடம் போகிறார். ஆனால், பிரம்பால் அடிப் பதற்குப் பதிலாக, மெதுவாக அவன் முதுகில் கையை வைத்து, மேலுக்குக் கோபத்தோடு, "எங்கடா போயிருந் தாய், கழுதை? தடுத்தால் கேட்பதில்லை? ஜாக்கிரதை! இனிமேல் இவ்வளவு நேரங்கழித்து வந்தாயானால் பார்! மனுஷன் சாயங்காலமானால் வீட்டுக்குத் திரும்பிவருவதா, அல்லது ஊர் சுற்றுவதா?" என்கிறார்.

'இது முன்னுரை; இனிமேல்தான் விஷயம் ஆரம்ப மாகும்' என்று நான் நினைக்கிறேன். முன்னுரை அப்படி ஒன்றும் மோசமாயில்லை. ஆனால் முன்னுரையோடு இந்த மகாபுராணம் ஸமாப்தமாகி விடுகிறது. அவ்வளவுதான்; இவருடைய கோபம் தணிந்து போகிறது. ஆடி மாதத்து மேகந்தான் - ஒரே சூழலாகக் கருத்துக்கொண்டு மேகங்கள் இடியும் படையுமாக வருகின்றன. கடகடவென்று இடி முழங்குகிறது. தரையில் விழுவது என்ன? நான்கு துளிகள்! பையன் தன் அறையில் சென்று, ஆனந்தக் கூத்தாடுகிறான்.

நான் தோற்றுப்போய், "நீங்கள் அவனிடம் பயந்தே போய்விட்டீர்கள் போலிருக்கிறதே! இரண்டு மூன்று அறைகளாவது வைத்திருக்கக் கூடாதா? இதனால் தானே பையன்கள் சிங்கங்களாகி விடுகிறார்கள்?" என்கிறேன்.

இவர், "உனக்குக் காது கேட்கவில்லை? நான் எவ்வளவு சத்தம் போட்டு மிரட்டினேன்? பையனுக்கு உயிரே போய்விட்டிருக்கும்! இனிமேல் பார், அவன் நேரங் கழித்துவந்தால்!" என்கிறார்.

"நீங்கள் எங்கே, மிரட்டவே இல்லையே? ஆம்; அவன் கண்களைத் துடைத்தீர்கள்!"

" நான் மிரட்டியது உன் காதிலேயே விழவில்லையா ?"

" ஆகா ! சொல்லவேண்டுமா உங்கள் மிரட்டலுக்கு ! கேட்டவர்களுடைய காதெல்லாம் செவிடாய்ப் போயிற்று ! வாருங்கள், சற்று உங்கள் தொண்டையைத் தடவிக் கொடுக்கிறேன்."

தண்டிப்பதால் பையன்கள் கெட்டுப் போகிறார்கள் என்று இவர் ஒரு புதிய சித்தாந்தம் கண்டுபிடித்திருக்கிறார். இவர் கொள்கைப்படி, பையன்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். அவர்கள்மீது எவ்விதமான பந்தனமும், ஆட்சியும், ஆதிக்கமும் இருக்கலாகாது. இவருடைய சிந்தனைப்படி, ஆட்சி பையன்களின் வளர்ச்சிக்குப் பாதகமாகிறது. இதன் பயனாகத்தான் பையன்கள் மூக்கணாங் கயிறுகள் இல்லாத ஒட்டகங்களாகி யிருக்கிறார்கள். ஒரு நிமிஷங்கூட எவனும் புஸ்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு உட்காருவதில்லை. எப்போது பார்த்தாலும் கிட்டிப் புள் அடிப்பதும், கோலி விளையாடுவதும், காற்றாடி விடுவதுந்தான் அவர்களுக்கு வேலை. இவரும் பையன்களோடு சேர்ந்து விளையாடுகிறார். வயதோ நாற்பதாயிற்று ; இந்தக் குழந்தைத்தனத்துக்குக் குறை வில்லை ! என் தகப்பனார் முன்பு எந்தப் பையனாவது காற்றாடி விட்டோ அல்லது கோலி விளையாடியோ பிழைக்க முடியுமா? பலி வைத்துவிடுவார். பொழுது விடிந்ததுமே பையன்களை வைத்துக்கொண்டு பாடஞ் சொல்ல உட்காருவார். பள்ளிக்கூடத்திலிருந்து பையன்கள் வந்தார்களோ இல்லையோ, மறுபடியும் அவர்களை மடக்கிப் போடுவார். சாயந்தரம் ஓர் அரைமணி நேரம் விடுமுறை கொடுப்பார். இரவில் மறுபடியும் விளக்கை வைத்துக் கொண்டு உட்காருவார். தாம் பேப்பர் படிப்பதும், பையன்கள் தெருத் தெருவாக அலைவதும் ;—இப்படியா ?

சில சமயங்களில் இவர் கொம்பில்லாத கன்றுக்குட்டி யாகிவிடுகிறார். பையன்களோடு உட்கார்ந்து சீட்டாடு கிறார். இப்படிப்பட்ட தகப்பனுக்கா பிள்ளைகள் அடங்கி நடப்பார்கள் ? என் தம்பி இன்று வரையிலும் தகப்பனாரைத் தலை நிமிர்ந்து உற்றுப் பார்த்ததில்லை. அவர் சத்தம் போட்டாலே வீடு பெரிய பிரளயமாக இருக்கும்.

வீட்டில் அவர் காலடி எடுத்துவைத்தால் அமைதியின் சாம்ராஜ்யம் நிலவும். அவர் முன்னால் போவதென்றால், பையன்கள் நடுநடுங்குவார்கள். அந்த ஆட்சியின் பலன் தான், இன்று எல்லாப் பிள்ளைகளும் பெரிய பெரிய உத்தியோகங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒன்று: எவனுடைய ஆரோக்கியமும் நன்றாயில்லை. அப்பாவின் ஆரோக்கியம் மாத்திரம் என்ன, ரொம்ப நன்றாயிருந்ததோ? பாவம்! எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு மருந்து சாப்பிட்டவண்ணமா யிருப்பார். கடைசியில் ஒரு நாள் காலக் கோட்டைத் தாண்டிவிட்டார்.

ஒரு நாள் இவர் பையன்களுக்குக் காற்றாடி விடப் பயிற்சி அளித்துக்கொண் டிருந்தார்: "இப்படிச் சுழற்றுடா!; இப்படி இழுத்துவிடு; இப்படித் தளர்த்து; இப்படி மிதக்க விடு" என்று. அன்று நான் இவரை மிரட் டியது இவருக்கு ஜன்மத்துக்கும் மறக்காது. "நீங்கள் யார் என் குழந்தைகளைக் கெடுக்க? வீட்டைப்பற்றி உங்களுக்கு ஒருவித அக்கறையும் இல்லையா? வேண்டாம். நீங்கள் என் குழந்தைகளைக் கெடுக்காமலிருங்கள். அவர்களுக்குக் கெட்ட பழக்கங்கள் கற்றுக் கொடாமலிருங்கள். உங்க ளால் அவர்களைச் சீர்திருத்த முடியாதென்றால், குறைந்த பட்சம் அவர்களைக் கெடுக்காமலாவது இருங்கள்!" என் றேன். 'திருதிரு' வென்று விழித்தார். இவருக்கும் ஒரு தரம் கோபம் வந்தால், என் சண்டி ரூபத்தைக் காட்டலாமென்று பார்க்கிறேன். ஊகும்! இவருக்குக் கோபம் வருவதேது? வெகு சீக்கிரத்தில் இவர் அடங்கிப் போகிறார்; நான் தோற்கிறேன்.

என் தகப்பனார் எந்தப் பையனையும் தேர்த் திருவிழாக் களுக்கு அழைத்துக்கொண்டு போகமாட்டார். பையன் மண்டையை முட்டிக்கொண்டு செத்தாலும் சரிதான்; அவர் மனம் இரங்காது. இந்த மகாத்மாவோ ஒவ்வொரு வனிடமும் போய், "நீ வருகிறாயாடா? அங்கே பெரிய வேடிக்கை. பலூன்களெல்லாம் பறக்கும். பாண வேடிக்கைகள் உண்டு. ரங்கராட்டினங்கள் சுழலும்; அவை களில் ஜோராக உட்காரலாம்" என்று சொல்லி, அவனைத் திருவிழாவுக்கு அழைத்துப் போகிறார். இதெல்லாம்

போனால் போகிறது; இவர் பையன்களை 'ஹாக்கி' விளையாடுவதிலிருந்துகூடத் தடுப்பதில்லை. இந்த இங்கிலீஷ் விளையாட்டுக்கள் எவ்வளவு ஆபத்தானவை? 'கிரிக்கெட்' என்ன, 'புட்பால்' என்ன, 'ஹாக்கி' என்ன; - ஒன்றைவிட ஒன்று உயிரை வாங்குவதிலே போட்டி போடும்போ லிருக்கிறது! மேலே பந்து விழுந்தால் உயிரை வாங்கிக்கொண்டுதான் விடும். ஆனால் இவருக்கு இந்த விளையாட்டுக்களிலெல்லாம் ஆசை. எந்தப் பையனாவது 'மாட்சு' ஜயித்துவிட்டு வந்தால், அவன் ஏதோ ஒரு கோட்டையைப் பிடித்துவிட்டு வந்ததுபோல, இவர் ஆகாசத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பார், சந்தோஷம் தாங்காமல். எங்காவது அடி-கிடி பட்டால் என்ன ஆகும் என்று இவருக்குச் சற்றேனும் கவலையில்லை. கைகால்கள் ஒடிந்துவிட்டால், பாவம், அவர்களுடைய வாழ்க்கை எப்படிக் கரையேறும்?

போன வருஷம் பெரிய பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தது. "வரதக்ஷிணை என்று ஒரு செல்லாக் காசு கூடத் தரமாட்டேன். என் பெண் வாழ்நாள் முழுதும் கன்னிகையாகவே இருந்தாலும் சரி!" என்று இவர் பிடிவாதம் பிடித்தார். இங்கும் இவருடைய லக்ஷ்யவாதம் வந்து குதித்தது. சமூகத் தலைவர்களின் பித்தலாட்டங்களைத்தான் ஒவ்வொரு நாளும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோமே? அப்படியிருந்தும் இவருக்கு ஞானோதயம் உண்டாகவில்லை. சமூகத்தின் இந்த ஏற்பாடு நிலைத்திருக்கும் வரையில் - வயதுவந்த பெண்ணுக்கு மணமாகாமலிருப்பது நிந்தைக்கிடமாக இருக்கும் வரையில் - இந்த வரதக்ஷிணை வழக்கம் ஒழியப் போவதில்லை. அப்படியாக, வரதக்ஷிணைக்குக் கை நீட்டாத நாலைந்து பேர்வழிகள் முன் வந்தாலுங்கூட, அதனால் நிலைமையில் ஒன்றும் மாறுதல் ஏற்பட்டுவிடாது. இந்தக் கெட்ட வழக்கமும் இப்படியேதான் வாழையடி வாழையாக இருக்கும். வரதக்ஷிணையின் தீமைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்பவர்களுக்குக் குறைவில்லை; ஆனால் கிடைக்கும் வரதக்ஷிணையை விடுபவனை நான் இன்றுவரையில் பார்த்ததில்லை. பிள்ளைகளைப் போலவே பெண்களுக்கும், கல்விக்கும் பிழைப்புக்கும் வேண்டிய சௌகரியங்களெல்லாம் உண்டாகும்

போது, இந்த வழக்கமும் தானுக ஒழிந்துபோகும். அதற்கு முன்னுல் இது ஒழிவது சாத்தியமில்லே.

நான் எங்கெங்கே கல்யாணப் பேச்சு எடுத்தாலும், வரதக்ஷிணைப் பிரச்னே முன் வந்தது. இவர் ஒவ்வொரு தரமும் அதில் தலையிட்டு ஆக்ஷேபித்தார். இப்படி ஒரு முழு வருஷம் கழிந்து, பெண்ணுக்குப் பதினேழாவது வயது ஆரம்பித்துவிடவே, நான் ஓரிடத்தில் நிச்சயம் செய்து முடித்துவிட்டேன். இவரும் அதை ஒப்புக் கொண்டார்; ஏனெனில் பிள்ளைவீட்டுக்காரர்கள் கொடுக்கல் வாங்கல்களைப்பற்றிய பேச்சையே கிளப்பவில்லை. அவர் களுக்கு மனத்தில் மாத்திரம், நல்ல தொகை கிடைக்கும் என்ற முழு நம்பிக்கை இருந்தது. நானும் யதாசக்தி ஏதோ கொடுப்பதென்று தீர்மானித்திருந்தேன். கல்யாணம் நன்ருக நடந்தேறுவதில் யாதொரு சந்தேகமும் இருக்க வில்லை.

ஆனல் இவர் முன்பு எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. "இந்த வழக்கம் நிந்திக்கத்தக்கது!", "இந்தச் சடங்கு பிரயோஜனமில்லாதது!" "இந்தச் சீருக்காகப் பணம் கொடுக்கவேண்டிய தேவை என்ன?" "இந்தச் சம்பந்திப் பாட்டுக்கள் எதற்காகப் பாடுகிறீர்கள்?" - அப்பப்பா! என் மூச்சுத் திணறியது. எடுத்ததற்கெல்லாம் தடையா! "இது எதற்கு? அது எதற்கு? இது தெளிவாக 'வரதக்ஷிணை' என்றே தெரிகிறது. நீ என் முகத்தில் கரியைப் பூசினுய்! என் மானத்தை வாங்கிவிட்டாய்!" - இப்படியா பேச்சு! சற்று யோசித்துப் பாருங்கள். கல்யாண முகூர்த்தம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் இங்கே சாஸ்திரார்த்தம் நடக்கிறது. எப்படியிருக்கிறது சேதி!

நாட்டு* வழக்கப்படி நான் விரதம் வைத்துக் கொண்டேன். ஆனல், "விரதம் இருக்கவேண்டிய அவசியமே இல்லே" என்பது இவருடைய பல்லவி. "பிள்ளையைப் பெற்ருேர் ஒரு விரதமும் வைத்துக்கொள்ளக் காணேம். கல்யாணப் பிள்ளைக்கே விரதமில்லை யென்ருல்,

* வடநாட்டில் பெண்வீட்டுக்காரர்கள் விரதம் வைத்துக்கொள்வது வழக்கம்.

பெண்வீட்டார் மாத்திரம் எதற்காக விரதமிருக்கவேண்டும்?'' என்றூர். நானும் உறவினர்கள் எல்லாருமாகச் சேர்ந்து எவ்வளவோ தடுத்தும், இவர் 'பலகாரம்' செய்தார்; போஜனமும் செய்தார்.

இதெல்லாமாவது ஒழியட்டும். கன்னிகாதான முகூர்த்தம் வந்தது. இவர் எப்போதுமே இந்த வழக்கத்துக்கு விரோதி. இதை நிஷித்தமென்று நினைப்பவர். "கன்னிகை தானத்துக்குரிய ஒரு பொருளா? பணங் காசுகளையும் நில புலன்களையும் தானம் செய்யக்கூடும். பசுதானங்கூட நடக்கிறது. ஆனல் கன்னிகையைத் தானம் செய்வதா? சுத்த ஈனமான பேச்சாயிருக்கிறதே!'' என்றூர். நானும் சொன்னேன்; பண்டிதர்களும் புரோகிதர்களும் சேர்ந்து சொல்லிப்பார்த்தார்கள்: "இது பண்டைக்காலத்து வழக்கம். வேதகாலம் தொடங்கி நடந்துவருகிறது. சாஸ்திரங்களில் இதற்கு விதானம் இருக்கிறது'' என்று. சம்பந்திகளும் இவர் காதில் எத்தனையோ ரகசியங்களை ஓதினர்கள். ஆனல் இவர் காதில் ஏதாவது விழுந்தால்தானே? கைகூப்பினேன்; கால்களில் விழுந்தேன்; நடுநடுங்கி விண்ணப்பம் செய்தேன். ஆனல் இவர் பந்தலின் நடுவில் வரவேயில்லை. போதாக்குறைக்கு வேடிக்கை என்னவென்றூல், இவரே இந்த அனர்த்தத்தைச் செய்தது போக, என்னிடம் கோபமும் கொண்டார். கல்யாணமான பின்பு பல மாதங்கள் வரையில் என்னோடு பேச்சுவார்த்தை கூட வைத்துக்கொள்ளவில்லை. நானே போய் வேண்டி வேப்பிலையடித்து, கடைசியில் இவர் கோபம் தணிந்தது.

ஆனல், இவை யெல்லாவற்றிலும் பெரிய வேடிக்கை என்னவென்றூல், இவ்வளவு துர்க்குணங்களும் இருந்தும், நான் இவரை விட்டு ஒரு நாள்கூடப் பிரிந்திருக்க முடியாது. ஒரு க்ஷணத்தின் பிரிவைக்கூடச் சகிக்க முடியாது. இவ்வளவு தோஷங்களெல்லாம் இருந்தும் இவரிடம் எனக்கு ஆழ்ந்த காதல். நான் மோகித்துப் போகும்படி இவரிடம் என்ன குணமிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னை இவருக்குச் சிஷ்யையாக்கும் ஏதோ ஒரு பொருள் இவரிடத்தில் இருக்கிறது. இவர் வழக்கமாக வருவதற்குச் சற்று நேரங் கழித்து வந்தால்,

என் உயிர் துடிக்கிறது. இன்று பிரம்மா இவருக்குப் பதிலாக, கல்வியும் அறிவுமுடைய ஒரு ரூபவானையோ, அழகும் பணமும் வாய்ந்த ஒரு தேவனையோ எனக்குக் கொடுத்தாலும், நான் அவனைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன். இதற்குக் காரணம், தர்மத்தின் தளையன்று; அது எப்போதும் இல்லை. பரம்பரையாக வந்த பாதிவிரத்தியமும் அன்று. எங்கள் இருவரின் பிரகிருதிகளிலும் சில யோக்கியதாம்சங்களும், சில ஏற்பாடுகளும் உண்டாகி விட்டன; ஒரு யந்திரத்தின் கருவிகள் தேய்ந்து தேய்ந்து இணைந்து பொருந்திவிடுவதுபோல. இப்படிப் பொருந்திய பின்பு, ஒரு கருவிக்குப் பதிலாக, மற்றொரு கருவி - அது எவ்வளவுதான் அழகாகவும், புதிதாகவும், உறுதியாகவும் இருந்தாலும் - பிரயோஜனப்படுவதில்லை. நமக்குத் தெரிந்த வழியில் நாம் அச்சமில்லாமல் கண்களை மூடிக்கொண்டே போகிறோம். அந்த வழியிலுள்ள எல்லா மேடு பள்ளங்களும், திருப்பங்களும் நம் கண்களில் அமைந்துள்ளன. தெரியாத வழியில் போவது எவ்வளவு துன்பமாக இருக்கும்? ஒருகால் இன்று நான், இவருடைய குற்றங்களைக் குணங்களாக மாற்றிக்கொள்வதா யிருந்தால்கூட, அதற்குத் தயாராக இருக்கமாட்டேன்.

முற்றும்



மால்கோஷ்

(வங்காளச் சிறுகதைகள்)

*

கவி ரவீந்திரநாத டாகுர், டாக்டர் சரத் சந்திர சட்டர்ஜி
முதலிய பிரபல வங்க ஆசிரியர்கள் எழுதிய அருமையான

சிறுகதைகளின் தொகுதி

வங்க மூலத்திலிருந்து
த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்களால்
மொழிபெயர்க்கப் பெற்றவை

கதைகளின் பெயர்	ஆசிரியர்களின் பெயர்
1. மால்கோஷ்	சாரு சந்த்ர தத்
2. குருவியின் ஸம்ஸாரம்	அச்யுத ராய்
3. படித்துறை சொல்லும்	ரவீந்த்ரநாத் டாகுர்
4. இஷ்ட தெய்வம் [கதை.	சரத் சந்த்ர சட்டர்ஜி
5. ஹிராகுணி	அவனீந்த்ரநாத் டாகுர்
6. பாலை மலர்கள்	சரதிந்து பானர்ஜீ
7. தங்கச் சிலை	ஸீதா தேவி
8. யாரோ !	பிரபோத குமார் ஸாங்யால்
9. ஆப்பிள் பழம்	ரவீந்திரநாத் மித்ர
10. வளையற்காரன்	சாருசந்த்ர பானர்ஜி
11. கெட்ட பெயர்	ரவீந்திரநாத் டாகுர்
12. ஸ்வப்ன யாத்திரை	'வன புல'
13. சிறைப் பறவைகள்	ஸாதனா கர்
14. முடிவில் காதல்	ஜலதர் ஸேன்
15. கற்பனையும் வாஸ்தவமும்	காஞ்சனமாலா தேவி

ஆண்டிக் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பெற்றது.
உயர்ந்த முறையில் பைண்ட் :: ரூ. **2-4-0**

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
   — வ. வே. சு. ஐயர்.
2. ராஜாஜி குட்டிக் கதைகள்
   — சக்கரவர்ந்தி ராஜகோபாலாசாரியார்.
3. கன்யாகுமாரி
   — த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
4. சந்தனக் காவடி
   — தி. ஜ. ர.
5. சக்ரவாகம்
   — ந. சிதம்பர சுப்பிரமண்யம்.
6. கனகாம்பரம்
   — கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.
7. தோட்டியை மணந்த அரசகுமாரி
   — தி. நா. சுப்பிரமணியன்.
8. பவழ மாலே
   — பி. எம். கண்ணன்.
9. வெண் தாமரை
   — வி. எஸ். ராமகிருஷ்ணன், பி, ஏ.
10. அழகி
   — க. நா. சுப்பிரமணியம், பி. ஏ.
11. ஜடாதரன்
   — கே. எஸ். வேங்கடரமணி, எம்.ஏ., பி.எல்.
12. லக்ஷ்மீ கடாக்ஷம்
   — ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.
13. நீல[illegible]
   — [illegible]. வா. ஜகந்நாதன்.
14. வைர டோலக்
   — ஆண்டாள்.

[illegible]. வாடா விளக்கு
   — சு. குருஸ்வாமி, பி.ஏ., எல்.டி.

6. மீட்சி
   — ஸி. ஆர். ஸரோஜா.

17. தேவகி
   — குகப்பிரியை

பரிசளிப்பதற்கு ஏற்றபடி நேர்த்தியான பைண்டுடன் கூடியவை.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை